# வேந்தனார் கட்டுரைகள்
## – பாகம் 2
## மாணவர் தமிழ் விருந்து

வித்துவான் க. வேந்தனார்

**லாவண்யா பதிப்பகம்**
15/8, சுவாமி ஆச்சாரி தெரு, இராயப்பேட்டை,
சென்னை – 600 014.
Email: lavanyapathipagam@gmail.com

**மாணவர் தமிழ் விருந்து (வேந்தனார் கட்டுரைகள் – பாகம் 2)**

**வித்துவான் க.வேந்தனார்**

© வேந்தனார் இளஞ்சேய்

முதற்பதிப்பு: 2019

பக்கம்: 240

பதிப்பு:

**லாவண்யா பதிப்பகம்**

15/8, சுவாமி ஆச்சாரி தெரு

இராயப்பேட்டை

சென்னை – 600 014.

ISBN: 978-93-85643-18-7

வடிவமைப்பு:

**எஸ். தனசேகர்**

அச்சிட்டோர்:

**Sri Raghavendra Laser Printers**

15/8, Swamy Aachari Street

Royapettah, Chennai - 600 014

Ph: 044-4266 4695, 90031 81586



# க.வேந்தனார்

## (வித்துவான் - பண்டிதர் - சைவப்புலவர் - சித்தாந்த சிரோமணி - கவிராயர் - தமிழ்ப்பேரன்பர்)

*செந்தமிழின் உயிர்மூச்சு*
*தீம்புலவர் திறல் ஆய்ந்து பேசும் செந்நா*
*கந்தனருட் கேங்கி நிதம்*
*கவிபாடும் பேரிதயக் கருணை நெஞ்சு*
*சுந்தரநல் எழில் உருவம்*
*தோன்றியநல் நாட்டுயர்வில் தோய்ந்த அன்பு*
*பந்தமுள நாகேந்திரம் பிள்ளை என்ற*
*பாவலன் க. வேந்தன் பேர் பரவுவோமே*

***(கவிஞர் தில்லைச் சிவன்)***

# பதிப்புரையின் சத்தியவோசை

வித்துவான் வேந்தனார் 1940ஆம் ஆண்டிலிருந்து, அவர் காலமாகிய 1966ஆம் ஆண்டுவரை, தொடர்ச்சியாக வாரம் தோறும், பல பத்திரிகைகளுக்கு கட்டுரைகள் எழுதி வந்தார். எமக்குத் தெரிய இவர் எழுதி முதலாவதாக இந்து சாதனம் பத்திரிகையில் 25.3.1940 இல் "திருவாசகத்தின் சிறப்புப் பாயிரம்" என்ற கட்டுரை வெளிவந்துள்ளது. அச்சமயம் வேந்தனார் 22 வயதைக் கூட நிறைவு செய்யவில்லை. தொடர்ந்து 26ஆண்டுகளாக இவரின் பலநூற்றுக்கணக்கான கட்டுரைகள் இந்து சாதனம், ஈழகேசரி தினகரன், ஈழநாடு, சுதந்திரன், வீரகேசரி போன்ற பத்திரிகைகளில் வெளிவந்தன. 1940 இருந்து 1949 இற்கு இடைப்பட்ட காலத்தில், வேந்தனாரின் ஆக்கங்கள் இந்து சாதனம், ஈழகேசரி, சுதந்திரன் பத்திரிகைகளில் வெளிவந்தன. இவற்றில் எமக்குத் தெரிய வெளிவந்த பல கட்டுரைகளில் ஓர் சிலவற்றையே என்னால் எடுக்க முடிந்துள்ளது. பல அரிய கட்டுரைகள் இன்னமும் கிடைக்காமலேயேயுள்ளது. இவர் 1948இலிருந்து 1959வரை, மிக அதிகமான கட்டுரைகளை, கவிதைகளை தினகரன் பத்திரிகைக்கே எழுதிவந்திருந்தார். 1959இலிருந்து 1966 வரை இவரின் கட்டுரைகள், கவிதைகள் ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்தன. இறுதியாக "மூவர் தமிழ் விருந்து" என்னும் கட்டுரைத் தொடரை, சிவதொண்டன் இதழுக்கு 1966 தை மாதம் தொடங்கி ஆவணி வரை எழுதியுள்ளார். இறுதியாக சம்பந்தரின் தீந்தமிழ் அமுதினை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கும் பொழுது, இவ்வுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார். இவர் எழுதிய இறுதிவரிகளை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

"அடியார்களுக்கு என்றும் போகாப் பொருளாய் உள்ளது இறைவன் திருவடிகளே என்ற உண்மையை, மறவாமல், உலக போகங்களில் ஈடுபடும் மக்கள் மனதில் பதிக்க வேண்டும். அவர்களை இறைவனுக்கு ஆளாக்க வேண்டும். ஆளாக்கி அவனருளே கண்ணாகக் கொண்டு வாழும் பெருநெறியில் ஈடுபடுத்த வேண்டும் என்ற இரக்கத்தால், "அடியலால் அடைசரன் உடையரோ" எனத் திருஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்தார்." **(தன்னேரில்லாத் தமிழ் - பக்கம் 358-359)**

26 வருடங்களாக பல நூற்றுக் கணக்கான கட்டுரைகளை எழுதித் தள்ளிய வித்துவான் வேந்தனார் இறுதியாக எழுதிய " அடியலால் அடைசரன் உடையரோ அடியர்" என்ற வரிகளுடன் ஈசன் திருவடி நீழலில் அமைதி கண்டார்.

வேந்தனாரின் பத்திரிகைக் கட்டுரைகள் ஒன்றும், அவர் காலத்தில் நூலுருவாக்கப்படவில்லை. தான் எழுதி பத்திரிகைகளில் வந்திருந்த ஆக்கங்களில் பெரும்பாலானவற்றை, அவர் மிகவும் அக்கறையோடு சேகரித்து ஒரு பெட்டியில் (சூட்கேஸ் 24"X12"X12"- Brown Colour) வைத்திருந்தார். வேந்தனாரின் மாணவனான அமரர் வித்துவான் சொக்கன் அவர்கள், 1983ஆம் ஆண்டில், வித்துவான் வேந்தனார் பற்றிய சில ஆய்வுக் கட்டுரைகளை தினகரன் வாரப் பத்திரிகையில் எழுதிவந்தார். பின்பு அவர், வேந்தனார் பற்றி ஓர் விரிவான நூலை எழுத விரும்பி, வேந்தனாரின் மூத்த மகளும், அச்சமயம் யாழ் பல்கலைக் கழகத்தில் மூத்த தமிழ் விரிவுரையாளராக கடமையாற்றி வந்தவருமான திருமதி கலையரசி சின்னையாவை நாடினார். வேந்தனார் குடும்பம் தாம் அந்த நூலை அச்சடிக்கும் பொறுப்பை எடுப்பதாகக் கூறினார்கள். அப்போது சொக்கன் அவர்களுக்குக் கொடுப்பதற்காக, வேந்தனார் பெட்டியில் சேகரித்து வைத்திருந்த அவரின் ஆக்கங்கள் எல்லாம், எனதருமைத் தமக்கையார் அவர்களால் மிக நேர்த்தியாக பட்டியலிடப்பட்டு, இவை திரு. சொக்கன் அவர்களிடம் கொடுக்கப்பட்டது. இவற்றின் உதவியுடன், 1984 இறுதிப் பகுதியில், சொக்கன் அவர்கள் "தமிழ்ப்பேரன்பர் வித்துவான் க வேந்தனார்" என்ற ஓர் தரமன நூலை வெளியிட்டார். இந்த நூல் வெளியீடு 1984ஆம் ஆண்டு (29.10.1984), நல்லூர் ஞானசம்பந்தர் ஆதினம் மண்டபத்தில், யாழ் இலக்கிய வட்டத்தால் நடத்தப்பட்டது. இவ் விழா நடக்கையில், எனது தமக்கையார் குடும்பமும், தாயாரும் புலம் பெயர்ந்து இந்தியா சென்று விட்டார்கள். நானும் 1983 இலேயே புலம் பெயர்ந்து இங்கிலாந்து வந்து விட்டேன் இச்சமயம், அன்றைய மேற்கு ஜெர்மனியில், தனது பொறியியல் துறை கலாநிதிப் படிப்பை படித்துக் கொண்டிருந்த எனதருமைத் தமை யனார் "வேந்தனார் இளங்கோ" அவர்கள் மணமுடிக்க யாழ் வந்திருந்தார். அவர் எமது குடும்பம் சார்பாக இவ்வெளியீட்டு விழாவில் கலந்து, சிறப்பான அறிமுகவுரையை நிகழ்த்தியிருந்தார். எனது தமையனாரும் அந்தவாரமே, தனது மனைவியையும் அழைத்துக் கொண்டு ஜெர்மனி திரும்பி விட்டார். ஆக வித்துவான் வேந்தனாரின் மனைவி, அவரின் மகள்-மகன் குடும்பம், இளைய மகன் இளஞ்சேய் என, அனைத்து குடும்ப உறுப்பினர்களும் 1984 இறுதியுடன் (31.10.1984) எம் தாயகமாம் தமிழ் ஈழத்தைவிட்டு குடிபெயர்ந்து விட்டார்கள். இந்நிலையில் வேந்தனார் மிக அக்கறையோடு பாதுகாத்து வைத்திருந்த அவரின் பத்திரிகை ஆக்கங்கள், கையெழுத்துப் பிரதிகள், தட்டச்சில் இருந்த அவரின் "சான்றோர் வளர்த்த தமிழ்" பிரதி அவரின் "கவிதைப் பூம் பொழில்" (1964), யாழ்ப்பாண திரு

நல்லூர்த் திருப்பள்ளி எழச்சியும் குயிற்பத்தும்'' ஆகிய நூல்கள், ''தமிழ்ப் பேரன்பர் வித்துவான் க.வேந்தனார்'' நூல், அவரின் நினைவு மலர், அவர் மறைந்த போது பத்திரிகைகளில் அவர் பற்றி வந்த ஆக்கங்கள், அவரால் சேகரித்து வைக்கப்பட்டிருந்த கிடைத்தற்கரிய, பல நூற்றக்கணக்கான அரும்பெரும் பழந்தமிழ் இலக்கிய நூல்கள் என்பனவெல்லாம், எமது ''கலைச்சோலை'' கந்தர்மட இல்லத்தில், அவரின் அலுவலக அறையில் வைத்துப் பூட்டப்பட்டிருந்தன! அவரின் பத்திரிகைக் கட்டுரைகள் ஓர் Brown Colour சூட்கேசில் வைத்து, அந்த அலுவலக அறையில் பாது காப்பாக வைத்திருக்கப்பட்டிருந்தது.

எனக்கு 1985ஆம் ஆண்டு நடுப்பகுதியில் சொக்கன் அவர்களால் எழுதப்பட்ட **''தமிழ்ப் பேரன்பர் வித்துவான் க.வேந்தனர்''** என்ற நூல், எனதருமை சின்னமாமா கணபதிப்பிள்ளை அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டது. புலம் பெயர் வாழ்க்கையின் தனிமையில் இரத்த உறவுகள் ஒருவரும் அருகில் இல்லாத நிலையில், இலண்டனில் அநாதை போன்று வாழ்ந்த எனக்கு, என் தந்தையார் பற்றிய இந்நூல், ஓர் இரத்த உறவு அருகிலிருப்பது போன்ற உணர்வினை ஊட்டியது. நூலை வாசித் தேன். வாசித்தேன். மீண்டும்-மீண்டும் வாசித்தேன். இந்நூலைப் படிக்கப் படிக்க, என் 9ஆவது வயதில், நான் இழந்துவிட்ட என்னருமைத் தந்தையின் தமிழ் அறிவை, தமிழ்ப்பற்றை, தொலை நோக்குப் பார்வையை, ஆவது அறியும் ஆற்றலை எல்லாம் ஓரளவு புரிந்து, அறிந்து கொண்டேன். சொக்கன் அவர்கள், தன் ஆசிரியரான வேந்தனாரின் பன்முக ஆளுமை களை, பக்க சார்பின்றி-நடுநிலையுடன், ஒப்பு நோக்கி எழுதிய அவ்வரிய நூலைப் படிக்கப் படிக்க, அவரின் பிள்ளைகளாகிய எம்முன் உள்ள பெரும் பொறுப்பை உணர்ந்தேன். இந்த நூலில் என் தமக்கையாரால் பட்டியலிட்டு கொடுக்கப் பட்டிருந்த அவரின் பத்திரிகை ஆக்கங்களின் விபரம், நூலின் இறுதியில் ''வித்துவன் வேந்தனாரின் ஆக்கங்கள்'' என்ற தலைப்பில், பக்கம் 80 தொடங்கி 88வரை, 9 பக்கங்களுக்கு - மிக விரிவாகக் கொடுக்கப்பட்டிருந்தது (இன்று நாம் வேந்தனாரின் ஆக்கங்களைத் தேடி எடுத்துப் பிரசுரித்து வருவதற்கு, இவ் ஆவணமே மூலஆதராமாய் நின்று உதவுகின்றது.)

என் தந்தையாரின் பல நூற்றுக் கணக்கான பத்திரிகைக் கட்டுரை களின் விபரம், அதன் தலைப்புக்கள் என்பன என்னை வெகுவாகச் சிந்திக்க வைத்தன. ஓர் குழந்தைப் பாடல் ஆசிரியராக, ஓர் சைவ சமய பாட நூல் ஆசிரியராக மட்டுமே, நானும், என் வயதொத்த பல ஈழத் தமிழர்களும், வேந்தனாரை அறிந்திருந்தார்கள். இந்த நிலையில் சொக்கன்

அவர்களின் இந்த நூல், என் தந்தையார் மட்டுமன்றல்ல, ஓர் தலைசிறந்த தமிழ் சிந்தனையாளரின், படைப்பாசிரியனின் எழுத்துக்களை, எம் தமிழ் சமுதாயத்திற்குக் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்ற பெருவிருப்பை, என் மனதில் குடிகொள்ள வைத்தது.

அந்த 1985ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து, இன்று வரை இந்த 34 வருடங்களாக, இந்த எண்ணம் என் அடி மன ஆழத்தில், நீறு பூத்த நெருப்பாக குடி கொண்டுள்ளது.

பின் 1986 மார்கழியில், எனது தமையனாரைக் காண, எனது தாயார் ஜெர்மனி வர இருக்கையில், அவரைக் காண நான் இங்கிலாந்திலிருந்து ஜெர்மனி சென்றேன். ஆனால் துரதிட்ட வசமாக அவரால், நான் அங்கு சென்று நிற்கையில் வரமுடியவில்லை. அப்போது, நான் ஜெர்மனியில் எனது அண்ணனுடன் நான்கு நாட்கள் நிற்கையில், அவர் 1984ஆம் ஆண்டு, மணமுடித்து மனைவியுடன் ஜெர்மனி வருகையில், தன்னுடன் எடுத்து வந்திருந்த என் தந்தையார் பற்றிய ஆக்கங்கள் சிலவற்றை, அவரிடம் பெற்று வந்தேன். என் தந்தையார் இறந்தபின், அவரின் நண்பர்களான வித்துவான். சி. ஆறுமுகம், இரசிகமணி கனகசெந்தில் நாதன் ஆகியோர் எழுதிய மூன்று பத்திரிகை ஆக்கங்கள், என் தந்தையார் இறந்த போது, அவர் பற்றி பல பத்திரிகைகளிலும் வந்த செய்திகள் என்பவையே அவ் ஆவணங்களாகும்.

தனியே என் தந்தையார் பற்றி சொக்கன் அவர்கள் எழுதிய "தமிழ்ப் பேரன்பர் வித்துவான் க. வேந்தனார்" என்ற நூலுடனேயே தந்தையை உணர்ந்து வந்த எனக்கு, இவ் ஆவணங்கள், பெரும் பசியுடன் இருந்த வனுக்கு, சிறு ஆகாரம் கிடைத்தது போலிருந்தது. இவற்றை வாசிக்க, வாசிக்க என் தந்தையாரின் எழுத்துக்களை எல்லாம் வெளிக்கொணர வேண்டும் என்ற பேரவா மனதில் எழுந்தது.

1988ஆம் ஆண்டு ஆவணி மாதப் பகுதியில், இலண்டனில் என்னுடன் மிகவும் நட்புடன் பழகிவந்த சிவச்சந்திரன் குடும்பத்தினர் யாழ்ப்பாணம் சென்றனர். அவர்களிடம் என் தந்தையாரின் கவிதைப் பூம்பொழில் (1964), யாழ்ப்பாண திருநல்லூர்த் திருப்பள்ளி எழச்சியும் குயிற்பத்தும் ஆகிய அவரின் வெளிவந்த நூல்களையும், தட்டச்சுப் பிரதியாக அவர் வைத்திருந்த "சான்றோர் வளர்த்த தமிழ்" என்பன வற்றையும், அவரின் புகைப்படம். நினைவு மலர் போன்றவற்றையும், "கலைச்சோலை" இல்லத்திலிருந்து எடுத்து வரும்படி கேட்டிருந்தேன். அத்துடன் இவ் விபரங்களை வேலணையில் வசித்து வந்த என்

சின்னமாமா கணபதிப் பிள்ளை அவர்களுக்கும் அறிவித்திருந்தேன். அவரும் அப்போது எமது "கலைச் சோலை" கந்தர்மட வீட்டிற்கு அண்மையில், குமாரசாமி வீதியில் வசித்து வந்த எனது ஆசை மாமா நடராசா மாஸ்ரரின் உதவியுடன், இவ் ஆவணங்களை வேலணையில் நின்ற சிவச்சந்திரன் அவர்களிடம் கையளித்தார்கள். ' கவிதைப் பூம் பொழில்' நூல்கள் இரண்டு, "யாழ்ப்பாணத்து திருநல்லூர்த் திருப்பள்ளி எழுச்சியும் குயிற்பத்தும்" இரண்டு, "தமிழ்ப் பேரன்பர் வித்துவன் க. வேந்தனார் நூல்கள் இரண்டு, தட்டச்சுப் பிரதியான " சான்றோர் வளர்த்த தமிழ்" பிரதி யொன்று, தந்தையாரின் நினைவு மலர் (1966), அவரின் படம் என்பன அன்று அங்கிருந்து நான் எடுப்பித்த ஆவணங்கள் ஆகும்.

இவ் ஆவணங்கள் எனக்குப் பெரும் புதையல் கிடைத்தது போன்ற உணர்வை ஊட்டியது. அந்த ஆண்டே (1988), கவிதைப் பூம்பொழிலில் மறைந்து கிடந்த, வேந்தனாரின் 35 குழந்தைப் பாடல்களையும், அப்போது கணனியில் தமிழ் எழுத்துக்களை வடிவமைப்பதில் ஆர்வத்தோடு ஈடுபட்டு செயற்பட்டு வந்தவரும், Walthamstow பகுதியில் வசித்த வருமான திரு. நந்தகுமார் அவர்களிடம் கொடுத்து, அச்சில் எடுத்தேன். இவ் 35 பாடல்களையும் பாகம் 1, 2, 3 எனப்பிரித்து, அதை ஓர் புத்தகம் போல் ஆக்கி, இதற்கு ஒர் முன்னுரையும் - எழுதி வைத்தேன். இந்த ஆவணங்கள் இன்றும் என்னிடம் உள்ளன. என்னிடம் வந்த என் தந்தையாரின் படத்தைப் பெரிதாக்கி மூன்று பிரதிகள் எடுத்து வைத்தேன்.

பின் 1992ஆம் ஆண்டு, எனதருமைத் தாயார், என்னிடம் இலண் டனிற்கு நியூசிலாந்தில் இருந்து வந்திருந்தார். அவரிடம் இக் குழந்தைப் பாடல்கள் மூன்று பாகத்தினதும் இரு பிரதிகள், மற்றும் தந்தையாரின் பெரிது படுத்திய படத்தின் இரு பிரதிகள் ஆகியவற்றை, எனது தமையன், தமக்கை இருவரிடம் கொடுக்கும் படி கொடுத்தனுப்பியிருந்தேன். எமது புலம்பெயர் வாழ் சூழலில், நேரத்தையும், பணத்தையும் ஒதுக்கி, எமது தந்தையாரின் நூல்களை வெளிக் கொணர எமக்கு காலம் சரிவரவில்லை. புலத்திலும் போராட்டம் வலுப்பெற்று வந்நதது. ஆக இந்த ஆவணங்கள் இவ்வாறு என்னிடம் இருப்பிலேயே கிடந்தது.

1995ஆம் ஆண்டு, யாழ்ப்பாண குடிப் பெயர்வு அவலம் நடந்தது. அப்போது இனம் தெரியாத சிலர், எமது "கலைச்சோலை" வீட்டிற்கு வந்து, என் தந்தையாரின் அலுவலக அறையிலிருந்த விலை மதிக்க முடியாத நூற் செல்வங்கள், அவரின் ஆவணங்கள், படங்கள், எல்லா வற்றையும் எடுத்துச் சென்றார்கள், இன்று வரை இவை எங்கே என எமக்குத் தெரியவில்லை. எமது தந்தையார் தமிழ்விழாக்களில் உரை

நிகழ்த்தும் போது எடுத்த படங்கள், பரமேசுவராக் கல்லூரி ஆண்டு விழாக்களில் எடுத்த படங்கள் என எல்லம் எடுத்துச் செல்லப்பட்டு விட்டது. ஆனால் அவர் சேமித்து வைத்திருந்த அவரின் பத்திரிகை ஆக்கங்களைக் கொண்ட பெட்டியை அவர்கள் எடுத்துச் செல்லவில்லை. இப்பெட்டியை எனது சின்ன மாமா பத்திரமாக அப்புறப் படுத்தி, குமாரசாமி வீதியில் இருந்த எனது ஆசைமாமா நடராசா அவர்கள் வீட்டின் முன் அறையில், 1995 இல் போட்டு வைத்தார்.

பின் 2003 ஆம் ஆண்டு, மாசி மாதம் 13ம் திகதி, கொழும்பில் மரண காலத்தை வைத்தியர்களால் உறுதிப் படுத்தப்பட்ட நிலையில், சுகவீனம் உற்றிருந்த என் சின்னமாமாவை, கொழும்பில் இருந்து, யாழ் கூட்டிச் சென்று விட, நாட்டைவிட்டு வந்த 19வருடங்களின் பின், முதன் முறையாக யாழ் சென்றேன். விமான மூலம் கொழும்பில் வேலை பார்த்து வந்த கண்ணா என்று அழைக்கப்படும் திரு. ராஜேஸ்கண்ணா அவர்களும் என்னுடன் வர, அவரை யாழ் அழைத்துச் சென்றேன். 14.02.2003 காலை, அந்த வீட்டின முன், பாவனையற்று இருந்த ஓர் அறையைக் காட்டி, இதற்குள் தான் என் தந்தையாரின் பத்திரிகை ஆக்கங்கள் வந்த பெட்டி இருப்பதாகக் கூறினார். தாங்கொணாத ஆவலுடன் அந்த அறைக்குள் நுழைந்தேன். கரப்பான் பூச்சிகள் கால்களை முத்தமிட்டன. அந்த Brown Colour Suitcase ஐக் கண்டேன். 1984 இலிருந்து, திறபடாமல் 19வருடம் கிடந்த அந்தப் பெட்டியை, ஆரா வேட்கையுடன் திறந்தேன் - அந்தோ, என்னவென்று சொல்வேன். கரப்பான் பூச்சிகளிற்கு மத்தியில், கருந்துகள் களாகக் கிடந்த பத்திரிகைத் துகள்களையே கண்டேன். இதயம் இடிந்து போனேன். இருநாட்களே யாழ் நின்று 15.02.2003 மதியம் - விமானம் மூலம் கொழும்பு திரும்பினேன். அன்று பின்னேரம் - கண்ணாவின் உதவியுடன் பத்திரிகைக் காரியாலங்களுக்கு சென்று, பழைய பத்திரி கைகள் பற்றி விசாரித்தேன். ஒருவரும் பதில் சரியாகத் தரவில்லை. இந் நிலையில் நான் 18.02.2003 இலண்டன் திரும்ப விமானச் சீட்டு எடுத்திருந் தேன். இறுதி முயற்சியாக, 17.02.2003 Lake House காரியாலயத்திற்கு சென்றேன், வந்த கண்ணா சரளமாக சிங்களம் பேசக் கூடியவர். அவர் அங்கிருந்த ஊழியர் பலரிடம் இது பற்றி விசாரித்தார். அப்போது அங்கு வேலை பார்த்த ஓர் சிங்கள ஊழியர், கண்ணாவுடன் சில தகவல்களை கரிசனையுடன் தெரிவித்தார். அவர் கூறிய விடயம், கறுவாய்த் தோட்டப் பகுதியில் உள்ள இலங்கைத் தேசிய சுவடிகள் பாதுகாப்புத் திணைக் களத்தில் பழைய தினகரன் பத்திரிகைகள் இருக்க வாய்ப்புண்டு என்பதே ஆகும். அடுத்த நாள் நான் லண்டன் பயணிக்க வேண்டும். எனவே நாம்

உடனடியாக அந்த “தேசிய சுவடிகள் பாதுகாப்புத் திணைக்களம்” சென்றோம். கண்ணா தனது சிங்கள மொழித் திறமையால் இலகுவாக அனுமதி பெற்று உள்ளே செல்ல வழிவகுத்தார். என்னிடம் வைத்திருந்த தகவலின் படி, வேந்தனாரின் 7.11.1948 ஞாயிறு தினகரன் பத்திரிகையில் வந்த. “இளைஞர்களே எழுமின் விழுமின்” என்ற கட்டுரையைப் பார்க்க விரும்பினேன். அவர்கள் July 1 - 31 Dec 1948 இற்குரிய தினகரன் ஞாயிறு பத்திரிகைகளை தொகுத்து வைத்திருந்த, ஓர் பெரிய ஆவணத் தொகுப்பைத் தந்தார்கள். ஆவலுடன் 7.11.18 வாரப் பத்திரிகை அதனுள் உள்ளதா என அவசர அவசரமாகப் பார்த்தேன். இருந்தது. அதில் பக்கம் 7இல், என் தந்தையார் எழுதிய கட்டுரையைக் கண்டேன். என் மனம் மகிழ்ச்சிப் பெருக்கினால் நிரம்பி வழிந்தது. அக் கட்டுரையை முழுமை யாக வாசித்தேன். அதை Micro Film இல் Copy எடுத்துத் தரும்படி கேட்டோம். ஆனால் எமது துரதிட்டம், சில வாரங்களாக அந்த இயந்திரம் பழுதாகி இருப்பதாகக் கூறினார்கள் அந்தக் கட்டுரையை என் கைப்பட பார்த்து எழுத விரும்பினேன். ஆனால் அவர்கள் பூட்டும் நேரம் வந்து விட்டதால் அது முடியவில்லை. என்றாலும் என் தந்தையாரிரின் கட்டுரைகள் வந்த பழைய பத்திரிகைகளை எடுக்க முடியும் என்ற நம்பக்கை வந்துவிட்டது. கண்ணாவை இக்கட்டுரைகளை எடுக்க ஒழுங்குகள் செய்யும்படி வேண்டி, நான் அடுத்த நாள், இலண்டன் திரும்பி விட்டேன். இந்தத் தகவல்களையும், தேசிய சுவடிகள் திணைக்கள விபரங் களையும், என் தமையனாருக்கும், தமக்கையாருக்கும் தெரிவித்தேன்.

‘கண்ணா’ கொழும்பில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். இந் நேரத்தில், அவரிடம் நான் கேட்ட உதவியை அவரால் செய்து தர முடியவில்லை.

பின் 2004 தொடக்கத்தில், கொழும்பில் வசித்து வரும் என் மனைவியின் மூத்த தமையன் மூலம், ஓர் தமிழ் ஆர்வலரை, என் தந்தையாரின் ஆக்கங்களைத் தேசிய சுவடிகள் பாதுகாப்புத் திணைக் களத்தில் எடுக்க ஒழுங்கு படுத்தினேன். அவரும் முதல் “இளைஞர்களே எழுமின் விழுமின்” என்ற கட்டுரையையும், பின் ஒரு வருடகாலங்களில், மேலும் 7 பத்திரிகைக் கட்டுரைகளையும் எடுத்துத் தந்தார். அதன் பின் அவரும் நாட்டை விட்டு வெளியேறி விட்டதாக அறிந்தேன்.

நானும் இலண்டனில் எமது அன்றாட விரைவு வாழ்க்கையில் ஓடத் தொடங்கிவிட்டேன். காலங்களும் ஓடின. என் அருமைத் தமையனார் 2005 இல் காலமானார். இந்நிலையில் 2007 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் எனது தமக்கையார், எமது தந்தையாரின் “கவிதைப் பூம்

பொழில்'' நூலை மறுபிரசுரம் செய்வது பற்றியும், அதில் உள்ள குழந்தைப் பாடல்களை, அழகான வண்ணப்படங்களுடன் வெளியிடவும் விரும்பு வதாகத் தெரிவித்தார். இந்நிலையில் அவர் 2008 பங்குனி இலண்டன் வந்தார். அப்போது என்னிடம் இருந்த என் தந்தையாரின் "கவிதைப் பூம் பொழில்", யாழ்ப்பாணத்து திரு நல்லூர்த் திருப்பள்ளி எழுச்சியும் குயிற்பத்தும்", சான்றோர் வளர்த்த தமிழ் தட்டச்சுப் பிரதி, சொக்கன் அவர்கள் எழுதிய "தமிழ்ப் பேரன்பர் வித்துவான் க.வேந்தனார்" நூல், தந்தையாரின் நினைவு மலரான "புகழ்வளச் சோலையின் ஒரு மலர்", தமையனாரிடம் இருந்து நான் வாங்கி வந்த இரசிகமணி கனக செந்தில் நாதன், வித்துவான் சி. ஆறுமுகம் ஆகியோரின் கட்டுரைகள், என் தந்தையாரின் மறைவையொட்டி பத்திரிகைகளில் வந்த செய்திகள், யாவற்றினதும் பிரதிகளை அவரிடம் கொடுத்தேன்.

என் தமக்கையாரின் தளரா முயற்சியினால், அவரின் மைத்துனர் திரு. முருகையா அவர்களின் உதவியுடன் "இலங்கைத் தேசிய சுவடிகள் பாதுகாப்புத் தினணக்களத்தில் இருந்து, 1956-58 காலப் பகுதியில் என் தந்தையார் எழுதிய பத்திரிகை ஆக்கங்களும், என் தந்தையாரின் இரு நெடும் பாடல்களும், அவரால் தேடி எடுக்கப்பட்டது. மேலும் "சிவ தொண்டன்" சஞ்சிகையில் என் தந்தையார் இறுதியாக எழுதிய" மூவர் தமிழ் விருந்து " கட்டுரைத் தொகுப்பையும் அவர் எடுத்தார்.

2010 ஆண்டில் வேந்தனாரின் இந்தக் கட்டுரைகள் '**தனனேர் இலாத தமிழ்**' என்ற நூலாகவும், **கவிதைப் பூம்பொழில்** மறுபதிப்பாக, கண்டு பிடித்த இரு நெடும் பாடல்களை உள்ளடக்கியும், என் தமக்கையாரால் வெளியிடப்பட்டது. சிறப்பாக அவர், வேந்தனாரின் 35 குழந்தைப் பாடல்களையும் '**குழந்தை மொழி**' என்ற நூலாக, அழகிய மூவர்ணப் படங்களுடன் (பிரபல ஓவியர் சியாம் அவர்களின் கைவண்ணத்தில் உருவானவை), 13 பாடல்களை, தமிழகத்தின் பிரசித்திபெற்ற பின்னணிப் பாடகர்களைக் கொண்டு பாடுவித்து - இசையமைத்து-ஓர் குறுந் தகடையும் இணைத்து, பெரும் பொருட் செலவில் வெளிக் கொணர்ந்தார். என் மனதில் நீண்ட காலமிருந்த ஆசை, அவரால் நிறைவேறப்பட்டதைக் கண்டு மகிழ்ந்தேன்.

அதேநேரம், வேந்தனார் இறந்து 44 வருடங்களின் பின் இந்த 3 நூல்களும் வெளிவருகையில், வேந்தனார் பற்றிய அனைத்துத் தகவல் களையும் உள்ளடக்கிய ஒரு நூலை வெளியிட விரும்பினேன். அந்த வகையில் "வித்துவான் வேந்தனார்" என்ற 237 பக்கங்கள் கொண்ட நூலை வெளியிட்டேன். இது வேந்தனார் பற்றி, அவர் வாழும் பொழுதே

வந்த ஆக்கங்கள், அவர் இறந்த போது வந்த ஆக்கங்கள், அவர் இறப்பின் பின் அவரின் நண்பர்கள்-மாணவர்கள் அவரைப் பற்றி எழுதிய ஆக்கங்கள், அவரின் நினைவு மலர், அவரைப் பற்றி சொக்கன் அவர்கள் 1984இல் எழுதிய “ “தமிழ்ப்பேரன்பர் வித்துவான் க. வேந்தனார்” என்ற நூல் ஆகியவற்றை உள்ளடக்கி இருந்தது. இறுதியில் 1947இல் வேந்தனார் மணம் முடித்தபோது (21.11.1947), அவருக்கு திரு. நவநீத கிருஸ்ண பாரதியார், பண்டிதர் இராமச்சந்திரனார் ஆகியோர் எழுதிய திருமண மங்கல வாழ்த்துப்பாவும் இணைக்கப்பட்டு, நூல் மங்கலகரமாக முடித்து வைக்கப்பட்டது.

2010 ஆம் ஆண்டு, வேந்தனாரின் மூன்று நூல்கள் வெளியீட்டு விழாவும் “வித்துவான் வேந்தனார்” என்ற அவர் புகழ் பாடும் தொகுப்பு நூலும், உலகின் எட்டு நாடுகளில், என் தமக்கையாராலும், என்னாலும் வெளியிடப்பட்டன. என் தமக்கையார் இந்நூல்கள் வெளியீட்டு விழாவை, கனடா, கொழும்பு, சிட்னி, நியுசிலாந்து, மெல்போன், நோர்வே போன்ற ஆறு இடங்களில் சிறப்பாக நிகழ்த்தினார். நான் இலண்டனிலும், பாரிசிலும் இந்த நிகழ்வை பெருமையுடன் நடத்தினேன். இந்த நூல் வெளியீடுகள் முலம் கிடைத்த பணத்தை (28 இலட்சம் இலங்கை ரூபா) என் தமக்கையார் “சிவனருள் இல்லம்’ என்ற தர்ம தாபனத்திற்கு கையளித்திருந்தார். அவர்கள் இப் பணத்தில் செல்வபுரம் முறிப்பு என்னும் இடத்தில் **“வேந்தனார் விஞ்ஞான கல்விக் கூடம்”** ஒன்றையும், திருக் கேதீஸ்வரத்தில் **“வேந்தனார் நூல்நிலையம்”** ஒன்றையும் அமைத்தார்கள். எனது தமக்கையார், என் தந்தையாரின் மூன்று நூல்களை வெளியிட்டு, தந்தையின் பெருமையையும், தந்தையின் ஆசையின் ஓர் பகுதியையும் நிறைவேற்றி வைத்தார்.

பின்பு நமது விரைவான வாழ்க்கை ஓட்டத்தில் 7வருடங்கள் ஓடின. 2017 நடுப்பகுதியில், 5.11.2018 வரவிருக்கும் என் தந்தையாரின் நூற்றாண்டை கொண்டாட விருப்புக் கொண்டேன். அப்போது அவரின் தினகரனில் வந்த கட்டுரைகளை எடுத்து நூலாக்க விரும்பினேன். பிரான்சில் வாழும், வேலணை ஊரைச் சேர்ந்த திரு. செல்லத்துரை சிறீ பாஸ்கரனிடம் இது விடயமாக, அவரால் யாரையும் கொழும்பில் ஈடுபடுத்த முடியுமா எனக் கேட்டேன். 2018 தை மாதம், பாஸ்கரன் அவர்கள், கொழம்பில் உள்ள ஒருவரின் விபரங்களைத் தந்து, என்னை அவரைத் தொடர்பு கொண்டு கதைக்கும் படி கூறினார். அவர் தந்த பெயருக்குரிய வேலணை ஊரைச் சேர்ந்த **“திரு மாணிக்கவாசகர்”** அவர்களைப் பற்றி, நான் 2010ஆம் ஆண்டே அறிந்திருந்தேன். இவர்

எனது தமக்கையார் சுமார் 28இலட்சம் இலங்கை பணத்தை, சிவனருள் இல்லத்திற்கு வழங்கிய போது, அந் நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பா ளராக கிளிநொச்சி மன்னார் பகுதியில் தொண்டாற்றியதாக ஞாபகம். இவருடன் நான் மாசி 2018 இல் தொடர்பு கொண்டேன். இவருக்கு அனைத்து விபரங்களையும் பட்டியலிட்டு விபரமாக அனுப்பினேன். அவர் 2018 பங்குனி தொடங்கி 2018 ஆனி வரையான 4 மாத காலப் பகுதியில், விருப்புடனும், பொறுப்புடனனும் இப்பணியில் ஈடுபட்டு, என் தந்தையாரின் தினகரன் பத்திரிகை ஆக்கங்களின் 60 வீதமான ஆக்கங் களை எடுத்துனுப்பினார். இந்தப் பணிக்கு அவர் ஊதியம் ஒன்றும் எடுக்காமல், பத்திரிகை நிறுவனத்திற்கு Scan எடுக்கக் கொடுப்பதற்கு தன் சொந்தப் பணத்தையும் கொடுத்து, தன் பெரும்பகுதி நேரத்தையும் செலவழித்து, காலத்தால் அழியாத இப் பேருதவியைச் செய்து தந்துள்ளார். இவரிற்கு வேந்தனாரின் மகனாக, தமிழ் சமூக சிந்தனை கொண்டவனாக, தமிழ் இலக்கியரசனை மிக்கவனாக, என் அன்பான நன்றியை, இந்த இடத்தில் ஆவணப்படுத்த விரும்புகின்றேன்.

நன்மைக்கு குறைவில்லை-உண்மைக்கு இழப்பில்லை. சத்தியத் திற்கு அழிவில்லை. என் தந்தையின் களங்க மில்லாப் பிள்ளை உள்ளம், அந்தத் தமிழ்ப் பேரறிஞனின் மாசற்ற கவியுள்ளம், அந்தத் தமிழ்ப் பேரன்பரின் அழிவற்ற தமிழுள்ளம் - அவரின் படைப்புக்களை, அவர் எழுதி 70-60 வருடங்களின் பின்னும், அவர் இறந்து 53 வருடங்களின் பின்பும், சேமித்துவைத்த ஆக்கங்கள் எல்லாம் காணாமல் போய் 24வருடங்களின் பின்பும், இன்று வெளிவருவது - அவரின் சத்திய உள்ளத்தின் வெற்றியைக் காட்டுகின்றது.

**இதில் நானும் ஒரு சேவகனாக, தமிழ் உணர்வாளனாக, பாசமும், பற்றும், பரிவும் கொண்டு, என்னை 9 வருடம், தன் மடியிலும், மார்பிலும், தோளிலும் போட்டு வளர்த்த என் பாசத் தந்தைக்கு, என்னை மார்போடு அணைத்து, என் மகன் என் மார்பளவு வளர்ந்து விட்டான் என்று பெருமையுடன் கூறி அகமகிழ்ந்த என் ஆசைத் தந்தைக்கு, என்னைத் தான் செல்லுமிடம் எல்லாம் கூட்டிச் சென்று, தன்னைப் போல் உருவம், குணம் கொண்டவன் எனக் கூறி மகிழும் என் அன்புத் தந்தைக்கு, ஏழுவயதிலேயே நான் வரதராசனாரின் "அகல்விளக்கு" நூலை எடுத்து வாசிக்க முயல்கையில், என் தமக்கை நான் அதைக் கிழித்துவிடுவேன் எனத் தடுக்கையில், இல்லை அவன் வாசிக்கட்டும் என்று கூறி வளர்த்த என் அறிவுத் தந்தைக்கு, செலுத்தும் காணிக்கை ஆகும்.**

இன்று என் தந்தையின் 120 பத்திரிகைக் கட்டுரைகள், தட்டச்சுப் பிரதியாக இருந்த 17 கட்டுரைகள், அவரின் மிகவும் பிரசித்தி பெற்ற நான்காவது உலகத் தமிழ்விழா மாநாட்டில் அவர் 1.5.1951 ஆற்றிய பேருரை என்பன, இரு நூல்களாக வேந்தனார் கட்டுரை நூல் - **பாகம் 2 மாணவர் தமிழ் விருந்து**, **பாகம் - 3 தமிழ் இலக்கியச் சோலை** என வெளிவருகின்றது.

அவரின் இத்துசாதனம், ஈழகேசரி பத்திரிகைகளில் 1940-1949 காலப் பகுதியில் எழுதிய கட்டுரைகள், சுதந்திரன் பத்திரிகையில் -1948, களில் வெளிவந்த அவரின் சொற்பொழிவுகள் என்பன இன்னமும் எனக்குக் கிடைக்கவில்லை. என்னால் இவற்றை எடுக்கமுடியின் வருங்காலத்தில் இவற்றை நூலாக வெளியிடும் விருப்பிலுள்ளேன். **என் மனதின் அடி ஆழத்தில், 35 வருடங்களுக்கும் மேலாக நீறு பூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருந்த ஒரு தீ - இன்று அணைந்து எனக்கு மன நிறைவைத் தருவதாக உணர்கின்றேன்.** வேந்தனார் புகழ் காலம் கடந்து வாழும். இது சத்தியத்தின் ஓசையாகும்.

"*வில்லுக்கு வீரன் யாரெனில் விஜயனாகும்*
*விறல் தமிழ் சொல்லிற்கு வேந்தன் யார்-வேந்தனார்*"

அன்புடன்
**வேந்தனார் இளஞ்சேய்**

**இலண்டன் 06.03.2019**
**மின்னஞ்சல்:** vilansei@hotmail.com

# வேந்தனார் கட்டுரைகள் - பாகம் 1

## அறிமுக உரையின் உள்ளோசை

வித்துவான் வேந்தனார் தமிழ் உலகில் தலைசிறந்த கட்டுரையா சிரியராக இனங்காணப் பட்டவர் . தனது 22 ஆவது வயதில் இந்துசாதனம் பத்திரிகையில் எழுதத் தொடங்கியவர். தொடர்ந்து 26 வருடங்களாக, அவர் இறக்கும் வரை வாரா வாரம், பல இலக்கிய, சமூக, சமய, தமிழ் உணர்வுக் கட்டுரைகளை பல பத்திரிகைகளிலும் எழுதி வந்தவர்.

இவரின் இக் கட்டுரை எழுதும் ஆற்றலை, இரசிகமணிகனக செந்தில் நாதன் அவர்கள் ஓரிடத்தில் பின்வருமாறு கூறுகின்றார்.

"கவிதைகளை அடுத்து அவர் எழுதிய கட்டுரைகளைக் குறிப்பிட் டேயாக வேண்டும். வாரா வாரம் எழுதக் கூடிய வற்றாத விடயஞானம் அவரிடம் உண்டு. அப்படியே எழுதியும் வருகின்றார்."

இதை என்னொரு விதமாக ' சொக்கன்' அவர்கள் தன் கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

" ஐம்பதுகளில் தினகரன் பத்திரிகைகளில் அதிகம் எழுதியவர்கள் இருவர். ஒருவர் பண்டிமணி சி. கணபதிப்பிள்ளை மற்றவர் வேந்தனார். முன்னவர் தமக்கேயுரிய தனி நடையில் கம்பராமாயண நயப்புக் கட்டுரை களை எழுதினார். பின்னவரோ தமிழின எழுச்சிக்கான கவிதைகளையும், கட்டுரைகளையும், பழமையும், புதுமையும் வீற எழுதித் தள்ளினார்."

கவிநாயகர் - கவிஞர் வி. கந்தவனம் அவர்கள், ஓரிடத்தில் குறிப்பிடுகையில், பின்வருமாறு கூறுகின்றார்.

"நாவன்மையிலன்றிக் கட்டுரை வரையும் கலையிலும் வேந்தனார் வல்லவர். கட்டுரைகளில் கருத்துக்கள் மட்டுமன்றிக் கன்னித் தமிழுங் கனிந்து குழையும். அவரது தமிழின் இனிமை கட்டுரையைத் தொடர்ந்து படிக்கத் தூண்டும் தூண்டில் போல் இருக்கும்"

இவ்வாறு பல்வேறுபட்ட தமிழ் அறிஞர்களாலும், பல்வேறு தளங்களில், சிறந்த கட்டுரை ஆசிரியராகப் போற்றிப் புகழப்பட்டவர் வித்துவான் வேந்தனார் அவர்கள். இவர் 1940 இலிருந்து 1966 வரை பத்திரிகைகளுக்கு எழுதிய பல நூற்றுக்கணக்கான கட்டுரைகளில், ஓர் 77 கட்டுரைத் தலைப்புகளை தொகுத்து எனதருமைத் தமக்கையார் "தன்னேர் இலாத தமிழ்" என்ற ஓர் கட்டுரை நூலை 2010 ஆம் ஆண்டில் வெளியிட்டிருந்தார். இந்நூலில் வேந்தனார் அவர்களின் 1956-1958 ஆம்

ஆண்டுக்காலப் பகுதியில் ' தினகரன்' பத்திரிகையில் வந்த கட்டுரைகள் உள்ளடக்கப் பட்டிருந்தன.

தற்போது வேந்தனாரின் கட்டுரை நூல் பாகம் 2, பாகம் 3. ஆகியவற்றில், வேந்தனாரின் பல்வேறு பத்திரிகைக் கட்டுரைகள் (1951 - 1955 ஆண்டு காலப் பகுதியிலும், 1963ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் வந்தவை) தேடி எடுக்கப் பட்டு, வெளியிடப் பட்டுள்ளன. இத்துடன் அவர் தட்டச்சுப் பிரதியாக வைத்திருந்த "தமிழ் வளர்த்த சான்றோர்" இலிருந்து 17 கட்டுரைகள், கட்டுரை நூல் 2 இல் வெளியிடப் பட்டுள்ளன.

வேந்தனார் கட்டுரை நூல் பாகம் 2 இல், மொத்தம் 65 கட்டுரைத் தலைப்புகளில் 69 கட்டுரைகள் பிரசுரிக்கப் பட்டுள்ளன. இக்கட்டுரை நூல் - பாகம் 2, ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பகுதி 1 இல் **தமிழ் வளர்த்த சான்றோர்** பதினேழுபேர் பற்றி, பாடசாலை உயர்வகுப்பு மாணவர்களைக் கருத்தில் கொண்டு எழுதப் பட்ட கட்டுரைகள் இணைக்கப்பட்டுள்ளன. பகுதி 2 இல், இளைஞர்களுக்கு, மாணவர்களுக்கு ஆக எழுதிய முப்பது கட்டுரைகள் **'மாணவர் விருந்து'** என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளன. பகுதி 3 இலும் 4 இலும், சங்ககால இலக்கியப் பாடல்கள் சிலவற்றை, **நற்றுணைச் செல்வம், செய்யுள் நயம்** என்ற தலைப்புகளில், மிகச் சுவையாக இலக்கியம் படிக்கும் மாணவர்கட்கும், இலக்கிய ரசிகர்களுக்கும் எழுதிய கட்டுரைகள் இணைக்கப் பட்டுள்ளன. பகுதி 5 இல், **தமிழ் வளர்த்த சான்றோர்-2"** என்ற தலைப்பில் தமிழ்ப் பெரியார்கள் ஐவரின் பாடல் சிறப்புக்களை விமர்சித்து எழுதிய கட்டுரைகள், ஐந்து இடம் பெற்றுள்ளன. பகுதி 6, 7இல் **"வேந்தனார் சொற்பொழிவுகள்"** என்ற தலைப்பில் வேந்தனாரின் கிடைக்கப் பெற்ற, பத்திரிகையில் வெளி வந்த சொற்பொழிவுகள் ஐந்து இணைக்கப்பட்டுள்ளன.

முதலாம் பகுதியான. "தமிழ் வளர்த்த சான்றோர்" பகுதியில், தமிழர்கள் தமிழை மறந்து வாழ்ந்த காலத்தில், தமிழுக்கு பெருந் தொண்டாற்றிய சான்றோர் பதினேழு பேர் பற்றி, மிகவும் சுவைபட எழுதிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இவர்களில், ஈழத்தைச் சேர்ந்த சி வை தாமோதரம் பிள்ளை, தமிழ்த் திரு. சபாபதி நாவலர், திரு. வி. கனகசபைப் பிள்ளை, சோமசுந்தரப் புலவர், மகாவித்துவான் கணேசையர், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், சின்னத்தம்பிப் புலவர், வித்துவ மாமணி நா. கதிரவேற் பிள்ளை, அருட்திரு விபுலானந்த அடிகளார், ஆறுமுக நாவலர், ஆகிய பத்து சான்றோர்களும், தமிழகத்தைச் சேர்ந்த ரா.பி. சேதுப்பிள்ளை, டாக்டர். உ.வே. சாமிநாத ஐயர், மறைமலையடிகள்,

பண்டித மணி கதிரேசச் செட்டியார், சட்டவிரிவுரையாளர் திரு. கா. சுப்பிர மணியன், இராகவ ஐயங்கார், ந.மு. வேங்கட சாமி நாட்டார் ஆகிய ஏழு தமிழக அறிஞர்களும் அடங்குவர். இக்கட்டுரைகள், பாடசாலைகளில், உயர் வகுப்புகளில், தமிழ் இலக்கியம் கற்கும் மாணவர்களுக்கு மிகவும் உபயோக மானதாக இருக்கும். ஏனெனில் நாம் தமிழ் இலக்கியங்களைக் கற்கையில், இவற்றைப் பதிப்பித்து தொண்டாற்றிய நம் தமிழ்ப் பேரறி ஞர்கள் பற்றி அறிந்திருத்தல், தெரிந்திருத்தல் மிக அவசியமானதாகும். இவர்களால் அரும்பாடுபட்டு பதிப்பித்த நூல்களும், ஆராய்ச்சி நூல் களும், இன்று எமக்கு, எம் முன்னோரின் இலக்கியச் சொத்துக்களை அழியாது தந்து எம்மை வாழ்வித்துள்ளன.

தொடர்ந்து பகுதி 2 இல், மாணவர் விருந்தில், முப்பது முத்தான கட்டுரைகள், உயர் வகுப்பு மாணவர்களுக்கும், இளைஞர்களுக்குமாக எழுதப்பட்டவை, இடம் பெற்றுள்ளன. இக் கட்டுரைகள் இன்றும், புலம் பெயர் சூழலிலும், நம் பாடசாலை மாணவர்களுக்கு, இளையோர்களுக்கு, மிக மிக வேண்டப் பட்டதாக உள்ளதாகவே நான் கருதுகின்றேன். இதிலுள்ள கட்டுரைகளான **'தன்னம்பிக்கை', 'செயல்வீரர்,' 'அறிவும் ஆண்மையும், இளமையும் முதுமையும்** போன்றவை இன்றும், என்றும் நம் இளையோர்க்குப் பயன்படக் கூடியனவாக உள்ளன. இந்த மாணவர் விருந்திலுள்ள 30 கட்டுரைகளும், தனி ஒரு நூலாக வருங்காலத்தில் அச்சிடப்படுகையில், அது இங்கைய தமிழ் பாடசாலைப் பிள்ளைகளுக்கு, மிக மிகச் சிறந்த ஓர் பாடநூலாக அமையும் என்பதில் எனக்கு நம்பிக்கை யுண்டு.

மூன்றாம் பகுதியான நற்றிணைச் செல்வத்திலுள்ள நான்கு கட்டுரை களும், இலக்கியச் சுவை மிக்கனவாக உள்ளன. சங்ககாலப் பாடல்களை விளக்கி, அதில் மறைமுகமாகக் கூறப்படும் பொருட் குறிப்பை, 'புதை பொருள்' ஆக வேந்தனார் விளக்குகின்றார். இது பற்றி வேந்தனார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"இங்ஙனம் குறிப்புப் பொருள் படக் கூறுகின்ற சிறப்பு பழந்தமிழ் மக்களின் நாகரிகத்தைக் காட்டுகின்றது.

அக ஒழுங்குகளில் வெளிப்படையாகக் கூறுவதிலும், குறிப்பாகக் கூறுதல் மிக உயர்ந்த பண்பாகும்."

தொடர்ந்து பகுதி நான்கில், நான்கு கட்டுரைகள் "செய்யுள் நயம்" என்ற தலைப்பில் வருகின்றன. இதில் உள்ள நான்கு கட்டுரைகளும் மிகவும் சொற்சுவை, பொருட் சுவை நிறைந்த அருமையான கட்டுரைகள். **"புள்ளும் பூவும்", "மயிலும் வான் கோழியும்"** என்ற கட்டுரைகள் நாமெல்

லோரும் படித்து, உணர்ந்து சிந்திக்க வேண்டிய கட்டுரைகளாகும். இந்தக் கட்டுரைகளில் பல சிறப்பான வாழ்வியல் கருத்துக்கள் உவமானம்- உவமேயம் பொருள்களாக - மிகச் சிறப்பாக விளக்கப் பட்டுள்ளன.

பகுதி 5 இல் தமிழ்ப் பெரியார்களான. தங்கப் புலவன், பொருளதி காரம் தந்த புரவலன், பாரதி, கவியோகி சுத்தானந்த பாரதியார், மற்றும் மாவைக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணனார் என அழைக்கப்பட்ட திரு. நவநீதகிருஸ்ண பாரதியார் ஆகிய ஐவரின் பாடல்களை விமர்சித்தும், அவர்களின் செய்ல்களைப் போற்றியும் எழுதிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

இறுதியாக பகுதி 6, 7இல், வேந்தனாரின் சொற்பொழிவுகள் சில இடம் பெற்றுள்ளன. வேந்தனார் "சொற்பொழிவு" பற்றிக் குறிப்பிடுகையில் பின் வருமாறு கூறுகின்றார்.

"மக்களின் பகுத்துணர்ச்சியை மலர்த்துவது பேச்சு. பேச்சுத்திறன் அற்ற கல்வி, மணம் அற்ற மலர் போல் மாட்சி கெடும். தன் உள்ளக் கருத்துடன் உளங்கொள்ளச் சொல்லுந்திறன் மிக உயர்ந்தது. உயிர் ஆற்றல் வாய்ந்தது. பாடும் புலவனின் உள்ளம் பாவில் நிழலாடுவது போலப் பேசும் புலவனின் உள்ளம் பேச்சில் அலையெறிகின்றது. ஆயிரக்கணக் கான மக்களின் உள்ளத்தை அப்படியே அள்ளித் தன் கொள்கையை நாட்டுகின்ற குரலின் ஒலி கோடி அணுக்குண்டுகளிலும் ஆற்றல் கொண்டது. அணுக்குண்டு மக்களின் வாழ்க்கைக்குத் துணையான, புறப் பொருளை அழிக்கும். அகத்தில் அரும்பி ஆட்சி புரியும் உயிர் ஆக்கத்தை அழிக்காது. ஆற்றல் கொண்ட பேச்சாளன், மக்களின் ஆவிக் குள்ளும் புகுந்து தன்னாற்றலால் அவர்கள் ஆற்றலை அடக்கி விடுவான்"

இது பற்றி சொக்கன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"மேலே குறித்தவை வேந்தனாருக்கும் பெரிதும் பொருந்துவன வாகும். சிறந்த சிந்தனையாளராய், நல்ல கவிஞராய், தரமான கட்டுரையா சிரியராய் விளங்கிய அவர், மிகுந்த ஆற்றல் பொருந்திய சொற்பொழி வாளராயும் விளங்கினார். நாற்பதுகள் தொடக்கம் ஐம்பதுகள் வரை அவர் நிகழ்திய மேடைப் பேச்சுக்கள் எண்ணுக் கணக்கற்றவை. இளைஞர்களும். தமிழ் சுவைஞர்களும், பழமரம் நாடும் பறவைகள் போல் அவரின் பேச்சுக்களைக் கேட்கப் பல்லாயிரக் கணக்கில் திரண்டு வந்ததை நேரில் கண்டிருக்கின்றேன்"

வேந்தனாரின் சொற் பொழிவுகள் பல பத்திரிகைகளில் வந்திருந்தன. இதில் சுதந்திரன்(4), வீரகேசரி (4), தினமணி (1) போன்ற பத்திரிகைகளில்

வந்த சொற்பொழிவுகள் இன்னமும் எனக்குக் கிடைக்கவில்லை. இந் நிலையில் வேந்தனாரின் ஐந்து சொற் பொழிவுகள், இங்கு இணைக்கப் பட்டுள்ளன.

இதில் சிறப்பாக அவர் "நான்காம் உலகத் தமிழ் மாநாடு" 1951 ஆம் ஆண்டு சித்திரை 29, 30, வைகாசி 1, ஆகிய மூன்று நாட்கள், யாழ்ப்பாண பரமேசுவராக் கல்லூரி மைதானத்தில் நடந்தபோது, **1.5.1951** ஆற்றிய **"வாழும் இலக்கியம்"** என்னும் பேருரை, குறிப்பாக பலராலும் மிகவும் போற்றப் பட்டதாகும். இந்த விழாவில் கலந்து கொண்ட இலங்கைத் தமிழ் அறிஞர்களான பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை, புலவர் மணி பெரியதம்பிப் பிள்ளை, மகாவித்துவான் கணேசையர், முது தமிழ் புலவர் நல்ல தம்பி, தனநாயகம் அடிகளார் ஆகியோருடன் தமிழக அறிஞர் களான போசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை, மா.பொ.சி, கல்கி ஆசிரியர் கிருஸ்ணமூர்த்தி, டாக்டர் மு. வரதராசனார், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் ஆகியோர் இந்தப் பேருரையின் சிறப்பினை நேரில் கண்டும், கேட்டும் - பலவிடங்களில் பலவாறாகப் புகழ்ந்து பேசியுள்ளார்கள். இப்பேருரை முழுமையாக தினகரன் ஞாயிறு வார இதழில், 5 வாரங்கள் தொடர்ச்சியாக 13.05.1951 தொடங்கி 10.06.1951 வரை வந்திருந்தது. இவ்வுரை இந்த நூலில் பகுதி 7இல் முழுமையாக, நிறைவாகப் பிரசுரிக்கப்பட்டு, நூலின் சிறப்பை உயர்த்தியுள்ளது.

'வாழும் இலக்கியம்' என்ற கருத்தாழமிக்க இப்பேருரை, கட்டாய மாக எல்லா இலக்கிய ரசிகர்களாலும் படிக்கப் பட வேண்டியது. வேந்த னாரின் நுணுக்கமான இலக்கியத் திறனாய்வுத் திறனை இப்பேருரையில் காண முடியும். வேந்தனார் வாழும் இலக்கியத்திற்கு கொடுக்கும் வரைவிலக்கணம் மிகவும் ஆழமாக நோக்கப் படவேண்டியது.

வேந்தனாரின் இந்த 60 கட்டுரைகளையும், அவரின் ஐந்து சொற் பொழிவுகளையும் படிப்போர், அவரின் தமிழின் இனிமையை, எளிமையை பெருமையை, மிடுக்கை நன்குணர்வார்கள்.

*'வில்லுக்கு வீரன் யாரெனில் விஜயனாகும்*
*விறல் தமிழ் சொல்லிற்கு வேந்தன் யார் - வேந்தனார்!*

நன்றி.

அன்புடன்
**வேந்தனார் இளஞ்சேய்**

**இலண்டன் 11.03.2019**
மின்னஞ்சல்: vilansei@hotmail.com

# அணிந்துரை

வித்துவான் வேந்தனார் அவர்கள், தாம் வாழ்ந்த 20ஆம் நூற்றாண்டில் ஈழத்திலும் தமிழகத்திலும் வாழ்ந்த சைவப் பேரறிஞர்களால் நன்கறிந்து பாராட்டப் பட்ட ஒரு சைவத் தமிழ் பேரறிஞரும், சிறந்த கவிஞருமாவார். அவர்தம் செழுமையான பல ஆக்கங்கள் அனைத்தும் அவரது பிள்ளைகளால் 2 தொகுதிகளாக அழகுற அச்சிட்டுத் தமிழர் வாழும் உலக நாடுகளில் கோலாகலமாக வெளியிடப்பட்டன. அந் நூல்களின் மூலம் திரட்டப்பட்ட இலங்கை ரூபா சுமார் 28 இலட்சம் வரையான நிதி இலங்கை திருக்கேதீஸ்வரம் சைவ அநாதை இல்லத்திற்கு (சிவன் அருள் இல்லம்) நன்கொடையாக, அவர் பெயரில் அவர்தம் பிள்ளைகளால் வழங்கப் பட்டிருக்கின்றது.

இப்பொழுது அவர்தம் மக்கள், அன்னாரின் படைப்புகளான கட்டுரைகளையும் பாகம், பாகமாகத் தொகுத்து வெளியிட்டுத் தமிழிலக்கியக் களஞ்சியத்துக்கு வளமூட்டும் பணியில் மும்மரமாக ஈடுபட்டு வருகிறார்கள். அந்த வரிசையில், வேந்தனார் கட்டுரைகள் - பாகம் 2 மாணவர் தமிழ் விருந்து என்னும் பெயரில் வெளிவருகின்ற நூலுக்கு, அன்னாரின் மாணாக்கனாகும் பேறுபெற்ற நான் அணிந்துரை எழுதும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளேன்.

ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட அறிவியல் ஆராய்ச்சி உண்மை களின் தளத்தில் நின்று, ஆராய்ந்து, புதிய உண்மைகளைக் கண்டுபிடித்து, மனித இன வாழ்வை வளம்படுத்தி வரும் போக்கிலேயே, விஞ்ஞானி களின் பணி அமைந்துள்ளது. மனித வாழ்வைப் படம் பிடிக்கும், செல்நெறிப்படுத்தும் இலக்கியம் முதலான கலைகளும் இக் குறிக் கோளுடனே அமைய வேண்டும். இலக்கியங்களை அப்படியே மீட்டெழுதி, அரைத்த மாவை அரைப்பது போன்ற போக்கில் காலம் சக்தியை வீண் விரயம் செய்யும் படிப்பாளிகளே இன்று தமிழுலகில் அதிகம் காணப்படுகின்றனர். இந்தப் போக்கிற்கு மாறாக, சொல்லிக் கொடுத்ததையே திருப்பிச் சொல்லுங் கிளிப்பிள்ளை போலல்லாது, கல்வியின் உண்மைப் பெறுபேறான சுயசிந்தனை மூலம், தாம் கற்றறிந்து கொண்டவற்றின் அடிப்படையில், தாம் ஆராய்ந்து புதிய, புதிய உண்மைகளைக் கண்டறிந்து, எழுத்திலும், பேச்சிலும், உலகுக்கு வழங்கி மனித குல மேம்பாட்டுக்கு உதவுவதே கற்றோர் செய்ய வேண்டிய தலையாய கடமை என்ற ஆழமான கருத்தை வேந்தனார் அவர்கள்

இந்நூற் கட்டுரைகளில் வலியுறுத்தியுள்ளமையும், அவ்வாறே தமது படைப்புக்களைப் புதிய கருத்துக்களைப் பொதிந்தவையாக இந்நூலிற் பொழிந்து தள்ளியுள்ளமையும் அவரது தனித்துவமான இலக்கிய ஆளுமைக்குச் சான்றுகளாயமைந்துள்ளன.

மானுடவியல் ஆய்வுகள், மொழியியல் ஆய்வுகள், கால ஆராய்ச்சிகள், புவிச்சரித்திரவியல் ஆய்வுகள் மூலம் உலக நிபுணர்களால், ஒரு மனமாக எடுக்கப்பட்ட முடிவு, உலகில் முதன் முதலில் தோன்றிய மொழி - உலகின் ஆதி மொழி தமிழ் என்பதுதான் . இதனை உறுதிப்பட ஏற்றுக்கொண்டு, உலகின் முதன்மை வலைத்தனமான கூகிள் (Google) ஆனது (Which is the oldest language of the world) உலகின் அதி மூத்த (முதல்) மொழி எது? எனுங் கேள்விக்கு 'தமிழ்' என்று ஒரு சொல்லில் தெளிவாக விடையளித்துள்ளது. இவ்வுண்மையை உலகின் ஏனயை இனங்கள் கூட மறுக்கவில்லை. தமிழ் மக்கள் இப்பெருமிதத்தில் உள்ளம் பூரித்து "நாம் தமிழர்" என்று மார்தட்டுகின்றார்கள்.

தமிழிலிருந்து பிற்பட்ட காலங்களில் தோன்றிய பழைய மொழி களுள், சமஸ்கிருதம், பாளி, இலத்தீன் போன்ற மொழிகள் காலத்துக்கேற்ற - காலங்களைப் பிரதிபலிக்கின்ற ஆற்றல்கள், வளர்ச்சிகள் எய்தத் தவறியதின் காரணமாக, வழக் கொழிந்து போயிருக்க, தமிழ் இன்றுஞ் சீரிளமைத் திறங்குன்றாது நின்று நிலைப்பதை உணர்ந்து தமிழர் நாம் இறும் பூது எய்துகிறோம். இக் காரணங்களாலும், சீனர், ஜெர்மனியர், ஆங்கிலேயர் போன்ற வேற்றினத்தவர்களும், தமிழை ஆர்வத்தோடு கற்கக் கிளம்பியுள்ள செய்திகளால் உந்தப் பட்டும் நம் தமிழர்கள் புதிய உற்சாகத்துடன், தமிழைக் கற்கப் புகுந்துள்ளனர். அந்தவகையில் கால கட்டங்கள் தோறும் வேண்டப்பட்ட வளர்ச்சிகள் பெற்றுத் தமிழ் சிரஞ் சீவித்துவம் பெறவைத்த மொழி இலக்கியப் பணிகளில் அர்ப்பணிப் போடு இதுவரை உழைத்துவந்த தமிழ் சான்றோர்களைப் பற்றி அறிந்து கொண்டு, அவர்களைப் போற்றவும், அவர்களைப் பின்பற்றிப் புதிய வழிகளில் தமிழ்ப் பணியாற்றவும், தமிழ் உலகம் தலைப்பட்டு நிற்கிறது. இந்த நிலையில் வித்துவான் வேந்தனார் அந்தத் தமிழ்ப் பணியாளர்கள் பற்றி, இரத்தினச் சுருக்கமாக இனிக்க இனிக்க எழுதிய கட்டுரைகளை நிறையக் கொண்டு விளங்கும் வேந்தனார் பாகம் 2 **மாணவர் தமிழ் விருந்து** என்னும் இந்நூல், தமிழார்வலர் அனைவருக்கும் நல்விருந்தாகும் என்பதில் ஐயமில்லை.

காலங்களுக்கேற்ற கோலங்கள் கொண்டு, வளர்ந்து, வளர்ந்து தமிழ் உயிர்ப்புடன் நிலைக்க ஏதுவான பணிகளைப் புரிந்தோருள் இன்று

அனைத்துத் தமிழருமே அறிந்திருக்கும் பல்துறைப் பணியாளர், "நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழெங்கே? சுருதி யெங்கே?" என்று அறிஞர் சி.வை. தா. நயந்த, வசன நடை கைவந்த வல்லாளன் எனப்பட்ட **ஆறுமுக நாவலர்,** தமிழரின் மறக்கப்பட்ட - தொன்மையான தமிழிசையின் மூலங்களை ஆராய்ந்து, அதற்கும் புத்துயிர் அளிக்கும் விதத்தில் யாழ் நூல் என்ற அரிய நூல் தந்த, இனிய கவிதைகள், நாடகங்கள் தந்த **சுவாமி விபுலானந்தர்,** தமிழை ஆரியமொழி விழுங்கி அழிக்காமல் தனித்தமிழ் இயக்கம் மூலம் காத்த சான்றோரான **மறைமலை அடிகள்,** சங்க இலக்கண இலக்கியங்கள் முதற் கொண்டு, பழந் தமிழ் நூல்கள் அழியாமல் அச்சிட்டுக் காத்த **டாக்டர். உ.வே.சாமிநாதையர், சி.வை. தாமோதரம் பிள்ளை** முதலியவர்களின் சுருக்கமான ஆனால் கனதியான வரலாறுகளோடு, இதுவரை போதிய அளவு தமிழ் மக்களால் அறியப்படாதிருக்கும், ஆணித்தரமாக அர்ப்பணிப்போடு தமிழ்ப்பணிகளுக்காக அயராதுழைத்த **பண்டித மணி கதிரேசன் செட்டியார், மு. இராகவையங்கார்,** ஈழத்து இலக்கண, இலக்கிய வித்தகர்களான **சுன்னாகம் குமார சுவாமிப் புலவர், மகாவித்துவான் புன்னாலைக் கட்டுவன் கணேசையர்,** தமிழில் முதலாவது இலக்கிய வரலாற்று நூலாயமைந்த திராவிடப் பிரகாசிகையை எழுதிய **கோப்பாய் சபாபதி நாவலர்,** ஆங்கிலத்தில் முதலாவது தமிழிலக்கிய வரலாற்று நூலினை ஆக்கிய **மல்லாகம் கனகசபைப் பிள்ளை** முதலான தமிழ்த் தொண்டர்கள் பலரின் வரலாறுகளையும் இந்நூலில் வித்துவான் வேந்தனார் எழுதியுள்ளார். அத்தோடு நில்லாமல், அந்த ஒவ்வொரு கட்டுரையின் முடிவிலும், இச் சான்றோர் புரிந்த தமிழ்ப் பணிகளின் இன்றியமையாமையைப் பிற்சந்ததிகளும் உணரவேண்டும், அவற்றை மதித்துத் தாமும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியிருப்பது, வேந்தனாரின் தமிழ் மீதான ஆழ்ந்த பற்றையும், தமிழின் நிலை பேற்றின் மீதான தீவிர அக்கறையையும் பறை சாற்றுகின்றது.

வித்துவான் வேந்தனர் அவர்களின் இன்னொரு ஆளுமை, அவர்தன் கவிஞானச் சிறப்பாகும். சங்க காலக் கவிதைகளில் இருந்து, பிற்பட்ட காலப் பகுதிகளில் எல்லாம் எழுந்த கவிதைகளுள் கால வெள்ளத்தை எதிர் நீச்சலடித்து நின்று நிலைத்த கனதிமிக்க கவிதைகளில் எல்லாம், தோய்ந்து, துதைந்து, தாம் சுவைத்த கவிதைகளைத் தந்த புலவர்கள், கவிஞர்களான கணியன் பூங்குன்றன், கபிலர், இளங்கோவடிகள், பழகு தமிழ்ப் பா நடையைப் பைந்தமிழ் மடை திறந்து வைத்த பாரதியார்,

இறைநெறி, சமூகம் சார்ந்த கவிதைகளை அள்ளி தந்த கவியோகி சுத்தானந்த பாரதியார், நவநீத கிருஸ்ண பாரதியார் எனப்படும் தமிழகம், ஈழம் இரண்டும் சார்ந்த வெண்ணெய்க் கண்ணனார், பிற்கால ஈழத்தின் தலைமைக் கவிஞர்களாக மதிக்கப்படும் நல்லை நகர்ச் சின்னத்தம்பிப் புலவர், நவாலி சோமசுந்தரப்புலவர், மற்றும் புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை போன்றவர்களைப் பற்றியெல்லாம், பொங்கிப் பெருகும் தமது தமிழ்க் காதலால்,, அமைந்த கண்ணோட்டங்களில் தரிசித்து, இந்நூலில் கட்டுரைகளாகவும், சொற் பொழிவுகளாகவும் வேந்தனார் வழங்கியுள்ளார்.

இவற்றை விட கம்பராமாயணக் கதை மாந்தர்களான, வீரமும் மெய்யன்புமிக்க குகன், உலைவற்ற, மாசற்ற நன்றியுணர்வும், குலமானமும், இரத்த பாசமும் கொண்ட கும்பகர்ணன் ஆகியோரின் குணச் சிறப்புக்களை, ஏந்தும் கட்டுரைகள், இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

மேலும் தமிழ்மொழியின் நல்லெதிர்காலம் பற்றிய அக்கறை காரணமாக, தாம் வாழ்ந்த காலத் தமிழ் சமூக சூழ்நிலையைப் பட்டறிந்த அனுபவத் தளத்தில் நின்று, சிந்தித்துத் தெளிந்து வரைந்த கட்டுரைகள், அவர் ஆற்றிய உணர்ச்சிகரமான சொற்பொழிவுகள் என்பன இத் தொகுதியின் பயன் பாட்டை அதிகரிக்கும் தன்மை வாய்ந்தவையாகும்.

இந்தியா, இலங்கை, மலேசிய போன்ற நாடுகளில், சரமாரியான அரச ஒடுக்குமுறைகளுக்கும், பேரினவாத வன்முறைகளுக்கும் முகங்கொடுத்துப் போராடிக் கொண்டிருக்கும் தமிழ் சமூகங்களுக்கு, தற்காலத்தில் அவசியம் தேவைப்படும் மன ஓர்மத்தையும், அறம் மீதான நம்பிக்கையையும், தன்னம்பிக்கையையும். தர்ம ஆவேசத்தையும் ஊட்டக் கூடிய ஒரு மனப்பாங்கை, இற்றைக்கு 60 ஆண்டுகளுக்கு முன்பே, தீர்க்க தரிசனத் தோடு, தமது கட்டுரை, சொற்பொழிவுகளில் வேந்தனார் விதையிட் டிருப்பது, அவரது முக்காலமும் உணர்ந்த தன்மையைக் காட்டுகிறது.

அதாவது அறந்தவறாச் சிந்தனை, சொல் செயல்கள் அமைந்த நெறியில் நாம் வாழும் போதும், நமக்குப் பிற சக்திகள் இன்னலை புரியப் புகுந்தால், தயங்காமல், தளராமல் "வெல்வோம்" எனும் மன உறுதியோடு எதிர்த்து அறவழியில் போராட வேண்டும். இந்த இன்னல்கள் விதி வசமாகத் தான் நம்மை வருத்துகின்றன என்று வளைந்து கொடுக்கவோ, பின்வாங்கவோ கூடாது. அந்த அறம் சார்தற் காப்புப் போராட்டத்தில் வரும் தோல்விகள், பின்னடைவுகளால் சோர்ந்தோ, துவண்டோ

போகாமல், மீண்டெழுந்து, மீண்டெழுந்து போராட வேண்டும். அப்படித் தமிழர்கள் தாம் வாழும் இலங்கை, இந்தியா, மலேசியா போன்ற நாடுகளில் மேற்கொள்ளும் விடா முயற்சிகள் மூலமே தத்தமது இருப்பை பாது காப்பைத் தக்கவைக்க முடியுமென்ற உண்மையை இந்நூற் கட்டுரைகள் மூலம் சொல்லாமல் சொல்லுகிறார் நூலாசிரியர்.

*ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று*
*சூழினும் தான் முந்துறும்*

என்று ஊழின் - விதியின் வலிமையை உறுதிபடப் பாடிய வள்ளுவர் பெருந்தகை, தம் சிந்தனையில் மேலும் ஏற்பட்ட வளர்ச்சியின் பெறு பேறாக.

*ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்*
*தாழாது ஏற்று பவர்*

என சஞ்சலப்படாத, உறுதியான, விடா முயற்சியால், விதியையும் வெல்ல முடியும் என்று பாடி வைத்திருப்பது வேந்தனாரின் கருத்துக்கு வலுச் சேர்க்கிறது.

மேலும் இந்தத் தொகுதியில் மரபுக் கவிதைகளாக எழுதப் பட்டிருக்கக் கூடிய இயற்கை வர்ணனைகள், பல கற்பனை நயம் பொலிந்த வசன கவிதைகள் போன்ற சொல் நடையில் எழுதப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகிறது. சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப்பிள்ளைக்கு ஒர் இழுமெனும் இளிய ஓசைத் தமிழ் நடை அமைந்தது போல, அறிஞர் அண்ணாவுக்கு கம்பீரமான ஓர் எழுச்சி வசன நடை அமைந்ததுபோல், கலைஞர் கருணாநிதிக்கு கவிநயம் ததும்பும் கவர்ச்சி நடை அமைந்தது போல், திரு.வி.கவுக்கு, சிறு சிறு வாக்கியத் தெளிவு நடை அமைந்தது போல, வேந்தனாருக்கும் தனித்தமிழ் ஒலிகள் குலுங்கும் தனித்துவமான **செந்தொடைப்பா நடை** அமைந்திருப்பதை, இக்கட்டுரைகளைப் படிப்போர் புரிந்தின்புற முடியும்.

உலக இலக்கிய போக்குக்கு முன்னோடியாக விளங்கும் ஆங்கில இலக்கியத்தின் இன்றைய உச்சமான கருத்து வெளிப்பாட்டு உபாயமாகக் கையாளப்படுவது வெளிப்படைப் பொருளோடு வேண்டிய இடங்களில் குறிப்புப்பொருளாகக் கருத்துக்களை வெளியிடும் முறைமையுமாகும். இத்தகைய மறைமுகப் பொருள் வெளியீட்டு உத்திமுறையை, 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்திலேயே தமிழ்ப் புலவர்கள்

தொடங்கி விட்டதை அக்கால அகப்பொருள் செய்யுள்களில் காணலாம். அந்த மறைமுகக் கருத்து வெளிப்பாட்டு உத்திகள் உள்ளுறை உவமம், இறைச்சிப்பொருள், என்னும் பெயர்களால் குறிப்பிடப் படுகின்றன. இவை உள்ளிட்ட உருவக அணி, பிறிதின் நவிற்சி அணி, அங்கத அணி போன்றவைகள் வெளிப்படையாகச் சொன்னாலும், தீங்கு சொல்லாமல் விட்டாலும், தீங்கு என்று நம்பப்படும் கருத்துக்களை கேட்போரும் படிப்போரும் ஊகித்தே அறியும்படி மறைபொருளாக வெளிப்படுத்தப் பயன்படுத்தப் படுகின்றன. மொழி இலக்கணத்தில் மங்கலம், குழு உக்குறி, இடக் கரடக்கல் ஆகிய தகுதி வழக்குச் சொற்கள், சொற்றொடர்களும், மரபுச் சொற்றொடர்களும், மறைமுகமாக - குறிப்பால் ஒரு கருத்தை வெளியிட உதவும் உபாயங்களே!

சங்க இலக்கிய நூலான நற்றிணை எனும் அகப்பொருள் நூலில் சில பாடல்களை எடுத்துப் பா நலம் உரைக்கப் புகுந்த வேந்தனார் அவர்கள், அப்பாடல்களில் இடம் பெறும் மறைமுகப் பொருளுரை தரும் உள்ளுறை உவமைகளுக்கு தற்கால சாதாரண தமிழ் வாசகரும் புரிந்து கொள்ள உதவும் நோக்கோடு, புதைபொருள் எனப் பெயர் சூட்டியுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

வேந்தனாரின் இந் நூற் கட்டுரைகளில் இடம் பெறும் இன்னொரு சிறப்பு, சங்கச் செய்யுள்களில் பொதிந்துள்ள, ஆனால் பிற அறிஞர்களால் இதுவரை எடுத்து விளக்கப் பட்டிராத நல்ல கருத்துக்கள் சிலவும் வெளிச்சத்துக்கு கொண்டு வரப் பட்டிருப்பது தான். அவற்றுள் உதாரணத்திற்கு ஒன்று இதோ!

மனிதன் உலகியல் இன்பங்களில் நாட்டங் கொள்வதை விடுத்து, இறை நிலை தழுவிய நிலையான முத்திப் பேரின்பத்தையே இலக்காகக் கொண்டு வாழ வேண்டும் என்றுதான் நம் அனைத்துச் சமய நூல்களும் வலியுறுத்துகின்றன. அதற்குக் காரணமாக அவை காட்டுவது உலகியல் இன்பங்கள் நிலையற்றவை. ஒரு நாள் அழிந்து விடும் என்பதே! ஆனால் சங்கச் செய்யுள் ஒன்று இக் கோட்பாட்டை வலியுறுத்தும் முற்றும் புதிய ஒரு காரணத்தை ஓர் உதாரணக் கதை மூலம் காட்டுகிறது.

அதாவது ஒரு ஆண்குரங்கும், மந்தித் துணைவியும், ஓர் இனிய பலாப்பழத்தை மகிழ்ந்துண்டு கொண்டிருக்கின்றன. அப்பொழுது அங்கு வந்த மானுடன், அந்தக் குரங்குகளை விரட்டி விட்டு, அவனே அப் பலாக்கனியை உண்டு மகிழ்கிறான். இக்கதையானது உலகியல் இன்பங்கள்

பிறரால் அபகரிக்கப் பட்டு இழக்கப் படக் கூடியவை என்றும், உலகியல் இன்பங்களில் நாம் இலக்கு வைத்து வாழக்கூடாது என்ற கோட்பாட்டுக்கு ஒரு புதிய காரணத்தை முன் வைத்துள்ளது.

இப்படியான தொன்மை மிக்க கருத்துப் புதையல்களைத் துருவி ஆராய்ந்து வெளிக் கொணர்ந்து, தமிழிலக்கிய ஆர்வலர்களுக்கு விருந் தாக்கும் வேந்தனாரின் இலக்கியப் பணி விலைமதிக்க முடியாததாகும்.

இவ்வாறு வித்துவான் வேந்தனார் அவர்கள் தமக்கு முற்பட்ட தமிழ் இலக்கியங்களை யெல்லாம் சுவைத்துத் தோய்ந்து கற்றதன் மூலமும், கடவுள் அருளால் கற்பனைத் திறனைப் பெற்றதன் மூலமும், தமிழ் மயமான உள்ளம் வாய்க்கப் பெற்றதன் மூலமும். எழுதிக் குவித்துள்ள அனைத்துக் கட்டுரைக் கருவூலங்களும் தொடர்ந்தும் பல பாகங்களாக அச்சிடப்பட்டுத் தமிழுக்கு அணி சேர்க்க, **சங்கமிருந்த தண்டமிழ் வேந்தன் அருள் புரிவானாக.**

**வணக்கம்**

**15.03.2019** **ச.வே. பஞ்சாட்சரம்**

# பொருளடக்கம்


பதிப்புரை 5

அறிமுகவுரை 16

அணிந்துரை 21

## 1. தமிழ் வளர்த்த சான்றோர்

(தட்டச்சுப் பிரதிக் கட்டுரைகள் – 1960)

1.1. ரா.பி. சேதுப்பிள்ளை 33

1.2. சி.வை. தாமோதரம்பிள்ளை 35

1.3. தவத்திரு சபாபதி நாவலர் 37

1.4. வி. கனகசபைப்பிள்ளை 41

1.5. சோமசுந்தரப்புலவர் 44

1.6. டாக்டர் உ.வே. சாமிநாதையர் 48

1.7. மகாவித்துவான் கணேசையர் 51

1.8. சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் 54

1.9. மறைமலையடிகள் 59

1.10. சின்னத்தம்பிப் புலவர் 63

1.11. வித்துவமாமணி நா. கதிரைவேற்பிள்ளை 67

1.12. அருட்திரு விபுலானந்த அடிகளார் 70

1.13. பண்டிதமணி கதிரேசச் செட்டியார் 74

1.14. அருட்திரு ஆறுமுக நாவலர் பெருமான் 78

1.15. கா. சுப்பிரமணியன் எம்.ஏ.எம்.எல் 82

1.16. இராகவ ஐயங்கார் 85

1.17. ந.மு. வேங்கடசாமி நாட்டார் 88

## 2. மாணவர் விருந்து

2.1. தன்னம்பிக்கை (தினகரன் – 06.12.1953) 93

2.2. சிந்தனை ஆற்றல் (தினகரன் – 13.12.1953) 94

2.3. இலக்கியம் (தினகரன் – 20.12.1953) 95

2.4. குடிமக்கள் காப்பியம் (தினகரன் – 27.12.1953) 97

2.5. புறநானூறு (தினகரன் – 03.01.1954) 98

2.6. செயல்வீரர் (தினகரன் – 10.01.1954) 99
2.7. என்றும் வாழ்வோர் (தினகரன் – 17.01.1954) 100
2.8. அறிவும் ஆண்மையும் (தினகரன் – 24.01.1954) 102
2.9. தன்னிகரற்ற தமிழ் (தினகரன் – 31.01.1954) 104
2.10. மழைவெள்ளம் (தினகரன் – 07.02.1954) 106
2.11. இயற்கையும் மாந்தரும் (தினகரன் – 14.02.1954) 107
2.12. உலகின் காட்சிகள் (தினகரன் – 21.02.1954) 109
2.13. உலகின் காட்சிகள் (தினகரன் – 28.02.1954) 111
2.14. மலர்ச்சோலை (தினகரன் – 07.03.1954) 112
2.15. இளமை நினைவுகள் (தினகரன் – 14.03.1954) 114
2.16. இளமை நினைவுகள் (தினகரன் – 21.03.1954) 115
2.17. மகாத்மா காந்தி (தினகரன் – 28.03.1954) 117
2.18. மகாத்மா காந்தி (தினகரன் – 04.04.1954) 119
2.19. சிறந்த கொள்கைகள் (தினகரன் – 11.04.1954) 121
2.20. கபிலரின் நன்றி உள்ளம் (தினகரன் – 25.04.1954) 123
2.21. கபிலரின் நன்றி உள்ளம் (தினகரன் – 02.05.1954) 124
2.22. வாழ்வும் தாழ்வும் (தினகரன் – 09.05.1954) 125
2.23. வாழ்வின் தன்மை – 1 (தினகரன் – 16.05.1954) 126
2.24. வாழ்வின் தன்மை – 2 (தினகரன் – 23.05.1954) 127
2.25. கவிதையின் சிறப்பு (தினகரன் – 30.05.1954) 128
2.26. கடமை உணர்ச்சி (தினகரன் – 06.06.1954) 129
2.27. ஆற்றுவெள்ளம் (தினகரன் – 13.06.1954) 131
2.28. இளமையும் முதுமையும் (தினகரன் – 20.06.1954) 133
2.29. வேண்டுதல் (தினகரன் – 27.06.1954) 135
2.30. அன்புப்பணி (தினகரன் – 04.07.1954) 136

## 3. நற்றிணை செல்வம்

3.1. நற்றிணைச் செல்வம் (தினகரன் – 19.06.1955) 139
3.2. நற்றிணைச் செல்வம் (தினகரன் – 26.06.1955) 141
3.3. எங்ஙனம் ஆற்றி இருப்போம் (தினகரன் – 03.07.1955) 143
3.4. தமக்கு வாழாது பிறர்க்கு வாழும் பெரும் பண்பு நெறி (தினகரன் – 24.07.1955) 145

## 4. செய்யுள் நயம்


4.1. குடிப்பிறந்தார் குணம் (தினகரன் – 04.09.1955) 151

4.2. கன்றுங்கனி உதவும் (தினகரன் – 11.09.1955) 153

4.3. புள்ளும் பூவும் (தினகரன் – 18.09.1955) 157

4.4. மயிலும் வான்கோழியும் (தினகரன் – 25.09.1955) 161


## 5. தமிழ் வளர்த்த சான்றோர் (2)


5.1. தமிழே உருவான தங்கப்புலவரின் தமிழுக்கே உரித்தான தனிச்சிறப்பு (தினகரன் – 23.10.1955) 167

5.2. பொருள் அதிகாரம் தந்த புரவலன் (தினகரன் – 17.07.1955) 173

5.3. விடுதலை முரசொலி கொட்டிய வீரக்கவிஞன் (தினகரன் – 25.03.1951) 175

5.4. கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் (தினகரன் – 28.01.1951) 184

5.5. சங்ககாலக் கபிலனை ஒத்த மாவைக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணனார் (தினகரன் – 02.01.1955) 190


## 6. வேந்தனார் சொற்பொழிவுகள்


6.1. தமிழ் உலகிற் புதிய எழில் (மறுமலர்ச்சி, மாசி – வைகாசி 1948) 195

6.2. இனிவரும் உலகில் தமிழன் (ஈழகேசரி – 25.11.1945) 203

6.3. இளைஞர்களே எழுமின் விழிமின் (தினகரன் – 07.11.1948) 206

6.4. வீரத்தெய்வம் (ஈழகேசரி – 03.11.1946) 209


## 7. வாழும் இலக்கியம்


7.1. மக்கள் வாழ்வை வளம்படுத்தும் சிந்தனை (தினகரன் – 13.05.1951) 215

7.2. தமிழ் மரபோடெழுந்த தனித் தமிழ்ப் பெருங்காப்பியம் (தினகரன் – 20.05.1951) 220

7.3. கம்பனின் இலக்கிய பாத்திரங்கள் (தினகரன் – 27.05.1951) 227

7.4. கும்ப கர்ணனின் நன்றிக்குரல் (தினகரன் – 03.06.1951) 231

7.5. குகனின் வீரக்குரல் (தினகரன் – 10.06.1951) 235

# 1

# தமிழ் வளர்த்த சான்றோர்

# 1. செந்நாப்புலவர்

**- ரா.பி. சேதுப்பிள்ளை (1896 - 1961) -**

பழுத்த தமிழ்ப்புலமையும் பண்பும் தெய்வச்சால்பும் படைத்த செந்நாப்புலவர் சேதுப்பிள்ளை அவர்கள் எம்மைப் பிரிந்து சென்று விட்டார்.

கவிச்சாற்றுச் சுவைத்தமிழில், கட்டுரைகளும் காவிய நலங் கனிந்த சொற்பொழிவுகளும், எங்கள் சிந்தனைக்கினியவாய், செவிக்கினியவாய், வாய்க்கினியவாய், வழங்கி வழங்கி எம்மை மகிழ்வித்த வள்ளல் சேதுப்பிள்ளை அவர்கள் வானகம் ஏகி விட்டார்.

தென்னாட்டில் ஒரு திருநெல்வேலி, இந்நாட்டில் ஒரு திருநெல்வேலி என முன்னாள் யாழ்ப்பாணத்தில் பரமேசுவராக் கல்லூரி முன்றலில் நடந்த நான்காம் தமிழ் விழாப் பேரவையில் நவின்று நம்மையெல்லாம் எல்லையில்லா இன்பவாரியில் மூழ்கி வித்த சொல்லின் செல்வர், சேதுப்பிள்ளை அவர்கள் எம்முடன் இல்லை என்பதை எண்ணி, எண்ணி ஏங்குகின்றோம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், சென்னைப் பல்கலைக்கழகத்திலும் பல்லாண்டு வீற்றிருந்து தன்னார் தமிழ்ப் புலமை நடாத்திய அன்னலுயர் சேதுப்பிள்ளை அவர்களை இனி எந்நாளிற் காணப்போகின்றோம்.

எழுத்திலும் பேச்சிலும் எள்ளளவும் வேறுபாடின்றி, இனிமையும், கனிவும், எளிமையும், எண்வகைச் சுவைகளும் கிடந்து நிழலாடும் வண்ணம் எழுதவும் பேசவும் தக்க, அரும்பெரும் ஆற்றல் வாய்ந்த பெரும் பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்கள் போலச் சிறந்த ஒருவரை, இனி எந்நாளோ செந்தமிழ்த் தென்னாடு பெறப் போகின்றது.

இந்தியாவைத் தாய்நாடென்றும், இலங்கையைச் சேய் நாடென்றும் எழுதியும் பேசியும், இலங்கைக்குப் பலமுறை வந்து இனிய சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், இலங்கைத் தமிழறிஞர் களுடன் உளங்கலந்து, உறவாடியும், இன்றளவும் இலங்கை இந்திய தொடர்பைத் தமது தமிழ்ப் புலமையாலும் சைவச்சால்பாலும் இணைத்து மலர்த்தி, எங்களில் ஒருவர்போல் விளங்கிய இலக்கியப்

பேரறிஞர் சேதுப்பிள்ளை அவர்களை எங்ஙனம் எங்களால் மறந்து வாழமுடியும்.

பிள்ளை அவர்கள் பேசாத பேரவைகள் இல்லை. எழுதாத இலக்கிய வெளியீடுகள் இல்லை. படிக்காத இலக்கியங்கள் இல்லை. சங்க இலக்கியங்களாகிய பாட்டும் தொகையும் நன்கு படித்தவர். காவியங்களாகிய சிந்தாமணியும், சிலப்பதிகாரமும், கம்பராமாயணமும், கந்தபுராணமும் கற்றுத் தெளிந்தவர். அறநூலாகிய திருக்குறளை ஆய்ந்து படித்தவர். சிற்றிலக்கியங்களாகிய பரவியும் உலாவும் பள்ளும் பயின்றவர். பெரியபுராணம், தேம்பாமணி, சீறாப்புராணம் என்னும் சமயகாவியங்களிலும், தேவாரம், திருவாசகம், பனுவல் களிலும் ஆழ்ந்த ஈடுபாடுடையவர். அல்லியரசாணி மாலையில் இருந்தும் ஆதாரம் எடுத்துக்காட்டி அவையோரை மகிழ்விக்கும் ஆற்றல் வாய்ந்தவர்.

அவர் ஆக்கிய வீரமாநகர் என்னும் வியத்தகு உரைநடை நூலும், தமிழ் இன்பம் என்னும் தகைநூல் ஆராய்ச்சி நூலும், இறவாத புகழுடைய இலக்கியங்களும், ஊரும் பேரும் என்னும் உரை நடைநூலும் வரலாற்றாராய்ச்சிக்கும் வழிகாட்டியாக விளங்கு கின்றன. அலையும் கலையும் என்னும் நூல் விலைமதிக்க முடியாத அறிவுக்களஞ்சியமாகும். வில்லும் வேலும், கங்கை வேடனும் காளத்திவேடனும் என்னும் நூல்கள் காவியப்பாத்திரங்களை ஒப்பிட்டுத் திறனாய்வு செய்த சிறப்பு நூல்களாகும். கடற்கரையில் என்னும் நூல் கற்பனை வளம் கனிந்ததாகும்.

இங்ஙனம் பல்லாண்டுகளாகத் தமிழைப் பயின்று பலநூல் களின் ஆசிரியராக விளங்கிய பல்கலைக்குரிசில் கலாநிதி சேதுப்பிள்ளை அவர்கள், மறைந்தும் மறையாதவராய், நிறைந்த தமிழ் அன்பர்களில் நெஞ்சமவர்களில் உறைந்து வாழ்கின்றார்.

❍❍❍

# 2. பொருளதிகாரம் தந்த புலவன்

***- சி.வை. தாமோதரம்பிள்ளை (1832 - 1901) -***

தமிழ் மொழியில் முழுமுதல் இலக்கண நூல் தொல்காப்பியம் என்பது, எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

இத்துணைச்சிறப்பு வாய்ந்த தொல்காப்பியம், ஆரிய இலக்கண நூலாகிய பாணியத்திற்கும் முற்பட்ட காலப் பழமை மிக்கதாய்த் தோன்றி இன்றளவும் மூவாச்சாவா முழுமுதல் நூலாய் நின்று நிலவுகின்றது.

எழுத்தினும் சொல்லினும் பார்க்க மிக ஏற்றமுடையதாகவே பொருளதிகாரத்தைத் தமிழ்ச் சான்றோர் போற்றி உள்ளார்கள். பொருளதிகாரம், மறைந்தால் தமிழினமே மறைந்தது போலாகும்.

இந்நிலையில், தமிழன்னையின் தவப்பயனால் ஒரேயொரு தமிழ் மகனாரின் உள்ளத்தில்தான் தொல்காப்பியம் பொருளதி காரத்தை அச்சேற்றித் தமிழ் மரபை அழியாமல் காப்பாற்றவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. அத்தமிழ் பெருமகனார், யாழ்ப்பாணத்திலே, சிறுப்பிட்டியில், வாழ்ந்த சைவத் தமிழ்ப் பெருங்குடித் தோன்ற லாகிய வைரவநாதரின், தவப்புதல்வன், தாமோதரம்பிள்ளை அவர்களே யாவர்.

தாமோதரம்பிள்ளை அவர்கள், கண்ணால் நீர்வடிய, வடிய தன்னார் தமிழ் அளித்த தென்பாண்டி நாட்டானே'' என்று எந்நாளும் இறைவனை ஏத்தி, ஏத்தி அச்சிட்டுதவிய பொருளதிகாரம் இன்று தமிழ் மக்களின் தனிப்பெருஞ் சால்பையும் நாகரீகத்தையும் நிலைநாட்டும் சான்றாக விளங்குகின்றது. ஒரு தாமோதரம் பிள்ளையின் உள்ளத்திலே ஊற்றெழுந்த சிந்தனை உலகம் உள்ளளவும் தமிழரின் உயர்வை விளக்கும் உள் ஒளியை உதவி விட்டது. தமிழே உருவமாகிய தாமோதரம்பிள்ளை அவர்கள் ஊர்கள் தோறும் திரிந்து திரிந்து ஏடுகளைத் தேடி எடுத்த பொழுது, அவ்வேடுகள் இருந்த நிலையைக் கண்டு இரங்கினார்.

"ஏடு எடுக்கும்போது ஓரஞ் சொரிகிறது. கட்டு அவிழ்க்கும் போது இதழ் முரிகிறது. ஒற்றை புரட்டும்போது துண்டு துண்டாய்ப் பறக்கின்றது. இனி எழுத்துக்களோ என்றால். வாலுந்தலையுமின்றி, நாலுபுறமும் பாணக்கலப்பை மறுத்து. மறுத்து உழுது கிடக்கிறது" என்பது பிள்ளையவர்களின் இரங்கல் மொழிகளுள் ஒன்று.

இதனைப் படிக்கும்பொழுது தமிழ் மக்களின் உள்ளம் உருகாமல் இருக்க முடியுமா? தமிழ் மக்கள் பிள்ளை அவர்களை எண்ணி எண்ணி, இறுமாப்படையவேண்டும்.

இப்பொழுது தொல்காப்பியம் பொருளதிகாரப் பதிப்புகள் பல வெளிவருகின்றன. புரவலர் தாமோதரமத்பிள்ளையின் புகழ் மெல்ல மறைகின்றது. அவர் ஆற்றிய அருஞ்செயலை பாராட்டி நன்றிக் கடன் செலுத்தும் செயலில் தமிழகம் ஆர்வங்காட்ட வேண்டும். தாமோதரமறிஞர் நினைவுவிழா ஆண்டுதோறும் தமிழகமெங்கும் நிகழவேண்டும். இன்றைய தமிழ் இளைஞர் உள்ளத்தில் தாமோத ரனாரின் தமிழ்த் தொண்டும் ஆற்றலும் நின்று நிழலாட வேண்டும். கலித்தொகை, இலக்கண விளக்கம், இறையனார் அகப்பொருள், தவிகைப்புராணம் சொல்லதிகாரம் நச்சினார்க்கினியம், சேனாவரையம் எனும் நூல்களையும் பிள்ளை அவர்கள் பதித்துள்ளார்கள்.

இங்ஙனம் தமிழ் அன்பும் ஆராய்ச்சிப் புலமையும் சாலமும் நிரம்பிய தாமோதரனாரைத் தமிழகத்துக்குத் தந்துதவிய சிறுப் பிட்டி ஊர் செந்தமிழ்ப் பண்ணையாக என்றென்றும் சிறந்து நிலவுக என வாழ்த்துவோமாக.

❍❍❍

# 3. திராவிடப் பிரகாசிகையின் தந்தை

***- தமிழ்த்திரு சபாபதி நாவலர் (1846 - 1903) -***

தமிழகத்தில் முதன் முதலாகத் "திராவிடப் பிரகாசிகை" என்னும் தமிழ் இலக்கிய வரலாற்றினைப் படைத்துத்தந்த தவத்தோன்றல் பரசமய கோளரி எனப் பாராட்டுப்பெறும் சபாபதி நாவலர் அவர்களே யாவர். இவர் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த கோப்பாய் வடக்கில் வாழ்ந்த சைவ வேளாளர் குலச் சான்றோன் சுயம்புநாதபிள்ளை அவர்களின் தவப்புதல்வன். (தோன்றிய ஆண்டு கி.பி.1846) பள்ளிப் படிப்பு முடிந்தபின்னர் தமிழ்ப் புலமையும் வடமொழிப் புலமையும் நிரம்பிய நீர்வேலிச் சிவசங்கரபண்டிதர் அவர்களிடம் இலக்கண நூல்கள், இலக்கிய நூல்கள், சமய சாத்திரங்கள் என்பவற்றைப் பல ஆண்டுகள் பாடங்கேட்டார். இங்ஙனம் இரு மொழிப் புலமையும் எய்திய நாவலர் அவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்தை அடைந்தார். அப்பொழுது அவ்வாதீனத்து மாபெருந் தம்பிரான், திரு.சுப்பிர மணிய தேசிக சுவாமிகளிடம் ஞான உபதேசம் பெற்றுச் சிறந்தார். பின்பு சுப்பிர மணிய தேசிய சுவாமிகளிடம் பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து ஞான நூல்களைக் கற்றுத் தெளிந்தார். இருமொழிப் புலமையும் இலக்கியம், தருக்கம், வேதாந்தம், சித்தாந்தம் என்பவற்றில் நிரம்பிய ஆராய்வும், பேச்சு வன்மையும் பெற்றவராய் விளங்கிய நாவலர் அவர்களைத் திருவாவடுதுறையாதினத்தார், தங்கள் ஆதீன வித்துவமணியாக வைத்துப் போற்றினர். போற்றிய அவ்வாதீனத்தார் அவரின் புலமைத்திறம் வாய்ந்த பேச்சு வன்மையை வியந்து பாராட்டி 'நாவலர்' என்னும் பட்டத்தினையும் நல்கினர்.

இங்ஙனம் ஆதீனத்தாரால், மதித்துப் பாராட்டிய சிறப்பால், வடகோவைச் சபாபதி நாவலர் என்று, சைவத் தமிழகத்தினரால் வாழ்த்தி வரவேற்கப்பட்டார். சபாபதி நாவலர் அவர்களின் ஆற்றலும், அறிவும் ஆராய்ச்சிவன்மையும், தமிழ்மொழிக்கோர் புதுவாழ்வை அளித்தன. தமிழ் நூற்பரப்பை ஆய்ந்து ஆங்காங்கு அமைந்துள்ள பொருள் மரபைத் தெளிந்த நாவலர், மிகவும் எழுச்சி எய்தினார். தமிழ் மொழியின் இலக்கிய இலக்கண சமய சாத்திர நூல்களின் பண்பையும், வரலாற்றையும், நிரல்பட வைத்து, தமிழ் வரலாறு ஒன்றினை எழுத எண்ணினார். எண்ணிய எண்ணியாங் கெய்தும் திண்ணியராகிய நாவலர் அவர்களின் இடைவிடாத

உழைப்பின் உறுபயனாகத் "திராவிடப் பிரகாசிகை" என்னும் சிறந்த தமிழ் இலக்கிய வரலாற்று நூல் தோன்றியது.

இங்ஙனம் சபாபதி நாவலர் அவர்கள் திராவிடப்பிரகாசியை இயற்றிய பொழுது, தமிழில் வேறோர் இலக்கிய வரலாற்று நூலும் இல்லை. மேலை நாட்டாரைப் பின்பற்றித் தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள் மிக அண்மைக் காலத்தில்தான் அறிஞர்களால் ஆக்கப் பட்டன. பிறர் எவரும் எண்ணாத புதிய வழியில் புகுந்து, தமது நுண்மான் நுழைபுலத்திறனாலும், தமிழ் இலக்கிய வரலாற்றைப் படைத்துத்தந்த சபாபதி நாவலர் அவர்களின் தொண்டும் புகழும் தமிழ் கூறும் நல்லுலகத்தார் உள்ளங்களில் எல்லாம் வாழ்கின்றன.

நாவலர் அவர்கள் தாம் ஆக்கிய திராவிடப் பிரகாசிகை என்னும் இலக்கிய வரலாற்று நூலினை ஐந்தியல்களாக வகுத்துள்ளார். தமிழ் மரபியல், இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், சாத்திரமரபியல், ஒழிப்பியல் என்பன அவற்றின் வைப்பு முறையாகும். தமிழ் மரபியலை, தமிழின் தெய்வப் பழமை, தமிழ் மொழியின் தெய்வமாட்சி தமிழ்ச்சொல் முடிவு, தென்மொழி முடிவு, தமிழ்ப் பொது வெல்லை, செந்தமிழ்நிலம், செந்தமிழ்ச்சொல், செந்தமிழ் வழக்கு என எட்டுப்பிரிவுகளாக வகுத்து ஆராய்கின்றார். இலக்கண மரபியலில், அகத்தியம், தொல்காப்பியம், இறையனா ராகப்பொருள் பன்னிரு படலம் புறப்பொருள் வெண்பாமாலை, அகப்பொருள் விளக்கம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, வெண்பாப் பாட்டியல், தண்டியலங்காரம், நேமிநாதம், வீரசோழியம், நன்னூல், பிரயோகவிவேகம், இலக்கணவிளக்கம், இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கச் சூறாவளி, தொல்காப்பியப் பாயிரவிருத்தி, முதற் சூத்திரவிருத்தி என்னும் இலக்கண நூல்களின் இயல்பை திறம்பட ஆராய்ந்து விளக்கியுள்ளார்.

இலக்கிய மரபியலில், தமிழ் இலக்கியங்களைத் திருமுறை இலக்கியச் சங்க இலக்கியம், காவிய இலக்கியம், புராண இலக்கியம், இதிகாச இலக்கியம், பலவகைப் பிரபந்த இலக்கியம் என வகைப்படுத்தி மிகச் சிறந்த முறையில் ஆராய்ந்துள்ளார்.

சாத்திர மரபியல், வைதிய சாத்திரங்களும் அவற்றின் பிரிவுகளும் வேதநூல் சைவநூல், இரண்டே நூல்கள் என்பவற்றின் தெளிவும், தத்துவங்களும், மெய்கண்ட சாத்திரங்களின் திறமும், மயாவாதம் முதலான மதங்களின் கொள்கைகளும் பிறவும். பல கலை நூற்சான்றுகளுடன் ஆராய்ந்து நிறுவியுள்ளார்.

ஒழிப்பியல் கல்விச்சிறப்பு, நல்லாசிரியர் இயல்பு, நன் மாணாக்கர் இயல்பு, கற்கும்முறை, கற்கும் நூல்முறை, கல்வி யறிவின் பயன் என்பவற்றை மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.

இந்நூலில் நாவலர் அவர்கள் கையாண்ட உரைநடை மிகப் பெருமிதங்கொண்ட வீறு நடையாக விளங்குகின்றது. தமிழ்மொழியின் உயர்ந்த இலக்கிய உரைநடைத் திறத்தையும் மிடுக்கையும். கற்றோரும் ஆராய்ச்சிப் புலமை நிரம்பிய பல்கலைக்கழக மாணவர் களும், அறிந்து மகிழ்வதற்கும் ஆராய்வதற்கும் அரியதொரு புலமை விருந்தாக நாவலர் அவர்களின் உரைநடை நின்று பொலிகின்றது.

இங்ஙனம் வீறுசால் உரைநடையில் வியத்தகு நூலாகிய திராவிடப் பிரகாசிகையை இயற்றி உதவிய சபாபதி நாவலரின் புலமை ஆற்றலையும் பிறபல சிறப்பில்புகளையும் கண்டும் கேட்டும் மகிழ்ந்த சேதுபதி மன்னன், நாவலர் அவர்களுக்கே எழுதிய திருமுகங்களில் (கடிதங்களில்) அவரை வியந்து பாராட்டியுள்ள உரைப்பகுதிகள் படித்து மகிழ்தற்குரியனவாகும்.

“சைவ சிகாமணியாயும், பரசமய கோளரியாயும் விளங்கி நிற்கும் கனம் நாவலர் அவர்களுக்கு'' எனவும் “சைவப்பயிர் தழைக்கப் பிரசங்க இடிமுழக்குடனும், விபூதி உருத்திராட்சப் பொலிவாகும் மின்னலுடனும் ஓங்கிவளரும் ஒரு முகிலாகிய கனம் நாவலர் அவர்களுக்கு'' எனவும், “தங்களை யாம் அழைத்து வந்த காரணம், தங்கள் பிரசங்கம் அமிர்தினை நுகருமாறும், தம் சமஸ்தா னத்தில் உள்ள சகல பிரஜைகளும் சைவசமய உண்மைகள் தேறுமாறும், திராவிட சைவசித்தாந்த வித்தியா போதஞ் செய்து போதருங் கடப்பாட்டினைத் தாங்கள் மேவுதல் வேண்டுமென்பதே'' எனவும் வரும் சேதுபதி மன்னர் அவர்களின் பாராட்டுரைப் பகுதி களை நோக்குக.

இவ்வாறெல்லாம் அக்கால மன்னர்களாலும் மதித்துப் பாராட்டி வரவேற்கத்தகும் பெரும் புலமையாளராக விளங்கிய நாவலர் அவர்கள், “திராவிடப் பிரகாசிகை”, எனும் பெருநூலை இயற்றிய துடனமையாது, சிதம்பர சபாநாதர் புராணம், ஏசுமத சங்கற்ப நிராகரணம், சிவகர்ணாமிர்தம், பாரததாற்பரிய சங்கிரகம், இராமாயணதாற்பரிய சங்கிரகம், திருச்சிற்றம்பலயகம அந்தாதி, திருவிடைமருதூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி, மாவையந்தாதி, நல்லைச்

சுப்பிரமணியக் கடவுள் பதிகம் என்னும் நூல்களையும் இயற்றி யுள்ளார்.

இங்ஙனம் புலமை ஒளிபரப்பிச் சைவத் தமிழகமெங்கும் உலாவிய செந்தமிழ் ஞாயிறு, வடகோவைச் சபாபதி நாவலர் அவர்கள் கி.பி.1903 ஆண்டு இறைவனடி எய்தினார். திராவிடப் பிரகாசிகை இன்றளவும் தமிழறிஞர்கள் ஆற்றுகின்ற தமிழ் வரலாற்று ஆராய்ச்சிகளுக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக நின்று, நாவலர் அவர்களின் நற்புலமைத் திறத்தையும் ஆராய்ச்சி வன்மையும் நிலைநாட்டி நிலவுகின்றது.

❍❍❍

# 4. ஆங்கிலத்தில் முதன்முதல் தமிழராய்ச்சி எழுதிய அறிஞர்

**- *திரு வி. கனகசபைப்பிள்ளை* (25.05.1855 - 21.02.1906) -**

சங்கத் தமிழ் இன்றும் சாயாத இளமையுடன் தமிழர் நெஞ்சில் தவழ்கின்றது. "கூடலில் ஆய்ந்த ஒண்தீந்தமிழ்'' எனச் சங்கத் தமிழின் தூய்மையை மணிவாசகப் பெருமான் வாழ்த்தி மகிழ் கின்றார். தமிழ் இலக்கிய வரலாற்றிலே சங்ககாலம் தலைமை இடம்பெற்று விளங்குகின்றது. சங்க காலத்துக்குப் பின்னும் சைவ ஆதினங்களில் தமிழ் ஆராயப்பட்டது. இந்த ஆராய்ச்சிகள் எல்லாம் தமிழ் நாட்டிலே நிகழ்ந்தன தமிழ் மொழியில் மட்டுமே ஆராய்ச்சி உண்மைகள் வெளியிடப்பட்டன.

மேலை நாட்டினர் தமிழகத்தைத் தமது ஆட்சியின் கீழ்ப் படுத்தினார்கள். மெல்ல மெல்ல மேலை நாட்டினரின் கல்வி முறையும் ஆராய்ச்சி முறையும் தமிழகத்தில் பரவத் தொடங்கின. ஆங்கிலம் ஆட்சி மொழியாக விளங்கியது. தமிழரும் ஆங்கி லத்தை ஆய்ந்து கற்றனர். ஆங்கிலக் கலைவாணர்கள் புத்தம் புதிய முறையில் பல கலைத்துறைகளிலும் ஆராய்ச்சி நூல்களை ஆக்கிப் பரப்பினார்கள்.

கி.பி.பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தமிழ் நாட்டில் ஆங்கிலக் கல்வி தழைத்தது. தமிழ் மக்கள் பலர் ஆங்கிலப் பட்டதாரிகளாக விளங்கினார்கள். ஆங்கிலம் ஆரியம் என்னும் பிறமொழிகளிற் புலமையும், தமிழ்ப் புலமையும் நிரம்பிய தமிழ்ச் சான்றோர்கள் பலர் அக்காலத்தில் வாழ்ந்தார்கள்.

தமிழர் நாகரிகமும் தமிழின் சித்த இலக்கியங்களாகிய சங்க நூல்களும், தமிழர்கள் அறிந்த அளிவிலேயே இருந்தன. பத்தொன் பதாம் நூற்றாண்டில் எழுந்த மேலைநாட்டினரின் ஆராய்ச்சி முறையைத் தழுவித் தமிழரின் மொழியும் இலக்கியமும் ஆராயப் பட்டில. உலகப் பொது மொழியாகிய ஆங்கிலத்தில், தமிழைப் பற்றிய ஆராய்ச்சி எழுதப்படவில்லை. தமிழரின் நாகரிகத்தைச் சங்க இலக்கியச் சான்றுகளுடன், ஆராய்ச்சி நெறி தவறாது ஆராய்ந்து வெளியிட, ஒருவரும் முன்வந்திலர். யாழ்ப்பாணத்தைச் சார்ந்த, மல்லாகத்திலே வாழ்ந்த விசுவநாதபிள்ளை அவர்களின் புதல்வராகிய கனகசபைப்பிள்ளை அவர்களின் உள்ளத்திலேதான், ஆங்கில மொழியில், தமிழாராய்ச்சி எழுத வேண்டும் என்று ஆர்வம்

எழுந்தது. கனகசபைப்பிள்ளை அவர்கள் ஆங்கிலத்தில் பி.ஏ. பட்டம் பெற்ற அறிஞர். சென்னை மாநகரில் உள்ள தபால் நிலையத்திலே, அலுவலாளராக அமர்ந்து கடமை ஆற்றியவர். இவர் ஆறுதலான நேரங்களில் எல்லாம் அருந்தமிழ் நூல்களைப் படித்து ஆராய்ச்சி செய்வார். தமிழரின் நாகரிகத்தை ஆராய்தற்குரிய சங்க நூல்கள் பல, பிள்ளை அவர்கள் காலத்தில், எடுத்து அச்சேற்றுவாரின்றி ஏட்டிலேயே இருந்தன. பிள்ளை அவர்கள் இடைவிடாத முயற்சியுடன் ஏடுகளைத் தேடி எடுத்துப் படித்தார். ஏடுகளைப் பார்த்துப் படியெடுத்துத் தாளிலே எழுதுவதற்கும், ஒருவரை பிள்ளை அவர்கள் வைத்திருந்தார்கள். அமைதியும், தமிழார்வமும், அழுத்தமான புலமையும், தூய அன்பும் பிள்ளை அவர்களின் ஆராய்ச்சியை நிறைவு செய்தன. இங்ஙனம் பல ஆண்டுகளாகச் சங்கத்தமிழ் இலக்கியங்களையும் பிறநாட்டறி ஞர்கள் ஆக்கிய வரலாற்றுண்மைகளுடன் ஒப்பிட்டுப் படித்த பிள்ளை அவர்கள், தமிழ்நாடு செய்த தவப் பயனால், "ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகட்கு முந்திய தமிழர் என்னும் ஆராய்ச்சி நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார்கள். இதனை ஆராய்ச்சிக் களஞ்சியம் என்று அக்காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள் பாராட்டியுள்ளார்கள்.

பிள்ளை அவர்கள் தமிழை ஆராய்ந்த நெறியைப் பின்பற்றியே தமிழறிஞர்கள் பலர் தமிழாராய்ச்சி நூல்கள் எழுதியிருக்கிறார்கள். முதலில் தமிழை ஆராய்ந்து, உலகப் பொது மொழியாகிய ஆங்கிலத்தில் நூலெழுதித் தமிழர் மாண்பை உலகிற் பரப்பிய தலைமை பிள்ளை அவர்களுக்கே உரியதாகும். சங்கத் தமிழை ஆராய்ந்து, சான்றோரிலும் பார்க்கத் தனி ஒருவனாகநின்று, தமிழை ஆராய்ந்து உலகப் பொது மொழியாகிய ஆங்கிலத்தில் நூலெழுதி, உலக மெங்கும் தமிழர் சால்பைப் பரப்பிய சான்றோன் கனகசபைப் பிள்ளையே தலைமையானவன் என்பதைத் தமிழகத்தார் உணர்ந்து போற்ற வேண்டும்.

இன்றைய இளம் மாணவர் உள்ளத்தில், தமிழ் ஆய்ந்த சான்றோன் கனகசபைப்பிள்ளையின் தொண்டும், பண்பும், தூய்மையும் நிலைபெறல் வேண்டும். கனகசபைப்பிள்ளை போன்ற ஆராய்ச்சிக் கலைஞர் பலர், இன்றைய ஈழத் தமிழகத்தில் தோன்ற வேண்டும்.

பிள்ளை அவர்களின் உள்ளத்தில் உருப்பெற்ற தமிழாராய்ச்சி கலை, இன்று வளர்ந்து வலுப்பெற்று வருகின்றது. பிள்ளை அவர்களின் ஆங்கில மூலத்தில் உள்ள ஆராய்ச்சி முடிவுகளை அப்படியே தவறாமல் பன்மொழிப்புலவர் அப்பாத்துரை சேதுப் பிள்ளை அவர்கள் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்கள். தமிழாக்கஞ் செய்த பன்மொழிப் புலவர் அப்பாத்துரைப்பிள்ளை அவர்களுக்குத், தமிழ் கூறும் நல்லுகத்தார் மிகக் கடப்பாடுடையவராவர்.

❍❍❍

# 5. தமிழ் மொழிக்கு வாழ்வு தந்த தங்கத் தாத்தா

**- சோமசுந்தரப்புலவர் (1878 - 1953) -**

சோமசுந்தரப் புலவர் ஈழவளநாட்டின் இன்தமிழ்ப் புலவர். நற்றமிழ் செல்வமும் ஞான வளமும் நிறைந்த நவாலியூரில் பிறந்தவர். இவரைத் தங்கத் தாத்தா என்றும் கூறுவார்கள். இருபதாம் நூற்றாண்டில் தென்னகத்தில் தோன்றிய பாரதி பரம்பரை போல, ஈழத்தமிழகத்திலும் ஓர் பரம்பரையை, கவிஞர் பரம்பரையைத் தோற்றுவித்த பெருமை கவிச்சாற்றுத் தமிழ்ப்புலவன் தங்கத் தாத்தாவுக்கே உரிய தனிச்சிறப்பாகும்.

தங்கத்தாத்தா அவர்கள் வங்கத்தாத்தா போன்று தாடியும், வற்றாத அருவி ஊற்றுப் போல் கவிதைகளை வாரிவழங்கும் வள்ளன்மையும் படைத்தவர். செந்தமிழ்ச் சுவையும், திருவருள் நலமும், தெவிட்டாத கற்பனைக் கவினும், கனிநீர் சுரக்கும் தங்கத் தாத்தாவின் கவிதைகள் என்றென்றும் நிலைத்து வாழக்கூடிய இனிய பண்புகள் அமைந்தனவாகும். சங்கத்தமிழ் தோய்வும், அருட்பனுவல் ஆய்வும், சிந்தைனைக்கினிய பொருள் நிறைவும், பொங்கி வழியும் வண்ணம் தங்கத்தாத்தா புனைந்து தந்த கவிதைகள் தமிழ்மொழிக்குத் தனிப்பெரும் செல்வமாகும்.

செந்தமிழ்த் தெய்வத்தை தெய்வக் கோலத்தில் கண்டு சிந்தை உலகில் பாடிய செந்நாப் புலவராக, சோமசுந்தரப் புலவராக சிறந்து விளங்குகின்றார்.

*செந்தமிழ்ச் செல்வியைத்*
*தாமரையாட்டியைத் தென்பொதியச்*
*சந்தனச் சோலையில் ஏழிசை*
*கூவுந் தனிக்குயிலைச்*
*சிந்தையிற் பூத்துச் செந்நாவிற்*
*பழுத்துச் செவிப் புலத்தே*
*வந்து கனிந்திடும் பருவப்*
*பிராட்டியை வாழ்த்துவமே*

எனச் செந்தமிழ்த் தாயைப் புலவர் பாடியிருக்கின்றார். பாடி உருகுகின்ற குரலில், கனிந்துருகும் அன்பும் கற்பனைக் கவினும் சொல்லினிமையும், எம் ஆவியில் ஊறிப் புதிய தமிழ் ஆர்வத்தை அளிக்கின்றன.

*சிந்தையிற் பூத்துச்*
*செந்நாவிற் பழுத்துச்*
*செவிப் புலத்தே*
*வந்து கனிந்திடும்*
*பனுவற் பிராட்டியை*
*வாழ்த்துவனே.*

என்று செந்தமிழ் தாயைப் பாடிப் பரவி உருகிய பெருமை இந்தத் தமிழகத்தில் எங்கள் சோமசுந்தரப் புலவர் அவர்களுக்கே உரிய தனி உரிமையாகும்.

தாடி வளர்த்த தங்கத் தாத்தா, பாடி உதவிய ஆடிப் பிறப்பு பாட்டுக்கள், தேடக் கிடையாத செல்வமாகச் சிறந்து விளங்கு கின்றன. அக்கவிதைகளைப் பாடிப்பாடி நுகரும் பொழுது எழுகின்ற உணர்வு, ஈடும் எடுப்பும் இல்லாத புதியதோர் இறுமாப்பையும் உவகைப் பெருக்கையும் உருவாக்குகின்றது.

*ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை*
*ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே*
*கூடிப்பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்*
*கொளுக்கட்டை தின்னலாம் தோழர்களே.*

என்னும் கவிதையில் அலை எழுகின்ற ஆனந்தக் களிப்பும் ஆடிக்கூழின் இனிமையும், ஆயிரம் ஆயிரம் ஊழி என்றும் மக்கள் உள்ளத்தை விட்டு அகலாத மாண்புடன் பொலிகின்றன. கூழும் குடிக்கலாம், கொளுக்கட்டை தின்னலாம் என்னும் தொடர்கள், நாளும் பொழுதும் வாழும் பொது மக்கள் உள்ளத்தில் மருவி அவர்கள் நாவில் நடந்து பயின்ற பழகு தமிழ்ச் சொற்களாகும். பனக்கட்டிக் கூழும் குடிக்கலாம் என்னும் தொடரைப் பாடும் பொழுது எங்கள் நாவில் கூழின் இனிமை சிறக்கின்றது. பல்லாண்டு பல்லாண்டாக எங்கள் பரம்பரைச் செல்வமாய் நின்று நிலவும் பனையின் தேறலைக் காய்ச்சி எடுத்த தீன்சுவைப் பனங்கட்டியின் பண்பும் பயனும் என்றென்றும் எமது உள்ளத்தை விட்டு அகலாமல் இரண்டறக் கலந்து விட்டன.

தாய் ஆடு கதறுவதாகத் தங்கத்தாத்தா பாடியருளிய பாக்கள், கருங்கல்லும் கரைந்து உருகத் தக்க கருணைப் பெருக்காய் விளங்குகின்றது. தாயாட்டின் குரலிலே, தாய் அன்பின் பெருக்கைச் சுரந்து பாயச் செய்த தங்கத்தாத்தாவின் நிறைந்த புலமைத்

திறனும், கருணை உள்ளமும், கற்பனைக்கும் எட்டாத அற்புத அருட் கோலத்துடன் பொலிகின்றது.

*பூங்கரும்பே தேனே என்பொன்னே நவமணியே*
*தாங்கிச் சுமந்த உடல் தனலாய் எரியுதடா*
*அம்மா என்றழைக்கும் ஆசைத் திருக்குரலை*
*எம் மாதவக் கொழுந்தே யான் கேட்பது எந்நாளோ*
*அல்லும் பகலுமவர் அன்பாய் வளர்த்ததெல்லாம்*
*கல்லும் கனிய கழுத்துவெட்டு வெட்டிடவோ*

இக்கவிதைகளைப் படிக்கும் பொழுது எழுகின்ற இரக்க உணர்ச்சியும், கருணைப் பெருக்கும், தாய் அன்பின் பேர் எல்லையை இதற்கு மேல் எவரும் எடுத்துச் சொல்ல முடியாத வகையில் கிடந்து அலைமோதுவதைக் காண்கின்றோம்.

இங்ஙனம் கவி வளமும், அருள் வளமும் அளித்த தங்கத் தாத்தா அவர்கள் பாடியளித்த 'கத்தரித் தோட்ட வெருளி' என்னும் கவிதை, எவரும் பாடாத புதிய தமிழ் ஆக்கமாகும். இலங்கை வளமும், தால விலாசமும் இறவாத புகழுடைய இலக்கியங்கள். 'நாமகள் புகழ் மாலை', செந்தமிழ்த் தாயைத் தெய்வமாகத் தெளிந்து சிந்தை உருகி உருகிப் பாடிய செந்தமிழ்ப்பனுவல். மணிவாசகர் சிவனைத் தேடிக் கவி சிந்தை குலைந்து பாடிய திருவாசகம் போலச் சோமசுந்தரப் புலவர் செந்தமிழ்த் தாயைத் தேடிக் தன் சிந்தை குழைந்து பாடிய நாமகள் புகழ் மாலை நலம் கனிந்து விளங்குகின்றது.

தமது பதினைந்தாம் ஆண்டிலேயே பாடத் தொடங்கி பண்பட்ட புலவரின் உள்ளம், பதினையாயிரம் பாக்களைப் பால்வாய்ப் பசுந்தமிழால் வழங்கிய தூய்மையுடையது. அவரின் பாக்கள் கங்கையோடு யமுனை கலந்தால் போல, பொருட் கருவும் எழுச்சியும் பெற்றுப் பொலிகின்றன. உள் ஒளியும், உயிர்ச்சாயலும் ஒவ்வொரு பாட்டிலும் ஊடுருவி நிழலாடுகின்றன. புலவர் அவர்கள் மறைந்தாலும் அவரின் உயிரில் ஊடுருவிப் பெருகிய கவிதை அருவி வற்றாத மகாவலி கங்கை வெள்ளம்போல எக்காலமும் ஈழத் தமிழகத்தை எழில் பெறச் செய்யும்.

புலவர் அவர்களின் பொன் நிறமும், புன் சிரிப்பும், பொங்கும் பசுப்பால் நுரைபோன்ற வெள்ளை மென்தாடியும், கொஞ்சும் குழந்தை மொழியும் என்றும் எம் நெஞ்சத் திரையில் நிழலிடுகின்றன.

19ம் நூற்றாண்டில் ஒரு நாவலனைப் பெற்று தமிழகத்தை வாழ்வித்த ஈழத்தமிழகம், 20ம் நூற்றாண்டில் ஒரு பாவலனைப் பெற்று தமிழகத்தை வாழ்வித்தது. நாவலர் பரம்பரையும், பாவலர் பரம்பரையும் கலந்த புதியதோர் புலமைப் பரம்பரை, வாழையடி வாழையென மலர்ந்த, சிவநெறியையும், தமிழ் மரபையும் புரக்கும் நன்நாளை தமிழகம் வரவேற்கின்றது.

❍❍❍

# 6. தமிழ்த்தாத்தா, மகோபாத்தியாய

### - டாக்டர் உ.வே. சாமிநாதையர் (19.02.1855 - 28.04.1942) -

சங்க இலக்கியங்களையும் பிற பல காவியங்களையும் பதித்துத் தமிழன்னையின் தனிப்பெரும் பெருமையை மலர்த்திய மாபெரும் புலவர் உ.வே.சாமிநாதையர் அவர்களேயாவர். ஏட்டிலே இருந்த சங்க நூல்களைத் தேடித்தேடி எடுத்து, அச்சில் ஏற்றிய ஐயர் அவர்களின் தமிழ்த் தொண்டை தமிழகத்தார் மறக்கவே முடியாது. ஐயர் அவர்கள்தான் பழந் தமிழ் இலக்கியங்களின் பாதுகாவலர். ஐயர் அவர்களைத் தமிழ்ப்புலமை நிரம்பியவராய்த், தமிழ்த் தொண்டு ஆற்றித் தமிழ் மொழியை வாழ்விக்கக்கூடிய வல்லமையும் பொறுமையும் வாய்ந்தவராயப், படைத்துதவிய பெருமை மகாவித்து வான், மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களுக்கே உரியதாகும். ஐயர், தமது 17வது வயது தொடங்கி (1871 - 1876) மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் கல்விகற்றார். தமது ஆசிரியரிடம், ஐயர் அவர்கள் மிகுந்த அன்பும் மதிப்பும் உடையவராய் விளங்கினார்.

“பலகாலமாகத் தவம்புரிந்து ஒரு தெய்வ தரிசனத்திற்குக் காத்திருக்கும் உபாசகனைப் போல நான் இருந்தேன். அவனுக்குக் காட்சியளிக்கும் அத்தெய்வம்போல அவர் வந்தார்''. (என் சரித்திரம் அத்தியாயம் 27) என்று அவர் கூறியிருப்பதை நோக்குக.

இங்ஙனம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் அன்புக்குரிய வராய்க் கற்றுத்தெளிந்த ஐயர் அவர்கள், திருவாவடுதுறை ஆதீனத்துச் சந்நிதானமாக விளங்கிய சுப்பிரமணிய தேசிகர் அவர்களிடமும் கற்று நிறைந்தார். ஐயரின் தமிழ் அறிவு ஒளிவீசத் தொடங்கியது. 1880ம் அண்டில் கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக அமர்த்தப்பட்டார். கல்லூரி வாயிலாக ஐயர் அவர்களின் தமிழ் ஆராய்வுத் திறனும் ஆழ்ந்த புலமையும் பல தமிழறிஞர்களின் தொடர்பை ஏற்படுத்தின. அவர்களுள் பூண்டி அரங்க நாத முதலியாரே ஐயர் அவர்களை ஊக்கித் தமிழ்த் தொண்டில் ஈடுபடுத்திய சான்றோராவார்.

முதலியாரின் தூண்டுதலும் ஐயர் அவர்களின் தமிழார்வமும் இணைந்து செயற்பட்டதன் பயனே இன்று நாம் சங்க இலக்கியங் களைப் படித்து மகிழக்கூடிய பெருவாழ்வைப் பெறச் செய்தன. ஐயர் அவர்கள் நூல்களை (ஏடுகளை) ஆராய்ந்து பதிக்கும்முறை

மிக மிகச் சிறந்ததொன்றாகும். அவர் ஒரு முதற்கண் கடிதத்தில் பெயர்த்தெழுதி அதனைப் படி எடுத்துக்கொள்வார். பின்தாம் படியெடுத்த பிரதியுடன் பல ஏட்டுப்பிரதிகளையும் ஒப்பிட்டு நோக்கு வார். அங்ஙனம் ஒப்பிட்டு நோக்கி நோக்கிப்பாட பேதங்களைக் குறித்துக் கொள்வார். பின் அந்நூலைப் பலமுறை படித்துப் பொருளை விளங்கிக் கொள்வார். இதற்குப் பின் அந்நூலின் வரலாற்றோடு தொடர்புடைய பலநூல்களையும் படித்துப் பரிசோதனை செய்வார். இத்துடன் அமையாமல், அந்நூலில் சிறந்த புலமை யுடையவர்களாக விளங்கும் வடமொழி, தென்மொழிப் புலவர் களைத் தேடிச்சென்று, அவர்களிடமும் பல உண்மைகளைக் கேட்டுத் தெளிந்து கொள்வார். இதன் பின்புதான் அந்நூலை அச்சேற்றத் தொடங்குவார்.

இங்ஙனமெல்லாம் மிகவும் ஆர்வத்துடனும் மதிப்புடனும் அச்சத்துடனும், ஆராய்ந்து கேட்டு, தெளிந்து, தமிழ்நூல்களைச் சிறந்த முறையில் அச்சேற்றி அளித்த பெருமையும் தொண்டும் ஐயர் அவர்களுக்கே அமைந்தனவாகும். அவர் பதித்துள்ள நூல்களின்கான் காணப்படும் ஆராய்ச்சி முன்னுரையும், பதிப்புரையும், மேற்கோள் விளக்கமும், ஒப்புவமைப்பகுதிகளும், தனித்தனி நூலாக வெளியிடக்கூடிய பொருட் சிறப்புடையனவாகும்.

புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, பாரிபாடல், பத்துப்பாட்டு, குறுந்தொகை எனுஞ் சங்கநூல்களும், சிந்தாமணி, சிலப்பதிகாரம். மணிமேகலை, பெருங்கதை முதலிய பிரசான்றோர் நூல்களும், நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரை நன்நூல் மயிலை நாதர் உரை முதலிய இலக்கண நூல்களும் ஐயர் அவர்களால் அரிதில் முயன்று பதிக்கப்பட்டனவாகும்.

ஐயர் அவர்களால் ஆராய்ந்து எழுதப்பட்ட 'மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம்' என்னும் நூல் சிறந்ததோர் தமிழ் வரலாற்றுக் களஞ்சியமாக விளங்குகின்றது. அவர் எழுதிய 'என் சரித்திரம்' என்னும் உரைநடை நூல் தமிழ்மொழிக்கும், தமிழ்ப் புலவர்கட்கும் புதியதோர் விருந்தாகப் பொலிகின்றது. 'புதியதும் பழையதும்' என்னும் நூல், புலமைப் பண்பாட்டின் நிலைக்களமாக நின்று நிலவுகின்றது.

இனி, இவற்றுக்கெல்லாம் மேலாகச் சிறந்து விளங்குவது, ஐயர் அவர்களின் உரைநடை அமைப்பேயாகும். எளிய இனிய, தெளிந்த

செப்பமான உரைநடை எழுதுவதில் அவரே அவருக்கிணையாக விளங்குகின்றார்.

இவன் வல்வில்ஒரி போரில் வல்லவன். சிறந்த கொடையாளி களுள் ஒருவன். செங்கோலை உடையவன். மழவர்களுக்குத் தலைவன். தொண்டைமானெனனும் அரசனிடம், ஔவையைத் தூதுவிடுத்தோன். சேரமானுடைய உறவினன் என்பது, ஐயர் அவர்களின் உரையில் ஒரு பகுதியாகும்.

இங்ஙனம் தமிழ் அன்னையின் மாண்பைச் சங்கநூற் பதிப் பாலும் தமது ஆராய்ச்சித்திறத்தாலும் மேற்படுத்தி விளங்க வைத்த தோலாநாவின் மேலோனாகிய தமிழ்ச்சான்றோன் சாமிநாதையரின் தமிழ்த் தொண்டைப் போற்றி மகிழ்வோமாக.

*"இகுந்தமிழே உன்னுள் இருந்தேன்."*

❍❍❍

# 7. ஈழத்தின் இலக்கண ஞாயிறு

***- மகா வித்துவான் கணேசையர் (1878 - 1958) -***

ஈழத் தமிழகத்தில் இலக்கண ஞாயிறுபோல விளங்கிய மறைத் திருவாளர் மகாவித்துவான் கணேசையர் அவர்கள் இன்று எம் மத்தியில் இல்லை. தொல்காப்பியக்கடலை நிலைகண்டுணர்ந்த தொல்பேராசானை, இனி நாங்கள் கண்டு தொழ முடியாது. ஆராய்ச்சிப் புலமையும், அஞ்சாமையும் கொண்ட அரசஞ்சன் முகனாருடன், ஆகுபெயர் அன்மொழித் தொகைப்போராற்றி, வெற்றி கொண்ட அறிவுப் பேராண்மையாளர் ஐயர் அவர்களேயாவார். நாவலர்வழி மாணவராய் நின்று தமிழ்கூறும் நல்லுகமெல்லாம் தொல்காப்பியப் புலமையைப் பரப்பி, நல்லிசை படைத்த நான்மறை முனிவராய் ஐயர் அவர்கள் விளங்கினார்கள். சைவமுந் தமிழும் பண்பட்டுப் பழுத்த தெய்வத்திருப் பொலிவுடன் வீற்றிருந்து, ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு, அருந்தமிழை ஆராய்ந்து கற்பித்துப், பண்டித பட்டதாரிகளாகப் படைத்துதவிப்பயன் சுரந்த, புலவழுக்கற்ற அந்தணாளன் புன்னாலைக்கட்டுவன் கணேசையர் என்பதை, எந்நாளும் மறக்க முடியாது.

ஐயர் அவர்கள், யாழ்ப்பாணத்தைச் சார்ந்துவிளங்கும், பன்னூற் புலவர் புகழ் புன்னாலைக்கட்டுவனில் வாழ்ந்த சிவம் பெருக்கும் அந்தணர் குலத் தோன்றல், சின்னையரும் அவர் தம் வாழ்க்கைத் துணைவியார் சின்னம்மாளும் செய்தவப்பயனால் தோன்றியவர். இளமைப் பருவத்தில் தமது பள்ளிப் படிப்பிலே வல்லமைபெற்ற ஐயர் அவர்கள், வித்துவ சிரோமணி பொன்னம்பல பிள்ளை அவர்களிடம் இலக்கண நூல்களையும் இலக்கிய நூல்களையும் ஆராய்ந்து பாடங் கேட்கும் அரியபேற்றை அடைந்தார். பிள்ளை அவர்களின் மறைவுக்குப் பின் சுன்னாகம் அ.குமாரசாமிப்புலவர் அவர்களிடமும் ஐயர் அவர்கள் பாடம் கேட்டார்கள். இங்ஙனம் எழுத்துப்புலமையையும் ஆராய்ச்சிவன்மையையும் நிரம்பிய வித்துவ சிரோமணி அவர்களிடமும் புலவர் அவர்களிடமும் கற்றுத்தெளிந்த கணேசையர் அவர்களின் புலமைத்திறன் ஒளிவீசத் தொடங்கியது.

ஐயர் அவர்கள் ஆராய்ந்து எழுதிய இலக்கணக் கட்டுரைகள், மதுரை தமிழ்ச்சங்க வெளியீடாகிய செந்தமிழ் என்னும் திங்கள் இதழில் வெளிவந்த காலந்தொட்டே அவரின் புகழ் தமிழ் நாட்டிலும்

பரவியது. அக்காலத்தில், ஐயர் அவர்களுடன் ஒத்த தமிழறிவும் சால்பும் கொண்டு விளங்கிய உயர் திருவாளர்கள் ரா.இராகவ ஐயங்கார், மு.இராகவஐயங்கார், மறைமலை அடிகள், அரஞ்சன் முகனார் என்னும் நல்லிசைப்புலவர்கள், ஐயர் அவர்களின் இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகளை மதித்து வரவேற்றார்கள். அக்கட்டுரைகளிற் சில, வடநூற்கடலையும் தென்றமிழ்கடலையும் நிலை கண்டுரைத்த மாதவச் சிவஞானமுனிவரின் கொள்கைகளை மறுத்து, உண்மைப் பொருளை நிலைநாட்டி உரைக்கின்றது. “அளபெடை'' “போலி எழுத்து'' “தொல்காப்பியச் சூத்திரப் பொருளாராய்ச்சி'' “பிறிது பிறிதேற்றல்'' “ஆறலுருபு பிறிதுரு பேற்றல்'' “இருபெயரொட்டாகுபெயரும் அன்மொழித் தொகையும்'' தொகைநிலை எழும் இலக்கணத்திறனாய்வுக் கட்டுரைகள் மிகமிக நுட்பமானவை. ஐயர் அவர்களின் ஆழ்ந்து நுணுகி அகன்ற நுன்மான் நுழைபுலத்திறத்தையும், ஆராய்ச்சி வன்மையையும், தமிழகம் முழுவதும் அறிந்து மதித்துப் போற்றத்தக்க சிறப்பும், பொருட்செறிவும், அக்கட்டுரைகளில் பொதிந்துள்ளன. தமிழ் இலக்கண மரபைப் பாதுகாத்து, இன்றளவும் இமயம்போல் நிலைதிரியாமல் வாழ்ந்த ஒருவர் ஐயர் அவர்களே யாவர்.

எண்பது ஆண்டுகள் வரையும் இருந்து, தொல்காப்பியம் என்னும் முழுமுதல் இலக்கண நூலைப் பழைய உரைகளுடன் நுணுகி நுணுகி ஆராய்ந்து கற்று கற்பித்த பெருமை தமிழகத்தில் ஐயர் அவர்களுக்கே உரிய தனிச் சிறப்பாகும். தொல்காப்பியமும், சொல்லதிகாரம், சேனாவரையர் உரையையும், பொருளதிகாரம் முன் ஐந்தியல்கள் நச்சினார்க்கினியர் உரையையும், பின்னான்கியல்கள் பேராசிரியர் உரையையும், எழுத்ததிகாரம் நச்சினார்கினியர் உரையையும் முற்ற முடிய ஆராய்ந்து முழுவதிற்கும் உரை விளக்கம் எழுதி வெளியிட்ட ஐயர் அவர்களின் அருஞ்செயல் பாராட்டற்குரியதாகும். பல்கலைக்கழகங்களில் தமிழ் ஆராய்ச்சித் துறையில் வீற்றிருந்து, தமிழ்ப் புலமை நடாத்துகின்ற அறிஞர் களாலும், இன்றளவும் செய்யமுடியாத ஓர் அருஞ்செயலை ஐயர் அவர்கள் செய்துவிட்டார்கள்.

ஐயர் அவர்கள், தாம் எழுதிய தொல்காப்பிய உரை விளக்கக் குறிப்புக்களில் இளம்பூரனர், தெய்வச்சிலையார், கல்லாடர், இலக்கண விளக்கநூலார் சிவஞானமுனிவர், அரசஞ்சண்முகனார் என்னும் இலக்கண ஆராய்ச்சியாளர்களின் கொள்கைகளை ஒப்பிட்டு

நோக்கித், தமது முடிவான கருத்துக்களையும் தந்திருக்கின்றார். இலக்கண முடிவுகளை ஒப்புநோக்கி, ஆராயமுற்படும் ஆராய்ச்சி மாணவர்களுக்கு, ஐயர் அவர்களின் உரை விளக்கம், அரியதோர் வழிகாட்டியாக விளங்குகின்றது.

இனி இங்ஙனம் இலக்கணப் பெரும் புலமையாளராக விளங்கிய ஐயர் அவர்கள், இரகுவமிசம், புத்துரை, குமாராமிப்புலவர் வரலாறு, மருதடிவினாயகர் பிரபந்தம், குசேலர் சரிதம், ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம் எனும் நூல்களையும் இயற்றியுள்ளார். ஐயர் அவர்களின் தமிழ்ப் புலமையும் தமிழ்த் தொண்டும் ஈழநாட்டிற் கோர் புதிய தமிழ்ப் பரம்பரையை உருவாக்கி விட்டன.

❍❍❍

# 8. தோலா நாவின் மேலோன்

***- சுன்னாகம் குமாரசாமிப் புலவர் (1850 - 1922) -***

அழுத்தப் படிப்பும், ஆராய்ச்சித்திறனும், பழுத்த பாவன்மையும், பன்னூற்புலமையும் படைத்த தவப்பெருந்தோன்றல், சுன்னாகம் குமாரசாமிப் புலவர் என்பது தமிழ் கூறு நல்லுலகச் சான்றோர் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டதோர் உண்மையாகும். இவர் தன்னார் தமிழ்ச் சான்றோர் வாழ் சுன்னாகம் என்னும் ஊரில், வாழ்ந்த சைவ வேளான் குலத் தோன்றலாகிய அம்பலவாண பிள்ளையின் அருந் தவப் புதல்வர் ஆவார். தமிழ்ப் பெரும் புலவ ராகிய உடுவில் முத்துக்குமார கவிராயர் இவரின் பாட்டனாராவார். இங்ஙனம் தமிழ்ப் புலமை சான்ற சைவப் பெரும் பரம்பரையில் தோன்றிய தவத்திருவும், சால்பும், புலவரர்வகளின் நுன்மான் நுழைபுலத் திறத்துக்கும் தன்னேர் இல்லாத் தமிழ் அறிவுக்கும், ஒழுக்கச் சிறப்புக்கும், உறுதுணையாக விளங்கின. பள்ளிப் பருவம் முற்றியபின், தமிழ்ப்புலமை அடைதற் பொருட்டு, அக்கா லத்தில் தனக்கு நிகர் தானாக விளங்கிய தமிழ்ப் பேராசிரியர் முருகேச பண்டிதரிடம் சென்று, இலக்கண இலக்கியங்களை ஆராய்ந்து ஆர்வத்துடன் கற்றார்.

இங்ஙனம் கற்றுத் தேறியவுடன் கவிபாடும் புலமையும் பெற்றுப்பொலிந்தார். இயற்றமிழ்ப் புலமையில் தமது இளமைக் காலத்திலேயே ஈடும் எடுப்புமின்றி விளங்கிய புலவர் அவர்கள், வடமொழிப் புலமையில் வல்லமை வாய்ந்த நாகநாத பண்டிதரிடம் சென்று கற்றதன் பயனால், வடமொழிப் புலமையிலும் மிக்க அறிவுடையவராய் விளங்கினார். வடமொழியில் உள்ள காவியங் களைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாடக்கூடிய வல்லமைப்பாடு புலவர்க்கோர் நல்வியல்பாக அமைந்துவிட்டது. அவர் உள்ளம் வடமொழிக் கடலையும் தென் தமிழ்க் கடலையும் நிலைகண்டு தெளிந்து நெஞ்சுவப்பதோர் கலையார்வம் கொண்டு அலை மோதியது. அவ் வலை மோதுதலின் ஆர்வத்தால் அவர் வடமொழியில் இருந்து தமிழில் மொழிபெயர்த்துப் பாடிய கவிதைகள் மிகப் பொருட்கரு உடையனவாகவும் புலவர் உள்ளத்துக்கோர் புதுவிருந்தாகவும் இருந்தன.

*முத்தேறு கிருதயுக பூதிமாந் தாதாவு*
*முடிந்து போனான்*

*நந்தெழு கடலடைத்த செயராமச் சந்திர..*
*நடந்து விட்டான்*
*வந்தேறு குருகுலத்துத் தருமன் முதன்*
*மகியரெலா மாய்ந்து போனார்*
*அந்தோவிங் கிவரொடும் போகாதபுவி*
*நின்றொருதானடையு மையா*

என்னும் இச்செய்யுள் அவர் மொழிபெயர்த்துப் பாடியவற்றுள் ஒன்றாகும். இதன்கண் அமைந்துள்ள ஓசை எழுச்சியும் உணர்ச்சிப் பெருக்கும் பொருள் வளமும் புலவர் அவர்களின் பாவன்மையையும் முதனூற் பொருள் சிதையாது மொழிபெயர்த்து அளிக்கும் மொழி ஆற்றலையும் காட்டுகின்றன.

இங்ஙனம் இவர் புலமை வீறு படைத்தவராய் விளங்குதலைக் கண்டும் கேட்டும் களித்த தமிழ்த் திருவாளர் சி.வை.தாமோதரம் பிள்ளை அவர்கள், தம்மால் ஏழாலையில் நிறுவப்பட்ட தமிழ்ப்பாட சாலையில் ஆசிரியராக வீற்றிருந்து தமிழ்ப்புலமை நடாத்தும் வாய்ப்பை நல்கினார். இதனால் புலவரவர்களின் தமிழ் ஆற்றலில் கலந்து புலமைப் பண்பு வாய்ந்தவர் பலராவர். வித்துவான் சிவானந்த ஐயர், பாலசுப்பிரமணிய ஐயர், மாணிக்கத்தியாகராச பண்டிதர், முதலியோராவார். பின்னர் 1902ம் ஆண்டிலே ஆறுமுகநாவலரவர் களால் நிறுவப்பட்ட வண்ணார்பண்ணை சைவப் பிரகாச வித்தியா சாலையில் தலைமையாசிரியராக வீற்றிருந்து தமிழ்ப் புலமை நடாத்தினார். அப்பொழுது அப்பாடசாலையில் ஓர் காவியப் பாட சாலையும் நிறுவப்பட்டது. புலவரவர்கள் வடமொழியிலும், தென் மொழியிலுமுள்ள சிறந்த காவியங்களைப் பல மாணவர்களுக்குக் கற்பித்து வந்தார்கள். காவியப் பாடசாலையில் புலவரவர்களிடம் கற்ற மாணவர்களுள் பண்டிதர் வ.மு.இரத்தினேஸ்வர ஐயர், தென் கோவை வேதாரணிய தேசிகர், நல்லூர் கா.குருமூர்த்தி ஐயர், மட்டுவில் பண்டிதர் சி.கணபதிப்பிள்ளை, மட்டக்களப்புப் பண்டிதர் ஏ.பெரியதம்பிப்பிள்ளை முதலியோர் மிகச் சிறந்த புலமையாளராய் விளங்கினர்.

இங்ஙனம் வடமொழி, தென்மொழிக் கல்வியில் வல்லமை படைத்தவராய்ப் பன்னூற்றுக்கணக்கான தமிழ்ப் பண்டிதர்களைப் படைத்துத் தமிழ்த் தொண்டு ஆற்றியவராய், இலக்கண மதிவளமும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் புனையும் ஆற்றலும் படைத்தவராய் விளங்கிய புலவர் அவர்களின் புகழ் தமிழகத்திற்கும் எட்டியது.

சிறிமான் பாண்டித்துரை தேவர் அவர்களால் மதுரையில் நிறுவப்பட்ட தமிழ்ச் சங்கத்தில், ஓர் உறுப்பினராக வீற்றிருந்து தமிழ்த்தொண்டாற்றிய சிறப்பு புலவர் அவர்களுக்கே உரியதாகும். புலவரவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து தமிழ்த் தொண்டாற்ற உடன்பட்டமையைக் குறித்து தமது உவகைப் பெருக்கைப் பாண்டித்துரை அவர்கள் கடிதம் மூலம் புலவரவர்களுக்கு அறிவித்துள்ளார்.

**மதுரைத் தமிழ்ச் சங்கம்**

29.11.1862

ஐயா,

தாங்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் கல்வியங்கத்தினருள் ஒருவராய் அமர்ந்து செந்தமிழ்ப் பாஷாபிவிருத்திக்கு வேண்டிய வற்றைப் புரிதற்கு, மனமுவந்துவர விடுத்துக் கொண்ட சம்மதப் பத்திரிகையைக் கண்ணுற்றுப் பெரு மகிழ்ச்சியடைந்தேன். இவ்வாறு அன்பு கூர்ந்து மனமுவந்து வாக்குதவிய தங்கட்கு, அநேக வந்தனம் அளிக்கின்றேன்.

இங்ஙனம்

**பாண்டித்துரை.**

இக்கடிதத்தைப் படிக்கும் தோறும் எமதுள்ளத்தில் புலவரவர்கள் தேடி எமக்கு வழங்கிய பெருமையின் அருமைப்பாட்டை எண்ணி யெண்ணி இன்பம் அடைய வேண்டியவர்களாகின்றோம். மதுரைத் தமிழ்ச் சங்கத்தினரால் வெளிப்படுத்தப்பட்ட செந்தமிழ் என்னும் திங்கள் வெளியீட்டைப் புலவரவர்களின் ஆராய்ச்சிக்கட்டுரைகள் அணிசெய்தன.

புலவரவர்கள் மிகமிக நுட்பமான புலமையுள்ளம் படைத்த வர்கள். சொற்களை வரையறுத்துப் பிழையின்றி எழுதுவதில் தமக்கே தாம் இணையாக விளங்கினார். ஏடுகளில் இருந்த தமிழ்நூல்களைப் பிழையின்றி அச்சேற்றி அளிக்கும் ஆற்றல் வாய்ந்தவர். பிறர் விடும் பிழைகளை எடுத்துக் காட்டி அவர்களைத் திருத்துவதுடன் அமையாது தமிழ் மரபையும் பேணும் சான்றாண்மை மிக்கவர். தாம் பல ஆண்டுகள் அரிதில் முயன்று ஆராய்ந்த நுண்பொருள்களையெல்லாம் தம்மிடம் கற்கும் மாணவர்க்கு வஞ்சனையின்றி வாரிவழங்கும் வன்மையாளர். இவரின் உரைநடை

எதுகை, மோனை, தொடை சிறப்புடையதாய் நக்கீரனின் உரை நடையாய் நவில்தொறும் இன்பம் பயக்கும் இயல்புடையது.

"இப்புலவர் சரித்திரத்தை இனிது நோக்கிப் பெரிது மதித்துப் பெருந்தொகைப் பொருளுபகாரம் செய்த பெருமையாளரும் ஒருவருளர். அவரோ ஒரு சாமானியரல்லர். உத்தம புருடர்களுக்கே உத்தம புருடர். அரும்பொருட் கலையுணர்வும், பெரும்பொருள் வருவாயும், பரம்பொருட் பக்தியும், திரம்பெறு புத்தியும், வரப்பிலவாக் கொடையும், விஜய வீரியாதிச் சகல சுகுனங்களும் பரம்பரையாக நிரம்பப்பெற்றுச் செந்தமிழ்ப் பரிபாலனமும், சைவ பரிபாலனமும் செய்துவந்த சேதுபதியரசர் திருமரபினர். அவர்கள் போலக் கலையுணர்வும், பொருள்வருவாயும். புத்தியும் பக்தியும், கொடையும் பிறவும் நிரம்பப்பெற்று செந்தமிழ்ப் பரிபாலனமும், சைவ பரிபாலனமும் செய்துவரும் சீமான். செந்தமிழபிமானியும், சித்தாந்த சைவப்பிரசங்க சிங்கமும், பெரும் கொடை வள்ளலுமாய் விளங்கிய, பாஸ்கர சேதுபதி மஹா ராஜாவின் பெரும் புதல்வர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் அக்கிராசன முதல்வர். சந்தத் தெளிக்கும் கலைவாணர். சங்கத் தமிழ்க் கருகிச் சித்தங்களிக்கும் திருவாளர் ராஜராஜேசுவர சேதுபதியரசர் எனப் புலவர் பாடும் புகழாளர்."

(தமிழ்ப் புலவர் சரித்திரம் - பக்.21)

இங்ஙனம் எல்லாம் புலவர்களாலும், புரவலர்களாலும் போற்றி மதித்துப் புகழப்பட்ட பெரும்புலமை வள்ளலாகிய புலவரவர்கள் ஆக்கிய நூல்கள் தமிழ்மொழியை அணிசெய்கின்றன. தமிழ்ப் புலவர் சரித்திரம்(1916) கம்பராமாயணம், பாலகாண்டம், அரும்பக உரையும் விளக்கமும்(1918) வதுளைக் கதிரேசன் பதிகம்(1884) மிலேச்ச மத விகற்பக் கும்மி(1888) சிசுபாலசரிதம் (1925) இராமோதந்தம்(1929) மேக தூதக்காரிகை (1896) யாப்பருங்கலக்காரிகை, புத்துரை, வினைப்பகுபத விளக்கம்(1912) தண்டியலங்காரப் புத்துரை(1904) இலக்கியச் சொல்லகராதி(1914) சாணக்கிய நீதி வெண்பா(1914) இதோபதேசம் (1922) முதலிய நூல்கள் புலவர் பெருமானின் கலையின் அகலத்தையும் ஆராய்ச்சி வன்மையையும், உள்ளத்தெளிவையும் உணர்த்துகின்றன.

இங்ஙனம் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தமிழ்ப் பணிக்கே வழங்கி வாழ்ந்த புலவர் அவர்களின் வரலாறு விரிவாக ஆராய்ந்து எழுதப்படுமாயின், ஈழத்தமிழகத்தின் தமிழ்ப் பரம்பரை வரலாறாக விளங்கும். டாக்டர் சுவாமிநாதையர் அவர்கள் எழுதிய மீனாட்சிசுந்தரம்பிள்ளை சரித்திரம், பதினெட்டாம் நூற்றாண்டு தொடக்கம் தமிழகத்தில் நிலைபெற்ற புலமைப் பரம்பரையைப் புலனாக்குவது போலக் குமாரசாமிப் புலவர் அவர்களின் வரலாறும் ஈழத் தமிழகத்திற்கும், இந்தியத் தமிழகத்திற்கும் உள்ள புலமைத் தொடர்பையும், ஈழத் தமிழகத்தார் இன்றுவரையும் தமிழுகாற்றிய தனிப்பெரும் பணிகளையும், புலனாக்கும் என்பதற்கோர் ஐயம் இல்லை. இப்பெரும் பணியில் ஈழநாட்டுத் தமிழறிஞர்கள் ஈடுபட்டுழைக்கும் நன்னாளை எதிர்காலத் தமிழகம் காணவேண்டும்.

❍❍❍

# 9. மறைமலையடிகள்

**– தனித்தமிழ் உரைநடையின் தந்தை தவத்திரு மறைமலையடிகளார் (1875 – 1950) –**

மறைமலையடிகள் செந்தமிழ் சிவநெறி உலகின் சிந்தாமணியனைய செம்புலச் செல்வர். அருந்தமிழ்ப் புலமையுடன் ஆரியத்திலும், ஆங்கிலத்திலும், ஆராய்வுப் புலமை ஆர்ந்த அறிவொளிக் கதிரவன். தமிழ்மொழி தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்த உயர்தனிச் செம்மொழிகளுள் தலையாக வைத்துப் போற்றும் தகைசான்ற உயர்மொழி என்பதை, உலகம் ஒப்புக்கொள்ளத் தக்கவகையில் மொழிநூல் ஆராய்ச்சிப் புலவர்கள் ஏற்று வழிவழியாக போற்றக் கூடிய முறையில் மெய்ப்பித்த மூதறிவாளன். இவர் காவிரியின் வளத்தால் கலைவளமும் நிலவளமும் பெற்று ஓங்கும் சோழநாட்டை சேர்ந்துள்ளதும், "கற்றார் பயிலும் நாகை'' என்று நாவுக்கரசரால் பாட்டப்பட்டதுமாய நா(கை)க பட்டினத்தை அடுத்துள்ள காடம்பாடி என்னும் கவினுறு சிற்ரூரில் தோன்றியவர். இவரின் தந்தையார் தோழியச்சைவவேளாள குலத்தலைவராய் வீற்றிருந்து வாழ்ந்த சொக்கநாதபிள்ளை. தாயார் தன்னிகர் இல்லாத தவச் செல்வி சின்னம்மையார். அடிகளின் இளமைப்பருவக் கல்வி நாகபட்டிணம் பாடசாலையில் முற்றுப்பெற்றது. பள்ளிப்பருவம் முற்றியபின் தெள்ளு தமிழ்ப்புலமை அடைதற் பொருட்டு அக்காலத்தில் சிறந்த தமிழ்ப் புலமையாளராய் திகழ்ந்தவரும், திருசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் உயர்நிலை மாணவர்களில் ஒருவருமான நாராயணசாமிப்பிள்ளையவர்களிடம் நற்றமிழ், இலக்கண நூல்களையும் ஆராய்ச்சி முறையில் கற்றுத் தெளிந்தார். அடிகள் பதினாறு ஆண்டு நிரம்ப முன்னரே பன்னூற் புலமை யாளராய்த் திகழ்ந்தார். அக்காலத்தில் வேதம். ஆகமம், உபநிடதம், புராணம், இதிகாசம் என்னும் வடமொழி நூல்களின் ஆழம் கண்டவரும் வைதிய சைவ சித்தாந்த சண்டமாருதம் என்னும் பட்டம் கொண்டவருமாகிய சோமசுந்தர நாயகர் அவர்களின் தொடர்பு அடிகளுக்குக் கிடைத்தது. அடிகள் நாயகர் அவர்களிடம் சைவசித்தாந்த உண்மைகளை உணர்ந்து சிறந்தார். பின்னர் பேராசிரியர் நல்லசாமிப் பிள்ளையின் அன்பையும் ஆதரவையும் பெற்றுச் சித்தாந்த தீவிகை என்னும் திங்கள் இதழின் ஆசிரியராகத் திகழ்ந்தார். (1897)

இங்ஙனம் அடிகளின் ஆராய்ச்சி வன்மையும், சைவ சித்தாந்த நூல் உணர்ச்சியும், பல தமிழ் அறிஞர்களின் பெருமதிப்பையும் பாராட்டையும் பெற்றுக் கொடுத்தன. இவற்றின் பயனால் அடிகள் 9.3.1898ல் சென்னையில் சிறந்து விளங்கும் கிறிஸ்தவக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராய் வீற்றிருந்து தமிழ்ப்புலமை நடாத்தும் பேற்றைப் பெற்றார். கிறிஸ்தவக் கல்லூரியின் தொடர்பு அடிகளாரின் தமிழ்ப் புலமையைத் தக்கோர் அறிந்து மதிக்கத் தக்க வாய்ப்பை வழங்கிவிட்டது. பீ.ஏ.பட்டதாரி வகுப்பு மாணவர்களுக்குச் சங்க நூல்களில் ஒன்றாகிய முல்லைப் பாட்டைப் பாடம் சொல்லவேண்டிய சூழ்நிலை அடிகளுக்கு வாய்த்தது. அடிகள் முல்லைப்பாட்டின் பொருள் நயத்தை மாணவர்கள் உள்ளம் கொள்ளத்தக்க வகையில் எடுத்துரைத்தார். முல்லைப் பாட்டின் நலன் உணர்ந்த மாணவர்கள் அடிகள் சொல்லிய உரைச் சிறப்புக்களை எல்லாம் திரட்டி நூல் உருவமாக வெளியிட முன்வந்தார்கள். அப்பொழுதுதான் தமிழ் மக்கள் உள்ளத்தில் சங்கநூல் ஆர்வத்தை அளித்து தமிழை வாழ்வித்த தனிப்பெரும் சிறப்பைத் தனக்கே உரித்தாக்கிக் கொண்ட முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை வெளிவந்தது. முல்லைப்பாட்டு ஆராய்ச்சி உரை தான் அடிகள் முதல் முதலாகத் தமிழ் அன்னைக்கு சூட்டியருளிய அணிகலனாகும். அடிகளின் ஆழ்ந்து அகன்று பெருகிய சங்கநூல் புலமைத் திறனையும் பிறமொழிகலவாத தூயதமிழ் மொழி நடையையும் கண்டு சான்றோர் உள்ளம் தழைத்தது. இதனை யடுத்துப் பட்டினப்பாலை ஆராய்ச்சி உரையும் வெளிவந்தது. அடிகளின் புகழ் தமிழகம் எங்கும் பரவியது. அடிகளின் விரிவுரை யைக் கேட்டுக்கேட்டு தமிழ்மக்கள் மகிழ்ந்தார்கள். புலவர்கள் புகழுரை வழங்கினார்கள்.

இங்ஙனம் தமிழ் ஒளி வீசி தமிழ் மக்களின் அக மலரை மலர்த்தி அறிவுத்தேன் விளங்கிய அடிகளாரின் உள்ளத்தில் தமிழ்மொழியின் மேம்பாட்டையும் தமிழர் நாகரிகத்தின் மேம்பாட்டையும் உலகறியச் செய்யவேண்டும் என்னும் ஊக்கம் உண்டாகியது. ஒரு மொழியில், பிறமொழிச் சொற்கள் அளவுக்கு மிஞ்சிக் கலப்பதனால் அம்மொழியின் தனிப்பண்பு சிதைந்து அழிந்துவிடும் என்பதே அடிகளின் கொள்கையாகும். மொழிநூல் ஆராய்ச்சியாளர் கொள்கையும் இதுவேயாகும்.

**ஒரு மொழியில் உள்ள சிறந்த கருத்துக்களை நூல்களை மொழிபெயர்த்துத் தமது மொழியில் ஆக்கிக் கொள்வது சிறந்த தாகும். தமிழ் மொழியில் சிறந்த சொற்கள் இருக்க அச்சொற்களை நீக்கி அவற்றுக்கு பதிலாக வடமொழிச் சொற்களை எழுதுவதும் பேசுவதும் பெருந்தவறான செயலாகும். இச்செயலால் தூய தமிழ்மொழிச் சொற்கள் வழக்கொழிந்து போக அவ்விடத்தில் பிற மொழிச் சொற்கள் நிலைபெற்றுப் பெருகி வளர்ந்து, காலப்போக்கில் தமிழின் தனித்தன்மை கெட்டு வேறோர் மொழியாக மாறவும் கூடும். தமிழில் மொழிபெயர்க்க இயலாது உலகம் முழுவதற்கும் பொதுச் சொற்களாய் உள்ளவற்றை, ஏற்றுக்கொள்வதால் தமிழ்மொழி அழியாது. ஆனால், நாள்தோறும் தமிழ் மக்கள் நாவில் நின்று வாழ்ந்துவரும் திருமணம், சோறு, நீர், உறவினர், மூத்தவன், இளையவன் முதலிய தமிழ்ச் சொற்களை ஒதுக்கி விவாகம், சாதம், சலம், பந்துக்கள், சிரேஷ்டன், கனிஷ்டன் என்னும் வடசொற்களை எழுதுவதும் பேசுவதும் தமிழின் மொழிவளத்தையும், பொருள் வளத்தையும் சிதைத்துவிடும் என்பதே அடிகளின் அழுத்தமான கொள்கையாகும்.**

அடிகளார் ஆக்கியருளிய ‘மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்’ என்ற ஆராய்ச்சிப் பெருநூல் தமிழ் மொழிக்கு ஓர் முழு மணியாகத் திகழ்கின்றது. பரந்துபட்ட ஆராய்வுப் புலமையுடன் அந்நூல் எழுதப்பட்டிருக்கின்றது. உலகில் மக்கள் வரலாற்று நூல் தொடங்கிய காலந்தொட்டு இன்றளவும் தமிழினமும் தமிழ் இலக்கியமும் எய்திய மாற்றங்கள் யாவும் அந்நூலில் ஆராயப் படுகின்றது. அடிகளாரின் தொண்டையும் தனித்தமிழ் ஆர்வத்தையும் பற்றி கலைமகள் ஆசிரியர் திரு.கி.வா.ஜெகந்நாதன் பின்வருமாறு கூறியுள்ளார்.

“இவருடைய தனிப்பற்றுத் தமிழினிடந்தான் இருந்தது. வடமொழி கலவாமல் தமிழில் எழுதவேண்டுமென்ற முயற்சியைத் தொடங்கி இவர் வெற்றி பெற்றார். இவரைப் பின்பற்றி தனித்தமிழ் எழுதுவோர் பலர் இன்னும் இருக்கின்றனர். மறைமலையடிகள் வடமொழியின்பால் உள்ள வெறுப்பால் இந்தக் கொள்கையை மேற்கொள்ளவில்லை. தமிழின் பாலினுள்ள முக்கிய அன்பே அதற்குக் காரணம். இவர் நூறு புத்தகங்கள் வரையில் எழுதி யுள்ளார். பல துறைகளிலும் இவர் நூல்கள் இயற்றினார். நாவல், கட்டுரைகள், மொழிபெயர்ப்பு, ஆராய்ச்சி, உரை முதலிய பல்வகை களும் இவர் நூல் வரிசையிற் காணலாம்.’’

உயர் பெரும் புலவர் திரு.வி.க. அவர்கள் “மறைமலை ஒரு பெரும் அறிவுச் சுடர், தமிழ் நிலவு, சைவமான் தமிழே சிவமாகவும் சிவமே தமிழாகவும் அடிகளுக்குத் தோன்றுகின்றன என்று யான் கருதுகிறேன். இரண்டையும் ஒன்றாகக் கண்டவர் திருஞானசம்பந்தர். திருஞானசம்பந்தரிடத்தில் மறைமலையடிகள் கொண்ட காதற்கு ஓர் அளவில்லை. தென்னாடு பன்னெடுங்காலம், தன்னை மறந்து உறங் கியது. அவ்வுறக்கம் போக்கிய பெருமை மறைமலை அடிகளுக் குண்டு. அவர் தம் தமிழ்ப்புலமையும் வடமொழிப் புலமையும், ஆங்கிலப் புலமையும் ஆராய்ச்சியும் பேச்சும் எழுத்தும் தொண்டும் தென்னாட்டை விழிக்கச் செய்தன. தென்னாடு அடிகளால் விழிப்புற்றது என்று மண்ணும் முழங்கும், மரமும் முழங்கும். அடிகள் பேச்சு, பல பேச்சாளரைப் படைத்தது. எழுத்து, பல எழுத்தாளரை ஈன்றது. நூல் பல நூலாசிரியன்மாரை அளித்தது. அடிகளே தென்னாடு தென்னாடே அடிகள்'' எனப் பாராட்டிப் பரவுகின்றார்.

இங்ஙனம் புலவர் போற்றும் புகழுடைய மறைமலை அடிகளார், ஆக்கியருளிய நூல்கள் அளவிடமுடியாப் பொருள் வளமும் ஆராய்ச்சி வளமும் நிரம்பியனவாய் விளங்கித் தமிழ் மொழியை அணிசெய்கின்றன.

வேளாளர் நாகரிகம், திருவாசக விரிவுரை, திருக்குறள் ஆராய்ச்சி, சிவஞானபோத ஆராய்ச்சி, சகுந்தலை நாடகம், கோவிலர்க்பால் கடிதங்கள், சிந்தனைக் கட்டுரைகள், வசன சித்தாந்த ஞானபோதம் முதலிய பல நூல்களை ஆக்கியுள்ளார்.

அடிகளின் படிப்பார்வம் மிகமிகப் பெரிது. அறுபதினாயிரம் ரூபா பெறுமதியுள்ள நூல்களை அடிகள் தமது நூல்நிலையத்தில் தொகுத்து வைத்தார்கள் என அறியும் பொழுது எமதுள்ளத்தில் வியப்பும், தமிழ் உணர்வும் அன்பும் அலை எறிகின்றன. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் 24-8-1958ல் அடிகளின் பெயரால் நிறுவிய மறைமலையடிகள் நூல்நிலையத்தில் அடிகள் தொகுத்து வைத்திருந்த நூல்கள் யாவும் வைக்கப்பட்டுள்ளன. அடிகளின் நினைவுக்குறியாக நிலவும் அந்நூல் நிலையம் எண்பதினாயிரம் ரூபா செலவில் சென்னையில் (105, லிங்கச் செட்டியார் தெரு) நிறுவப்பட்டுள்ளது. அடிகளின் தமிழ்த் தொண்டும் புலமையும் தமிழ் கூறும் நல்லுலகை வாழ்வித்த மாண்பை எண்ணி எண்ணி இன்பமடை வோமாக.

❍❍❍

# 10. ஈழத் தமிழன்னையின் புதல்வர்

***- சின்னத்தம்பிப் புலவர் (1716 - 1780) -***

சின்னத்தம்பிப் புலவர் ஈழத் தமிழன்னையின் அருந்தவப் புதல்வர். பொருள் மரபும், அருள் மரபும், புலநெறி வழக்கும் நிலைகண்டு ணர்ந்த தலைமையாளர். செந்தமிழ்ச் சிவப்பண்ணையாகச் சிறந்து விளங்கும் யாழ்ப்பாண மாநகரின் மருங்கே உள்ளதும், எல்லையில் அருள்வளம் பெற்று விளங்குவதுமாகிய நல்லூரில் பிறந்தவர். இவரின் தந்தையார் சைவ வேளான் பெருங்குடிச் சான்றோனாய் விளங்கிய பல்கலைக்குரிசில் வில்லவராய முதலியார். நல்லூரை முன்னாண்ட தமிழ் மன்னர்களுள் தமிழ்ப் புலமையாளர்களாகச் சிறந்து வாழ்ந்த தன்னளியுடையோர் பரராசசேகரன், செகராசசேகரன் என்னும் இருவருமேயாவர். இம்மன்னர்கள் மரபில் ஒருவராகத் தோன்றிய நல்லிசையாளர் வில்வராய முதலியார் என்பதை எண்ண, எண்ண எமதுள்ளம் இறுமாப்படைகின்றது.

இங்ஙனம், மன்னவர் திருவும் சைவத் தமிழ் வாழ்வும் வாழியடி வாழியாகப் பெற்றுயர்ந்த, பெருங்குடித் தோன்றலாகிய சின்னத் தம்பிப் புலவர் அவர்கள் துள்ளித் திரியும் பள்ளிப் பருவத்திலேயே நல்லிசைப் புலமைத் திறமும் ஞானத் திருவும் நன்னிவாழும் புண்ணியப் பேறடைந்து விட்டார். இவர் மாடு மேய்க்கும் பிள்ளை களுடன் ஓடி விளையாடிக்கொண்டு நின்றார் என்றும், அப்பொழுது அவ்வழியால் வந்த புலவரொருவர் பிள்ளைகளுடன் ஒருவராக நின்ற சிறுவன் சின்னத்தம்பியை (சின்னத்தம்பி புலவரை) நோக்கி, வில்லவராய முதலியாரின் வீடு எது எனக் கேட்டபோது சிறுவன் ஒரு பாட்டால் விடைகூறிப் புலவரை வியப்படையச் செய்தானென்னும், ஓர் வரலாறு வழங்கி வருகின்றது.

*பொன்பூச் சொரியும் பொலிந்த*
*செழுந் தாதிறைக்கும்*
*நன்பூதலத் தோர்க்கு நன்னிழலாம்*
*... மின் பிரபை*
*வீசுபுகழ் நல்லூரான் வில்லவராயன்*
*கனக*
*வாசலிடைக் கொன்றை மரம்*

என்பதே அப்பாட்டாகும். இதன் கவி அமைந்துள்ள சொற்கள் எல்லாம் தூய மங்கலச் சொற்கள். பொன், பூ சொரியும், நல்நிழல், புகழ் மின்பொலிந்த நறுந்தாது என்பவற்றை நோக்குக. புலவர் அவர்களின் இளமை எழிலும், புலமை நலமும், பாட்டின் ஒவ்வொரு சொல்லிலும் நின்று நிழலாடுகின்றன. வில்லவராயன் வீட்டு வாசலில் கொன்றை மரம் நிற்பதையோர் அடையாளமாகக் கூறிய புலவர் வில்வராயரின் குலப் பண்பையும் கொடைச் சிறப்பையும், நல்லூரின் மேம்பாட்டையும், எடுத்துக்காட்டி எமக்கு இன்பமளிக்கின்றார். "நன்பூதலத்தோர்க்கு நன்னிழல்'' என்னுந் தொடர், வில்வராயரின் வீடு தமிழ்கூறும் நல்லுலகில் வாழ்வோர்க்கெல்லாம், ஆதரவாக நின்று, அவர்களின் அல்லலைப் போக்கிப் பாதுகாக்கும் அன்பையும், அறத்தையுமே, பண்பும் பயனுமாகக் கொண்டு விளங்குகின்றது எனப்பொருள் கொள்ளத்தக்கதாக அமைந்துள்ளது. "நன்னிழல்'' என்பது இருவர்ச்சுட்டிய பல்வேறு தொல்குடிகளாய்ப் பரந்து பன்பட்டுப் பயன் கனிந்து, "அறந்தாள் வருவதே இன்பம்'' என்னும் திறத்தையே மேற்கொண்டு வாழ்ந்த பெருங்குலம் என்பதாம்.

இனி, ஈசன் எந்தை இணையடி நிழல்'' என்றாற் போல், வில்லவராய முதலியாரின் இல்லற வாழ்வு புலவர்களின் வறுமை போகும் வண்ணம் பொன்னைச் சொரிந்தும், பூவைச் சொரிந்தும், வழிபட்டும் விருந்தினரை வரவேற்றுப் பொலிந்த செழுந்தாது போல் அன்பு கனிந்த மொழிகளால் அவர்கள் உள்ளத்தில் உவகையை ஏற்றி ஆதரித்தும் அறந்தாற்றில் நின்று அனைவர்க்கும் நிழலாய்ப் பொலிகின்றதென்பதையும் புலவர் குறிப்பாகப் புகழ்கின்றார்.

இனி, "மின்பிரபை வீசுபுகழ் நல்லூரான்'' என்னும் தொடரால் வில்லவராய முதலியாரின் குடிப் பெருமையிலும் பார்க்க மிகப் பெரு மையை அவர்க்கு வழங்குவது அவர் வதியும் நல்லூரே என்பதையும் புலவர் சொல்லுகின்றார். நல்லூர் முருகப் பெருமானின் அருள் நலத்தாலும், யாழ்ப்பாணத் தமிழ் அரசரின் தலைநகராக விளங்கிய திருநலத்தாலும், எல்லாராலும் அறியப்பட்டுத் திசையெல்லாம் இசை போக்கி இலங்குகின்றதென்பதாம்.

இங்ஙனம் இளமையிலேயே புலமை நலம் படைத்த புலவர் அவர்கள் ஆக்கியருளிய இலக்கிய நூல்கள் அருட்சுவையும், பொருட்சுவையும், சொற்சுவையும், அணிநலமும் உடையனவாய்ப் பொலிகின்றன. அவர்கள் ஆக்கியருளிய மறைசையந்தாழி வற்றாத

அருள் வெள்ளமாகும். கல்வளையந்தாதி கற்ற வல்லோர் பாராட்டும் அற்புதமான கற்பனை வளமும், கருத்து நிறைவும் பெற்று விளங்கும் பெற்றுடையதாகும். கரவை வேலன் கோவை கவிச்சுவையும், பொருட்செறிவும், இன்னோசையும் வாய்ந்த “இன்றமிழ் இயற்கை இன்ப”த்தின் நிலைக்களனாக நின்று நிலவுகின்றது.

*மாசால மோமணி வாய்*
*நோகு மோதும் மரபியலின்*
*ஆசாரமோவிர தத்தடை*
*வோதிசை யாடைசுற்றும்*
*தேசா தீபர் மெச்சும்வேலன்*
*கரவைச் சிலம்பனையீர்*
*பேசாதிருக்கும் வகையின்ன*
*வாறென்று பேசிடுமே.*

என்பது கரவை வேலன் கோவையில் உள்ளவோர் செய்யுளாகும். இதன்கண் தலைமகள் தன்னுடன் உரையாடாதிருத்தலின் காரணம் யாதாகுமோ எனும் கருத்தமையத் தலைவன் கூறுவதாகவுள்ள துறைபொருள் அமைந்திருக்கின்றது. ஏனைய கோவைகளில் இத்துறைகளை எடுத்துக்காட்டாத புதிய காரணங்களைப் புலவர் சிந்தனைத்திறத்தால் புனைந்து கூறியுள்ளார். மாசாலமோ வாய்நோகுமோ நும்மரபியலின் ஆசாரமோ விரதத்தடைவோ எனுந் தொடர்கள் பழகு தமிழ்ச் சொற்களால் அமைந்திருப்பதோடு புலநெறி மரபுக்கேற்ற பொருள் நலமும் உடையனவாய் விளங்கு கின்றன. “மாசாலமோ” “வாய் நோகுமோ” என்பன நகைச் சுவை யுடையனவாயும், “மரபியலின் ஆசாரமோ, விரதத் தடைவோ” என்பன இற்பின் ஒழுக்கநெறியையும், தவநெறிப்படரும் நாவடக் கத்தையும் காட்டுனவாயும் நிற்கின்றன.

இனிப் புலவர் அவர்கள் பாடிய பருளை விநாயகர் பள்ளு என்னும் நூல் ஈழத்தமிகத்தின் புலமைத்திறத்தைப் புலனாக்கு வதோர் புதுப்புனைவாகவும், அருட்பனுவலாகவும், வாழ்க்கை ஓவியமாகவும், மரபு நிலை திரியாமல் படைக்கும் விருந்து என்னும் யாப்பு வகைக்கோர் விளக்கமாகவும் விளங்குகின்றது. ஈழமண்டல நாடெங்கள் நாடே எனும் ஈற்றடியைக் கொண்ட சிந்துக்கள் புலவர் அவர்களின் நாட்டுப் பற்றையும் இயற்கை வளத்தில் ஈடுபட்டு நிற்கும் புலமைச் செவ்வியையும் புலனாக்குகின்றன.

*கான்ற சோதியின் நித்திலஞ்*
*சிந்தும் கரும்பினிற்*
*குருத்தைக் கதிர்கற்றை*
*ஈன்ற சாலிக் குழாம்*
*சுமந்தோங்கிடும்*
*ஈழமண்டல நாடெங்கள் நாடே*

*வளமை சேர்ந்திடு*
*முப்பிலான் முது மந்தி*
*தாவி மலையிடைப் பாய*
*இளமை மந்தி உருவடி*
*வாய்விடும் ஈழமண்டல*
*நாடெங்கள் நாடே*

*பண்ணில் தோயப் பொருள் முடிப் புக்கட்டிப்பாடும்*
*பாவலர்க்கீந்திட வென்றே*
*எண்ணிப் பொன்முடிப்புக் கட்டிவைத்திடும் ஈழமண்டல*
*நாடெங்கள் நாடே*

என வரும் இச்செய்யுள்களில் இயற்கையோடு இணைந்து தோன்றும் புலமைச் செல்வி புலவர்க்கோர் புதுவிருந்தாகும். முத்துக்கள் மிகுந்த ஒளியை வீசுகின்ற மருத நிலத்தில் கரும்புகள் கவினுற ஓங்கிவளர்ந்துள்ளது. அக்கரும்புகளின் உயரத்திலும் பார்க்க வளர்ந்த நெற்பயிர்கள் தமது கதிர்க்கற்றைகளாக அக்கரும்பு களைச் சுமந்து நிற்பது போலக் காட்சியளிக்கின்றன. மூப்புப் பருவத்தை உடைய முது குரங்கு மலையின் மேல் தாவிச் செல்லும் பொழுது அம் மலையின் கண் உள்ள இளமை வாய்ந்த இயற்கை அழகு கலந்து முதுமை மாறி இளமைக் கோலத்துடன் விளங்கு கின்றதாம். இசையின் பல கனிய பொருள்களை இணைத்துத் தான் சொல்லக் கருதிய பொருளை மிகப் பொருத்தமாக அமைத்து செய்யுள் செய்த புலவர்களுக்குப் பரிசில் வழங்குவதற்காக பொற்காசுகள் எண்ணி எண்ணி பொற்கிளியாக கட்டிவைக்கின்ற புலவரவர்கள் ஈழநாட்டில் இருக்கின்றார்களாம்.

இங்ஙனம் பொருட்களை நிரம்பிய பாக்களைப் புனைந்து புலவர் போற்றும் புலவராக வீற்றிருந்த சின்னத்தம்பிப்புலவர்களின் புலமைக் கொலு ஈழத்தமிழகத்தை என்றென்றும் வாழ்விப்பதாக.

❍❍❍

## 11. சதாவதானம் வல்ல தமிழ்ச் சான்றோன்

**– மேலைப்புலோலி வித்துவமாமணி நா. கதிரைவேற்பிள்ளை (1844 – 1907) –**

கதிரைவேற்பிள்ளை அவர்கள் கற்றுக்கனிந்த நாவன்மையும் கலையாய்வுத் திறனும் பெற்றுப்பொலிந்த புலவர் பெருமான் யாழ்ப்பாணத்தைச் சார்ந்ததும் புலவர் வாழும் புகழும், புலவர் போற்றும் புகழும் பூண்ட திருவால் பொலிவதுமான புலோலி ஊரிற் பிறந்தவர்.

இவரின் தந்தையார் நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் போலச் சைவத்திருவும் தமிழ் மரபும் தழைக்க வாழ்ந்த வேளான் பெருங் குடித் தோன்றல் நாகப்பிள்ளை என்னும் நல்லோராவார். கல்வி கற்கும் பருவத்திலேயே கதிரைவேற்பிள்ளை அவர்கள் மிகமிக வல்லமையாளராகவும், நினைவாற்றல் நிரம்பியவராகவும் விளங்கிப் பலரின் பாராட்டுக்களையும் பெற்றார். பாராட்டுதலைப் பெற்றும் தொடர்ந்து படிக்கக்கூடிய பொருள் நிலை இல்லாமையால் மிகவும் அல்லற்பட்டார்.

இங்ஙனம் இளமைப் பருவத்திலேயே இல்லாமையால் உள்ளம் உடைந்த பிள்ளை அவர்கள், தமது இருபத்திரண்டாம் ஆண்டிலே பிறந்த ஊராகிய புலோலியை விட்டுச் சென்னை நகருக்குச் சென்றார். சென்ற பிள்ளை அவர்கள் திருவருட் செயலால் அக்கா லத்தில் ஆரியம், ஆங்கிலம், தமிழ் என்னும் மும்மொழிகளிலும் வல்லமை வாய்ந்தவராய்ச் சென்னையில் வீற்றிருந்த திருகோண மலை கனகசுந்தரம்பிள்ளை அவர்களிடம் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும் பிற இலக்கியங்களையும் கற்றுத் தெளிந்தார். பிள்ளை அவர்களின் விடாமுயற்சியும் வியத்தகுமதி நுட்பமும் அவரின் கல்வி ஆற்றலை மிக, மிகப் பெருக்கி விட்டன. தமிழகத்திலேயே தன்னேரில்லாத் தனிப்பெருங் கல்வியாளராகப் பிள்ளையவர்கள் திகழ்ந்தார்கள்.

சென்னை மாநகரம் எங்கும் சென்று, சென்று செந்தமிழ்ச் சிவவீறு கனிந்த சொற்பொழிவுகள் பல மிக அற்புதமாக ஆற்றினார். இலக்கண அமைவும், இலக்கியத் தோய்வும், சித்தாந்தச் சைவத் தெளிவும், சொல்வன்மையும் செறிந்த பிள்ளை அவர்களின் சொற்பொழிவுகள் பல்கலைவல்ல பண்டிதர்களையும் பன்மொழி

வல்லார்களையும் கவர்ந்து களிபேருவகை அடையச் செய்தன. சொற்பொழிவுகள் வெறுஞ் சொல்லடுக்குகளாக மட்டும் இருந்தில. ஒரு நாளில் பத்துச் சொற்பொழிவுகளை ஆற்றினாலும் அவை ஒவ்வொன்றிலும் புதுப் புதுப் பொருளும் சொல்லும் போக்கும் நடையும் எழுச்சியும் பொருந்திப் பொலிந்தன. பிள்ளை அவர்களுக்கு எங்கும் வரவேற்பு, எங்கும் புகழ்மாலை. அவர்கள் பேசாத பேரவைகள் இல்லை. புலவர் பேரவைகளில் பேசுவார். பின்னர் பேரவைகளில் பேசுவார். மாற்றார் அழைப்புக்களை ஏற்று, அவர்கள் கூட்டிய அவைகளில் சென்று, கேட்டார் வியக்கத்தக்க முறையில், வாதித்துத் தமது கொள்கையைச் சாதித்துவாகை புனைந்து, மாற்றாரின் மதிப்பை ஈட்டிக் கொள்வார்.

இவர் மாயாவாதக் கொள்கையை மறுத்துப் பேசி வாகை சூடிய மாண்பை மதித்துச் சென்னையில் வாழ்ந்த வித்துவான்கள் காசிவாசி செந்திநாதையர் அவர்கள் தலைமையில் கூடிய பேரவையில், மாயாவாததும் சகோளரி என்னும் பட்டத்தை வழங்கி மகிழ்ந்தார்கள். மேலும் இவரின் (சித்தாந்த) சைவசித்தாந்தப் புலமையைவியந்து, சைவ சித்தாந்த மகாசரபம் சித்தாந்த பானு எனவும் கற்றோர் வழங்கிய பட்டங்கள் பல.

இங்ஙனம் மதிப்பும் வரவேற்றும் பெற்றுச் சிறந்த பிள்ளை அவர்கள் 1898ம் ஆண்டில் மயிலாப்பூர் செந்தோம் உயர் நிலைப் பள்ளியல் தமிழ்ப் புலமை நடாத்தும் வாய்ப்பை அடைந்தார். அக்கல்லூரியில் பிள்ளை அவர்களிடம் தமிழ் கற்ற மாணவர்களில் தலைமைபெற்றவர் திரு.வி.கலியானசுந்தரனார் ஆவர். திரு.வி.க. அவர்கள் எமது ஆசிரியர் கதிரைவேற்பிள்ளை அவர்களைப்பற்றி கரைகடந்த ஆர்வத்துடனும், பெருமிதத்துடனும், பேசியும் எழுதியும் போற்றி மகிழ்வார்கள்.

“சென்னை வெஸ்லி கலாசாலையில் நான் மாணாக்கனாய் இருந்தபோது, யாழ்ப்பாணம் நா.கதிரைவேற்பிள்ளையவர்களது அன்புக்கு உரியவனானேன். ஆங்கிலத்தில் பித்துக்கொண்டு திரிந்த எமக்குத் தமிழில் வேட்கையை எழுப்பியவர் அவரேயாவர். அவரிடம் யான் நெருங்கிப் பழகிவந்த போது பெரிய புராணத்தைப் படிக்குமாறும் நாயன்மார் வரலாறுகளை உரைநடையில் எழுதி எழுதிப் பயிற்சி பெறுமாறும், அவர் எனக்கு அடிக்கடி சொல்லி வருவார். அவ்வாறேயான் பெரிய புராணத்தில் சிறு தேர் உருட்டியும் சிற்றில்கட்டியும் விளையாடி வந்தேன்'' எனப் பிள்ளை அவர்களின்

நினைவுச் சின்னமாகத் தம்மால் அரும்பூத ஆராய்ச்சிக் குறிப்புரை யுடனும் வசனத்துடனும் வெளியிடப்பட்ட பெரியுராண முன்னுரையில் திரு.வி.க.அவர்கள் எழுதியுள்ள உரைப்பகுதியை நோக்குக.

இனிப் பிள்ளை அவர்கள் நாவலர் பெருமான் அவர்களால் தொடக்கப்பட்ட அருட்பா-மருப்பாப் போரைத் தொடர்ந்தாற்றி வெற்றி கண்ட மேன்மை மிகப் போற்றத்தக்கதாகும். தமிழ்ப் பேரறிஞர் மறைமலையடிகளுடன் பல பேரவைகளில் எதிர்த்துச் சொற்போராடிய சிறப்பும் பிள்ளையவர்களுக்கே உரியதாகும். கர்மபுராண விரிவுரை, பழனித்தல புராணவுரை சைவ சந்திரிகை, சைவ சித்தாந்தச் சுருக்கம், சிவாலய மகோற்சவ விளக்கம், சுப்பிர மணிய பராக்கிரமம் என்பன பிள்ளை அவர்கள் ஆக்கியருளிய நூல்களாகும்.

இங்ஙனம் பேராற்றல் வாய்ந்த பிள்ளை அவர்களைத் தமிழகத் துக்குத் தந்துதவிய மேலைப்புலோலியின் மேன்மை சாலச் சிறந்த தாகும்.

❍❍❍

## 12. எத்திசையும் இசை பரப்பும் முத்தமிழ்ப் பெரும் புலவர்

**- அருட்திரு விபுலானந்தா அடிகளார் (27.03.1892 - 19.07.1947) -**

அருட்திரு விபுலானந்த அடிகளார், தமிழே உருவமான தவப் பெருஞ்சான்றோர். உள்ளந்தோறும் உயிருந்தோறும் உவகை அளிக்கும் தெள்ளு தமிழ்ச் சிலப்பதிகாரமென்னும் திருப்பாற் கடலைத்தம் உள்ளொளி மத்தினால் கடைந்து, அள்ளுசுவை யாழ்நூல் என்னும் அமிழ்தத்தை, அருந்தமிழ் அன்னைக்கு, விருந்தாக அளித்தருளும் அருள் வள்ளல் விபுலானந்த அடிகளாரேயாவர்.

இவர் எட்டுத்திக்கும் இசை போக்கும் ஈழத் திருநாட்டின் கிழக்கு மாவட்டமாய் விளங்கும் வண் தமிழ்பண்ணையாகிய மட்டக் களப்பைச் சார்ந்த காரேறு மூதூரில் தோன்றியவர். தந்தையார் சான்றோர் பரவும் பழம்பெருங்குடித் தோன்றல் சாமித்தம்பியார். தாயார் என்னருத்தவச்செல்வி கண்ணம்மையார். அடிகளாரின் பிள்ளைப் பெயர் மயில்வாகனன். அவர் பள்ளிப் பருவந்தொட்டே கல்வியில் வல்லவராய் விளங்கினார். அவர் படிப்படியாய்ப் படிப்பில் உயர்ந்து 1916ம் ஆண்டு மதுரைப் பண்டித தேர்வில் பெற்றிபெற்றார். 1919ம் ஆண்டளவில் பி.எல். தேர்விலும் வெற்றிபெற்று இருமொழிப் பட்டதாரியாய் விளங்கினார்.

இங்ஙனம் இருமொழிப் புலமையாளராய் விளங்கிய அடிகளார் (1920) மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராய் வீற்றிருந்து தமது கலையொளியைப் பரப்பிப்பணி செய்யும் பெருவாழ்வைப் பெற்றார். அடிகளாரின் புலமை யாழ்ப்பாணத்தில் மலர்ந்தது. அடிகள் மிக ஆர்வத்துடன் தமிழ் தொண்டு புரிய முனைந்தார். யாழ்ப்பாண ஆரிய திராவிட பாசாபிவிருத்திச் சங்கத்தைப் பல அறிஞர்களின் துணைகொண்டு நிறுவினார். தமிழ் மொழிக்குப் பணி ஆற்றவேண்டும் என்ற ஆர்வம் அடிகளாரை ஆட்கொண்டது. தம் உள்ளத்தில் ஊற்றெடுத்த கலையாக்கப் பணியை நிறைவுசெய்யத் துணிந்த அடிகளார் (1922) துறவுபூணும் எண்ணத்துடன் சென்னையில் உள்ள இராமகிருஷ்ண மடாலயத்தினுக்குச் சென்றார். தொண்டு செய்யும் வாய்ப்பைத் துறவு வாழ்வினால் பெற்றுத் தூய்மையடைந்த அடிகளார் (1924) விபுலானந்தர் என்னும் துறவறப் பெயரைத் தாங்கித் தவநெறிப்படர்ந்து தன்னார் தமிழ்வாழ்வே தம் வாழ்வாகக் கொண்டார்.

அடிகளாரின் தமிழ்ப்புலமையும் ஆராய்ச்சித்திறனும் தவத்திரு நிரம்பிய தூயவாழ்வும் தென்னாட்டுத் தமிழ் அறிஞர்களின் உள்ளத்தை அள்ளியது. ஆண்டு நிறைவு விழாப் பேரவைகளிலும், ஆராய்ச்சிமன்றங்களிலும், ஆயிரம் ஆயிரமாகக் கூடி அடிகளாரின் ஆரமுதம் போன்ற ஆய்வுரைகளை தென்னாட்டறிஞர்கள் பன்னாட்கள் கேட்டுக் கேட்டுப் பாராட்டினார்கள். அந்நாட்களில் தான் அடிகளின் இலக்கிய நுகர்வும், ஆராய்வுத் திறனும் புதுப்புது வழிகளில் நுழைந்து புதிய நூல்களைப் புனைந்துதவும் இனிய பேற்றை ஈந்தன. 'ஆங்கில வாவி' என்னும் அரிய மொழிபெயர்ப்பு இலக்கியமும் 'பூஞ்சோலைக் காவலன்' என்னும் புதிய இலக்கியப் புதையலும் அடிகளால் அருளப்பட்டன.

அடிகளாரின் ஆராய்ச்சி உள்ளம் சிலப்பதிகாரத்தில் சென்றது. முத்தமிழ்க் காப்பியத்தை ஆக்கியருளிய இளங்கோவடிகளின் துறவுள்ளத்தில் ஊற்றெழுந்த இசைத்தமிழ்ப் புலமையில், இணைந்து குழைந்து நுழைந்து, நுணுகி ஒன்றுபட்ட விபுலானந்த அடிகளாரின் துறவுள்ளம் வியத்தகு யாழின் அமைப்பு முறைகளைக் கண்டு, செழித்தது. செழித்த உள்ளொளியால் அடிகளார் தாம் ஆய்ந்து கண்ட யாழின் அமைப்பு நுட்பங்களை எல்லாம் சென்னைப் பல்கலைக்கழக ஆதரவில் நிகழ்ந்த ஆராய்ச்சிப் பேரவையில் (1936) எடுத்து விளக்கினார். தமிழரின் இசை ஓவியம் தலைப்பில் அடிகளார் நிகழ்த்திய அவ்வாராய்ச்சிப் பேருரையைக் கேட்ட தமிழ்ப் பேரறிஞர்கள் பலரும் எல்லையில்லா ஆர்வமுடன் அடிகளாரை நோக்கி, இன்று நீங்கள் சொல்லிய நுட்பங்களை எல்லாம் திரட்டி, ஓர் நூலாகத் தரல் வேண்டும் என வேண்டினார்கள்.

இவ்வண்ணம் அடிகளாரை அறிஞர்கள் ஊக்கிய காலத்திலே தான் அடிகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பேராசிரியராக வீற்றிருந்து தமிழ்ப் புலமை நடாத்தினார். பின் தொடர்ந்து பத்தாண்டுகளாகத் தாம் ஆராய்ந்து கண்ட முடிவுகளை யெல்லாம் நிரல்பட அமைத்து அடிகள் ஆக்கியருளிய 'யாழ்நூலை' 1947ம் ஆண்டு கரந்தைத் தமிழ்ச் சங்கம் ஆராக்காதலுடன் வெளியிட்டு அறிஞர் உலகின் வாழ்த்தையும் மதிப்பையும் பெற்றுக் கொண்டது. யாழ்நூல் வெளியிட்டபோது அடிகள் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராக வீற்றிருந்தார்கள் என்பதை எண்ணி நாம் இன்படையவேண்டும்.

அடிகளாரின் பேச்சைப் போலவே அவரின் பாட்டும் இனியது. தன் சொட்டும் இழுமென் மொழிகளால் அடிகள் எழுதிய உரைநடையில் அமைந்து கிடக்கும் இன்னோசையும் பொருட்செறிவும், அடிகளாரின் உள்ளத்திலே நிழலாடும் இறவாத இன்ப அன்பை எடுத்துக் காட்டுவனவாகும்.

*கதிர் காலங் கழிந்தது.*
*இளவேனிற் காலம் வந்தது*
*செடிகொடிகள் தளிரின்று*
*முகையரும்பிப் பூவலர்ந்தன'*

என்பது அடிகளாரின் உரைநடைக்கோர் எடுத்துக்காட்டாகும்.

அடிகளாரின் செய்யுள் இன்பம் இளங்கோவடிகளின் செய்யுள் இன்பம் போலவே மிக மிக இனியது.

*வெள்ளை நிற மல்லிகையோ*
*வேறெந்த மாமலரோ*
*வள்ளல் அடியினைக்கு*
*வாய்த்தமல ரெதுவோ?*
*வெள்ளை நிறப் பூவுமல்ல*
*வேறெந்த மலருமல்ல*
*உள்ளக் கமலமடி*
*உத்தமனார் வேண்டுவது*
*வேலை முகட்டில் கதிர் எழுமுன்*
*விரைந்து பறித்து புதுமலரால்*
*கோலமுறவே புனைமாலை*
*யார்க்கோ எங்கள் குலக்கொழுந்தே*

எனவரும் இக்கவிதைகளை நோக்குக. அடிகளாரின் அருளுள்ளம், கவிதைத் தொடர்களில் உயிர்பெற்று நின்று உலாவுவதைக் காண்கின்றோம்.

அடிகளார் ஆக்கியருளிய மதங்கசூளாமணி விலைமதிக்க முடியாத முழு மாணிக்கம் போல நின்று நாடகத் தமிழை வாழ்விக்கின்றது. 'ஆங்கில வாணி' அமிழ்த ஊற்றுப்போல புலவர் போற்றி நுகரும் புலமை விருந்தாகப் பொலிகின்றது. விவேகானந்த ஞானதீபம், வீறுகொண்ட ஞானநிதியாக விளங்குகின்றது. நம்மவர்

நாட்டு ஞானவாழ்க்கை, முன்னெவரும் கண்டிராத உயர்ந்த வாழ்க்கை உண்மைகளை வடித்து வழங்குகின்றது.

இங்ஙனம் தமிழ் மொழியை வளம்படுத்துவதற்காக தம்மால் ஒல்லும் வகையால் எல்லாம் உழைத்துழைத்து உள்ளஞ் செழித்து அருள்வள்ளலராகிய விபுலானந்த அடிகளாரை, எம் பொன்னாடாகிய ஈழமும் அன்னை நாடாகிய தென்னகமும் வாழும் வண்ணம் வழங்கியருளிய மட்டக்களப்புத் தமிழகத்தாரை வாழ்த்து வோமாக.

❍❍❍

# 13. கதிர்மணி விளக்கங்கண்ட முதுபெரும் புலவர்

***– மகாமகோபாத்தியாய பண்டிதமணி கதிரேசச் செட்டியார் –***

முதுபெரும் புலவர் கதிரேசச்செட்டியார் அவர்கள் மதிநுட்பம் நூலோடு வாய்ந்த அதிநுட்பப் பெரும் பேராசிரியராய் விளங்கிய அருந்தகையாளர். இவர் தன்னார் தமிழ் அளித்த தென்பாண்டி நாட்டைச் சார்ந்ததும், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என அருளும் சங்கத்துச் சான்றோன். பூங்குன்றனாரைத் தந்தருளும் ஏற்றம் கொண்டதுமான, பூங்குன்று நாட்டின் தலைநகராய் நின்று பொலியும், மகிபாலன்பட்டியில் தோன்றிய புண்ணியப் புதல்வர். தந்தையார் தமிழ் வணிகர் குலச்சான்றோன் முத்துக்கறுப்பன் செட்டியார். தாயார் சிந்தைநிறை செல்வி சிகப்பி ஆச்சியார். பண்டிதமணி அவர்கள் தமது பள்ளிப்படிப்பு முற்றியபின், குல நெறிப்படி பொருள் ஈட்டும் துறையில் புகுந்து, தோற்றநஞ்சால் தொகுபொருள் ஈட்டி, மிக்க ஏற்றம் படைத்தார்கள். இளமைப் பருவத்தில் செய்பொருட் சிறப்பெண்ணி, எமது ஈழத்திருநாட்டைச் சேர்ந்த வாணிப வளர்ச்சியில் ஈடுபட்டிருந்தார்கள் என அறிந்து இன்பம் அடைகின்றோம்.

பண்டிதமணி அவர்கள் ஈழத்தில் இருந்து பொருள் ஈட்டிய காலத்தில், அவரின் தந்தையார் இறைவனடி எய்திவிட்டார். தந்தையாரின் பிரிவு காரணமாகத் தாய்நாடு சென்ற பண்டிதமணி அவர்கள் செல்வப் பொருள் ஈட்டும் துறையில் நின்றும் நீங்கிக் கல்விப் பொருள் ஈட்டும் நெறியில் கருத்தூன்றினார். ஒருசில ஆண்டுகள் தம் ஊரில் உள்ள திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து தமிழ் பயின்றார். காலப்போக்கில் தாமாகவே தமிழ் நூல்களைத் தனிப்பட்ட முறையில் ஆராய்ந்து கற்றார். இயல்பாகவே மதிநுட்பம் வாய்ந்த செட்டியார் அவர்கள் நூலறிவையும் பெற்று அதிநுட்பம் வாய்ந்தவராய் விளங்கினார். எப்பொழுதும் தமதில்லத்தில் பல புலவர்களைக் கூட்டிக் கலந்துரையாடியும், கலை நூல்களை ஆராய்ந்தும், புதிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை வனைந்தும் மகிழ்தலையே அரிய செயலாக மேற்கொண்டார்.

இங்ஙனம் கற்றலின் கண்ணே மிக்க வேட்கை உடையவராய் விளங்கிய செட்டியார் அவர்கள், தொல்காப்பியக் கடலை நிலை கண்டுணர்ந்தவராய்ச் சிறந்த சோழனந்தாதூர் அரசஞ் சண்முகனாரின் அன்புக்குரியவராய், அவருடன் அளவளாவி நெஞ்சு கலந்த அன்பு

நெறியால், அரிய பல இலக்கண நுட்பங்களையும், சங்கநூல் மரபையும் திருக்குறள், பெரியபுராணம், சிலப்பதிகாரம், திருவாசகம் எனும் அரும்பனுவல்களின் பொருள்மரபையும் கவி நலத்தையும் ஆய்ந்து தெளிந்தார். பெரும்புலவராகிய அரசஞ் சண்முகனாருடன் கலந்து செட்டியார் அறிந்து கொண்ட ஆய்வு நுட்பங்கள் அருந்தமிழ் அன்னைக்கோர் பெரிய விருந்தாக விளைந்து விட்டது.

தமிழ் உணர்ந்து உள்ளந்தழைத்த செட்டியார் அவர்கள், சைவசித்தாந்த நூல்களையும் தாமாகவே ஆய்ந்து கற்றுச் சிறந்தார். சைவ ஆகமங்களின் பொருள் நுட்பங்களை ஆய்ந்து கண்டவர்க்குத் தான் சைவசித்தாந்த உண்மைகள் தெளிவாகும் என்பதை அறிந்த செட்டியார் அவர்கள், வட மொழியையும் கற்றுப் புலமை நிறந்தார். இவ்வண்ணம் வடமொழிப் புலமையும், தமிழ் மொழி புலமையும் பெற்ற செட்டியார் அவர்கள், தமது இருமொழிப் புலமை ஆற்றலையும் பயன்படுத்திப் பல அரிய பெரிய ஆராய்ச்சி நுட்பங்கள் பொதிந்த ஆராய்ச்சி விரிவுரைகளை ஆங்காங்கு நிகழ்த்தினார்கள். தாம் வடமொழியிற் கற்றுணர்ந்த புதிய கருத்துக்களையெல்லாம் வாரி வாரித் தமிழ் மொழியில் மொழி பெயர்த்து வழங்குதலையே பெருந்தொண்டாகக் கொண்டார்கள். 'மிருச்ச கடிகம்' என்னும் வடமொழி நாடக நூலினை உரையிட்ட பாட்டுடைச் செய்யுளாக மொழிபெயர்த்து "மண்ணியல் சிறு தேர்" எனப் பெரிய நூலாக வெளியிட்டுள்ளார்கள். மண்ணியல் சிறுதேர் தமிழகத்தில் விளங்கும், கண்ணியம் மிக்க புலவர் பெருமக்கள் வழங்கிய அணிந்துரைகளுடன் பொலிந்து தமிழ் மொழியை அணி செய்கின்றது. இத்துடன் 'சுக்கிரந்தி' என்னும் வெள்ளி நெறி யினையும், சுலோச்சனை, உதயணசரிதம், உரைநடை நூல் களையும், சுந்தர வினாயகர் பதிகம், வீரவினாயகர் மாலை, பதிற்றுப்பத்தந்தாதி எனும் செய்யும் நூல்களையும் அவர் புனைந்துள்ளார்.

இங்ஙனம் செந்தமிழகமெங்கும் தெந்தழல் ஞாயிறுபோல ஒளி வீசி உலாவிய செட்டியார் அவர்களின் புலமை நலத்தைப் பாராட்டி, பண்டிதமணி முதுபெரும்புலவர் எனும் பட்டங்களை வழங்கித் தமிழகத்தார் தம்மைப் பெருமைப்படுத்திக் கொண்டார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பண்டிதமணி அவர்களைத் தமிழ் பேராசிரியராகத் தேர்ந்தெடுத்துப் பெரும் புகழை ஈட்டிக்

கொண்டார்கள். பல்கலைக்கழகத்தில் ஒன்பது ஆண்டுகள் வீற்றிருந்து தமிழ்ப்புலமை நடாத்திய பண்டிதமணி அவர்களால் பல மாணவர்கள் பயன்பெற்றார்கள். தமிழ்ச் சுவையையும், இலக்கிய இன்பத்தையும் இனிக்க இனிக்க நுகர்ந்தார்கள்.

பண்டிதமணி அவர்களின் பேச்சு தனிச்சிறப்புடையது. சொல்லின்பம், பொருளின்பம் ஆராய்ச்சி அமைவு, அருட்பனுவல் தோய்வு, அழுந்தி அழுந்தி நுகர்ந்து அமிழ்தப் பொழிவாக அள்ளி வழங்கும் தன்னளிச் செவ்வி, அணிநலம், தமிழ்மரபு ஓம்பும் சால்பு, சைவமரபு தழுவும் சாத்திர நுட்பம் என்றிவைகள் எல்லாம் ஆற்றொழுக்காக நின்று அலைமோதி நிழலாடும்.

கரந்தை தமிழ்ச்சங்கம் பதினாலாம் ஆண்டு நிறைவு விழாவில் தலைமைதாங்கிய (24.10.1925) பண்டிதமணி பேசிய பேச்சின் ஒரு பகுதியைப் படித்துப் பாருங்கள்.

“இச்செந்தமிழ் மொழியாம் நறுநீர்த் தடாகத்தில் பற்பல கிளை நூல்களாம் கொடி, இலை, அரும்பு, மலர் முதலியன கிளைத்தெழுதற்கு முதலாகவுள்ளதும், மொழியின் தன்மையை வரம்பிட்டு உரைக்கும் இயல் முதநூலுமாகிய தொல்காப்பியம் என்னும் மூலமும், அதன்கண்தோன்றி எழில்பெற விளங்குவதும் இன்னும் காலக்கூறு எத்துணை கழியினும், உலகநிலையும், மக்கள் ஒழுகலாறும், இன்ன இன்னபடியாக இருத்தல் வேண்டும் என்று புதிய, புதிய எண்ணங்களை மேற்கொண்டு ஆராய்வார்க்கெல்லாம் சிந்தாமணி போல் நீதிப் பொருளை வழங்குவதும், நுண் பொருளாம் மறுமணம் மிக்கதுமாகிய பீடுசால் திருக்குறள் என்னும் தாமரை மலரும், அம்மலர்கள் ததும்பி வழிவதும் விலை வரம்பில்லா மாணிக்கம் போன்ற, சொல் மணிகளாலும் உள்நோக்கி, உளம் நெகிழ்ந்து, ஆராய்வார்க்கு “எனை நான் என்பதறியேன்’’ என்றபடி, அவர் தன் நிலையும் மறக்கச் செய்யும் பொருள் ஒளிகளாலும், கல்லையும் கரைக்கும் இசை நலத்தாலும் சிறந்து திகழ்வதும், படித்தல் கேட்டல் முகமாகத் தன்னை உண்பாரைத் தானுண்டு, அன்புருவாக்கிப் பேரின்பப் பெருவாழ்வுறுத்துவது ஆகிய திருவாசகமென்னும் தேனும் கைவரப்பெற்ற தமிழ்ச் செல்வாக்கு யாதுங் குறை இன்றெனிலும் காலவேறுபாட்டால் உள்ளநிலை வேறுபட்டு அதனால் விளையும் குறைகட்கு அவர் இடனாதல் வருந்தத் தக்கதே.” இவ்வுரைப்பகுதியில் அமைந்துள்ள பொருள் நலமும், சொல்நலமும் என்னென்றும் இயல்பு கொண்டனவாகும்.

பண்டிதமணி அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவுவிழா (12.10.41) செட்டியாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் தலைமையில் நிகழ்ந்தது. இவ்விழாவின் நினைவுக்குரியாக வெளியிடப்பட்ட 'மணிமலர்' என்னும் கட்டுரைத் தொகுப்பு மலர் சிறந்த தமிழாராய்ச்சிக் களஞ்சியமாக நின்று விளங்குகின்றது.

இவ்வாறெல்லாம், எண்டிசை புகழ் விரித்து இலங்கிய பண்டிதமணி அவர்கள் இயற்றியருளிய, கதிர்மணி விளக்கம் எனப் பெயர் கொண்ட திருவாசகப் பேருரை பண்டிதமணி அவர்களின் சைவ சித்தாந்தப் புலமைத் திறத்திற்கும், அருட்பனுவல் ஆய்வுப்புலமைத் திறத்திற்கும், செவ்விக்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. மணிவாசகப்பெருமானின்அன்பு கலந்து ஊற்றெடுத்துப் பெருகிப் பாயும் ஆனந்த வெள்ளமாகிய திருவாசகத்துள் மூழ்கி, ஆவி உருகி, அழுது, கலந்து, அழுந்தித் தாம் நகர்ந்த அருட்சுவையை, ஒல்லும் வகையால் தமிழ் இன்பம் சுரந்து அளிக்கும் கதிர்மணி விளக்கமாகப் புதிய முறையில் புனைந்து, சைவத்தமிழ் உலகத்தை வாழ்வித்த, முதுபெரும் புலவர் கதிரேசச்செட்டியார் அவர்களின் அருள் வீறு கனிந்த தமிழ் உள்ளத்தைக் கண்டு ஆர்வமடை போடுவோமாக.

❍❍❍

# 14. தன்னார் தமிழ் மொழிக்கும் சைவத் திருநெறிக்கும் கண்ணான தோன்றல்

***- அருட்திரு ஆறுமுகநாவலர் பெருமான் (1822 - 1879) -***

தன்னார் தமிழ் மொழிக்கும், சைவத் திருநெறிக்கும் கண்ணாக விளங்கும் வீறுபுகழ் சேர் ஆறுமுகநாவலர் பெருமான், ஈழத் தமிழகத்தின் அருந்தவத்தோன்றல். வாழையடி வாழையாகச் சைவசித்தாந்தப் பெருநெறியும், தமிழ் மரபும் நின்று நிலவிப் பயன் நிறையும் வண்ணம் வாழ்ந்து வழிகாட்டிய வள்ளல்.

இவர் நல்லிசைப் புலவரும் மன்னரும் வாழ்ந்து எல்லையில்லா இசை பரப்பிய நல்லூரில் தோன்றியவர். தந்தையார் பாண்டிமழவர் பரம்பரையின் வழிவந்த கார்காத்த வேளாளர்குல முதல்வர் கந்தப் பிள்ளை. தாயார் திருந்து குணச் செல்வி சிவகாமி அம்மையார். நாவலர் அவர்கள் இளமைப் பருவத்தில் பள்ளிப் படிப்பிலே மிக வல்லவராய் விளங்கினார். பள்ளிப்படிப்பு நிறைந்தபின் இருபாலைச் சேனாதிராய முதலியாரிடம் இலக்கண இலக்கிய நூல்களைக் கற்றுத் தெளிந்தார். பின்னர் நல்லூரில் வாழ்ந்த கல்வியாளர் சரவணமுத்துப் புலவரிடமும் தொடர்ந்து கற்றுத் தமது தமிழ் அறிவைப் பெருக்கிக்கொண்டார். நாவலர் அவர்களின் தமிழ்ப் புலமைத் திறனைக் கண்டு கற்றோர் புகழ்ந்தனர். தமிழ்ப் புலமையில் தனிச் சிறப்பான ஆற்றல் அடைந்த நாவலர் அவர்கள் பார்சிவல் பாதிரியாரின் பாடசாலையில் சேர்ந்து ஆங்கிலங் கற்றார். இருமொழிப் புலமையாளராய் விளங்கிய நாவலர் அவர்களின் புலமையைக் கண்ட பாதிரியார் தமது கல்லூரியில் ஆசிரியராக வீற்றிருந்து, இரு மொழிப் புலமை நடாத்தும் வாய்ப்பை வழங்கினார். சொல்லாற்றலும், சிந்தனைத் திறனும் இயல்பாகவே அமையப் பெற்ற வல்லமையாளராகிய நாவலர் பெருமானின் கல்வி வளத்தைக் கண்ட பார்சிவல் பாதிரியார் வியப்படைந்தார். ஆங்கிலத்தில் உள்ள பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்து அளிக்கும் வண்ணம் பாதிரியார் நாவலரை ஊக்கினார். நாவலர் மொழிபெயர்த்தார். அக்காலத்தில் சென்னை மாகாணத்திலும் பைபிளைத் தமிழில் மொழிபெயர்க்கும் செயலில் தமிழ்ப் புலவர்கள் ஈடுபட்டார்கள். சென்னையில் கூடிய கற்றோர் அவையில் நாவலர் மொழிபெயர்ப்பே நல்லது எனக் கொள்ளப்பட்டது. கல்வியில் நாவலர்

பெற்றுள்ள எல்லையில்லா வல்லமைப்பாட்டைத் தமிழகத்தில் உள்ள தமிழ் வல்லோரும் அறிந்தனர்.

நாவலரின் உரைநடைத் திறனும், மொழிபெயர்ப்புச் செம்மையும் சென்னையில் உள்ளாரைச் சிந்திக்கச் செய்தன. இந்நிலையில் பாதிரிமார் ஆறாயிரம் கட்டைகளுக்கப்பால் இருந்து வந்த தங்கள் கிறீஸ்துவத்தைப் பரப்புவதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்து ஆற்றுகின்ற ஆக்கச் செயல்கள் நாவலரின் உள்ளத்தைத் தொட்டன. சைவ மக்கள் பொன்னையும், பொருளையும், போகத்தையும் பெரிதாகப் போற்றி மதம் மாறுகின்ற இழிதறிவைக் கண்ட நாவலர் எழுச்சிகொண்டார். சைவமக்களின் உள்ளத்தில் சைவப்பற்றை உண்டாக்கிச் சைவசமய உண்மை களை நிலைநாட்ட வேண்டும் என்ற நினைப்பினால் செயலில் ஈடுபட்டார். இவரின் உணர்ச்சி வாய்ந்த பேச்சு, வண்ணார்பண்ணைச் சிவன்கோவில் வசந்த மண்டபத்திலேதான் முதன் முதலாக ஒலிக்கத் தொடங்கியது. சைவசமயத்தின் மேம்பாட்டைச் சாத்திர நூல்களின் சான்று காட்டிச் சைவமக்கள் உணர்ச்சி கொண்டெழும் வண்ணம் பேசினார். பேச்சில் அமைந்துள்ள பொருள் நலமும், சைவப் பற்றும், உணர்ச்சித் திறமும், சொல் வன்மையும் யாழ்ப்பாணத்துச் சைவமக்கள் உள்ளத்தில் புத்துணர்ச்சியையும், தன்மானத் துடிப்பையும் ஊற்றெழச் செய்தன. நாவலரின் புகழ் பரவியது. ஈழத் தமிழகத்தின் பல பகுதிகளிலும் நாவலரின் சைவசித்தாந்தம் பேச்சொலி கேட்டது. சைவமக்கள் தங்கள் சமயத்தின் மாண்பை உணர்ந்தார்கள். மதம்மாறி வாழும் போலி வாழ்வை வெறுத்தார்கள். சைவ ஒளி எங்கும் பரவித் தழைத்தது. பாதிரிமாரின் உள்ளம் கொதித்தது. நாவலரையும் சைவசமயத் தையும் இகழ்ந்து பல கண்டன இதழ்களை அச்சேற்றிப் பரப்பி ஆரவாரஞ் செய்தார்கள். பாதிரிமாரின் கண்டன உரைகளைக் கண்ட நாவலர் தாமும் கண்டன உரைகளை 'கண்டன நாவலன்' அச்சேற்றிப் பரப்பி அவர்களின் முயற்சியை முறியடித்தார். சைவசமய உண்மைகளைத் தெளிவான உரைநடையில் எழுதிச் சிறிய சிறிய நூல்களாக வெளியிட்டார். நாவலர் மேற்கொண்ட இச்செயல்கள், தமிழுக்கு நல்லதோர் உரைநடை தோன்றுதற்கு வழிவகுத்தன.

ஈழத் தமிழகத்தில் சைவ சமயம் என்றுந் தழைத்து இயங்கும் வண்ணம் செயலாற்றி வெற்றிகொண்ட நாவலரின் புகழ்

தென்னாட்டுச் சைவத் தமிழகம் எங்கும் சென்றது. சென்னை மாநகரிலும், திருவாவடுதுறை ஆதீனத்திலும் நாவலர் பெருமான் செய்தருளிய சொற்பொழிவுகள், கற்றவர் உள்ளத்தைக் கவர்ந்தன. தமிழ் வீறும், சைவ வீறும், தன்மானத் துடிப்பும் கொண்ட சொற்பொழிவுகள் தமிழ் மொழிக்கும், சைவ நெறிக்கும் புதுவாழ்வை அளித்தன. நாவலர் பெருமானின் பேச்சாற்றலையும், புலமைத் திறத்தையும் கேட்டும், கண்டும் பேருவகை கொண்ட திருவாவடு துறை ஆதீனத்தார் கற்றோர் குழுமிய பேரவையின்கண் 'நாவலர்' என்னும் பட்டத்தை நல்கிப் பெருமைப்படுத்தினார்கள்.

நாவலர் அவர்களைத் தமிழ் உரைநடையின் தந்தையெனவே சாற்றலாம். அவர் சிவஞான முனிவரைப் போல் வீறுபடைத்த பெருமித உரைநடை எழுதவும் வல்லவர். இதனைப் 'பெரிய புராண குசனம்' என்னும் நூலால் அறியலாம். தூய பழகு தமிழ்ச் சொற்களால் எளிய இனிய உரைநடை எழுதுவதில் வல்லவர் என்பதை அவர் எழுதிய 'திருவிளையாடற்புராண வசனம்', பெரியபுராண வசனம் என்னும் சிறந்த நூல்களால் உணரலாம். பரிதிமாற் கலைஞன் என்னும் சூரியநாராயண சாத்திரியார் அவர்கள் நாவலர் பெரு மானை "வசனநடை கைவந்த வல்லாளர்'' எனப் பாராட்டியுள்ளார். இத்துடன் குறியீட்டு இலக்கணத்தைத் தமிழ்மொழியில் முதன் முதலாக அமைத்துப் புதிய நெறி காட்டி வைத்த நினைவாளரும் நாவலரேயாவர்.

*குறியீட்டிலக்கணத்தைக் கொண்டு வந்து செந்தமிழ்க்கோர்*
*நெறியீட்டி வைத்த நினைவாளன் நாவலனே*

என நாம் அவரைப் பாராட்ட வேண்டும்.

இங்ஙனம் தமிழ் மொழியையும், சைவப்பெருநெறியையும் வளர்த்து வாழ்வளித்த நாவலர் பெருமான் அவர்கள் ஆற்றிய தொண்டுகள் அளப்பில.

சைவப் பிள்ளைகள் கல்வி கற்றுச் சைவவாழ்வு வாழவேண்டும் என்னும் தன்னளியால் வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியா சாலையை நிறுவினார். அச்சகத்தைத் தமது பொறுப்பில் நிறுவி, அரிய பெரிய தமிழ் நூல்களை அச்சேற்றிப் பரப்பினார். நாவலர் அவர்கள் பதித்த நூல்கள் தான் பாட பேதங்களும், பிழை திருத்தமும். பல பக்கங்களைக் கொண்டிராமல் தூயனவாய்ப் பிழை யின்றி விளங்குவன என்பதை எல்லோரும் ஒப்புக் கொண்டுரைப்

பார்கள். திருக்குறள், பரிமேலழகர் உரை, தொல்காப்பியச் சொல், சேகுவரையருரை, திருக்கோவையாருரை, நன்னூல் விருத்தி, கந்தபுராணம், சேதுபுராணம், பாரதம், தொல்காப்பியச் சூத்திர விருத்தி, சைவசமய நெறியுரை, தருக்க சங்கிரகம் என்பன நாவலர் அவர்களால் ஆராய்ந்து பதிக்கப்பட்ட நூல்களாகும்.

இங்ஙனம் எழுத்திலும், பேச்சிலும், தொண்டிலும், ஒழுக்கத்திலும் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராய் இலங்கித், தன்னார் தமிழ் மொழிக்கும், சைவத்திரு நெறிக்கும் கண்ணாக என்றும் விளங்குகின்ற நாவலர் பெருமானைப் போற்றி நாமும் தொண்டாற்று வோமாக.

❍❍❍

# 15. தமிழ் இலக்கிய வரலாற்றைப் படைத்துத் தந்த தகையாளர் தமிழ் பேராசிரியர்

**– தாகூர் சட்ட விரிவுரையாளர் திரு கா. சுப்பிரமணியன் எம்.ஏ,எம்.எல்**
**(1889 – 1945) –**

முழுமுதல் தன்மை வாய்ந்த தமிழ் இலக்கிய வரலாற்றைப் படைத்துத் தமிழ் மொழியை அணிசெய்த அரும்பெருஞ் செயலால் வீரராகிய பெரும் பேராசிரியர் திரு.கா.சுப்பிரமணியபிள்ளை அவர்கள். இவர் தென்பாண்டி நாட்டில் செந்தமிழ் சிவப்பண்ணையாகத் திகழ்ந்து திசை எல்லாம் இசை போர்க்கும் திருநெல்வேலியில் தோன்றியவர். தந்தையார், கண்ணுதற் பெருமானின் கருணை நலத்தைக் கன்னித் தமிழ் சுவை நலத்தினால் கண்டு நுகரும் திருவார்ந்த காந்தி மதிநாதபிள்ளை. தாயார், தேனாட்சி செய்யும் மொழி மீனாட்சியம்மையார். பிள்ளை அவர்கள் பள்ளிப்படிப்பை நிறைவுசெய்த பின், எல்லையில்லாத நினைவாற்றல் கொண்டவராய் இலங்கினார். எல்லா வகுப்புகளிலும் முதலிடம் பெற்ற பிள்ளை அவர்கள் கட்டுப்பணம் இன்றிக்கற்கும் வல்லமை மிக்க மாணவராய் விளங்கி, மதிப்பும் வரவேற்பும் பெற்றார். படிப்படியாகக் கல்வியில் உயர்ந்த பிள்ளையவர்கள் சென்னைக்குச் சென்று கற்று (1910) பி.ஏ. வகுப்பில் முதன்மையாக வெற்றி பெற்றார். அடுத்த மூன்று ஆண்டுகட்குள் (1913) எம்.ஏ பட்டமும் பெற்று எங்கும் இசை பரப்பினார். ஏம்.ஏ.பட்டம் பெற்றதுடன் அமையாது, சட்டநூற் பட்டமும் பெற முயன்றபிள்ளை அவர்கள் (1917) தமது நுட்பமதித்திறத்தி னால் எம்.எல் என்னும் சட்டநூற் பட்டத்தையும் பெற்றுத் தனிச் சிறப்படைந்தார்.

இங்ஙனம் சட்ட நூற்புலமை பெற்றபிள்ளை அவர்கள் (1920) தாகூர் சட்ட விரிவுரைப் பரிசிலையும் பெற்றுத் தன்னேரில்லாத தனிப்பெரும் திறமையாளராய்ச் சிறந்து விளங்கினார். சட்டக் கல்லூரியில் பேராசிரியராய் வீற்றிருந்த பிள்ளை அவர்கள், அதனை விடுத்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக வீற்றிருந்து (1929) தமிழ்ப் புலமை நடாத்தினார்கள். பிள்ளை அவர்களின் புலமை ஆற்றல் தமிழகத்தில் ஒளி வீசியது. சட்டநூற் புலமையுடன் தமிழ்ப் புலமையும் நிரம்பிய பிள்ளை அவர்களின் ஆராய்ச்சி முடிவுகள் மிகத் திட்ப நுட்பமும், தெளிவும்,

வரையறவும், வரலாற்றுத் தொடர்பும், வாய்மையும் கொண்டனவாய் விளங்கின. ஆராய்ச்சி விரிவுரைகளை ஆற்றியும், ஆராய்ச்சி நூல்களை எழுதியும், மகாநாடுகளில் பங்குபற்றியும், வண்டமிழ் வளங்குறித்துப் பிள்ளை அவர்கள் ஆற்றிய தொண்டுகள் அளப்பில. தமிழ்மொழி ஆராய்ச்சியிலும், தமிழர் நாகரிக ஆராய்ச்சியிலும், சைவசித்தாந்த ஆராய்ச்சியிலும் பிள்ளை அவர்கள் ஈடுபட்டு உழைத்ததினால், தமிழ் மொழியும், தமிழ் மக்களும் எய்திய பயன்கள் இயம்பற் கரியன.

தமிழர் நாகரிகத்தை மறைத்து மாசுபடுத்தும் நோக்கத்துடன், நடுநிலை இன்றி நலிந்தும் வலிந்தும் பிற ஆராய்ச்சியாளர்கள் எழுதிய கொள்கைகளையெல்லாம் அகற்றித் தூய நடுநிலை உள்ளத்துடன் பிள்ளை அவர்கள் ஆராய்ந்தெழுதிய தமிழ் இலக்கிய வரலாறு தமிழ் மரபுக்கோர் ஆணை வரம்பாக நின்று ஆக்கம் அளிக்கின்றது. பிள்ளை அவர்களின் பேச்சு, ஆராய்ச்சி நெறியுடன் இணைந்து அவையோரை ஆழ்ந்து சிந்திக்கும் வண்ணம் தூண்டி ஆற்றுப்படுத்தும் ஆற்றல் பொருந்தியதாகும்.

துறையூரில் நிகழ்ந்த (12.1.1933) தமிழர் மகாநாட்டைத் திறந்து வைத்துத் திறப்புரை நிகழ்த்திய பிள்ளையவர்கள் பேச்சின் ஒரு பகுதியை நோக்குங்கள்.

“தமிழ்மொழி, கிரீக், லத்தீன்''ஆரியம், அரபிக், ஆங்கிலம், ஜேர்மன் முதலிய எந்த மொழிக்கும் பின்விடாத பெருமை உடைத் தாய் இருத்தலோடு பண்டும், இன்றும் என்றும் மூவாச்சாவாமொழி என்பதை, இந்நாட்டிலும், மேல்நாட்டிலும் தமிழ் கற்றறிந்த பலரும் உடன்பட்ட உண்மையாகும். வடமேற்கு இந்தியாவில், ஆரிய மொழிகள் புகுந்தகாலை திகழ்ந்த நாட்டு மொழி, தமிழினத்தன வாதலின், திராவிடத் தொடர்புகள் வேதத்திலும், பிற்கால வடமொழி நூல்களிலும், வடநாட்டு மொழிகளிலும் காவக்கிடப்பன எனக் கேம்பிரிட்ஜில் வடமொழிப் பேராசிரியராய் விளங்கிய ஆசிரியர் ராப்லன் கூறியது உற்று நோக்கத்தக்கது. இப்போதுள்ள திராவிட மொழிகளில் எல்லாம் தனித்தியங்கும் பேராற்றல் வாய்ந்தது தமிழேயென டாக்டர் காட்டுவெல் கூறியதுங்காண்க. ஆதியில் பனிமலை தொட்டுக் குமரிமுனைவரை, இந்திய நாடெங்கும் தமிழர் பரவி இருந்தமையால், இந்திய நாகரிகம், தமிழர் நாகரிகத்தை அடிப்படையாக உடையதென்பதும், அதைத் தமிழ்மொழியாவது,

கண்ணாடி போற் காட்டவல்லதென்பதும் டாக்டர் கில்பர்ட்சிலேட்டர், என்பவரால் அழகுற இயம்பப்பட்ட உண்மைகளாம்."

இப்பேச்சுப் பகுதியில் பொதிந்துள்ள ஆராய்ச்சி மூலங்கள் பிள்ளை அவர்களின் தமிழ் மொழிப்பற்றையும் ஆழ்ந்தகன்ற ஆராய்ச்சித் திறத்தையும் புலனாக்குகின்றன. இவ்வகை பிள்ளை அவர்களிடத்தில் அமைந்துள்ள பல்கலைத் திறத்தையும் கண்டு வந்த சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் 'பல்கலைப்புலவர்' என்னும் சிறப்புப்பட்டத்தை (25.12.40) நல்கி மகிழ்ந்தது. ஐம்பது நூல்களைத் தமது அன்புக் காணிக்கையாகப் பிள்ளை அவர்கள் தமிழ் அன்னைக்கு அளித்துள்ளார்கள். அவற்றுள் "இறையனார் அகப்பொருள் ஆராய்ச்சி'' "மெய்கண்டாரும் சிவஞான போதமும்'' என்னும் நூல்கள் என்றும் வாழும் இயல்பு படைத்தனவாகும். மெய்கண்ட நூல்களின் "உரைநடை கைகண்ட மெய்ஞானச் செல்வம்'' திருஞான சம்பந்தர் தேவாரம் இயற்கைப் பேரழகை, இயற்கையோடு இணைந்த இறை உண்மையை எடுத்துக் காட்டும் இனிய அமுதம். "மொழிநூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும்'' வழிவழியாகத் தமிழ் மக்கள் போற்றக்கூடிய வாய்மை நிறைந்தது. "திருநாள் மறைவிளக்கம்'' அரியதோர் ஆராய்ச்சிப் களஞ்சியம். "சேக்கிழாரின் தெய்வப்புலமை" மாட்சியைத் தெளிவுபடுத்தும் திறனாய்வுச் செல்வம். "தமிழ் இலக்கிய வரலாறு'' தானே தனக்கு நிகரான தனிப்பெரும்நூல். "திருவாசக உரை'' தெளிவும், செறிவும் அருள் அமையும், சுருக்கச் சொல்லும் அழகும் நிரம்பிய அருள் அமுதம். இங்ஙனமெல்லாம் ஒல்லும் வகையால் ஓயாது உழைத்துச் சைவத் தமிழ்ப்பணி ஆற்றிய பிள்ளை அவர்களைப் போற்றிப் புகழ்ந்து, தமிழ் வாழப் புதியன நூல்கள் புனைவோமாக.

❍❍❍

# 16. இலக்கிய இலக்கண ஆராய்ச்சித் துறைகளில் இணையற்றவராய் இலங்கிய மகாவித்துவான்

**- இராகவ ஐயங்கார் -**

மகா வித்துவான் இராகவ ஐயங்கார் அவர்கள் மதிவளம் படைத்த வல்லமையாளர். அரிதின் முயன்று முயன்று அருந் தமிழ் நூல்களை ஆராய்ந்து அரியபல உண்மைகளைத் தெரியப்படுத்திய சிந்தனை யாளர்.

இவர் இளமைப் பருவத்திலேயே ஈடும் இணையும் அற்ற பெரும்புலமையாளராய் இருந்தார். இவரின் புலமைத் திறனையும், ஆராய்ச்சி வன்மையையும் அறிந்த பாஸ்கர சேதுபதி அவர்கள், தமது அரசவையில் பெரும் புலவராய் வீற்றிருந்து தமிழாராயும் பெருவாழ்வை நல்கினார். பாஸ்கரசேதுபதி மன்னர் அவர்கள் கற்றவரைத் தமது கண்ணெனப் போற்றி புரந்தருளும் கொற்றவர். அவரவையின்கண் இயல் இசை நாடகம், எனும் முத்தமிழ்த் துறைகளிலும் வல்ல புலவர் பெருமக்கள் போந்து, தமது புலமை யைப் புலப்படுத்தி பொன்னும் பொருளும் பெற்றுப் புகழொடும் வரிசையொடும் செல்லுதல் வழக்கமாய் நிகழ்ந்துவந்தது. அவ்வமையங்களில் எல்லாம் அரசவைப் புலவராய் அங்கிருந்த ஐயங்கார் அவர்கள் அப்புலவர்களுடன் உள்ளங்கலந்து உறவாடியும், உயர்ந்த கருத்துக்களைப் பரிமாறியும், உவந்து, வெள்ளம்போல் தமது கல்வி வளத்தை மேம்படுத்திக் கொண்டார்.

கூடலில் ஆய்ந்த ஒண்தீந்தமிழைக் கூடலில் ஆராயவேண்டும் என்றோர் எண்ணம், பாஸ்கர சேதுபதி அவர்கள் உள்ளத்தில் உண்டானது. அவர்களின் உயர்ந்த அவ்வெண்ணம் மதுரைத் தமிழ்சங்கமாய் உருப்பெறுவதற்காக, ஊக்கி உழைத்த பெருமை ஐயங்கார் அவர்களுக்கே உரியதாகும்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பின் ஐயங்கார் அவர்களின் புகழ் தமிழகச் சான்றோர் உள்ளங்களில் இடம்பெற்றுத் தழைத்தது. தமிழ்ச்சங்க வெளியீடாகிய செந்தமிழ் என்னும் திங்கள் இதழின் ஆசிரியராக ஐயங்கார் அவர்கள் அமர்ந்தார்கள். (1902) ஐயங்கார் அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் செந்தமிழில் வெளிவந்தன. கற்றவர் உள்ளங்கனிந்தனர். திரு.வி.கனகசபைப்பிள்ளை, ஆசிரியர் அரசஞ்சண்முகனார், மறைமலையடிகள், து.அ.கோபிநாதராவ்,

மு.ராகவஐயங்கார், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், அ.குமாரசாமிப் பிள்ளை, சி.கணேசையர் முதலிய தமிழ்ப் பேரறிஞர்கள் அரிய ஆராய்ச்சிக் கட்டுகரைகளைச் செந்தமிழில் வெளியிட்டு வந்தனர். ஐயங்கார் அவர்களும் புதிய புதிய பொருள் பொதிந்து, நுட்பதிட்பம் வாய்ந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளை அவ்வப்போது எழுதி வந்தார். ஐயங்கார் அவர்களின் ஆழ்ந்தகன்ற கல்வியறிவும், ஆராய்ச்சி மூலங்களை அறிந்து, தொகுத்து நிரல்பட அமைத்து, நெறிப்படுத்தி எழுதும் பேராற்றலும், எப்பொருளையும் மிக மிக நுணுகி நுணுகி, நோக்கியுனரும் நுண்மான்நுழைபுலச் செவ்வியும், அக் கட்டுரைகளால் புலனாகின்றன. மதுரைத் தமிழச் சங்கமும், செந்தமிழ் என்னும் திங்கள் வெளியீடும், பல்லாற்றானுஞ் சிறந்து விளங்குவதற்கு, ஐயங்கார் அவர்களின் புலமைப் பேரொழியே காரணமாகும்.

ஐயங்கார் அவர்களின் தமிழ் ஆற்றல், செந்தமிழின் வாயிலாக எழுத்துகளில் வெளிப்பட்டு இலங்கியது. போலவே, அவரின் பேச்சாற்றலும் தமிழகப் பேரவைகளில் எல்லாம் இலங்கியது. சங்க இலக்கியங்களின் பொருள் மரபை எடுத்து விளக்குவதிலும், சிறப்புடை மரபில், பொருளும் இன்பமும் அறத்தின் வழிப்படுந் தோற்றம் உயர்ந்த இலக்கியப் படைப்பாகும் என்பதை புலப்படுத்து வதிலும், கவிநயத்தைப் பிழிந்து நல்குவதிலும், அக்காலத்தில் இவரே இவர்க்கு இணையாக விளங்கினார். ஐயங்கார் அவர்களின், ஆராய்ச்சி விரிவுரையென்றால், ஆயிரமாய் ஆயிரமாய்த் தமிழறி ஞர்கள் கூடி விடுவார்கள். இங்ஙனம் சேது சமஸ்தானத்தில் வீற்றிருந்து தமிழ்ப் புலமை நலங்கனிந்தருளிய ஐயங்கார் அவர்கள் சிலகாலம் திரிபுரத்தில் உள்ள தேசியகலாசாலையில் தமிழாசிரிய ராகவும் இருந்தார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார், ஐயங்கார் அவர்களின் அறிவுத்திறத்தை உணர்ந்து, தமிழ் ஆராய்ச்சித் துறை தலைவராக வீற்றிருக்கும் பெரு நிலையை அளித்தார்கள். அப்பொழுது ஐயங்கார் அவர்கள், அரிய தொண்டுகள் பல ஆற்றியுள்ளார். அவற்றுள் மிகவும் சிறந்ததொண்டு, குறுந்தொகை உரையாகும். பாடவேறுபாடுகளைக் களைந்து தூய்மைப்படுத்திச் சிறந்ததோர் உரையும் எழுதிக் குறுந்தொகையை அணிசெய்துள்ள அருமை பாராட்டற்பாலதாகும். ஐயங்கார் ஆராய்ந்தெழுதிய ‘தமிழ்வரலாறு’

என்னும் ஆராய்ச்சிநூல் அரியதோர் அறிவுக்களஞ்சியமாக நின்று தமிழ் மொழியை வாழ்விக்கின்றது. "சேது நாடும் தமிழும்", "வஞ்சி மாநகரம்" எனும் வரலாற்று ஆராய்ச்சி நூல்கள் ஐயங்கார் அவர் களின் அகன்ற ஆய்வுப்புலத் திறத்தை அறிவிக்கின்றன.

இத்துடன் பகவத்கீதை, சாகுந்தலம் என்னும் மொழி பெயர்ப்பு நூல்களும், பாரிகாதை, புவியெழுவது, திருவடிமாலை என்னும் செய்யுள் நூல்களும் யாத்துள்ளார்.

ஐயங்கார் அவர்களின் புலமைத்திறனும் அவரின் குணநலமும் மிக மேலானதெனப் போற்றப்படுகின்றது. தாம் ஆராய்ந்து கண்ட அரிய கருத்துக்களை எல்லாம், அப்படியே மாணவர்களுக்கு வழங்கி மகிழும் வாய்மையாளர் என்றும், தாய்மை உள்ளங் கொண்ட தன்னளியாளர் என்றும் சாற்றித் தமிழறிஞர்கள் பாராட்டும் சால்பு நிரம்பிய ஐயங்கார் அவர்களின் ஆராய்ச்சிப் புலமையால் தமிழ்மொழி அடைந்த ஆக்கங்கள் பல வாழ்க, ஐயங்கார் புகழ்.

❍❍❍

## 17. நடுக்காவேரி நாட்டுத் தமிழ்ப் பெரும்புலவர்

**– நாவலர் பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார் (1884 – 1944) –**

வெங்கடசாமி நாட்டார் அவர்கள் அளக்கலாகாத் தமிழ் புலமையும், அழுத்தந் திருத்தமான ஆராய்ச்சித் திறமையும் அமைந்த சிறந்த வியத்தகு மேலோராவர். விரிந்த உளப்பான்மையும், உயர்ந்த ஒழுக்கமும் உடையவர். இவரின் தந்தையார் இலக்கணப் புலமையில் இணையின்றி விளங்கிய முத்துச்சாமி நாட்டார். தந்தையாரைப் போலவே வெங்கடசாமி நாட்டாரும் இலக்கணப் பிழையின்றி இயல்பாகவே எழுதவும் பேசவும், தக்க வல்லமைப்பாட்டை இளமையிலேயே ஈட்டிவிட்டார்.

திண்ணைப்பள்ளிப் படிப்பு முற்றியபின், தமது சிறிய தந்தையாரிடமும் சிறந்த தமிழ் நூல்களைக் கற்றுத் தெளிந்தார். நாட்டாரின் தமிழார்வம் பெருகியது. நாளும் பொழுதும் தாமாகவே தமிழ் நூல்களை ஆராய்ந்து கற்றுக் கற்று அறிவைப் பெருக்கிக் கொண்டார்.

இவ்வண்ணம் தமிழறிவைப் பெருக்கிக்கொண்ட நாட்டார் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் நடாத்தப்படும் பிரவேச பண்டித, பாலபண்டித, பண்டித தேர்வுகளில் முதன்மையாளராகத் தேர்ச்சி யடைந்து பட்டமும் பரிசிலும் பெற்றார். நாட்டார் அவர்கள் மதுரைப் பண்டித தேர்வில் முதன்மையாளராகத்தேறிப் பரிசில்பெற்ற செய்தி செய்தித்தாள்களில் வெளிவந்தது. நாட்டாரின் புகழ் தமிழகம் எங்கும் பரவியது. பண்டித வேங்கடசாமி நாட்டார் என அறிஞர் களால் மிக ஆர்வத்துடன் அழைக்கும் சிறப்பை அடைந்தார். திருச்சிராப்பள்ளியில் உள்ள தமிழ்ச் சங்கத்திலும், பிறபல தமிழ்ப் பேரவைகளிலும் நாட்டார் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகள் அவர்க்குப் பெரும் புகழை ஈட்டிக்கொடுத்தன. சைவசித்தாந்த நூல்களிலும் திருமுறைகளிலும் புலமைபெற்ற நாட்டாரின் விரிவுரைகள் கேட்போர் உள்ளத்தைக் கவர்ந்து வழிகாட்டும் மாண்புடன் பொலிந்தன. சங்க இலக்கியங்கள் பற்றி நாட்டார் அவர்கள் விரிவுரை ஆற்றும்பொழுது, படிப்பிற் குறைந்த பொது மக்களும் கேட்டுப் பயன்பெறுவார்கள்.

நாட்டாரின் நல்லிசைப் புலமையையும் நல்லியல்புகளையும் நன்குணர்ந்த திருச்சிராப்பள்ளியில் உள்ள கீபர்கல்லூரியார், தம்

கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகக் கடமை ஆற்றும் வாய்ப்பை நல்கினர். (1910 - 1933) நாட்டார் அவர்கள் தொடர்ந்து இருபது ஆண்டுகள் கீபர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக வீற்றிருந்து தமிழ்ப்புலமை நடாத்தினார்கள். அக்காலத்தில் அவர் ஆற்றிய விரிவுரைகளும், எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும், செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில் எனும் இதழ்களிலும் தனி நூல்களாகவும் வெளிவந்துள்ளன.

நாட்டார் அவர்கள் கீபர் கல்லூரியில் இருந்து ஓய்வு பெற்ற சில நாட்களுக்குள்ளேயே அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக அமர்த்தப்பட்டார். நாட்டார் அவர்களின் ஆன்றமைந்து அடங்கிய தமிழ்ப் புலமைச்செல்வி வளம் படைத்துப் பயன் சுரக்கும் சூழ்நிலைக்களனாக நிலவும் பெருவாழ்வை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பெற்றது. அவர் மிக நுணுக்க மான நெறியில் நூற்பொருளை ஆராய்ந்து பாடஞ்சொல்லுதலில் மிகவும் வல்லவர். எடுத்துக்கொண்ட பொருளை வகைப்படுத்தி மாணவர் உள்ளத்தில் நன்கு பதியக்கூடிய முறையில் ஆராய்ச்சி மூலங்களை ஆங்காங்கமைத்துத் தொடுத்து மொழிவதில், ஈடும் எடுப்பும் இல்லாதவர். பொருந்தாத ஆராய்ச்சி முடிபுகளை மிகத் திறம்படி மறுத்து பொழிந்து நாகரிகமான முறையில் தம்கோல் நிறுவும் நல்லியல்பும், புலமை நலமும், நாட்டார் அவர்களுக்கே உரிய நற்பண்புகளாகும்.

நாட்டாரின் தெய்வக்கொள்கை மிக மிகச் செம்மை வாய்ந்தது. செந்தமிழ்ப் புலமையும், சித்தாந்தத் தெளிவும் நாட்டாரின் உள்ளொளியாக வீறி மாற்றாரும் மதித்து விளங்கத்தக்க பெருவாழ்வை வழங்கின. அவர் போலிப் புலவர்க்கெல்லாம் புலியேறுபோல பொலிந்தார். மரபுநிலை திரிந்த வழக்குகளைச் சான்றுகாட்டி மறுத்து ஆன்றோர் மரபை ஆக்க முறுத்துவதில் மிக ஆக்கமும் உழைப்புங் கொண்டார். அன்பும் ஒழுக்கமும் ஆராய்வும் கொண்ட தமது உளப்பண்புகளால் மாணவர் உள்ளத்தைக் கவர்ந்து நூற் பொருளைவாரி வளங்கும் உண்மையாளர்.

நாட்டார் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அமர்ந்து தமிழ்ப்புலமை நடாத்துகின்ற காலத்தில் பண்டிதமணி கதிரேசஞ்செட்டியார், நாவலர், சோமசுந்தர பாரதியார், இராகவ ஐயங்கார், சர்க்கரை ராமசாமிப்புலவர், சோழவந்தான் கந்தசாமியார்

எனும் தமிழ்ப் பேரறிஞர்களும் உடன் இருந்து, தமிழ்ப்புலமை நடாத்தினார்கள். இதனால் நாட்டாரின் தமிழாற்றல் அறிந்து மதிக்கும் அரும்பேற்றை அப்புலவர் பெருமக்களின் தொடர்பால் தமிழகத்துச் சான்றோர்களும் பெற்றுப் பயன்படைத்தார்கள்.

நாட்டார் பத்தொன்பது நூல்களை ஆக்கித் தமிழ்மொழியை வளப்படுத்தியுள்ளார்கள். அவற்றுள், திருவிளையாடற்புராணம் உரை, சிலப்பதிகார உரை, மணிமேகலை உரை, அகநானூறுஉரை எனும் நூல்கள் நாட்டார் அவர்களின் சித்தாந்தப் புலமையையும், சங்க நூல் ஆராய்ச்சிகளையும், தொல்காப்பியத் தெளிவையும் எழுத்திலக்கணத்திலும் சொல் இலக்கணத்திலும், அமுந்தி அமுந்தி ஆராய்ந்துணர்ந்த நுண்மான் நுழைபுலத்திறத்தையும் காட்டுகின்றன. நக்கீரர், பரணர் எனும் வரலாற்றாராய்ச்சியும், இலக்கிய ஆராய்ச்சியும் ஒருங்கே அமைந்த நூல்கள் நாட்டாரின் சிறந்த திறனாய்வுச் செம்மையைத் தெளிவுபடுத்துகின்றன. ‘கண்ணகி வரலாறும் கற்புமாண்பும்’ எனும் நூல், கருத்துவளஞ் செறிந்த பொற்புடைய இலக்கிய விருந்தாகப் பொலிகின்றது. கள்ளர் சரித்திரம், சோழர் சரித்திரம் எனும் நூல்கள் வரலாறு எழுதுவோர்க்கு வழிகாட்டியாக விளங்குகின்றன. “நறுந்தொகை உரை’’ எனும் நூல் இலக்கிய நயம் நல்கும் நல்விருந்தாக நிலவுகின்றது.

நாட்டார் அவர்கள் மகாநாடுகளில் தலைமைதாங்கி நிகழ்த்திய ஆராய்ச்சி விரிவுரைகளும் தமிழ்ப்பொழிலில், தொடர்ந்து வந்த பரணர் எனும் ஆராய்ச்சிக் கண்டனக் கட்டுரையும் அழியாத தமிழ் மரபுச்சான்றுகளை அள்ளி வளங்கும் வன்மை வாய்ந்தவைகளாக நின்று தமிழ்மொழியை அணிசெய்கின்றன.

இங்ஙனம் பல்லாற்றானும் தம்மால் ஒல்லும் வகையான் எல்லாம், தமிழுக்கே உழைத்துத் தமிழ் வாழ்வு வாழ்ந்த தமிழ்ப் பேரறிஞர் வேங்கடசாமி நாட்டார் அவர்களின் வழிநின்று, நாமும் தமிழ்த் தொண்டாற்றி வாழ்வோமாக.

❍❍❍

# 2
# மாணவர் விருந்து

# 1. தன்னம்பிக்கை

தன்னம்பிக்கை வாழ்க்கையின் அடிப்படை. தன்னம்பிக்கை இல்லாதவன் வாழ்வு மலர்ச்சிபெறாது. எடுத்தற்கெல்லாம் பிறரை எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் நிலைமை இரக்கமானது. சிந்தித்துச் செயலாற்றும் பழக்கம் ஒருவனிடத்தில் உண்டாயின். அவன் சிறந்த செயல் வீரனாக விளங்கு வான். அவன் உள்ளத்தில் தன்னம்பிக்கை என்னும் ஒளி விளங்கும். தானும் உலகில் புதிய ஆக்கங்களைப் புரிய வந்தவன் என்ற உணர்ச்சி உண்டாகும். கல்வியை ஆராய்வோம். படிக்கின்ற ஆற்றல் அவனிடத்தில் அமையும். கண்டதற்கெல்லாம் பிறரைக் கை கூப்பி வணங்கும் பேடித்தனம் அவனைவிட்டு நீங்கும். அஞ்சாமையும் விரைவும் அறிவுத் தெளிவும் எஞ்சாது எக்காலத்திலும் அவனை எழுச்சிகொள்ளச் செய்யும். வாள்கொண்டு வெட்டினாலும் மலர்ந்த முகத்துடன் தன்தோளைக் கொடுத்துத் தொண்டாற்றும் பெருங்குணம் அவனுக்கே உரிய அருங் குணமாக அமையும். இசைத் தட்டுப்போன்று பிறர் எழுதியவற்றையும் பேசியவற்றையும் அப்படியே பாடம் செய்து உரைக்கின்ற பிச்சை வாழ்க்கை அவனை விட்டு நீங்கும். தான் சிந்தித்து தான் தெளிந்து, தான் தேடி அறிந்த உண்மைகளை, வான் இடிந்து தலையில் வீழ்ந்தாலும் மார்பு தட்டிக் கூறுகின்றவல்லமை உடையவனாவான். "அந்த அறிஞர் சொன்னார், அதை ஒப்புக் கொள்ளுங்கள்," என்று நம்பிக்கை குரல் எழுப்பி நவிலுகின்ற வீரத்தைப் பெறுவான். அவன் கெஞ்சிப்பிறரை அண்டி வாழமாட்டான். நஞ்சைக் குடிக்கக் கொடுப்போம் என்று அவனை அச்சுறுத்தினாலும் தன் சிந்தனைக்கு மாறான செயலைச் செய்யமாட்டான். தன்னலத்தை விரும்பிப் பிறர் நலத்தைக் கெடுக்கும் செயல், தன்னம்பிக்கை உள்ளவனிடத்தில் ஒருபோதும் அணுகமாட்டாது. அவன் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்.

**தினகரன் 06.12.1953**

❍❍❍

## 2. சிந்தனை ஆற்றல்

சிந்தனை ஆற்றல் உயிரினும் சிறந்தது. சிந்தித்து தெளிந்து செயல் புரிந்த அறிஞர்களை அறிவுக்கு விருந்தளிக்கும் ஆராய்ச்சி உலகம் பாராட்டுகின்றது. சிந்திக்கும் பழக்கத்தை வளர்க்காது, பிறர் சொன்ன கொள்கைகளை அப்படியே ஏற்று அமைத்து வாழ்கின்ற பழக்கத்தை யுடையவராய் இருக்கும் மக்களினம் மறைந்துவிடும். சிந்தனை ஆராய்ச்சியின் தாய். அறிவின் தந்தை. புதிய உலகைப் படைக்கும் செயல் வீரர்களின் போர்க்கருவி. வாழ்க்கைக்குதவாத வெறும் மூடக் கொள்கை களை வேரறுத்து அறிவுலகைப் புதுக்கும் கூரியவாள். பல்கலைக்கழக மென்னும் கலைத் தடாகத்தில் நின்று செழித்து வளர்ந்த அறிவுத் தாமரை. ஆராய்ச்சியும் சிந்தனையும் அமையாத படிப்புப் பேடி கையிலிருக்கும் வாள் போல வீணாகும். ஆராய்வோடு கலந்த சிந்தனையால், ஒவ்வோர் கண்ணிமைப் பொழுதும், புதியபுதிய முடிவுகளைக் கண்டு மகிழும், அறிஞர் உலகம் மறுமலர்ச்சி வாழ்வை வழங்குகின்றது. இயற்கையிலுள்ள தடைகளை வென்று, இன்று நாம் வாழ்கின்ற உலகைப் புதுக்கி அமைத்த பெருமை, சிந்தனையாளர்க்கே உரியதாகும். சிந்தனையாளன் தன்னல மற்றவன்; தன் வாழ்வை மற்றவருக்காகப் பயன்படுத்த வேண்டுமென்ற பெருநோக்குடையவன். உயிரே போயினும், உண்மையிலிருந்து மாறாத உயர்ந்த பண்புடையவன். மலையே தலையில் வீழினும், தளராத தன்னம்பிக்கையுடையவன். தன்னம்பிக்கை தான் சிந்தனையை மலர்த்தி வளர்க்கின்ற அமுத சுரபி.

**தினகரன் 13.12.1953**

❍❍❍

# 3. இலக்கியம்

இன்று வாழ்கின்ற மக்களுக்கும் பல பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்களுக்கும், இனி வருமுலகில் வாழவிருக்கும் மக்களுக்கும், உயிருணர்ச்சிகளைப் பரிமாறுகின்ற கலை இலக்கியம். மக்களின் புறக் கோலங்களெல்லாம் காலந்தோறும் விரைந்து விரைந்து மாற்றமடை கின்றன. சென்ற நூற்றாண்டில் ஓர் மக்களினம் அணிந்த உடையும் அழகுபடுத்தும் கூந்தல் முடிப்பும், உண்ட உணவுப் பொருட்களும், சூடிய அணிகலங்களும், வாழ்ந்த வீட்டின் கட்டிட ஒழுங்குகளும் மிக மிக மாற்றமடைந்து விட்டன. ஆனால் அவர்கள் உள்ளத்தில் ஊறியெழுந்த காதல், வீரம், சோகம், அவலம் முதலான உணர்ச்சிகள் மாற்றத்தைக் கொண்டில.

கி.மு. ஏழாம் நூற்றாண்டில் தன் அருமையான குழந்தையை இறக்கக் கொடுத்த தாயின் உள்ளத்தில் ஊற்றெழுகின்ற சோக உணர்ச்சிகளைப் போலவே இன்றைய கி.பி. இருபதாம் நூற்றாண்டிலும் தன் குழந்தையை இழந்த தாயின் உள்ளத்தில் சோக உணர்ச்சியைக் காணகின்றோம். இந்த இரு நூற்றாண்டுகளுக்கும் இடைப்பட்ட நீண்டகாலச் செலவில் மக்கள் வாழ்க்கையோடு தொடர்பற்ற புறத்தோற்றங்கள் எல்லாம் நாங்கள் அறிந்து கூறமுடியாத அளவுக்கு மாற்றமடைந்துவிட்டன. இந்த மாற்றங் களெல்லாம் மக்களின் மன உணர்ச்சியைத் தீண்டாத மாற்றங்களாகும். மக்களின் மன உணர்ச்சிகள் காதல், வீரம், சோகம், அவலம் முதலியன என்றும் ஒரே தன்மையானவை. இலக்கியம் இந்த மன உணர்ச்சிகளைத் தான் படம்பிடித்துக் காட்டுகின்றது.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலே பாண்டிய நாட்டில் கண்ணகி எழுப்பிய வீரக்குரல் நீதிகெட்ட அரசனை எதிர்த்து நீதிகேட்ட குரல் இன்னும் எமது உள்ளத்தைத் தொடுகின்றது. எமக்கு ஆவேசத்தையும் ஆத்திரத்தையும் தருகின்றது. அநீதியைக் கண்டு ஆத்திரப்படுகின்ற உணர்ச்சி உலக முள்ளளவும் மாறாத உணர்ச்சி.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அநீதியைக் கண்டு தாங்கமுடியா தெழுந்த உணர்ச்சிக்கும் இந்த நூற்றாண்டில் அநீதியைக் கண்டு தாங்க முடியாது எழுந்த உணர்ச்சிக்கும் வேறுபாடில்லை. அந்த இரண்டாம் நூற்றாண்டில் கண்ணகி உள்ளத்தில் ஊறிய ஆவேச உணர்ச்சியை, இந்த இருபதாம் நூற்றாண்டில் வாழ்கின்ற எங்கள் உள்ளத்தில் ஊறி எழச் செய்கின்ற ஆற்றல் இலக்கியத்திற்கே உரியதாகும். இலக்கியப் புலவன்

உயிர் உணர்ச்சியைத் தன்னுயிர் உணர்ச்சி எனும் நிழற்பெட்டியால் படம்பிடித்து, அதன் வேகமும், குமுறலும், துடிப்பும். எள்ளளவும் குறையாமல் அப்படியே இனிவரும் உலக மக்கள் உள்ளத்தில் பதித்து உணரச் செய்கின்றான். இந்த இதய உணர்ச்சிப் படப்பிடிப்பாளனாகிய புலவன், மிக உயர்ந்த சிந்தனையும் ஆராய்வும் நிரம்பியவன். தன்னல மற்றவன், வாழ்ந்திறந்த மக்களுக்கும், வாழுகின்ற மக்களுக்கும், வாழப் போகின்ற மக்களுக்குமிடையில் உள்ளுணர்ச்சிப் பாலமிட்டு உலகை உய்யச் செய்கின்றவன், உலகப் புலவன்.

**தினகரன் 20.12.1953**

❍❍❍

# 4. குடிமக்கள் காப்பியம்

இளங்கோவடிகள் பெருங்காப்பியப் புலவர். தமிழ் மரபைப் பாதுகாத்துத் தன்னிகரில்லாத் தனிப்பெரும் இலக்கியமாகிய சிலப்பதிகாரத்தை இயற்றியவர். சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம். எங்களைப்போல் மண்ணுலகில் வாழ்ந்து இன்ப துன்பங்களால் தாக்கப்பட்ட கோவலன் கண்ணகி என்னும் இருவர் வரலாற்றையும் கூறுகின்ற நூல், கண்ணகி நாணமும் நற்குணமும் நிரம்பிய பெண். தன் கணவன் மாதவியின் வலையிலகப்பட்டு தன்னை மறந்த காலத்தும், மனம் பொங்கி அவனை வெறுத்துரையாத வாழ்க்கைச் சிறப்புடையவள். கணவனையே கடவுளாக எண்ணி வாழ்ந்த கற்புச் செல்வி, மாதவியை வெறுத்து, தன் மனைக்கு வந்த கணவனை ஆதரித்து அன்புமொழி கூறிய அருந்தவச்செல்வி. பொய்யன்பு காட்டிய மாதவியைப் பிரிந்து, என் பெரும் பொருள் தொகையையும், விளங்கிய புகழையும் போக்கினேன், என்று புகன்று வருந்திய தன் கணவனைப் புதுமலர் சிரிப்புடன் குழந்தை அன்பால் வரவேற்று இதோ என்கால் சிலம்மபுகள் இருக்கின்றன எடுங்கள் என்று இயம்பிய பெருங்குணப் பெருமாட்டி கள்வனெனத் தன் கணவனைக் கடுங்கோலனாகிய பாண்டியன், கொல்லுவித்தான் எனும் செய்தியைக் கேட்டதும், உள்ளம் கொதித்தாள். என் காற்சிலம்பை எடுத்துச்சென்ற என் கணவனைத் தன் காதலியின் காற்சிலம்பைக் களவாடிய கள்வனெனக் கொல்லுவித்த மன்னனைக் கண்டு நீதி கேட்பேன் எனக்கதறி எழுந்தாள். கையில் சிலம்பைக் காட்டி, "என் கணவன் கள்வனா சொல்" எனப் பாண்டியனைக் கேட்டாள். பாண்டியன் என தலைவியின் உள்ளிடுமணி முத்தென மொழிந்தான். கண்ணகி என் காற்சிலம்பினுள்ளிருக்கும் மணி மாணிக்கமென மொழிந்து மன்னன் முன்னிலையில் காற்சிலம்பை ஓங்கி அறைந்தாள். எறிந்த காற்சிலம்பு உடைந்து எங்கும் சிதறிய மாணிக்க மணிகளைக் கண்ட மன்னன் தட்டான் சொல்லைக் கேட்டு கெட்டேன் எனச் சாற்றி வீழ்ந்து உயிர் விட்டான்.

**தினகரன் 27.12.1953**

○○○

# 5. புறநானூறு

மக்களின் ஆக்கங் கருதி ஆட்சிபுரிந்த மன்னர்களின் பெரும் பண்பு களையும் அருஞ்செயல்களையும் மிகமிகத் தெளிவாக விளம்புகின்ற நூல் புறநானூறு, வாழ்வு முழுதும் மற்றவர்க்குப் பயன்பட வாழ்ந்த பெரும் வள்ளல்களின் வரலாறு, புறநானூற்றின் உயிர்ச்சாயலாக ஒளிர்கின்றது. நாட்டின் ஆக்கங்கருதிய உரிமை உணர்ச்சியுடன் போர்க்களத்தில் புகுந்து வாளாலும், வேலாலும், அம்பாலும், ஈட்டியாலும் தாக்குண்டு வீழ்ந்து தம் நாட்டைக் காப்பாற்றிய மான வீரர்களின் வரலாறு புறநானூற்றில் ஆராயப்படுகின்றது. மன்னர்களிடத்தில் இல்லாத குணங்களைப் புனைந்துபாடி பொருள் பெறுதலே பெருநோக்கமாகக் கொள்ளாது, தம்முயிர் போகவரினும் உண்மையைப் பாதுகாக்கும் உள்ளத்தருக்குடன், எதிர்நின்று மன்னரின் தவறுகளை எடுத்துக்காட்டி, உலகைப் புரக்கும் வாய்மை மிக்க வீரப் புலவர்களின் வரலாறு புறநானூற்றை அணிசெய் கின்றது. நரம்பு எழுந்து தசைகளை உதறிய நிரம்பாத உடம்பையுடைய பெருங்கிழவி, தன் மகன் மாற்றாருடன் ஆற்றிய போரில் மார்பு வெட்டுண்டு மாளாது முதுகுப்புறத்தில் வெட்டுண்டு மாண்டானென்று கேட்டு "என் வீரப்பாலைக் குடித்த மகன், மாற்றாரின் வாளுக்கு நெஞ்சைக் கொடாது ஒரு காலும் முதுகைக் கொடான். முதுகைக் கொடுத்து மாண்டிருப்பானாயின் நான் அவனுக்குப் பாலூட்டிய மார்பைத் தீட்டிய வாளால் வெட்டி வீழ்த்துவேன்" என்று வஞ்சினங்கூறி போர்க் களஞ்சென்று பிணங்களைப் புரட்டிப் பார்த்து, தன் மகனின் உடம்பு மார்பில் பாய்ந்த வாளால் பிளந்து மண்ணில் கிடப்பதைக் கண்டு அந்த மகனைப் பெற்ற காலத்திலும் பார்க்க பெருமகிழ்ச்சியுற்ற வீரத்தாய்மாரின் வரலாறு புறநானூற்றில் விளங்குகின்றது.

நடுக்காட்டில் கொடிவிட்டு, நாலுதிசையும் படர்ந்து அரும்பும் மலரும் அணிசெய்ய, பற்றுக்கோடில்லாது தளர்ந்த முல்லைக்கொடிக்குத், தாவிப்படரும் பற்றுக்கோடாகத் தன் தேரை நிறுத்திச்சென்ற அருள் கனிந்த ஆயென்னும் வள்ளலின் வரலாறு புறநானூற்றில் ஆட்சிபுரி கின்றது. நாட்டை விட்டுத் தன்னைக் காட்டுக்குப் போக்கிய தம்பி தன் தலையை வெட்டிக் கொண்டு வருபவர்க்கு வேண்டிய பொருள் அளிப்ப தாகப் பறை கொட்டிச் சாற்றிய செய்தியை அறிந்த குமணன், தன்னை இரந்துவந்த புலவருக்குத் தம் தலையை அரிந்தெடுக்குமாறு வாள் கொடுத்த அருஞ்செயல் புறநானூற்றில் நிலைபெறுகின்றது.

**தினகரன் 3.01.1954**

# 6. செயல் வீரர்

சொல் வீரர்கள் ஓர் கண்ணிமைப் பொழுதில் பல்லாயிரக்கணக்கானோர் தோன்றலாம். மலையிற்படிந்த முகில் மின்னி முழங்கி இடித்து மழை கொட்டுவதுபோல் மேடையில் ஏறிநின்று மார்பு தட்டி வீரமுழக்கு செய்யலாம். சொல்லை வாரி இறைத்துப் பொதுமக்கள் எல்லோர் உள்ளத் தையும் கவரலாம். உலகைப் புதுக்கிப் படைத்து உயர்ச்சி செய்வோமென்று உறுமலாம். தன்னலத்தை உதறித்தள்ளித் தளராத உள்ளத்திண்மையுடன் தொண்டாற்றும் செயல் வீரர்களையே உலகம் வரவேற்கின்றது.

இன்றைய நூற்றாண்டு மக்களாட்சி மலர்கின்ற நூற்றாண்டு, தன்னலத்தை உதறித்தள்ளிய தனிப்பெருந் தலைவருக்கே நன்கு மதிப்புச் செய்கின்றார்கள். மனைவி மக்களைப் பிரிந்து பசியினால் வாடியும், அடியினால் வெதும்பியும் சிறையினால் வருந்தியும் தம் உரிமை வேட்கை குறையாமல், விடுதலைப்போர் வெறிசாயாமல், செயலாற்றிய வீரர்களையே தெய்வமாக வையகம்போற்றுகின்றது. தன்னலமற்ற செயல்வீரர்களின் உள்ளத்தில் தாய்மை அன்பு அலையெறியும், அறத்தொடு கலந்த அஞ்சாமைப்பண்பு ஆட்சிபுரியும். அறிவோடு கலந்த அன்புக் குரல் உலகத்தை அறைகூவி அழைக்கும். தொடுங்கள் விடுதலைப்போர் எனச் சொல்லி, அல்லல் நீத்த ஆர்வத்துடன் எல்லோரையும் அழைக்கும்.

செயல் வீரர்களின் உள்ளம் நஞ்சை அமுதமாகக் கருதும். நெஞ்சை வேலால் பிளந்தாலும் கெஞ்சிக்கும்பிடும் வழக்கத்தை இகழும். உயிருட னேயே அவர்களை ஓங்கியெரியும் நெருப்பிற் தூக்கி எறிந்தாலும் அன்பு தங்கும் அகமலர்வுடன் ஆவியை விடுவார்கள். நஞ்சையுண்டு உலகை வாழ்வித்த நல்லறிஞன் சோக்கிரதீசும், உயிருடன் சிலுவையில் வைத்து அறையப்பட்ட உலகப் பெரியார் கிறித்துவும், மண்டியிட்டு வணங்குவது போல் நின்று கொலைஞனால் குண்டுவீசிக் கொலை செய்யப்பட்ட கோமான் காந்தியடிகளும், என்றென்றும் உலகமக்களின் உயிர் உணர்விற் கலந்து வீற்றிருக்குஞ் சிந்தனைச் செல்வர்கள். செயல்வீரர்கள், பொய் யுலகம், பொருள் அழியும், பெண் மாயமென, வாய்ப்பறையறைந்து கை விரியாமல், காவியுடுத்துக் காடு புகுந்து ஒடுதூக்கிப் பிச்சையெடுக்காமல், உலகியல் வாழ்வில், மனைவி மக்களுடன் கூடியிருந்து உண்மை தொண்டாற்றிய வீரர்களையே அறிவுடைய உலகம் வழிபடுகின்றது.

**தினகரன் 10.01.1954**

○○○

# 7. என்றும் வாழ்வோர்

வாழ்க்கையென்னும் உலைக்களத்தில் வைத்து மக்கள் படம் பிடிக்கப் படுகிறார்கள். உருக்கி யுருக்கி ஒளி கொடுக்கப்படுகிறார்கள். படம்பிடிக்கும் பொழுது துன்பத்தீயில் வெந்து பண்புகெடாமல் தம்மைப் பாதுகாக்கும் ஆற்றல் வாய்ந்த மக்கள் என்றும் அழியாதவர்கள், செத்துஞ்சாகாதவர்கள். வாழ்க்கைத் தீயில் வேக வேக மக்களின் உள்ளம் புண்பட்டுப் பொறுப்புத் தன்மையைப் பெறுகின்றது, தன்னம்பிக்கையை ஈட்டிக்கொள்கின்றது, சாவையும் வாழ்வையும் ஒன்றாகக் கருதிச் சலிப்பில்லாமல் உழைக்கும் வீரமானத்தை தனக்கே யுரித்தாக்குகின்றது, அறமும் ஒழுக்கமும் கற்பும் இலக்கியத்தில் எழில்பெற்று விளங்குவது போல வாழ்க்கையில் வளம் படல் வேண்டும்.

வாழ்க்கையில் அவற்றைப் பாதுகாக்கும் நெருக்கடி மக்கட்கு ஏற்படவேண்டும். அந்த நெருக்கடிதான் வாழ்க்கையின் உலைக்களம், மக்களை மக்களாக உருவாக்கிப் படம்பிடிக்கும் வாழ்க்கைக் கனல், கொதித்துச் சிந்தும் எரிமலைக் குழம்பு. உயிருக்குப் போராடியுயிரையே கொடுக்க வேண்டிய நிலைமை வந்த பொழுதும் சிரித்த முகத்துடன் செயலாற்றும் வீரன் வாழ்க்கைக் கனலால் உருகி உருகி எரி கொடுக்கப் படுகிறான். திருப்பித் திருப்பிப் படம்பிடிக்கப்படுகிறான்.

தன் மறதியோடு உலகம் வாழச் செயலாற்றும் செயலாளரை அவன் தன் சிந்தனை உலகிற்காண்கின்றான். ஆராய்ச்சியோடு கலந்த அறிவுக் குரலால் உலகமக்களை அழைக்கின்றான்; ஆதரிக்கின்றான். இவனின் உயிர் உள்ளொளியோடு கலந்து எங்கும் வீசுகின்றது; அந்த ஆற்றல் அப்படியே வெட்ட வெளிச்சமாக எல்லோர்க்குந் தோன்றுகின்றது. அவனுடைய சொல்லும் செயலும் தீயும் சூடும் போலப் பிரிவின்றிக் கலந்து வாழ்க்கைப் போரை வெல்லுந் திறத்தை மற்றவர்களுக்கு மளிக் கின்றது. அவனின் பேச்சும் மூச்சும் ஒவ்வோர் புதிய புதிய ஆக்கத்தை உலகிற்கு அளிக்கின்றது. உலக உயிர்களிளெல்லாம் அவன் உயிர் ஒளிதாங்கி மாற்றஞ்செய்கின்றது. அவனின் ஆராய்ச்சி முடிவுகள், அருங் கலைஞர் உள்ளத்திரையில் சிந்தனைப் பண்பை ஒளிப்பதிவு செய்கின்றது. இந்தச் சிந்தனையாளன் முகத்தைச் சுற்றி அறிவொளி நிலா வட்டம்போல அலையெறிகின்றது. சிந்தனைக் கதிர்கள் அவன் கண் ஒளியோடு கலந்து, மின் ஒளி விட்டுப்பாயும். அவனின் உடலும் அசைவும் உறக்கமும் விழிப்பும் கடலின் அலைகள் புதிதுபுதிதாக வெளுத்து வருவதுபோல

நாளுக்குநாள் வேறுபட்ட தோற்றம் பெற்று விளங்கும். அவனின் இனித்த சிரிப்பும், எவர்க்குமஞ்சாத மிடுக்கும், தனித்த பேராற்றலும், சாவதும் வாழ்வதும் ஒன்றுதான் என்ற முடிவைச் சான்றுகாட்டி எங்களை ஊக்கும். இவன் உள்ளத்திருந் தூறி யெழுந்த வெற்றிக்குரல் இன்பமே யென்னாளும் துன்பமில்லையென ஒலிக்கின்றது.

**தினகரன் 17.01.1954**

❍❍❍

# 8. அறிவும் ஆண்மையும்

அறிவும் ஆண்மையும் ஒன்றுக்கொன்று நிலைக்களனாக நிற்கும் இரு பண்புகள். அறிவு நிழலில் ஆண்மை வளரும்; ஆண்மையின் பாது காப்பில் அறிவு விரியும். அறிவிலாத ஆண்மையும், ஆண்மையில்லாத அறிவும், நெறியிலாத நெறியிற்சென்று நிலையிலாது ஒழியும். ஆண்மை யென்பது அறத்துக்குமாறுபடாது, பிறரைக் கண்டு அஞ்சாது எதிர்த்து, அறத்தைப் பாதுகாப்பது. அறிவென்பது அறத்தை ஒழிக்கும் கொடி யோரை ஒறுத்தற்கேற்ற சூழ்ச்சிகளையும் துணைகளையும் ஆக்க வழி காட்டுவது. கொலைசெய்யும் கொடியோரை வேந்தன் கொல்லுதல், நெற்பயிருக்கு ஊறு செய்யும் புற்களை உழவன் வெட்டி அழிப்பது போலாகுமெனமேலோர் கூறுவர். இந்த அடிப்படை உண்மைகளை அறிந்து தெளிவிக்க, அறத்தையே ஒளியாகவீசி ஆண்மை மலருகின்றது. புத்தரும் காந்தியும் போற்றி வளர்த்த ஆண்மையே அறிவோடு கலந்த ஆண்மை. உலக உயிர்களின் துன்பத்தைக் கண்டு உள்ளமுருகி, அறிவோடு கலந்த அன்பைப் பெருக்கி, ஆண்மையைச் செயலிற்காட்டிய தாய்மைப் பண்பாளர்கள், புத்தரும் காந்தியுமே என உலகம் போற்றுகின்றது.

உலகில் வாழும் உயிர்களின் துன்பத்தைக் கண்டு, பசியினால் வெந்தும் அடிமை நெருப்பினால் எரிக்கப்பட்டும் உள்ளம் பதைத்துத் தங்கள் உயிரையே பொருட்படுத்தாது அன்போடு கலந்த ஆண்மைக் குரலெழுப்பிய ஆண்மை ஆளர்கள் புத்தரும் காந்தியுமே ஆவர். காண முடியாத கடவுளைக் கூவி அழைத்துக் கண்ணீர் வடித்துத் தம் வாழ்க்கையை அமையாது, அறிவு விளக்கமில்லாமல் ஆண்மைகுன்றி விலங்கு வாழ்க்கையில் ஈடுபட்டு உலைந்த மக்களை, அறிவு ஆண்மை விளக்கஞ் செய்த பெருந்தகையாளர்களே ஆண்மை வீரர்கள்.

நாட்டுப் பற்றினால் உணர்ச்சி கொண்டெழுந்து, போர்க்களத்தில் மார்பு பிளந்து புன்னகையோடு இறக்கும் வீரர்களைப் பார்க்கிலும், சிறைத் துன்பத்தையும், பிறரெல்லாம் கூறும் வசைத் துன்பத்தையும், வழிவழியாக வந்த மூடக் கொள்கைகளில் தடித்து ஊறி அறிவென்னும் விழியற்ற மக்களை, அறிந்து செயலாற்றும் ஆராய்ச்சியாளர்களாய்ப் புதுக்கி, அல்லல் கோடி வந்தாலுங், கொல்லும் நஞ்சைக் குடிக்கக் கொடுத்தாலும், உள்ளங் கலங்காத ஆண்மை வீரர்களாய் ஆட்படுத்தும் ஆண்மை மிகமிக உயர்ந்தது.

நஞ்சைக் குடித்து உலகம் உய்ய வழிகாட்டிய சோக்கிரடீசும், நண்பரின் கத்திக்குத்துக்கு நெஞ்சைக் கொடுத்து உலகம் போற்றும்

அறத்தைப் பாதுகாத்த யூலியசீசரும், மக்களினம் வாழ்வதற்காக வன்கண் மிக்க யூதர்களால் கால்களையும் கைகளையும் தலையையும் இழுத்து மரத்திற் பொருத்தி, ஆணி அறையும்போது கனிந்த அன்போடு மக்களினத்தைக் கூவி அழைத்த இயேசு கிறிஸ்துவும், கொல்லுங்கொடிய குண்டுகள் நெஞ்சிற்பாய கூப்பிய கையோடு புன்னகைமலர்ந்து அமரராகிய காந்தியும் அறிவு மணம்வீசும் ஆண்மை வீரர்கள்.

மக்களினம் எத்தனையோ நூற்றாண்டுகள் ஆற்றிய பெருந் தவத்தால் தோன்றிய செயல்வீரர்கள். உலகமுள்ளளவும் இறந்தும் இறவாமல் எங்களுடன் வாழ்கின்ற அன்புத் தொண்டர்கள்.

**தினகரன் 24.01.1954**

❍❍❍

# 9. தன்னிகரற்ற தமிழ்

தமிழ்மொழி தமிழர்க்கு உயிர். தமிழனைத் தன்மானமாக வாழச் செய்தது தமிழ்மொழி. தமிழன் தமிழனாக வாழ்ந்த காலத்தில், தன் நிகரில்லாச் சிறப்புடன் பொலிந்து தளிர்த்துப் பூத்துக் காய்த்துக் கனிந்து பயன்பெருகி வளர்ந்த மொழி தமிழ் மொழி. முடியுடை பெருவேந்தர் மூவராலும் தம் குடியிலும் மேலாக மதித்துப் போற்றிப்புகழ்ந்த மொழி தமிழ் மொழி. முச்சங்கங்களில் வளர்ந்து மூவாத இளமையும் சாவாத புதுமையும் பெற்று இன்றளவும் வாழ்ந்து வருகின்ற மொழி. தொட்டிற் பாட்டுத் தொடக்கம், சுடுகாடு மட்டும் எம்மை ஆதரித்து அன்புதந்து, எம் ஆவியில் ஊறி ஊறி இனிக்கும் அரும்பெரும் மொழி தமிழ்மொழி. சிந்தைக்கும் செவிக்கும் இனிக்கும் சிந்தாமணிச் செல்வமும், சேரன் இளங்கோ ஆக்கிய சிலப்பதிகாரச் சிறப்பும், வீரத்தையும் காதலையும் விளக்கி உணர்வூட்டும் அகப்புற இலக்கிய அமுதும், கல்லும் உருகிக் கனியத்தக்க சொல்லால் அன்பு சுரந்து பாய அழுதழுது பாடிப் பாடிச் சிவபெருமானைத் தேடிக் கூவுகின்ற மாணிக்க வாசகரின் அன்புக்குரலும், உலகமெல்லாம் வரவேற்கும் உயர்ந்த கருத்துக்களைச் சுருக்கவும் பொருள் பெருக்கவும் நிரம்பிய இனிய சிறிய பாட்டுக்களால் இயற்றி அளித்த வள்ளுவரின் உள்ளமும், செந்தமிழ் மொழியில் இலக்கிய செம்மையைத் தெளிவிக்கின்ற, எழுத்தறியாத பொதுமகனும் எழுச்சி கொண்டு உரிமை முழக்கம் செய்யத்தக்க உணர்ச்சித் துடிப்பை, எளிய இனிய பாட்டுக்களால் ஊட்டி, உறங்கிக் கிடந்த தமிழகத்தைத் தட்டி எழுப்பிய வீரன் எங்கள் பாரதியின் வீரமுழக்கமும் இன்றைய உலகில் தமிழ் மொழியின் ஏற்றத்தை மலர்த்திவிட்டது. தமிழ் மொழி தனித்தியங்கும் ஆற்றல் படைத்த மொழி. வடமொழியின் உதவியில்லாமலே எந்தக் கருத்தையும் எடுத்து இயம்பத்தக்க ஏற்றம் வாய்ந்த மொழி. வடமொழியில் பற்றுடைய சிலர் தமிழ் நூல் புலமையும் ஆராய்ச்சியும் இல்லாத தன்மையால் தமிழ் தனித்தியங்காதென சாற்றித்திரிகின்றனர். தண்ணீர், மலர், தண்ணளி, சோறு, உண்மை, மகிழ்ச்சி, இனிமை, துன்பம், அறிவு, திருமணம், குளித்தல், அடியிடல், அன்பு, வியப்பு, மக்கள், வீடு, கோவில் முதலான இனிய செந்தமிழ்ச் சொற்கள் இருக்கவும் அவற்றை விடுத்து ஜலம், புஷ்பம், ஜீவகாருணியம், சாதம், சத்தியம், சந்தோஷம், மதுரம், கஷ்டம், ஞானம், விவாகம், ஸ்நானம், அஸ்திவாரம், பக்தி, அதிசயம், மனுஷர், கிருகம், ஆலயம் எனவும் நிலம், நீர், தீ, காற்று, வான் என்பவற்றை பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனவும், பொதுமக்களுக்கு

விளங்காத வடசொற்களைப் பேசியும் எழுதியும் தமிழ்க் கொலைபுரிகின்றனர். வடமொழி சிறந்த மொழியாக இருக்கலாம். அதை நாங்கள் வரவேற்கின்றோம். எங்கள் உயிரினும் இனிய தாய் மொழியாகிய தமிழை விட்டு அந்த இடத்தில் வட சொற்களைப் புகுத்துவதை உண்மைத் தமிழ் உணர்ச்சி கொண்ட எவரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்று உணர்ச்சிக் குரலை எழுப்பி இளம் தமிழர்கள் விழித்துவிட்டார்கள்.

**தினகரன் 31.01.1954**

❍❍❍

# 10. மழைவெள்ளம்

மழை முகில்படியும் மாமலைகளும், அவற்றின் மருங்கே வெள்ளியை உருக்கி ஊற்றினாற்போலத் தெளிந்த காட்சியோடு நெளிந்து பாயும் ஆறுகளும், அந்த ஆற்றின் கரைகளை அணிசெய்து விளங்கும் பசிய புல் நிலங்களும் இயற்கைத்தாயின் இன்பக் கொடைகளாகும். மலையின் தலையில் நிலவும் முகிற்கூட்டங்கள் அசையுந் தோற்றம் பல பல யானைகளே விண் உலகிலிருந்து மண் உலகை நோக்கி வழிக்கொள்வது போலத் தோன்றும். முகில்களின் நெருக்கடியால் எழுகின்ற முழக்கொலி யானைகளின் ஆர்ப்பொலிகளால் அலையெறிந்து காட்டு விலங்குகளை நாட்டுக்குச் செல்லுமாறு அச்ச மூட்டும். முகில்களின் முழக்கொலியோடு கலந்து வீசும் மின் ஒளி வீரமிக்க களிற்று யானைகளின் வெண்மருப்பு களைப்போல நீண்டு வளைந்து வானைப்பிளந்து தோன்றும். முழக் கொலியும் மின் ஒளியும் கலந்து தோன்றும் அமயத்தில் காடெல்லாம் வெள்ளத்தில் மறையக் கடுமழை கொட்டும். பேர் ஒலி, கடல் ஒலியைப் போல முழங்கும். நாடு நிறைந்து வழிந்தோடும் வெள்ளம், விலங்கினங் களையும் விண்ணளாவும் மரங்களையும் யானை மருப்புக்களையும் தேன்கூடுகளையும் அள்ளிக் கொண்டு சென்று வயல் நிலங்களில பரப்பின. வயல் நிலங்களின் மருங்கேயுள்ள பொய்கைகளில் மலர்ந்து விளங்கும். தாமரை மலர்களில் வீற்றிருந்த வண்டினங்கள், அப்படியே அஞ்சி அயர்ந்து தாம் இருந்த மலர்களையே தம் உயிர்த் துணையாகப் பற்றிக் கொண்டு ஓடிவந்த வெள்ளப் பெருக்கில் கூடி மிதந்தன. வெள்ளத்தினால் அள்ளப்பட்டுவரும் தாமரை மலர்களின் மேல் உணர்ச்சி அற்று அச்சத்தினால் உறங்கிக் கிடந்த வண்டினங்களைக் கண்ட வயல் நிலத்து மக்கள் வெண் பொன்னிலும் செம்பொன்னிலும் பதித்து விளங்குங் கருநீல மணிகளோ என ஐயமுற்றனர். காட்டிலுள்ள பொருட்களையெல்லாம் இங்ஙனம் பரப்பி நாட்டிலுள்ள மக்களையும் உயிரினங்களையும் நடுங்கச்செய்த வெள்ளம் ஆழ்கடலில் வீழ்ந்து அமைந்து விட்டது.

**தினகரன் 07.02.1954**

○○○

# 11. இயற்கையும் மாந்தரும்

இயற்கை, வாழ்க்கையின் அடிப்படையாக அமைந்துள்ளது. நிலத்திலும் நீரிலும் வானிலும் இயங்கி, இயங்கித் தம் வாழ்க்கையைச் செலுத்துகின்ற இயங்கு திணை உயிர்கட்கும், அங்கிங்கு, அசைந்து வாழாது ஒரே இடத்தில் நிலையாக நின்று வாழும் மரம் முதலான நிலை திணை உயிர்கட்கும் இயற்கையிலேயே பாதுகாப்புகள் அமைந்திருக்கின்றன. இந்தப் பாதுகாப்புகள் பல பல நூற்றாண்டுகளாக உயிர் இனங்கள் தோன்றி வாழ்ந்து, வாழ்ந்து நிலைபெற முயன்ற வாழ்க்கைப் போரில் அழியாது நிலைபெற்றவைகளாகும். ஆறு அறிவு படைத்த மக்களினம் தமது பகுத்துணர்ச்சியின் திறமையினால் இயற்கைச் சூழலை மாற்றித் தம்மை மிக உயர்த்திக் கொண்டனர். கொடிய குளிரையும், கூடிய வெய்யிலையும் தாங்கக்கூடிய கட்டுறுதி வாய்ந்த உடலுடன் காட்டிலும் மலைச் சாரலிலும், கடல் ஓரங்களிலும் ஆற்று ஓரங்களிலும், இயற்கையோடு ஒட்டி வாழ்ந்த மாந்தர்கள், காலப்போக்கில் செயற்கைப் பொருள்களினால் தமது உடல் உறுதியைக் காப்பாற்றி ஒரே இடத்தில் நிலைத்து வாழக் கற்றுக் கொண் டனர். குளிர் காலங்களில் மலைக்குகைகளில் விலங்கோடு விலங்காய்ப் பதுங்கி இருந்த மாந்தர்கள், உடம்பை மூடத் துணியற்று இலைகளையும் மரப்பட்டைகளையும் உரித்தும் தொடுத்தும் தம்மைக் காப்பாற்றிய மாந்தர்கள். இன்று மேல் அடுக்கு மாடங்களையும் புதியபுதிய வகையான செயற்கை உடைகளையும் தமது ஆராய்வுத் திறத்தினால் ஆக்கி வாழ்ந்து மகிழ்கின்றனர்.

இந்த மாந்தர்களுடன் காடுகளில் கூடித்திரிந்த விலங்கினங்களின் மேற்போர்வைகள் அவைகள் வாழ்கின்ற இயற்கை நிலைக்கேற்ப சூட்டையும் குளிரையுந் தாங்கக் கூடியதாய் அமைந்திருத்தலைக் காண் கின்றோம். கொடிய குளிர் நிலங்களில் வாழ்கின்ற ஓர்வகை ஆட்டின் மேற் போர்வையில், வளர்ந்து நெறிந்திருக்கும் மயிர்க்கற்றைகள் அவைகளைக் குளிர் தாக்காவண்ணம் காப்பாற்றுகின்றன. இந்த இயற்கைப் போர்வையை இன்றைய ஆராய்ச்சி உலக மாந்தர்கள் தம் உடலை மூடும் செயற்கைப் பொருள்களாய்ப் பயன்படுத்துகின்றனர். நீர் இல்லா இடத்தில் நீண்டு வளர்ந்திருக்கும் மரங்களைக் கொடிய வெப்பத்திலிருந்து பாதுகாக்கும் பட்டைகள் மேல்சட்டைகள்போல அமைந்திருக்கின்றன. மரங்களின் கீழ் செல்லும் வேர்கள் நிலத்தின் அடிப்பகுதியில் உள்ள நீரையும் உறிஞ்சி எடுக்கக்கூடிய இயற்கை அமைப்புடன் விளங்குகின்றன. அவ்வேர்களின் நுனி உறைகள், ஓர் வகைக் கசிவான நீரைச்சுரந்து, சுரந்து கொடிய

கற்பாறைகளையும் பிளந்து செல்லக் கூடியனவாக விளங்குகின்றன. இம்மரங்களின் மேல் வாழ்கின்ற பூச்சியினங்களும் பறவையினங்களும் பட்டையின் நிறத்தையும் அவற்றின் குழைகளின் நிறத்தையும் பெற்றுத் தம்மைத் தமக்குப் பகையான மிருகங்களில் நின்று தப்புகின்றன. சில மரங்களின் விதைகள் தாங்கள்நிலைத்து நிற்கும் சூழ்நிலைக்கேற்பத் தம்மைப் பாதுகாக்கவும் பரப்பவும் கூடிய இயற்கை வாய்ப்புக்களைப் பெற்று இருக்கின்றன. மணமில்லாத மலர்கள் சிறந்த நிறமுள்ளனவாகவும் நிறமில்லாத மலர்கள் சிறந்த மணமுள்ளனவாகவும் விளங்கித் தம் மரபை வளர்த்தற்கேற்பத் துணையாய் உள்ள வண்டினங்களை அழைக்கின்றன. மரங்களின் விதைகள் காற்றில் பறந்தும் மக்களினம் விலங்கினங்கள் பறவைகள் முதலியவற்றின் கால் அடிகளிலும் இறக்கைகளிலும் கொழவித் தாமாகவே பரவுகின்றன. இத்தகைய இயற்கை வாய்ப்புக்கள் என்றென்றும் மாறாது மக்கள் ஆராய்ச்சிக்கு விருந்தாய் விளங்குகின்றன.

**தினகரன் 14.02.1954**

❍❍❍

# 12. உலகின் காட்சிகள்

உலகம் ஒரு காட்சிச்சாலை. பல வேறுவகையான காட்சிகளை நாள் தோறும் காண்கின்றோம். அந்தக் காட்சிகளில் எமது வாழ்வை மலர்த்தக் கூடிய உண்மைகள் நிறைந்திருக்கின்றன. மேலடுக்கு மாடத்தில் பளிங்குக் கற்களை அடுக்கிப் பலவகை ஓவியங்களை எழுதிப்பார்த்தவர், கண்களைப் பறிக்கக் கூடியதாக அமைந்த, நிலா முற்றத்தில் வீற்றிருந்தது. இன்னிசை விருந்தை அருந்தியும் இனிய நறுஞ்சுவைக் கனிகளைப் பிழிந்துகுடித்தும், மகிழ்ந்து வாழும் மக்களையும் காண்கின்றோம். அதே மாடத்தின் அருகில், ஆறுமுழ நீளமுள்ள ஓட்டைக் குடிலில் ஒதுங்கியிருந்து, ஆறாத பசியால், அம்மா! அம்மா! என்று கதறுகின்ற குழந்தையைக் கையில் ஏந்திச் சோற்றவியும் இல்லைமகனே, இந்தத் துண்டுப்பாணைக் கடியென்று, ஆற்றாத்துயரத்துடன் அழுதழுது கொடுத்து, அல்லற்படுகின்ற மக்களையும் காண்கின்றோம்.

காரை எடுத்துக் கொண்டு கடற்கரைப் பக்கம் சென்று, காற்று வாங்கியும், கடலில் நீந்தி விளையாடியும், கனிந்த பழங்களைக் கடித்துச் சுவைத்துச் சுவைத்துக், கடலில் வீசியும் காற்றுலாவும் கண்ணாடி ஆடைக்குள் அணிந்த வண்ணப்பாவாடையின் நிறம் வெளியில் தோன்ற, கைகளிலே அணிந்த வளையல்கள் கல கலவென்று ஒலிக்கக் கண்ணில் மைதீட்டி, சொண்டில் செம்மை நிறச்சாயம் ஊட்டி வண்டுகள் மொய்க்கும் வண்ணமலர் மாலைகளைக் கூந்தலிற் சூட்டிக் கடற்கரை வீதியில் உலாவித்திரியும் காரிகையாருடன் கைகோத்துக் காதலுரை ஆடிக் களித்து விளையாடுகின்ற காளையர்களையும் காண்கின்றோம். அதே கடற்கரையில், கந்தையை உடுத்துக், கறுத்து உருண்டு திரண்ட உடம் பெல்லாம் வியர்வை சிந்த, வந்துபடாவோ நாலு மீன்கள் இந்தவலையில் என்று, நொந்த சிந்தையுடன், வலையைத்தூக்கி வீசி வாரியெடுத்த மீன்களைக் கரையில் கொண்டுவந்த வலைஞன் குவித்தலையும், அவனின் காதல் மனைவி, குவித்த மீன்களைக் கடகத்தில் அள்ளித் தலையில் சுமந்து, தளர்ந்த நடையுடன் ஊர்த்தெருவெல்லாம் திரிந்து, "மீன் வேண்டுமோ மீன்" என வினவி கூறிச்செல்லும் காட்சியையுங் காண்கின் றோம்.

பஞ்சு மெத்தை விரித்த பளிங்குக் கட்டிலில் இருந்து, இந்தக்கிழமை என்னென்ன உடுப்புக்கள் அணியலாம் என்று சிந்தித்துத் தெரிந்தெடுத்த உடுப்புக்களை அடிக்கடி கழற்றி மாற்றி மாற்றி அணிந்த அழகுக் கோலத்துடன் கல்லூரிக்குச் செல்லும் செல்வக்குடிப் பெண்களையும்

காண்கின்றோம். அதே அயலில் உடுத்த பாவாடையை அன்றி வேறொரு உருப்படியான பாவாடையும் இல்லாமல், ஒவ்வொரு நாளும் தோய்த்துத் தோய்த்துக் கையும் கல்லும் அலுக்கவும், பாவாடையின் நிறம் மாறி மங்கவும், கருத்தில் சிறிதும் கவலையில்லாமல், "இன்பமே என்னாளுந் துன்பம் இல்லை"யென்ற உணர்ச்சியுடன் அந்தப் பாவாடையையே அணிந்து கல்லூரிக்குச் செல்லும் பெண்பிள்ளைகளையும் காண்கின் றோம்.

**தினகரன் 21.02.1954**

❍❍❍

# 13. உலகின் காட்சிகள்

பாடம் படிக்க வேறான அறையும், அந்த அறையிலேயே மெத்தைப் படுக்கையும், மின்சாரத்தினால் சுழலும் காற்றாடியும், ஒவ்வொரு பாடப் புத்தகத்தையும் கேட்ட கேட்டவுடனே எடுத்துக் கொடுக்கக் காத்துக் கொண்டிருக்கும் வேலை ஆட்களும், காலம் தவறாத இன்சுவை உணவும், ஓய்வு நேரங்களில் இன்னிசை கேட்டு மகிழும் வானொலிப் பெட்டியும், ஒவ்வொரு பாடத்திலும் சிறந்த புலமை நிரம்பிய ஆசிரியர்கள் வீட்டிற்கே வந்து படிப்பிக்கும் தனி ஒழுங்கும் படைத்த பெரும் செல்வக்குடி மாணவர்கள் தேர்வில் தோல்வியுறுவதையும் காண்கின்றோம். இருந்து படிக்க நல்ல இல்லம் இன்றி, எரியும் விளக்குக்கு விட எண்ணெயும் இன்றி, அருந்தப்போதிய உணவும் இன்றி, ஆடைகள் மாற்றிக் கட்ட வழியும் இன்றி, வகுப்புக்குரிய பாடப்புத்தகங்களை வாங்கப் பொருளும் இன்றி, வறிய தாயும், தந்தையும், கடுவெயிலென்றும் பெருமழையென்றும் பாராமல் தனக்காகவே நெஞ்சு உருகி உருகி உழைக்கின்ற நிலைமையைக் கண்டு கவலைகொள்ளும் உள்ளத்துடன் பாடங்களைக் கற்றுத் தேர்வில் முதன்மையாக வெற்றி பெறும் வறியகுடி மாணவர்களையும் காண்கிறோம்.

இங்ஙனம், ஒளியும் இருளும்போல ஒன்றுக்கொன்று மாறுபட்ட வழியில் நிகழ்ந்து வரும் மக்கள் வாழ்க்கை, என்று தான் ஒரே தன்மையை அடைந்து வறியவர் செல்வர் என்ற வேறுபாடின்றி மலர்ச்சி பெறுமோ அறியோம். ஏழையென்றும் செல்வனென்றும் எவனுமில்லை உலகினில், என்ற இன்பக்காட்சியைக் கவிதை உலகில் கண்டு மகிழ்வது போல் மக்கள் வாழ்க்கை உலகில் கண்டு மகிழும் நாளைக்காண முயல்கின்ற செயல்களே மக்கள் வரலாற்றை அடிக்கடி மாற்றி வருகின்றன.

**தினகரன் 28.02.1954**

# 14. மலர்ச்சோலை

மலர்கள் மலர்ந்திருக்கும் பூங்கா, அழகுக்கோவில். புதிய மலர்களின் மெல்லிய இதழ்கள் ஒன்றை ஒன்று தழுவியிருக்கும் காட்சி கண்ணுக்கு விருந்தாகும். சில மலர்கள் இனிய மணத்தை எங்கும் பரப்பிய வண்ணம் பெரிய மரங்களின் மேல் உள்ள பச்சைத் தளிர்ப்படுக்கையில் கொலு வீற்றிருக்கின்றன. சில மலர்கள் தளிர்விட்டுப் படர்ந்த பச்சைப் பசுங்கொடி களின் தலைகளில் இருந்து எழில் விரிக்கின்றன. சில மலர்கள் வேல் போலக் கூர்மையான கொடிய முட்களுக்கு நடுவிலே வீற்றிருந்து விளங்குகின்றன. சில மலர்கள் கட்டவிழ்ந்த மொட்டுகளும், மொட்டவிழும் பருவக் கன்னிகளும், குருத்து விட்டு வெளிக்கிளம்பும் அரும்புகளும் நெருக்கித் தம்மைப் பாதுகாக்கச் சிறந்து பொலிகின்றன.

மஞ்சள் நிற மலர்களும், வெள்ளை நிற மலர்களும், செம்மை நிற மலர்களும், ஒன்றை ஒன்று கொஞ்சிக் கூடியிருக்கும் காட்சி, பலநிறக் குஞ்சுப் பறவைகள் ஒன்றை ஒன்று கட்டி அணைத்துக் கொண்டு கிடப்பது போல் தோன்றுகின்றது. முல்லைக்கொடி, செவ்வரத்தை மரத்தை மூடிப் படர்ந்து தளிரும், அரும்பும், தாங்கித் தளர்ந்து அசையும் தோற்றம், இனிய குழந்தை தாயின் அழகு முகத்தைத்தழுவி அணைத்துத் தன் இளந்தளிர்க் கைகளை எடுத்து வீசுவதுபோல் இருக்கின்றது. மலர்ந்த பூக்களின் இதழ்களை நெகிழ்த்து, மெல்ல மெல்ல அசைந்து வீசும் இளம் தென்றல்காற்று, குழந்தை தவழ்ந்து வந்து தாய் தந்தையரின் முகத்தைத் தடவி ஊட்டும் இன்பம்போல், மக்கள் உடம்பைத் தொட்டு மணத்தை அள்ளி வீசுகின்றது.

மலர்ந்த பூக்களில் சிந்தும் தேனை வரிவண்டுக் கூட்டங்கள் வந்து பருகி மகிழ்ந்தன. தேனைக் குடித்த வெறியால் தியங்கிய வண்டுகள் பூவில் இருந்தபடியே புதிய உறக்கம் கொண்டுவிட்டன. பூஞ்சோலைக் காட்சியைக் கண்டு, பொழுது போக்குவதற்காக இளம் பெண்கள் வந்து குவிந்தார்கள். குவிந்த பெண்கள் கூட்டம், கூட்டமாகப் பிரிந்து சென்று பூக்களின் அழகைப் பார்த்தார்கள். பூக்களில் உறங்கிய வண்டுகள், பெண்களின் சிலம்பொலியினாலும், சிரிப்பொலியினாலும், திடுக்கிட்டு விழித்தன.

ஒரு பெண் சிவந்த ரோசா மலரைப் பிடுங்கி மணந்து பார்த்தாள். மணந்த மலருக்குள் மயங்கி உறங்கிக் கிடந்த வண்டு, சினந்து பின் அவளுடைய சிவந்த சொண்டைக் கண்டதும் மலர்ந்த புதிய பூவென மகிழ்ந்து அதில் இருந்தது. இருந்த வண்டை அந்தப்பெண் தனது அழகிய கைகளை அசைத்துக் கலைத்தாள். கலைத்த கையைக் கண்டவண்டு

செங்காந்தாள் மலரென எண்ணித் திரும்பிவந்து மொய்த்தது. மொய்த்த வண்டைக் கலைக்க இயலாமல் முன்னுக்கும் பின்னுக்கும் ஓடுகின்ற அப்பெண்ணைப்பார்த்துக் கூட நின்ற பெண்கள் சிரித்தார்கள்.

இன்னொரு பக்கத்தில் நின்ற மலர்ந்த பூக்களின் அழகையும், வாடிவீழ்ந்த பூக்களின் கோலத்தையும் மாறி மாறிப் பார்த்தவண்ணமாய் ஓர் முதிய பெண் நின்றாள். அவளின் உள்ளத்தில், மலர்ந்த பூக்கள் இளமை வாழ்க்கையையும் வாடிவீழ்ந்த பூக்கள் இளமை ஒழிந்து முதுமை எய்திய வாழ்வினையும் நினைவூட்டின. வந்த வண்டுகளுக்கு மலர்ந்த முகத்தைக் காட்டி வரவேற்று இனியதேனை விருந்தாக ஊட்டும் புதிய பூக்கள், இல்லறத்தில் விருந்தினரை ஆதரிக்கும் சிறந்த குலப் பெண்களைப் போல் விளங்கின.

ஒரு பக்கத்தில் இலைகள் உதிர்ந்து, கொப்புகள் முறிந்து, இன்றைக்கோ, நாளைக்கோ பட்டுவிடுமென்று சொல்லக் கூடிய மரங்கள் நின்றன. அந்த மரங்களை அடுத்துப் புதிய தளிரும், இலையும், பூவும், காயும் கனியும் பொலிய, ஓங்கி வளர்ந்த மரங்களும் நின்றன. இவற்றைப் பார்த்த முதியவள் உள்ளத்தில் வாழ வழியற்று வயிற்றுப் பசியால் வாடி வருந்தும் ஏழை மக்களையும், அவர்களுக்குப் பக்கத்தில் கோடிக்கணக் கான பணத்தைப் பண நிலையங்களில் போட்டுவைத்து வாடி வந்த மக்களுக்கு ஒரு வயிற்றுச் சோறும் கொடுக்காமல் வாழ்கின்ற மக்களையும் நினைவூட்டின. நிறமில்லாத பூக்களுக்கு மணமும், மணமில்லாத பூக்களுக்கு நிறமும், துணையாய் நின்று வண்டுகளை வரவேற்கும் காட்சி, பணமில்லாதவனிடத்தில் பணமும் தங்கி வாழ்வை மலர்த்தி மதிப்புக் கொடுப்பதை நினைவூட்டின.

**தினகரன் 07.03.1954**

❍❍❍

# 15. இளமை நினைவுகள்

இளமைப் பருவம் மிக இனிமையானது. சிறந்தது.இளமையில் மக்கள் தேடுகின்ற ஆற்றல்களே வாழ்வை மலர்த்துகின்றன. கல்வி, வீரம், வண்மை, காதல், அருள் என்னும் அரிய பண்புகள் யாவும் இளமையிலே ஒருவன் வாழ்வில் இடம்பெறுதற்குரியன. அழகு இளமையின் ஒளி. இளமைப் பருவத்தின் நிறைந்த சாயலே அழகுக் கலையின் தாய். இளந் தளிர்களைப் பரப்பிப் படர்ந்து, புதிய பூக்களுடன் பொலியும் முல்லைக் கொடியின் அழகுக் கோலத்தைக் காணக் காண எழுகின்ற இன்பம். எழுத்தினால் எழுதமுடியாதது. வீட்டின் முற்றத்திலே ஓடித் துள்ளி விளையாடுகின்ற இளங் கன்றின் அழகுக் காட்சியை என்னென்போம்.

பூனைக்குட்டியின் இளமை எழிலும், கோழிக்குஞ்சின் இளமைத் தோற்றமும், என்றும் எமது உள்ளத்தில் நின்று நிழலாடுகின்றன. எங்கள் இளங்குழந்தைகளின் மலர்ந்த முகங்களும், மலர்க்கைகளும், வண்டு விழிகளும், தளர்நடையும், இளஞ்சிரிப்பும் எமக்குப் பேரின்பத்தைக் கொடுக்கின்றன. வீரமும் காதலும் இளமைப் பருவத்தின் விருந்துகள். இளமை, நலங்கனிந்து மலர்ந்த வாழ்வில், தன்னலம் அற்ற வீரமும் காதலும் விளைகின்றன. இளமை கழியக்கழிய வாழ்வின் புதுமை மட்டுப்படுகின்றது. சிந்தனை ஆற்றல் சிதைகின்றது. தண்டு ஊன்றித் தள்ளாடும் முதுமைப் பருவம் வந்தவுடன், கடந்த இளமைப் பருவத்தின் இன்ப நினைவுகள் எமது உள்ளத்தைத் தொட்டு இரங்கவைக்கின்றன. முதுமை அடைந்தவர்கள் அடிக்கடி தமது இளமைப் பருவத்தை எண்ணாமல் இருக்கமாட்டார்கள்.

தொடித்தலை விழுத்தண்டினார் பழந்தமிழ்ப்புலவர். அவர் பாடிய பாட்டில் பூண்கட்டிய நல்ல ஊன்றுகோல் எனுங் கருத்தமைந்த "தொடித் தலை விழுத்தண்டு" என்ற சொல் வருகின்றது. பாட்டில் வந்த சொல்லே அவரின் பெயராக அமைந்தது. தண்டு ஊன்றித் தள்ளாடும் பருவத்தில் பாட்டுப்பாடினார். பாடிய பாட்டிலும் தண்டு. அவரின் கையிலுந்தண்டு. அவரின் இளமை கழிந்தது. இளமையுடன் தாய் தந்தையர் சூட்டிய பெயரும் மறைந்தது. அந்தப்புலவர் முதுமைப் பருவத்தின் எல்லையைக் கண்டுவிட்டார். முதுமைத் தளர்ச்சி கூடக்கூட, இளமைப்பருவ நினைவுகள் புலவர் உள்ளத்தில் தோன்றுகின்றன. தமது இளமைப்பருவத்தில் தாம் செய்த செயல்களை எண்ணி இரங்குகின்றார். அவரின் இரக்கக் குரலைக் கேளுங்கள். அந்தக் குரலினும் இளமைத் துடிப்பு இருக்கின்றது.

**தினகரன் 14.03.1954**

# 16. இளமை நினைவுகள்

எனது இளமைப் பருவத்தில் யான் ஆற்றிய செயல்களை இப்பொழுது நினைத்தாலும் எனக்கு அழுகை வருகின்றது. எங்கள் ஊர்ப் பக்கத்தில், மக்கள் நீராடும் பொய்கை உண்டு. அந்தப் பொய்கைக் கரையில், ஆற்று வெள்ளம் அள்ளிக்குவித்த வெண்மலை பரந்து கிடக்கும். மணற்பரப்பில் இளம்பெண்கள் இருந்து விளையாடுவார்கள். அவர்கள் சிற்றில் இழைத்து, வண்டல் மணலால் செய்த பாவையை வைத்துப் புதிய பூச்சூடி மகிழ் வார்கள். அவர்கள் வண்டல் மணற் பாவைக்குச்சூடப் பறித்த மலர்களை, நான் பறித்துத் தலையில் சூடிக்கொள்வேன். பொய்கையில் இளம் மகளிர் நீராடுவார்கள். நானும் அவர்கள் நீராடுகின்ற பொய்கைக்கே நீராடச் செல்வேன். அந்தப் பெண்கள் கள்ளம் அறியாதவர்கள். அவர்களுடன் கைகோத்து நீருள் மூழ்குவேன். அவர்கள் தழுவும் பொழுது தழுவியும், அசையும் பொழுது அசைந்தும், நீராடி மகிழ்வேன்.

எனது இளம் நண்பர்கள் மிக நல்லவர்கள். வஞ்சனை அறியாத வர்கள். அவர்களுடன் சேர்ந்தும் பொய்கையில் நீராடுவேன். பொய்கைக் கரையில் பெரிய மருதமரம் நின்றது. அம்மரத்தில் கிளையொன்று, பொய்கையில் உள்ள நீரில் மருவி வளைந்து கீழே தாழ்ந்திருந்தது. பொய்கை நீரில் நீந்தியபடியே கிளையைப் பிடிக்கலாம். நான் தாழ்ந்து பொய்கை நீருடன் மருவிக்கிடந்த மரக்கிளையைப் பிடித்துத்தாவி, மரத்தின் மிக உயர்ந்த கிளையின் உச்சி வரையும் எறிவிட்டேன். பொய்கைக் கரையில் நின்ற இளம்மைந்தரும் மகளிரும், உயர்ந்த மரக்கிளையின் உச்சியில் நின்று ஆழமான பொய்கையில் குதிக்க எண்ணிய எனது துணிவை வியந்தார்கள்.

நான் திடுமெனப் பொய்கையில் குதித்தேன். குதித்த விரைவினால் பொய்கையின் அடித்தளத்தை அடைந்து விட்டேன். பொய்கையின் அடிவரையும் சுழி ஓடிச் சென்றதற்கு அடையாளமாக, அடியில் படிந்து கிடந்த மணலை அள்ளிக்கொண்டு வந்து, கரையில் நின்றவர்க்குக் காட்டினேன். அவர்கள் எனது ஆண்மையைப் பாராட்டினார்கள். இங்ஙனம் வீரமும் விறுவிறுப்பும் அஞ்சாமையும் நிரம்பிய அந்த இளமைப் பருவம், கல்லாத இளமைப் பருவம். கற்று முதிர்ந்த முதுமைப் பருவத்தில், கல்வி கல்லாது விளையாடிய என இளமைப் பருவத்தை நினைத்தவுடன் இரக்கம் வருகின்றது.

அந்தக் கல்லாத இளமைப் பருவம் என்னைவிட்டு எங்கு சென்றுவிட்டதோ அறியேன். இப்பொழுது நான் பூண் இறுக்கிய நல்ல ஊன்றுகோலை ஊன்றியவண்ணம் தள்ளாடித் தள்ளாடி நடக்கின்றேன். ஏதும் சில சொற்கள் கூறியவுடன் இருமல் வந்து விடுகின்றது. பேச அச்சமாக இருக்கின்றது. நான் பெரிய முதுமையை அடைந்துவிட்டேன். என்னைப்போல இளமை கழிந்து முதுமை அடைந்தவர்கள் சென்ற இளமைப்பருவத்தை எண்ணி எண்ணி, இரங்குவதேயொழிய வேறு என்ன செய்வார்கள்.

**தினகரன் 21.03.1954**

❍❍❍

# 17. மகாத்மா காந்தி

காந்தி அடிகள் அருட்கடல்; தன் நலத்தை உதறித்தள்ளிப் பாரத நாட்டின் உரிமை வாழ்வை உயிர்ப்பித்தவர். மேல்நாட்டினர் அடிமை விளையும் விளை நிலமாகக் கருதிய பாரதநாட்டை, உரிமை விளையும் அமர நாடாக உயர்த்தியவர். பரம்பரை பரம்பரையாகக் கைகட்டிப் பணிந்த மக்கட் கூட்டத்தில், நிரந்தரமான சுதந்திர வீரர்களைப் படைத்தவர், கண்ணால் ஆவி பறக்கக், கந்தை சுற்றி வாழ்கின்ற ஏழைமகன் உள்ளத்திலும், என்நாடு எனக்கே என்ற இறுமாப்பை எழுப்பியவர். மலைவளமும், நிலவளமும், ஆற்றுவளமும் நிறைந்த பாரதநாடு வாழவழி அற்ற வறிய மக்களின் அவலக்குரலின் பிறப்பிடமாக இருத்தலைக்கண்டு, காந்தி அடிகளின் உள்ளம் இடிந்தது.

வெளிநாட்டினரெல்லாம் நகைத்து இகழ, வேண்டாத சாதி சமயப் பிரிவினைகளால் வெட்டுண்டும், தீண்டாமை என்னும் கொடிய நெருப்பால் தீந்தும், சிதைந்தொழியும் பாரதநாட்டின் போக்கைத் திருத்தி அமைக்கச் செயல் புரிந்தார். மேடைகளில் ஏறிநின்று வீரமுழக்கஞ்செய்து, ஏழைகளாய் வாழ்கின்றனர் இந்தியர் என்ற செயலில் காந்தி அடிகள் இறங்க வில்லை. இத்திரபோக வாழ்வில் வீற்றிருந்து 80,000 பெறுமதியான காரில் ஏறிவந்து, கஞ்சி குடிக்க வழியின்றிக் கண்ணீர் வடிக்கின்றிர்கள் என்று சலசலப்பான மொழிகள் சொல்லக் காந்தி அடிகள் விரும்பவில்லை.

ஏழைபோல் உடை உடுத்தியும், ஏழைபோல் உணவுண்டும், ஏழை போல் சிறுகுடிசையில் வாழ்ந்தும், ஏழைகளின் தோழனாய், ஏழைகளின் நடுவில் இருந்து, இரங்கி இரங்கி, சுதந்திர உணர்ச்சியை ஊட்டியவர் காந்தி அடிகள். "உங்கள் நாடு உங்களுக்கு உரியது; உங்கள் உயிரினும் உங்கள் நாடு உங்களுக்கு இனியது; அடியுண்டும் உதையுண்டும், ஆண்டுகள் பல சிறையில் இருந்து இடியுண்டும் அன்பு நெறியால் எங்கள் நாட்டை நாங்கள் பெறுவோம். ஒன்று சேருங்கள்; ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பியுங்கள். உலகமக்கள் உங்களை ஆதரிப்பார்கள். உரிமை வெறி உங்கள் உயிரை மலர்த்தும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்முள் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வு" என உருக்கமான உணர்ச்சிக்குரலால் பாரத மக்களைக் கூவி அழைத்தார்.

காந்தி அடிகள் தொடுத்த சுதந்திரப் போர் மிகப் புதியது. உலகம் கண்டு அறியாதது. காந்தி அடிகளின் போர்ப்படை கத்தி இன்றி இரத்த மின்றி அடிமைத்தளையை அறுத்து வீழ்த்தும் சத்தியவாள். படைத் திறமும் ஆட்சித் தருக்கும் ஆணவ முனைப்பும் நிரம்பிய ஆங்கிலேயர்,

மிக அஞ்சி உள்ளம் ஒடுங்கத்தக்க சத்தியாக்கிரகக் போர்ப்படையைக் காந்தி அடிகள் சேர்த்தார். உப்புச் சத்தியாக்கிரகம், உலகமக்கள் வரவேற்கும் புதிய போர்க்கருவியாய் ஒளிவிட்டது. எழுத்தறியாத பொதுமகனுக்கும் எளிதில் விளங்கக்கூடிய போர், குந்தி நடிக்கும் கூனல் கிழவனும் வந்து சேரக்கூடிய போர்.

**தினகரன் 28.03.1954**

❍❍❍

## 18. மகாத்மா காந்தி

குழந்தைகளும் பெண்களும் கூட்டங்கூட்டமாகப் போர்ப்படையில் சேர்ந்தார்கள். "எங்கள் கடலில் விளையும் உப்பு எங்களுக்கே. இந்தியாவின் உப்பு இந்தியருக்கே" என்ற போர் முழக்கம் எங்கும் கேட்டது. "அடியுங்கள், உதையுங்கள், எங்கள் ஆவியைப் பறியுங்கள்" கொடி கொண்டு மாடுகளைப் போல எங்களைப் பிடித்துக் கட்டுங்கள். நாங்கள் சத்தியாக்கிரகப் போர் வீரர். அன்பு நெறிவீரர். அடித்தவன் காலைப் பிடித்துக் கொஞ்சி அன்பு செய்கின்ற வீரர், எங்கள் நாட்டை நாங்கள் ஆளப்போகின்றோம். இனி நீங்கள் விட்டுப்போங்கள். எங்களிடம் புதிய புதிய போர்ப்படைகள் இல்லை, வானத்தில் பறந்து குண்டு வீசும் வான ஊர்திகள் இல்லை, மலையைப் போன்ற மதில்களை இடித்து வீழ்த்தும் மாபெரும் பீரங்கிகளும் இல்லை. எங்களை வெட்டி வெட்டித் தெருவெங்கும் வீசினாலும், மாயாத சுதந்திரத்தாகமுண்டு. எங்கள் தாய் நாட்டின் விலங்கை முறிக்கு மட்டும், சலியாது சத்தியாக்கிரகம் செய்யும் தன்மான உணர்ச்சி எங்களுக்கு உண்டு," என ஒவ்வொரு இந்தியரும் உணர்ந்து உயிர்துடித்து ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தார்கள்.

காந்தி அடிகள் மேற்கொண்ட இந்தப் புதிய போர்முறை, ஆட்சி வெறிபிடித்த ஆங்கிலேயரின் உள்ளத்தையும் மாற்றியது. "அன்புநெறி யால் இந்தியர்கள் தங்கள் நாட்டைத் தங்களுக்குத் தரும்படி கேட்கி றார்கள். குண்டு போட்டு அவர்களைக் கொன்று அழித்தால் அயல்நாடுகள் ஆத்திரங்கொண்டு எங்களைத் தாக்கும். அடிமை வாழ்வையே அமர வாழ்வாகக் கருதிய கோழை இந்தியர்களை - இந்த ஏழைக் காந்தி, ஆளும் உண்மைச் சாதியாக மாற்றி அமைத்துவிட்டார்" என்று எண்ணி எண்ணி ஆங்கிலேயர் ஏங்கினார்கள். பாரதநாடெங்கும் சுதந்திர உணர்ச்சி பெருகிப் பாய்ந்தது.

எங்கும் சுதந்திர ஒளி, ஆறும், மலையும், காடும், செடியும், பூவும், கொடியும் சுதந்திரத்தாகம் பெற்றுவிட்டன. பேச்சும், மூச்சும் சுதந்திரம். தாயின் முலையைத் தழுவிப் பாலைப்பருகும் மழலைக் குழந்தையின் அழுகைக் குரலிலும் சுதந்திரம். சுதந்திரப் போரால் சிதைந்து வாடி இறந்துபோன வீரர்களின் எலும்புக்கூடும் சுதந்திர உணர்ச்சி பெற்று விட்டது. எங்கும் காந்தீயம். இனிமேல் இந்தியாவில் எங்களால் இருக்க முடியாது என்று ஆங்கிலேயர் எண்ணினார்கள். விழுந்தது ஆங்கில ஆட்சிக்கொடி. அசோகசக்கரம் எழுதிய தாயின் மணிக்கொடி வானில் எழுந்தது. அடிமை இந்தியா இன்று ஆளும் இந்தியா. அன்று அமெரிக்கர்,

“அநாகரிக மக்களின் உறைவிடம் இந்தியா” என எழுதியதை மறந்து, இன்று இந்திய முதல்வர் நேருவை அரசியல் ஞானத்தில் மிக்க ஆற்றல் வாய்ந்தவர் என்று போற்றி வரவழைக்கும் புதுமையைப் பாரதநாடு பெற்றுவிட்டது. காந்தி அடிகள் காட்டிய நெறி நின்று காங்கிரஸ் கட்சி இன்று இந்தியாவை ஆளுகின்றது. காந்தி அடிகள் வாங்கி அளித்த இந்திய சுதந்திரத்தை ஏந்திப் பாதுகாத்தல் இன்றைய இந்திய மக்களுக்கும், இனிவரும் இந்திய மக்களுக்கும் கடமையாகும்.

**தினகரன் 04.04.1954**

❍❍❍

# 19. சிறந்த கொள்கைகள்

இன்று உலகமக்கள் ஒரே குரலால் பேசுகின்றார்கள். ஆறாயிரம் கல் தொலையில் பாடுகின்ற பாட்டைக் கேட்டு ஆவி தளிர்க்கும் புதிய வாழ்வை நாம் பெற்றிருக்கின்றோம். ஒரு மக்களினத்தாரின் கொள்கை களை ஆராய்ந்து அறியக்கூடிய வாய்ப்புக்கள் யாவும் நிரம்பிவிட்டன. உலகப் பொதுநூல், பொதுக் கொள்கை என்பன எப்படி உருவாகின்றன என்பதைப் பல்கலைக்கழகங்கள் பரப்புகின்றன. இந்த வாய்ப்புக்கள் நிரம்பாத பழங்காலத்தில், தமிழகத்திலே, கணியன் பூங்குன்றன் கூறுகின்ற கொள்கைகளைக் கேளுங்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சிந்தித்த சிந்தனையின் திறனை ஆராயுங்கள்.

கனியன் பூங்குன்றன் பழந்தமிழ்ப் புலவன். அவன் உலக மக்களைக் கூவி உயர்ந்த கொள்கைகளைக் கூறுகின்றான். அவன் கூறுகின்ற கொள்கைகள் உலகப் பொதுக் கொள்கைகள். காலத்தையும், மொழியையும் கடந்து நிலை பெறும் ஒப்பற்ற அன்புக் கொள்கைகள்.

“உலகில் உள்ள எல்லா ஊர்களும் எங்களுடைய ஊர்கள் அந்தந்த ஊர்களில் வாழ்கின்ற பல இன மாந்தர்களும் எங்களுடைய உறவினர்கள். தீமையும் நன்மையும் நாங்கள் செய்யும் செயல்களின் பயன்களே ஆகும். எமக்குப் பிறரால் நன்மை தீமைகள் ஏற்படுகின்றன என்று உரைத்தல் தவறு. எங்களுக்கு நாங்களே நன்மை தீமைகளை வருவித்துக் கொள் கின்றோம்.

துன்பத்தை அடைவதும், அத்துன்பந்தீர்ந்து, இன்பத்தை அடைதலும், ஒவ்வொருவரும் தமக்குத் தாமே தேடிக் கொள்கின்றார்கள். சாதல் எமக்குப் புதிய தாகாது. என்று பிறப்பு உண்டோ, அன்றே இறப்பும் உண்டு. சாதலையும் பிறத்தலையும் தவிர்க்க எம்மால் முடியாது. சாதலும் பிறத்தலும் இயற்கை முடிவுகள். நாங்கள் வாழ்வில் ஏற்படும் இன்பத்தை என்றும் நிலையானது என எண்ணி மகிழ்ந்தும் அறியோம். வாழ்க்கையில் கொடிய இன்னல்கள் ஏற்பட்டவுடன் உளம் இடிந்து, வருந்தியும், அறியோம். இன்பத்தையும் துன்பத்தையும் நுகர்ந்து வாழும்பொழுது, விருப்புவெறுப்புக் கொள்வதினால் ஒருபயனும் நிலைபெறாது. பெரு மழைக்காலத்தில் கரைபுரண்டு பெருங்கல்லையும் சிதைத்துப் பாய்கின்ற பேராற்று வெள்ளம் சென்ற வழியே அள்ளுப்பட்டுச் செல்லும் கட்டுமரம் போலவே, பிறவியில் ஈடுபட்ட உயிர்களும் விதியின் வழியே செல்லு மென்பதை அறிஞர்கள் ஆராய்ந்து கூறுகின்றார்கள். நாங்களும் அந்த

உண்மைகளை மிக ஆராய்வுடன் சிந்தித்துத் தெளிந்துவிட்டோம். உண்மையைத் தெளிந்தவுடன் உள் ஒளி பெருகுகின்றது. நாங்கள் பெரியோர் எனச் சிலரைப் பாராட்டி வியக்கவும் விரும்போம். இவர்கள் அறிவில்லாத சிறியவர்கள் எனச்சிலரை இகழ்ந்துரைத்துப் பழிக்கவும் விரும்போம்.

*யாதும் ஊரே யாவரும் கேளிர்,*
*தீதும் நன்றும் பிறர்தர வாரா*
*நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன*
*சாதலும் புதுவதன்றே வாழ்தல்*
*இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்*
*இன்னா தெனாலும் இலமே மின்னொடு*
*வானந் தண்டுளி தலைஇ யானாது*
*கல்பொரு திரங்கும் மல்லற் பேர் யாற்று*
*நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்*
*முறைவழிப் படூஉ மென்பது திறவோர்*
*காட்சியில் தெளிந்தனம் ஆகலின் மாட்சியில்*
*பெரியோரை வியத்தலும் இலமே*
*சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே* (புறம். 192)

இச்செய்யுளே கணியன் பூங்குன்றனின் சிந்தனை ஊற்று. இச் செய்யுள் கருத்துடன், இன்றைய அறிஞர்கள் ஆராய்ந்து கூறும் கொள்கை களை ஒப்பிட்டுப் பாருங்கள்.

**தினகரன் 11.04.1954**

❍❍❍

## 20. கபிலரின் நன்றி உள்ளம்

கபிலர் நல்லிசைப் புலவர். பாரியின் நண்பர். பாரியின் கொடைத் திறனையும் வீரத்தையும் சால்பையும் பாடிப் பாடிப் பழுத்த செந்நாப் புலவர் கபிலர். பாரி முடியுடைய பெருவேந்தன் அல்லன். பாரியின் பண்புகளே கபிலரின் புலமை உள்ளத்தைக் கவர்ந்தன. பொய்யாநாவிற் கபிலன் உள்ளத்தை அள்ளிய வள்ளல் பாரி, முடியுடை மூவேந்தரால் வஞ்சித்துக் கொல்லப்பட்டான். பாரிபட்டபின்பு கபிலரின் புலமை உள்ளம் எழுச்சிபெறவில்லை. பாரியைப் பாடிய நாவால் இனி எவரைப் பாடலாமெனக் கபிலர் எண்ணி ஏங்கினார். ஏங்கிய கபிலருக்கு ஓர் இனிய செய்தி எட்டியது. சேரமான் **செல்வக் கடுங்கோ வாழியாதன்** ஈகையில் சிறந்தவனென்றும், உயர்ந்த பெருங்குணங்கள் நிறைந்தவனென்றும். எங்கும் பரவி கபிலரின் உள்ளத்தை மலர்த்தின. "பாரியுடன் ஈகை ஒழிந்துபோகவில்லை. இன்றும் அதன் பண்பை உணர்ந்து போற்றும் மன்னனொருவன் இருக்கின்றானே. அவனைப் போய்ப் பார்த்துப் பாடவேண்டும்" என்ற எண்ணம் கபிலரைத் தூண்டியது. கபிலர், சேரன் செல்வக் கடுங்கோ வாழியாதனைக் காணப் புறப்பட்டார்.

கபிலர் சேரனைத் தேடிச் சென்ற காலத்தில், அவன் ஒரு போரில் வெற்றிபெற்றுப் பாசறையில் வீற்றிருந்தான். அன்று பாசறையில் வெற்றி விழா. கபிலர் பாசறைக்குச் சென்றார். போர்க்களத்தின் நடுவாலேயே பாசறைக்குப் போகவேண்டும். போர்க்களத்தின் காட்சியில் வைத்துச் சேரனின் வீரத்தையும், போர்த் திறனையும் கபிலர் தெரிந்து கொண்டார். சேரன் பாசறையில் வீற்றிருந்த காட்சி, கொலு வீற்றிருப்பதுபோல விளங்கியது. சேரனின் கொலுவீற்றிருக்கையைக் கண்டவுடன் பாரியின் கொலுவீற்றிருக்கையைக் கபிலர் எண்ணினார். மனக் கண்ணாற்கண்டார். பாரியின் நாட்டையும் எண்ணுகின்றார்.

பாரியின் அரண்மனை அழகான ஓவியங்களுடன் பொலிவது. அவனின் மனையாள் தூயகற்பும் அழகும் நிரம்பியவள். அவளை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்ற பாரி ஈகை அறத்தை மிக இனிதாக ஆற்றினான். பாரியின் மார்பில் பூசியுலர்ந்த சந்தனம் விளங்கும். அவன் என்றும் இல்லையென்னாது ஈந்துவக்கும் ஏற்றம் வாய்ந்தவன். அவனின் வீரம் பகைவரால் அஞ்சத்தக்கது. பாரியுடன் பகைகொண்ட மன்னர்கள், தங்கள் தங்கள் நாட்டில் உள்ள உன்னமரங்களைப் பார்ப்பார்கள். அவைகள் வாடிநிற்கும். பாரியே போரில் வெல்வானென்பதை உன்னமரம் வாடியதில் இருந்து மாற்றார் அறிந்து அஞ்சுவார்கள்.

**தினகரன் 25.04.1954**

# 21. கபிலரின் நன்றி உள்ளம்

பாரியின் நாடு மிக வளம் கனிந்த நாடு. பாரியின் பறம்பு மலைச்சாரலில் பலாமரங்கள் பல. அந்தப் பலாமரங்களில் முற்றிக் கனிந்த பலாக்கனிகள் வெடித்துவிட்டன. வெடிப்பின் வழியாகச் சுளைகள் தோன்றுகின்றன. பலாப்பழத்தின் புறமெல்லாம் காணப்படும் வெடிப்புகள் புண்கள்போலத் தோன்றின. வெடிப்புகளின் வழியாகத் தேன் சுரந்து வழியும். வீழ்கின்ற தேனை வாடைக்காற்று அள்ளி எங்கும் துளிகளாகச் சிதறும். இவ்வளவு நல்ல வளம் படைத்த பறம்பு நாட்டின் தலைவன் பாரி. அவன் இப்பொழுது எம்முடன் இல்லை. மீண்டுவராத உலகிற்குச் சென்று விட்டான்.

பாரி பிரிந்த துயரம் உன்னுடைய புகழைக்கேட்டு ஒருவாறு ஆறியது. நான் உம்மிடம் இரந்துபொருள் கேட்க வரவில்லை. உம்மிடம் இல்லாத குணங்களை உள்ளது போலப் புனைந்து புகழவும் வரவில்லை. பாரியின் கொடையைப் பாராட்டிப் பாடியயான் உமது புகழைக்கேட்டு உயிர் தளிர்த்தேன். நீயோ இரந்தவர்க்கு வேண்டிய செல்வத்தை ஈவா யென்றும், ஈந்தபின் பெருந்தொகைச் செல்வத்தை தந்துவிட்டேனே என எண்ணி வருந்தாய் என்றும் புலவர்கள் புகன்றார்கள். ஈகின்ற பொழுது நான் பெரிய கொடையாளியாக வீற்றிருக்கின்றேன் என எண்ணிப் பெருமிதமடைந்து மகிழ்தலும் செய்யாய் எனவும் கூறினார்கள். முன் ஒருமுறை பரிசில் பெற்றவன் அன்றே இன்னொரு முறை வந்திரந்தாலும் இல்லையென்னாது, ஈயும் இயற்கை வாய்ந்தனீர் என்றார்கள். இங்ஙனம் உனது புகழைக் கேட்டவுடன் நேரிற்சென்று பார்க்க வேண்டுமென்ற எண்ணம் என்னைத் தூண்டியது. வந்தேன் பாரியைப் போல ஈகைக் குணம் பொருந்திய நின்னைக் கண்டு மகிழ்ந்தேன். பாரியுடன் பழகிய கபிலர் பாரியை மறவாத நன்றியுள்ளம் படைத்தவர். முடியுடைப் பெரு வேந்தனைப் பாசறையிற் சென்று பாடும் பொழுது, பாரியைப்பாடியே, பாடுகின்றார். பாரியைப் பாடிப் பாடிப் பயின்ற நா பிறரைப் பாடும் பொழுதும் பாரியைப் பாடியே விடுகின்றது. பாரியின் புகழைக் கேட்ட செல்வக் கடுங்கோ வாழியாதன் சிந்தை குளிர்ந்தான். (பதிற்றுப் பத்தில் 7ம் பத்து)

**தினகரன் 02.05.1954**

❍❍❍

# 22. வாழ்வும் தாழ்வும்

மக்கள் வாழ்ந்து வாழ்ந்து மற்றவர்க்குப் பயன்படப் பிறந்தவர்கள். தம் நலத்தையே பாதுகாத்து வாழ்வதற்காக மக்களினம் தோன்றவில்லை. பிறர் நலத்தைப் பேணி வாழாத வாழ்வு வாழ்வல்ல. அந்த வாழ்வை மற்றவர்கள் சிந்திக்க மாட்டார்கள். பிறர்க்கும் பயன்பட வாழ்கின்ற மக்களைப்பற்றித் தான் இலக்கியங்களும் வரலாறுகளும் எடுத்து மொழிகின்றன. அவர்கள் வாழ்வு என்றும் ஒரேவகையாக நிலவாது. பிறர்க்கு உதவுகின்றவனின் வாழ்வில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

பிறர்க்கு உதவி வாழமுடியாத வறுமை அவனின் வாழ்வில் இடம்பெற்றுவிடும். வறுமையும் செல்வமும் வாழ்வின் இரு கண்கள். வறுமை சிறந்த பண்பு கனிந்தவனின் உள்ளத்தை மாற்றாது. பண்பாளன் தன்னை எந்த வகையான நிலைக்கும் ஏற்பத் தயாரித்து வைத்துக் கொள்வான். அவன் ஊழின் மேலே தனது தாழ்வைச் சுமத்தி ஊக்கமின்றி ஒடுங்கியிரான். வாழ்வும் தாழ்வும் ஊழின் கொடைகள் என்று உரைத்து, உரைத்து, மானமழிந்து வறுமைத் தீயால் வாட்டப்படுகின்ற வாழ்வை வரவேற்கான். ஊழிற்கே தலைமை கொடுத்துரைக்கின்ற குரலில் உணர்ச்சி கிடையாது.

ஊழிற்குத் தலைமை கொடுத்து உறங்குகின்ற மக்களினம் உலக வரலாற்றில் இடம்பெறாது. வாழ்வு மலர நாளும் முயற்சிசெய்தல் வேண்டும். முயற்சியில் வெற்றி தோல்விகள் ஏற்பட்டுக் கிளர்ச்சியை அல்லது தளர்ச்சியைத் தரலாம். கிளர்ச்சியும் தளர்ச்சியும் முயற்சியில் நம்பிக்கை உடையவனை அசைக்கா. முயற்சியுடையவன் தோல்வியைக் கண்டவுடன், திகைத்து நடுங்கமாட்டான். நகைத்து, மேலும் மேலும், நாளும் பொழுதும் முயலுவான். ஊழ் என்பது முயற்சியில்லாதவனிடத்தி லேயே உறைகின்றது. உலையாது முயல்கின்ற உரனாளன் முன்னி லைக்கும் ஊழ் செல்லாது. ஊழைத் தொழுது நாளைக் கழியாமல், ஊக்கமாக முயன்றால், உயர்ந்த ஆக்கங்களை உலகுக்கு உதவலாம். ஊழும், கோளும், நாளும், முயன்று வாழும் செயல் வீரர்களை உலைக்கா.

**தினகரன் 09.05.1954**

❍❍❍

# 23. வாழ்வின் தன்மை - 1

நல்ல பலாமரச் சோலை. சோலையின் பக்கமெல்லாம் பலாக் கனியின் மணம் வீசுகின்றது. பலாமரச் சோலையில் கனிந்த பழங்களை அருந்திக் களித்த ஆண்குரங்கு ஒன்று, மிக இன்ப எழுச்சியுடன் மரக்கிளைகளில் பாய்ந்து விளையாடியது. அந்தச் சோலையில் ஓர் இளம் பெண் குரங்கும் விளையாடி மகிழ்ந்தது. ஆண் குரங்கு, இளமையும் அழகும் நிறைந்த அந்தப் பெண் குரங்கைக் கண்டது. பெண் குரங்கின் அழகு ஆண் குரங்கின் ஆவியை உருக்கிவிட்டது.

ஆண் குரங்கு ஆராத காதலுடன் சென்று, பெண் குரங்கை அணைத்துத் தழுவித் தளிர் நிறைந்த பலாமரப் பொதும்பரில் புகுந்து மறைந்தது. களவிற் சென்ற கடுவனும் மந்தியும் காதல் இன்பம் நுகர்ந்து களித்தன. அந்த ஆண் குரங்கின் அன்புத் தலைவியாக உரிமை பூண்ட பெண் குரங்கு, தன் தலைவனின் தகாத களவொழுக்கத்தைக் கண்டு விட்டது. தன் தலைவன், தன்னை மறந்து, வேறொரு இளம் மந்தியைக் காதலித்துக் கலந்து களித்த செயல் பெண் குரங்கின் மனத்தில் சினத்தை மூட்டியது.

அப்பெண் குரங்கு தன் தலைவனாகிய கடுவனை நோக்கிக் கூறுகின்றது. "நீர், என்னை மறந்து வேறொரு பரத்தையைத் தீண்டிவிட்டீர். பரத்தையைத் தீண்டிய கையால் என்னைத் தீண்டவேண்டாம். பரத்தை யைத் தீண்டிய குற்றம் போகும் வண்ணம் அருவி ஆடிவர வேண்டும்."

கடுவன் கலங்கியது, "என்னை நீ இப்படிச் சொல்லக்கூடாது. தேனைக் குடித்தவர்கள் வேப்பங்காயைத் தின்பார்களா? உனது அன்புக் காதலைப் பெற்றயான் வேறொரு பெண்ணையும் காதலிப்பேனா. இன்னும் சிறிது நேரத்தில் என் ஆவியை விடுப்பேன். என்னை நீ வெறுத்துக் கூறலைத் தாங்கமாட்டேன்" என்றது.

கடுவனின் கடுமொழிகள் ஊடல் கொண்ட மந்தியின் உள்ளத்தில் அச்சத்தை ஊட்டின. தான் சினந்தால் தன் தலைவன் இறந்துவிடுவானோ என்ற ஏக்கத்தினால் ஊடல் நீங்கியது. ஊடல் நீங்கிய மந்தி தன் காதற் கடுவனைத் தழுவி மகிழ்ந்தது. தான் ஊடிய பிழையை எண்ணித் தன்னையே தான் இகழ்ந்தது.

**தினகரன் 16.05.1954**

○○○

# 24. வாழ்வின் தன்மை – 2

தான் வேறொரு பெண் குரங்குடன் களவு ஒழுக்கம் நிகழ்த்திய தவறைத், தன் காதல் மனைவி கண்ணாற் கண்ட பின்பும், தன்னைத் தழுவிப் பாராட்டிய செயல், கடுவனின் மனத்தைக் கனிவித்தது. தனது காதல் தலைவியை மகிழ்விக்க வேண்டுமென்ற ஆராமை, கடுவன் உள்ளத்தில் பெருகியது. உடனே கடுவன் இனிய பலாக் கனியைப் பறித்தது.

பறித்த பலாக்கனியைத் தன் கைகளால் பிழந்து இனித்த பலாச்சுளை களை எடுத்தது. தனது காதல் மந்தியை அணைத்துக் கொண்டு, பலாச் சுளைகளை அதன் வாயில் வைத்து உண்பித்தது. மந்தியும் மகிழ்வுடன் தேன்சிந்தும் பலாச்சுளைகளை உண்டது. காதல் மந்தி உண்ண உண்ணக் கடுவனின் உள்ளம் என்றும் இல்லா இன்ப வெறி கொண்டது. மந்தியும் கடுவனும் தம்மை மறந்து இன்ப உலகில் இருந்தன.

இங்ஙனம் மந்தியும் கடுவனும் ஆவிதளிர்த்து, ஆர்வம் கொண்ட சமயத்தில், பலாச்சோலையின் காவற்காரன் கண்டான். கண்டதுங் கடுஞ்சினங்கொண்டான். உடனே அந்தக் காவற்காரன் கடுவனையும் மந்தியையும் கலைத்தான். காதல் இன்பச் செவ்வியில் களித்திருந்த கடுவனும் மந்தியும், காவற்காரனுக்கு அஞ்சிக் கனிந்த பலாச்சுளைகளை அப்படியே விட்டுச்சென்றன. காவற்காரன் மந்தியும் கடுவனும் விட்டுச் சென்ற பலாக்கனியின் இனித்த சுளைகளை எடுத்தருந்தி இன்பமடைந் தான்.

மந்தியும் கடுவனும் மகிழ்ந்தருந்திய பலாச்சுளைகள், ஓர் கண்ணிமைப் பொழுதில் காவற்காரன் கையில் அகப்பட்டுவிட்டன. வலியவர் மெலியவரின் வாழ்வைக் கெடுத்துத் தாம் இன்பம் அடை கின்றார்கள். வாழ்வின் தன்மை, மந்தியுங் கடுவனுங் கண்ட இன்பம் மறைந்த செயல் போன்றது. ஒருவரின் துன்பமே மற்றவரின் இன்பமாக மாறுகின்றது. பிறரை வருத்தாமல் பெறுகின்ற இன்பமே மேலானது. நாங்கள் அடைகின்ற இன்பம் இன்னொருவரால் அழிக்கக்கூடிய நிலையில் உள்ளது. நிலையில்லாத இன்பத்தை விட்டு நிலையான இன்பத்தைத் தேடுங்கள்.

**தினகரன் 23.05.1954**

○○○

# 25. கவிதையின் சிறப்பு

கவிதை உயிர் உணர்ச்சியில் நின்று ஊறிப் பெருகும் அருவி. மலையின் உச்சியில் நின்று பெருகி நிலத்தில் பாய்ந்து மன்னுயிர்களைப் பாதுகாக்கின்ற அருவி போலவே கவிதையும் பயன் சுரக்கின்றது. கவிதை அருவி கால வெள்ளத்தைக் கடந்து பாயும் ஆற்றல் வாய்ந்தது. புலவனின் சிந்தனை மலையில் ஊறிச்சுழி எறிந்து, உலகை நோக்கிப் பெருகுகின்ற வற்றாதபெரு வெள்ளம், கவிதையாகும்.

புலவனின் சிந்தனையைத் தொடாமல் தோன்றுகின்ற கவிதைகள், பாலை நிலத்தில் ஊறிய சிற்றாறுபோல வறண்டு மறைந்துவிடும். பிறரின் கட்டாயத்தினால் கவிதை தோன்றாது. பிறர் ஆணையிட்ட கட்டளை களுக்குக் கட்டுண்டு ஆக்குகின்ற கவிதைகள், வெறுஞ் சொற்கூட்ட மாகும். அந்தக் கவிதைளில் புலவனின் உயிர்ச்சாயல் வீசாது. படிக்கின் றவர் உள்ளத்தைப் பறித்துப் பந்தாட்டம் புரிகின்ற உயிர்க் கவிதைகள் உலகம் உள்ளளவும் வாழ்கின்றன.

இயற்றப்பட்ட காலத்தில் சில கவிதைகள் மிக்க வரவேற்பைப் பெறுகின்றன. அந்தக்கால மக்களின் எண்ணங்களுக்காகவே எழுந்த கவிதைகள், அந்த மக்களுடன் வாழ்ந்து அவர்கள் மறையத் தாமும் மறைந்து விடுகின்றன. சிறந்த புலவன் செய்கின்ற கவிதைகள், முக்காலத் தையும் தழுவி வாழ்கின்ற தற்காப்புப் பொருந்தியன. ஓர் மக்களினமும், காலத்திற்கேற்ற தழுவல் நெறியை மேற்கொள்ளாவிடின், விரைந்து சிதைந்து விடும். வாழ்க்கைப் போரில் தோற்காமல் நிலைபெறக்கூடிய தழுவல் நிலைப் பண்பு நிரம்பிய மக்கள் இனமே வழி வழியாகத் தொடர்ந்து நிலவக்கூடியது.

கவிதையும் காலக்கட்டுக்களை உடைத்தெறிந்து வாழவேண்டும். காலக்கட்டை உடைத்தெறியுங் கவிதைகளே இன்று எம்முடன் கலந்து வாழ்கின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய சங்கச் செய்யுட்கள் இறந்து போகாமல் இளமை எழிலுடன் வாழ்கின்றன. அவற்றிற்குப்பின் எம் கண் காணத் தோன்றிய எத்தனையோ கவிதைகள் இறந்துவிட்டன.

ஓடுகின்ற வெள்ளத்துடன் ஒத்து, ஓடுகின்ற துரும்புகள் போல, உயிரற்ற கவிதைகள் உலக மக்களின் உள்ளத்தைவிட்டு நெடுந் தொலைக்குச் சென்றுவிடுகின்றன. பெருகிவரும் வெள்ளத்தை, வழிமாறிப் பாயும் வண்ணம் பிரித்து, அசையாது நிற்கின்ற மலை போன்ற கவிதைகள் என்றும் வாழ்கின்றன.

**தினகரன் 30.05.1954**

# 26. கடமை உணர்ச்சி

மக்கள் வாழ்வில் கடமை உணர்ச்சி மிகச்சிறந்தது. உயிரினும் உயர்ந்தது. கடமை உணர்ச்சியே வாழ்வின் கற்பகம். உலகவரலாற்றில் இடம்பெற்ற பெரியார்கள், கடமை உணர்ச்சியைக் கண்ணெனப் போற்றி யவர்கள். குறித்த நேரத்தில் எடுத்த செயலை என்னென்ன இடையூறுகள் நேர்ந்தாலும், முடித்து வெற்றிபெற்ற மேன்மை கடமையுணர்ச்சியாளர்க்கே உரியதாகும்.

கடமையுணர்ச்சியாளன் பிறர் கூறுகின்ற புகழையும் இகழையும் பொருட்படுத்தான். தன்னால் முடியாதவற்றை முடியுமென்று, உயிர் போகவரினும் உரையான். எடுத்த செயலை முடிக்க முன்னர், என்னவாய் இச்செயல் முடியுமோ என்று, எண்ணி உள்ளந்தளரான். மாற்றார் செய்யும் இடையூறுகளை மலர்ந்த முகத்துடன் வரவேற்பான். அவர்கள் தன் செயலைத் தடுக்க எடுத்த எதிர்ப்புக்களையெல்லாம், சொல்லால் எதிர்த்து வெல்லாமல், செயலால் வென்று சிறப்பான். எல்லாம் அவன் செயல் என்று எண்ணி - வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்று வழுத்தி, நில்லா உலகம், நிலையா வாழ்க்கை, எல்லாம் பொய் மயக்கு என்று இராமல், தன்னால் ஆகும் அளவு தன்னம்பிக்கையோடு வாழ வழிதேடுவான்.

கெட்டகாலம் வந்தென்னைக் கெடுத்ததென்றோ, எட்டில் வியாழன், எனக்கொன்றும் பயன்படாதென்றோ, கட்டுக்கதைகள் உரைத்துக் காலங் கழியான். மூன்றாம் குழந்தை பிறந்தநாள் தொடங்கி முன்னுக்கு வரவிட வில்லை; காலம் கூடாது; என்னை ஆண்டான் செயலை ஆரால் அறிய முடியுமென்று வேண்டாத வெற்றுரைகள் வீட்டில் இருந்து பேசி, உயிரோடு வாழ்ந்தும், மாண்டார் போல இருக்கும் மதியில்லாச் செயலை விரும்பான். தீண்டாமைப் பேயும், தீராத சமயப் போரும், வேண்டாத மூடவழக்கங் களும், அவன் வாழ்வில் இடம் பெறமாட்டா.

பெண்குலத்தை இகழ்ந்துரைத்துப் பேரின்பம் அடைய விரும்பும், கண்ணற்ற துறவைக் கனவினும் கருதான். வறியவன் யான், வாழ வழியற்றவன், ஒருவரும் துணையில்லை, ஊரில் மதிப்பில்லை, என்று எளிய சொற்களைச் சொல்லி இரக்க நினையான். சிந்தனையுண்டு. செயல் வீரர்களின் வாழ்க்கை வரலாறு உண்டு. வந்தபொருளைக் கொண்டு, வாழ்க்கையைப் போக்க மதியுண்டு. தந்தையைத் தாயைத் தம் முன்னோரை நொந்துரைக்காமல், நெஞ்சில் நிழலாடும் அஞ்சாமையும், அறமும் எம்மை ஆக்குமென்ற எஞ்சாத எழுச்சி கொள்வான்.

கந்தை சுற்ற வழியின்றிக் கஞ்சிக்கலையும் வாழ்வையும், ஐந்தடுக்கு மாடத்தில் வீற்றிருந்து இந்திரச் செல்வந்துய்க்கும் வாழ்வையும், இந்த உலகில் இயற்றிவைத்தான் இறைவன் எனக் கூறிச் சிந்தை சிதையும் செயலை வெறுப்பான். இன்பமும் துன்பமும் என்றும் உள்ளவை. அவை இயற்கைக் கொடைகள். அழகான தோகையை விரித்தாடும் மயில், அப்படியே அயர்ந்து விழுந்து ஆவிதுறப்பது போலவும், இனித்த தேனைச் சிந்தி இன்று மலர்ந்த பூக்கள் அதே பொழுதில் காய்ந்து அழகுகெடுவது போலவும் மாறிமாறி இன்பதுன்பங்கள் வாழ்வில் மோதுகின்றன. ஆடுகின்ற ஊஞ்சல் போல, அவற்றால் அலையாமல், வாழ்ந்து மலர்ந்து மகிழும் இன்பம் ஏந்தும் கடமை உணர்ச்சி உடையார்க்கே இவ்வுலகில் வெற்றி உண்டு.

**தினகரன் 06.06.1954**

❍❍❍

# 27. ஆற்று வெள்ளம்

ஆறுகள் மலையின் உச்சியில் நின்று இறங்கி, நிலப்பரப்பின் வழியாகக் கடலை நோக்கிப் பாய்கின்றன. ஆற்றுவளம் நிரம்பிய நாடு அழகின் பிறப்பிடம், ஈகையின் தந்தை. அறிவின் சுரபி. ஆண்மையின் அரண். ஆற்றில் வெள்ளம் பெருகி நாட்டில் பாயும்பொழுது, அங்கு வாழ்கின்ற மக்கள் அளவில்லாத இன்பம் அடைவார்கள்.

கரும்பும், நெல்லும், வாழையும், கமுகும், பலாவும், மாவும் பயன் கனிய, மண் மகளை ஆற்று வெள்ளம் செவிலித்தாய் போல வளர்க் கின்றது. பறவை இனங்களும் விலங்கினங்களும் உவகை நிரம்பிய உள்ளத்துடன், பருத்த சேல் மீன்களை அருந்தியும், அஞ்சாத நெஞ்சுடன் ஆற்றோரங்களில் உள்ள மரக் கொம்பர்களிலும், மணற்பரப்பிலும், பறந்தும் பாடியும், உறங்கியும் ஓடியும், கூடியும் ஊடியும், உள்ளங் களிக்கின்றன.

ஆற்றில் பாயும் வெள்ளத்தை அணை கட்டித் தாம் நட்ட நெற் பயிர்கள் நன்கு செழித்து வளரும் வண்ணம், நீர்பாய்ச்சுகின்ற வேளாளரின் ஒலி ஒரு பக்கத்தில் கேட்கும். இளம் பருவமாந்தரும், மகளிரும் மலர்ந்த செந்தாமரைப் பூக்களின் அழகை நயந்து, அவற்றைப் பறிக்கும் வண்ணம் ஆற்றுவெள்ளத்தின் மேல் அழகிய கட்டு மரங்களைப் பரப்பிக், கூட்டம் கூட்டமாக ஏறிச் செல்லும் காட்சி, வெண் முகில் பரந்த வானத்தின் ஊடே பறந்து செல்லும் வான ஊர்தியில் இருக்கின்ற மக்களைப் போலத் தோன்றுகின்றது.

இன்னொரு பக்கத்தில் புதிய ஆற்று வெள்ளத்துடன் புறப்பட்டு உலாவும் மீனினங்களைப் பிடிக்கும் நோக்கத்துடன் பெரிய வலைகளை விரித்து, வளைந்த தோணிகளில் ஏறிப் போகும் மீன்பிடியாளரின் தோற்றம், விரைந்து செல்லும் குதிரைகள் மேல் வீற்றிருந்து, வேலையும் வாளையும் சுழற்றிய வண்ணம் போர்க்களத்தை நோக்கிச் செல்கின்ற வீரர்களைப்போல் விளங்கியது. வலையால் வாரிய மீன்களை ஆற்றங் கரை வெண் மணலிலே பரப்பி விலை கூறுகின்ற பெண்களை ஏமாற்றித் தலைகீழாய்ச் சுழன்று தாழ்ந்து வரும் பருந்தினங்கள் அலையோசை போல் செட்டைகளை அடித்து வீழ்ந்து மீன்களை அள்ளிக் கொண்டு அகல் வானிற் பறந்தன.

பாய்ந்து வரும் ஆற்று வெள்ளம் சாய்ந்த கண்களையுடைய மதகு களின் வழியாக ஓங்கும் அலைகளை அடித்து உறுமிப் பாயும் ஒலி,

வானிற் பறந்துவட்டமிட்டுக் குண்டைமாரிபோல் வாரி இறைக்கும் போரிற் சிறந்த வானஊர்திகளின் பேரொலியை ஒத்தது. மற்றொரு பக்கத்தில் வந்த வெள்ளத்தைத் தடுத்து வரம்பு கட்டுகின்ற உழவர்கள் அந்தந்த அகில கட்டைகளையும், மயில் தோகைகளையும், விலை மதிக்க முடியாத வலம் புரிச்சங்குகளையும், முத்துக்களையும், அள்ளிச் சென்று தங்கள் தங்கள் வீட்டு முற்றங்களில் குவிப்பார்கள்.

அவர்களின் இளங் குழந்தைகள் கொடிவிட்டுப் படர்ந்த இள முல்லையை அடியோடு ஆற்று வெள்ளம் அள்ளிப் போய்விட்டதென அழுவார்கள். வைத்து விளையாடிய வண்ணப்பாவைப் பிள்ளையை வாரிக்கொண்டு போன ஆற்று வெள்ளத்தைத் திட்டிய வண்ணம் சிறுமிகள் தேம்பித் தேம்பி அழுவார்கள். ஆற்றுவெள்ளமும் தன் காதலனாகிய கடலிற் சென்று கலந்து மறைந்தது.

**தினகரன் 13.06.1954**

❍❍❍

# 28. இளமையும் முதுமையும்

இளமையும் முதுமையும் மக்கள் வாழ்வின் மாறுபட்ட இரு பருவங்கள். இளமைப்பருவம் மிக இனியது. குறு நடையும், புன்சிரிப்பும், மழலை மொழியும், மலர்க்கையும், வண்டுவிழியும் மலர்ந்த முகமும் வாய்ந்த இளமைப்பருவம் அழகுத் தெய்வத்தின் புது விருந்தாகும். இந்த இளமைப் பருவத்தின் எழிலே கவிதையில் உயிராக வாழ்கின்றது. வெண்ணிலாவில் ஒளியாக வீசுகின்றது. கரும்பில் இனிப்பாகக் கனிகின்றது. தேனில் சுவையாகச் செறிகின்றது. வீரமும், எழுச்சியும், விடா முயற்சியும், காதலும் இளமைப் பருவத்தின் தோழர்கள். இளமையுள்ளம் பளிங்கு போன்றது. வளரும் பருவப் பயன்கள் யாவும் இளமை வாழ்வில் அடியிட்ட எண்ணங்களின் குழந்தைகள். இளமையில் என்ன கொள்கைகள் எமது உள்ளத்தில் இடம் பெறுகின்றனவோ, அவைகளே எங்கள் வாழ்வில் ஊன்று கோலாக உதவுகின்றன.

முதுமைப் பருவம் இளமைப் பருவத்தின் எதிரி. இளமைப்பருவ எழுச்சிகள் அமைதி பெற்று முதுமைப் பருவத்தில் வளம் சுருங்குகின்றன. புதிய செயல்களில் ஈடுபடும் துணிவு சுருங்கப் பழைய செயல்களை எண்ணி ஏங்கும் நிலைமை முதுமைப் பருவத்தில் தோன்றுகின்றது.

எண்ணியதை எண்ணியாங்கு செய்யும் திண்ணிய தன்மை சிதைகின்றது. மலர்ந்த நோக்கும், விரிந்த உள்ளமும், நிமிர்ந்த நடையும், சுரந்து பாயும் காதல் வாழ்வும், நிறைந்த வீறும் முதுமைப் பருவத்தில் முளைப்பு அழிகின்றன. பணிந்த மொழியும், தளர்ந்த உடலும், குனிந்த நடையும், முதுமைப் பருவத்தின் வெளிக்கோலங்களாகக் காண்கின்றோம்.

இந்த இரு பருவங்களிலும் ஏற்படும் இன்பதுன்பங்கள் அவரவர் மன நிலைமையைப் பொறுத்ததாகும். இளமையில் முதுமையும், முதுமையில் இளமையும் படைத்த மக்கள் பலரை நாங்கள் காண்கின்றோம். உடலின் எழில் இளமையைக்காட்ட, உள்ளத்தின் எழில் முதுமையைக் காட்டுமாயின் அந்த வாழ்வில் இளமையில் முதுமையைக் காணலாம். பல இளைஞர்கள், இளமை உடலைத்தாங்கி, முதுமை உள்ளத்துடன் உலாவுகின்றார்கள். அச்சமும், மறதியும், ஊக்கக்குறைவும், உள்ளவர்களாய் எச்செயலிலும் கருத்து ஊன்றாமல் பிச்சை எடுத்து வாழ்வாரைப் போல் பேடிகளாய் வாழ்கின்றனர். இவர்களின் உள்ளம் முதுமையடைந்துவிட்டது. உடல் மட்டும் இளமைக் கோலத்தோடு அசைகின்றது. உள்ளத்தில் முதுமை தட்டிய இளமைப் பருவம், பெருவெள்ளத்தில் அடிப்பட்ட துரும்புபோல நிலைதிரிந்து கெடும்.

வாழ்ந்து பல ஆக்கங்களை மக்கள் இனத்திற்கு வழங்க உதவும் இளமைப் பருவத்தை, தாழ்ந்து, தவழும் முதுமை உள்ளத்துடன் சேர்த்துப் பாழாக்கும் பேடிகள், மக்கள் இனத்தின் பகைவர்கள். குலத்தைக் கெடுக்கும் கோடரிக்காம்புகள். சில முதியவர்கள் முதுமை உடலைத் தாங்கி, இளமை உள்ளத்துடன் வாழ்கின்றார்கள். உடலின் கட்டுத் தளர்ந்தாலும், ஊக்கந் தளராமல் உழைக்கின்றார்கள். மலைபோலத் துன்பம் வாழ்வில் வந்து மோதினாலும், நிலை தளர்ந்து, நெடுமூச்செ றியாமல், தலை கொடுத்துத் தாங்குகின்றார்கள். உடலின் உறுதி குறையைக் குறைய, ஊக்கமுடைமை நிறைந்து, சிறந்த இளமைப் பருவத்தின் எல்லையை முதியவர்கள் எட்டித் தொடுகின்றார்கள்.

முதுமையும் இளமையும் உடலளவில் தங்கி நிற்பனவல்ல. உள்ளத்தின் எழுச்சியைப் பொறுத்ததாகும். உள்ளத்தில் எழுச்சி இல்லா இளமை வாழ்விலும் உள்ளத்தில் எழுச்சி நிறைந்த முதுமை வாழ்வு மேலானது. எண்பது ஆண்டுகள் வாழ்ந்து உடலில் இளமை மாறவும், உள்ளத்தில் இளமை மாறாத செயல் வீரர்கள் பலரை உலகத்தில் காண்கின்றோம். இருபது ஆண்டுகள் வாழ்ந்து உடலில் இளமை விளங்க, உள்ளம், எண்பது ஆண்டுகள் நிறைந்த முதுமையாளராய் செயலற்று அலைகின்ற இளம் முதியவர்களையும், காண்கின்றோம். இளமையில் முதுமை படராமல், எழுச்சியுடன் வாழ்ந்து, நிலையான செயல்களை ஆக்கும் இளம் வீரர்களை இன்றைய உலகம் வரவேற்கின்றது. இந்த இளம் வீரர்களையும், முதுமையில் இளமை படர்ந்த முதிய இளைஞர்கள் போருக்கு, அறைகூவி அழைக்கின்ற ஆண்மைக் குரலுங் கேட்கின்றது.

**தினகரன் 20.06.1954**

❍❍❍

# 29. வேண்டுதல்

என் உள்ளத்தில் உள்ள ஐயங்கள் அகலவேண்டும். அச்சம் தொலைய வேண்டும். எனது தோள், வலிமை பெறவேண்டும்; வாளைக் கொண்டு வெட்டினாலும் மாறாத உடலுறுதி வேண்டும். கதிரவன் ஒளியால், கட்டவிழ்ந்த தாமரை மலர்போல், எனது முகத்தில் ஒளி அலைவீச வேண்டும். பலர் பாடுபட்டுப் பொருளைத் தேடுகின்றார்கள். தேடிய பொருளைக் கொண்டு, உண்டும் உடுத்தும் மகிழ்கின்றார்கள். பொருளற்ற வெறுங்கதைகளைப் பேசிப் பொழுது போக்குகின்றார்கள். பிறரை வருத்திக் கொடுஞ் செயல்கள் புரிகின்றார்கள். இப்படியே வாழ்நாளைக் கழித்துக் கிழப்பருவம் அடைந்து, மாய்ந்து போகின்றார்கள்.

இவர்களைப்போல நானும் வேடிக்கை வாழ்வில் ஈடுபட்டு மாய மாட்டேன். நீ எனக்கு உதவிசெய்ய வேண்டும். உனது உதவி எனக்குக் கிடைத்தால் உலகைப் புதுக்கிப் படைப்பேன். நான் எண்ணுகின்ற காரியங்கள் எல்லாம் வெற்றியாக நிறைவேறும். நல்ல முயற்சி செய்து பெரும் பொருளைத் தேடுவேன். எனது முயற்சிக்குப் பக்கத்துணையாகப் பல தொண்டர்களைச் சேர்த்துக் கொள்வேன். இலக்கியத்தையும் இசையையும் நுகர்ந்து, இன்பமடைவேன். நானும் புதிய பாட்டுக்கள் பாடி மகிழ்வேன்.

கல்லை மாணிக்கமாகவும், செம்பைக் கட்டித்தங்கமாகவும், புல்லை நெல்லாகவும், பன்றிக்குட்டியைச் சிங்கக்குட்டியாகவும், மண்ணை இனிய வெல்லமாகவும், ஆக்குதல் போன்ற புதுமை உணர்ச்சி தோன்றும் வண்ணம் எமது நாட்டை மலர்த்துவேன். வறுமையும் கொடுமையும் நீங்கிக், கல்வியும் செல்வமும், வீரமும் வெற்றியும் அறிவும் ஆண்மையும் நிலைபெறும் அமரர் நாடாக ஆக்குவேன். கனியில் சுளையும் காற்றில் இயக்கமும் கலந்து நிற்பதுபோல, நீ எங்கும் கலந்து நிற்கின்றாய்.

புதியதில், புதியதும் நீ; முதியதில் முதியதும் நீ; உயிரில் உயிரும் நீ; உணர்வில் உணர்வும் நீ. அறிவொளியாய் அனைத்தினும் கலந்த ஆற்றலே! சாவாச் சுடரே! என்னைக் காப்பாற்றுவாய். எனக்குக் கவிதை உணர்ச்சியைத் தருவாய். நான் கவிதையினாலே நாட்டுமக்களின் கவலை களைத் தீர்ப்பேன். அன்புச்சாயலை அள்ளி வீசுவேன். ஆண்மைக் கனலை மூட்டுவேன். அடிமைக்காட்டை எரிப்பேன். (பாரதியாரின் பாட்டைத் தழுவியது.)

**தினகரன் 27.06.1954**

# 30. அன்புப்பணி

அன்பு உயிரின் ஊற்று. அன்பினால் உயிர்கள் வாழ்கின்றன. அன்பு உள்ளத்தில் சுரந்து பெருகப் பெருக அச்சம் அகல்கின்றது. கொல்லும் கொடிய குணமும் மாறுகின்றது. சித்திரகூட மலைச்சாரலில் முனிவர்கள் தவஞ்செய்கின்றார்கள். அந்த மலையின் அருவி ஊற்றுப்போல, அன்பு ஊற்றெடுத்துப் பாய்கின்றது. முனிவர்களின் பக்கத்திலே கொடிய விலங்குகள் கூட்டம் கூட்டமாகத் திரிகின்றன. அவர்கள் உள்ளத்தில் அச்சமே கிடையாது. விலங்குகளும் முனிவர்களைக் கண்டு சிறிதும் அஞ்சாமல் வாழ்ந்தன. அச்சம் அகல அகல அன்பு முதிர்ந்தது. விலங்குகள், தம் உயிரினும் மேலாக முனிவர்களை மதித்தன. முனிவர்கள் அன்பின் சாயலாக விலங்குகளை நோக்கினார்கள். விலங்குள்ளமும், முற்றுந்துறந்த துறவுள்ளமும் அன்பினால் ஒன்றுபட்டுவிட்டன. முனிவர்கள் மனத்தில் எண்ணுவதை விலங்குகள் அறிந்து செய்தன.

முனிவர்கள் பல ஆண்டுகளாக வீற்றிருந்து தவஞ்செய்தார்கள். முதுமையினால் மிகத் தளர்ந்துவிட்டார்கள். உடல் தளர்ந்தாலும் அவர்களின் ஊக்கம் தளரவில்லை. சில முனிவர்கள் மிகப் பழுத்த கிழவர்கள். அவர் களால் எழுந்து நடக்கவும் முடியாது. தண்ணீர் குடிக்க விரும்பினார்கள். கமண்டலத்தைப் பார்த்தார்கள். தண்ணீர் இல்லை. மலை அருவியில் சென்று தண்ணீர் குடிக்க எண்ணினார்கள். எழும்ப முடிய வில்லை. இவர்களின் எண்ணத்தை யானைக் கன்றுகள் உணர்ந்துவிட்டன. அவைகள் விரைவாக மலை அருவியில் சென்று தமது துதிக்கைகளினால் நீரை அள்ளின. அள்ளிய நீரை அப்படியே கொண்டு போய் முனிவர்களின் கைகளிலே உள்ள கமண்டலங்களில் ஊற்றின. முனிவர்கள் நீரைப்பருகி விடாய் தீர்ந்தார்கள்.

சில முனிவர்கள் முதுமையினால் கண்பார்வை குறைந்து விட்டார்கள். அத்துடன், எழுந்து நடந்தால் தள்ளாடி விழுவார்கள். இந்தத் தள்ளாத நிலையிலும் நீராட விரும்பினார்கள். மலை அருவிக்குச் செல்ல அவர்களால் முடியாது. எழுந்தார்கள், தளர்ந்து விழுந்தார்கள். இவர்களின் எண்ணத்தை ஆண் குரங்குகள் உணர்ந்துவிட்டன. உடனே அவைகள் தமது நீண்டு வளைந்த வால்களை நீட்டி நிமிர்த்திய வண்ணம் முனிவர் களுக்குப் பக்கத்திலே சென்று நின்றன. முனிவர்கள் குரங்குகளின் குறிப்பை உணர்ந்து அவற்றின் வால்களைப் பிடித்து எழுந்தார்கள். குரங்குகள் மிக அன்புடன் அவர்களை மெல்ல நடத்தி அருவிக்கரைக்கு, அழைத்துச்

சென்றன. முனிவர்கள் அருவி ஆடி அகம் மகிழ்ந்தார்கள். யானைக் கன்றுகளும், ஆண் குரங்குகளும் அருந்தவ முனிவர்களுக்கு ஆற்றிய அன்புப் பணியை, எண்ண, எண்ண, எங்கள் ஆவி தளிர்க்கின்றது. (கம்பன் கவிதையிற் கண்டது.)

**தினகரன் 04.07.1954**

❍❍❍

# 3
# நற்றிணைச் செல்வம்

# 1. நற்றிணைச் செல்வம்

களவொழுக்கத்தின் ஈடுபட்ட தலைவன் பகல் நேரத்திலே தலைவியைக் கண்டு செல்லும் வழக்கத்தை மேற்கொண்டான்.

இவன் இப்படியே பல நாளும் வந்து தலைவியைக் கண்டு செல்வானானால், திருமண முயற்சி எடுக்க மாட்டானென்பதைத் தோழி உணர்ந்தாள்.

தோழியின் கருத்தைத் தலைவியும் ஆதரித்தாள். தலைவனின் உள்ளத்தில் திருமண முயற்சியை உண்டாக்குதற்கேற்ற நடிப்பைத் தோழியுந் தலைவியும் சேர்ந்து செய்தனர். ஒருநாள் தலைவன் வந்து வேலிப்புறத்தில் நின்றான். அவன் வந்து நிற்பதைக் காணாதவர் போல நடித்த தோழியும் தலைவியும், களவொழுக்கத்தினால் தமக்கு வந்திருக்கின்ற தொல்லைகளைப் பற்றிப் பேசிக் கொண்டனர். தோழி தலைவிக்கு, உன்தாய், கிளி தினைக் கதிர்களைக் கொய்திருக்கின்ற காட்சியைக் கண்டாள். தினைக் கதிர்களைக் கிளிகள் கவர்ந்துண்ணும்படி விட்டு நீ எங்கே சென்றாய் என்று உன்னைச் சினந்து கேட்டாள். அந்தக் கேள்விக்குத் திடீரென மறுமொழி சொல்லத் தெரியாமல், நீ திகைத்துவிட்டாய் திகைப்பினால் வாய்தடுமாறி "நான் தலைவனைக் கண்டதுமில்லை, அவனுன் நீராடியதுமில்லை" என்றும் கூறிவிட்டாய். நீ கூறிய மொழிகளைக் கேட்டதும் அன்னை சினங் கொண்டு விட்டாள். இனிமேல் துயரத்தை எடுத்துக் கூறினாள். "ஒரு நாள் உன்னுடைய அன்னை தினைப்புனத்திற்கு வந்தாள். கிளி அன்னையின் சினத்தையும் தாங்கிக் கொண்டு, நீ எங்ஙனம் வாழப் போகின்றாய். உன்னுடைய நிலைமையை எண்ணி யான் மிக இரக்கம் அடைகின்றேன்" என்றாள். இங்ஙனம் தலைவிக்கு வந்துள்ள துன்ப நிலையைத் தலைவன், உணர்ந்தால், திருமணத்திற்கு வேண்டிய முயற்சியை விரைந்து செய்வான் என்பதே தோழியின் எண்ணம்.

"தோழி! இதனைக் கேள். உன்னுடைய அன்னை உன்னை நோக்கினாள். அழகிய நெற்றியை உடைய இளமகளே, நீ இடமகன்ற மலைச் சாரலில் உள்ள தினைக்குக் காவல் நின்றாய். சிவந்த வாயை உடைய பச்சைக்கிளிகள், தினைக்கதிர்களைக் கவர்ந்து விட்டன. நீ எங்கு சென்றாய் எனச் சினந்து கேட்டாள். பல முறையும், கேட்டாள். நீ அஞ்சிவிட்டாய். அச்சத்தினால் சொல்வதின்னதென்று தெரியாமல் திகைத்துவிட்டாய். அம்மா! மூங்கில் பிளவால் செய்த கிளிகடி கருவியென்னும் தட்டையையே உடைய நான், அருவி ஒலிக்கின்ற மலைநாட்டுத் தலைவனைப்

பற்றிக் கேட்டும் அறியேன். அவனை நேரில் கண்டும் அறியேன். மலர்ந்த பூக்களைக் கொய்து அவனுடன் பொய்கையிலே ஆடியும் அறியேன் என்று வாய் தடுமாறிக் கூறிவிட்டாய். பொய்யொன்றும் கூறாமல் ஐயோ அப்படியே உண்மையைக் கூறிவிட்டாய். அதனைக் கேட்டு அன்னை சினத்தோடு வெட்கமும் கொண்டு தலைகுனிந்து விட்டாள். இனி நீ தினைப்புனத்திற்குச் செல்ல முடியாது. இங்ஙனம் அறியாமை நிரம்பிய நீ எப்படி வாழ்வை நன்கு செலுத்தப் போகின்றாய் என்று இரங்கத்தக்க நிலையை அடைந்துவிட்டாய், உன், அன்னையின் சினத்தில் நின்று எங்ஙனம் தப்பப்போகின்றாய்.''

## தோழி

*யாங்குவமோ அணிநுதற் குறுமகள்*
*தேம்படு சாரல் சிறுதினைப் பெருங்குரல்*
*செவ்வாய்ப் பைங்கிளி கவர நீமற்று*
*எவ்வாய்ச் சென்றனை யவணெனக் கூறி*
*அன்னை ஆனாள் கழற முன்னின்று*
*அருவி யார்க்கும் பெருவரை நாடனை*
*அறியலும் அறியேன் காண்டலும் இலனே*
*வெதிர் புனை தட்டையேன் மலர்பூக் கொய்து*
*சுனை பாய்ந்து ஆடிற்றும் இலனென நினைவிலை*
*பொய்யல் அந்தோ வாய்த்தனை அதுகேட்டுத்*
*தலையிறஞ் சினளே அன்னை*
*செல வொழிந்தனையால் அளியை நீ புனத்தே*

*(147. கொள்ளம் பக்கனார் பாட்டு)*

குறுமகள் - இளமகள்; குரல் - தினைக்கதிர்; தேம் - இடம்; வெதிர் - மூங்கில்; தட்டை - கிளிகடி கருவி; வாய்த்தனை - உண்மையை உரைத்து விட்டாய்; தலை இறைஞ்சினள் - தலை குனிந்தாள்.

**தினகரன் 19.6.1955 (ஞாயிறு)**

○○○

## 2. நற்றிணைச் செல்வம்

தலைவன் தினைப்புனத்தில் தலைவியைக் கண்டு காதலித்து உறவாடினான். உறவாடிய நாள் தொடங்கி, அவனுடைய வாழ்வில் மாறுதல்கள் நேர்ந்தன. உள்ளக் கிளர்ச்சி இல்லாமல் தனியே இருந்து வருந்தினான். தன்னருமை நண்பனுடனும் முன்போலக் கலந்து பழகுவதைக் குறைத்துக் கொண்டான். உணவும் உறக்கமுமில்லாமல் தலைவியையே நினைந்து நினைந்து வாடினமையால், தலைவனின் உடல் நலம் குன்றிவிட்டது. தலைவனின் உடம்பு நாளுக்கு நாள் உருக்குலைந்து வருவதையும், மனத் தளர்வையும் உணர்ந்த நண்பன் மிகக் கவலை கொண்டான். உண்மையான காரணத்தை ஒளியாமல் உரைக்கும் வண்ணம் தலைவனைக் கேட்டான். தலைவன் தன் உள்ளத்தில் இடம்பெற்ற காதலியைப் பற்றிச் சொன்னான். அதைக்கேட்ட நண்பன், "நீ விரும்பிய பெண் பெரிய காவலை உடையவள். இளம் பருவத்தினள். உன் உள்ளத்திலே ஊற்றெழுந்த காதல் உணர்ச்சியையும் அவள் உணரமாட்டாள். அவளை நீ நினைத்தலும் தகுமோ", எனக் கடிந்து கூறினான். அதற்கு மறுமொழியாகப் பின்வருமாறு தலைவன் கூறுகின்றான்.

"அவள் மலையில் வாழும் குறவனின் மகள். அவளைக் குறவன் காவலும் கட்டுப்பாடுமாக வைத்துப் பாதுகாக்கிறான். எளிதில் அவளை அடைய உன்னால் முடியாது. அவள் மிக இளமைப் பருவத்தினள். நீ கூறுகின்ற காதல் மொழிகளை அவள் அறியமாட்டாள்; உன் சொல்லேற்று விடையளிப்பாளல்லள். அவளை நீ மறந்துவிடுதலே நன்று" என. நண்ப நீ கூறுகின்றாய். உன்னுடைய சொல்லை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். பழுத்த பலாக் கனிகளைப் பிறர் கொள்ளாமல், தெய்வங்கள் பாதுகாக்கும் சிறப்பை உடையது கொல்லிமலை. அந்த மலையின் முடிகள் மிக உயர்ந்தவை. வெள்ளியை உருக்கி ஓடவிட்டாற் போன்ற அழகிய வெள் அருவி, கொல்லிமலையில் ஊற்றெடுத்துப் பாய்கின்றது. இங்ஙனம் சிறந்த கொல்லிமலைச் சாரலிலே காற்று மோதி அடித்தாலும், வலிய பெரும் மழை விரைந்து கொட்டினாலும், சினத்துடன் இடிஇடித்து முழங்கினாலும் இவைகள் அன்றி வேறு என்னென்ன இடையூறுகள் தோன்றினாலும், பெரிய இந்த நிலவுலகமே மாறுபட்டு எதிர்த்தாலும் தன் வடிவின் அழகு கெடாத பாவைபோல், இயல்பாகவே அழகு நிரம்பியவளான என் காதலி என் நெஞ்சில் நின்று நீங்கவேமாட்டாள். நான் அவளை எவ்வாறு மறந்து வாழ்வேன்.

**தலைவன்**

*மலையுறை குறவன்*
*காதன் மடமகள்*
*பெறவருங் குரையள்*
*அருங்கடிக் காப்பினள்*
*சொல்லெதிர் கொள்ளாள்*
*இளையள் அனையோள்*
*உள்ளல் கூடா*
*தென்றோய் மற்றும்*
*செவ்வேர்ப் பலவின்*
*பயங்கெழு கொல்லித்*
*தெய்வங் காக்கும்*
*தீதுதீர் நெடுங்கோட்டு*
*அவ்வெள்ளருவிக்*
*குடவரை அகத்துக்*
*கால்பொருது இடிப்பினும்*
*கதழுறை கடுகினும்*
*உருமுடன்று எறியினும்*
*ஊறுபல தோன்றினும்*
*பெருநிலம் கிளரினும்*
*திருநல உருவின்*
*மாயா இயற்கைப்*
*பாவையிற்*
*போகல் ஒல்லாள் என்*
*நெஞ்சத் தானே!* (*நற். 201*)

(மடமகள் - இளமகள்; கிளர்தல் - சினம்கொள்ளுதல்; அருங்கடி - அரியகடிய; குடவரை - கொல்லிமலை; கால் - காற்று; உருமு - இடி; உறை - மழை; பெருநிலம் - நிலவுலகம்; பாவை - கொல்லியம்பாவை; குரை - அசைநிலை இடைச்சொல்; பலவின் வேர்ப்பயங்கெழுகொல்லி என மாற்றி பலா வேரிலே காய்த்துப் பழுக்கின்ற பழம் பொருந்திய கொல்லி யெனவுமாம்.)

**தினகரன் 26.6.1955 (ஞாயிறு)**

❍❍❍

# 3. எங்ஙனம் ஆற்றி இருப்போம்

தலைவன் இராக்காலத்தில் தலைவியைக் கண்டு செல்லத் தொடங்கினான். கொடிய இராக்காலத்தில், தலைவன் வந்து செல்வதை நினைந்து, தலைவி வருந்தினள். இத்துடன் அயல் வீடுகளிலே உள்ள பெண்களும் தலைவன் களவாக இரவில் வந்து தலைவியுடன் தொடர்பு வைத்திருப்பதை அறிந்துவிட்டார்கள். இந்நிலையில் தலைவன் களவொழுக்கத்தை மேற்கொள்வது, பொருத்தமாகத் தோழிக்குத் தோன்றவில்லை. தோழி தன் கருத்தைத் தலைவிக்குச் சொன்னாள். தலைவிக்கும் தோழியின் கருத்துப் பொருத்தமாகவே தெரிந்தது. களவொளுக்கத்துக்கு இடையூறாக உள்ளவற்றைத் தலைவனுக்குத் தெரிவிக்கவேண்டும். தெரிவித்தாற்றான். தலைவன் திருமண முயற்சியில் ஊக்கங் கொள்வான் என்று தலைவியும் தோழியும் சிந்தித்தார்கள். ஒருநாள் தலைவன் வேலிப் புறத்தில் வந்து நின்றான். தலைவன் வந்து நிற்பதை அறியாதவள்போல நடித்துத் தோழி தலைவிக்குப் பின்வருமாறு கூறுகின்றான்.

"எமது தலைவன் மலைநாட்டில் வாழ்கின்றவன். அந்த மலை நாட்டிலே பெரிய காடுகள் இருக்கின்றன. வீரத்தில் சிறந்த பெரிய ஆண்புலி. அழகிய நெற்றியை உடைய பெண் யானை புலம்பும் வண்ணம் ஆண் யானையைக் கொன்று திரிகின்ற காட்சியை அந்தக் காட்டிலே காணலாம். இங்ஙனம் அச்சத்தைத் தருகின்ற மலை நாட்டுத் தலைவன் "உம்மைவிட்டுப் பிரியேன்", என்று கூறிய பொய் மொழியை மெய்யென்று நாங்கள் நம்பிவிட்டோம். நம்பி எமது நலத்தையும் இழந்து விட்டோம். ஆராய்வு இல்லாமல் தலைவன் கூறியபொய் மொழிகளை அப்படியே நம்பிய நாம் நடு இராவாகியும் உறக்கமின்றி இருந்து வருந்துகின்றோம். தலைவன் பிரிவை எண்ணி எண்ணி இரங்கி, உறக்கமின்றி வருந்துவதுடன் பிறரைப் பழித்துரைக்கின்ற வாயை உடைய அயல் வீட்டுப் பெண்கள் சொல்கின்ற வசை மொழிகளையும் கேட்டுக் கேட்டு மனம் உடைகின்றோம். ஊரவர்களும் பழிதூற்றத் தொடங்கிவிட்டார்கள். மேன்மையல்லாத தீய சொற்களையே பலகாலம் சொல்லிப் பழிதூற்றுதலன் ஊரவர்கள் மிக விழிப்பாக இருக்கின்றார்கள். நாங்கள் தலைவனையே நினைந்து நினைந்து நடு இராவளவும் உறங்காமல் இருக்கின்றோம். இந்த ஊரவர்கள் எங்களைப் போல என்ன பொருளை இழந்துவிட்டார்களோ அறியோம். எம்முடன் அவர்களும் நடு இராவளவும் உறங்காமல் ஆரவாரிக்கின்றார்கள்.

*குறுங்கை இரும்புலிக் கோள்வல் ஏற்றை*
*பூநுதல் இரும்பிடி புலம்பத் தாக்கித்*
*தாழ்நீர் நனந்தலைப் பெருங்களிறு அடூஉம்*
*கல்லக வெற்பன் சொல்லில் தேறி*
*யாம் எந் நலனிழந்தனமே யாமத்து*
*அலர்வாய்ப் பெண்டிர் அம்பலோடு ஒன்றப்*
*புரையில் தீமொழி பயிற்றிய உரையெடுத்து*
*ஆனாக் கௌவைத் தாகத்*
*தானென் இழந்ததிவ் வழுங்கல் ஊரே* (நற். 36)

## புதைபொருள்

இப்பாட்டில் குறிப்பாகத் தலைவன் உணரக்கூடிய புதை பொருளும் அமைந்திருக்கின்றது. தான் குறித்த பொழுதில் போகாமையினால் தலைவி நலன் அழிகின்றாள் என்பதைத் தலைவன் உணர்கின்றான். அயல் வீட்டுப் பெண்கள் அலர் தூற்றுவதினாலும் ஊரவர்கள் பழிதூற்றுவதி னாலும், கண் உறங்காமையாலும், இரவுக் குறியில் இனித் தலைவியைக் காணமுடியாதென்பதையும் உணர்கின்றான். பெண்யானை புலம்பும் வண்ணம், புலி ஆண் யானையைக் கொன்று திரிகின்ற நாடன் என்றதி னால் தோழி தலைவனுக்குச் சிறந்ததோர் புதைபொருளை உணர்த்துக் கின்றாள். "நீர் நடு இராப்பொழுதில் எம்பொருட்டாக, இந்த மலைநாட்டு வழியால் வருகின்றீர். எமது உறவினர்கள் உமக்கு ஏதும் துன்பஞ் செய்வார் களானால், நாங்கள் வருந்த நேரிடும்" என்பதே தோழி உணர்த்திய புதை பொருளாகும். இவற்றை வெளிப்படையாகக் கூறாது, தலைவன் குறிப்பால் உணர்ந்து திருமண முயற்சி எடுக்கும் வண்ணம் கூறிய தோழியின் அறிவுத்திறன் பாராட்டற்குரியதாகும். இவற்றைக்கேட்ட தலைவன் விரைந்து திருமண முயற்சி எடுப்பான்; தலைவி மகிழ்ந்து வாழ்வாள் என்பதே தோழியின் எண்ணம்.

(கோள் வல் - கொல்லவல்ல; ஏற்றை - ஆண்புலி; பூநுதல் - அழகிய நெற்றி; புரையில் - மேன்மை இல்லாத; கௌவை - பழிமொழி; ஆனா - அமையாத; அலர்வாய்ப் பெண்டிர் - பழிதூற்றும் வாயை உடைய பெண்கள்; தாழ்நீர் - நீர் அற்ற; நனந்தலை - அகன்ற இடம்.)

**தினகரன் 3.7.1955 (ஞாயிறு)**

○○○

# 4. தமக்கு வாழாது பிறர்க்கு வாழும் பெரும் பண்பு நெறி

ஒருவரின் துன்பத்திற்காகத் தன் துன்பத்தை மறந்து உருகுகின்ற நிலைமையே உயர்ந்த பண்பாகும். தன் துன்பத்தைக் காணாது பிறர் துன்பத்தைக் காண்கின்ற வாழ்வில் உண்மையான அன்பைக் காணலாம். அறிவின் பயன் தன் துன்பம் போலப் பிறர் துன்பத்தையும் எண்ணிக் காப்பாற்றுவதே யென்பதை வள்ளுவர் வற்புறுத்திக் கூறுகின்றார்.

*அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்*
*தன்நோய் போல் போற்றாக் கடை* (315)

இவ்வாறு மற்ற உயிரின் துன்பத்தைத் தம்முடைய துன்பம் போலக் கருதுந்தன்மையை எல்லாரிடத்திலும் காணலாம். அத்தன்மை வெவ்வேறு நிலைகளில் தோன்றி நிற்கும். காதலரிடத்தில் தோன்றும் பொழுது தான் தன் துன்பங்காணாத அன்பு முழுத் தன்மையுடன் விளங்குகின்றது. பிறர் துன்பங்கண்டு தன் துன்பம்போல வருந்துதலை வள்ளுவர் அறிவின் பயனென்று கூறுகின்றார்.

தன் துன்பத்தை மறந்து பிறரின் துன்பத்துக்காக வருந்துகின்ற பண்பைக் காதலின் பயனென்று கூறலாம். காதலன் தான் படுகின்ற துன்பங்களையெல்லாம் மறந்து தன் காதலியின் துன்பத்துக்காகவே வருந்துகின்றான். காதலியும் தன் துன்பத்தை மறந்து தலைவனின் துன்பத்துக்காகவே வருந்துகின்றாள். இங்ஙனம் ஒருவருக்காக ஒருவர் தம்மை முற்றும் ஒப்படைத்து நிற்கின்ற சிறப்பைக் காதல் வாழ்விலேயே காண்கின்றோம். வாழ்வு பண்பட்டுக் கனியவேண்டிய பண்ணையாகக் காதல் அமைந்திருக்கின்றது. தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழ்கின்ற பண்பை மக்களுக்குத் தருகின்ற கற்பகதரு காதலேயாகும். இந்த உண்மையைப் பேரிசாத்தனார் எடுத்து விளக்குகின்றார்.

“தலைவன் இரவிலே வந்து தலைவியைக் கண்டுசெல்லத் தொடங்கி விட்டான். தலைவியின் உள்ளத்தில் தலைவன் வருகின்ற வழியைப்பற்றிய அச்சம் இடம் பெற்றுவிட்டது. தலைவன் இரவுக் காலத்தில் வருவதினால், தான் படும் துன்பங்களைத் தலைவி மறந்து விடுகின்றாள். புலியும் யானையும் போர்புரிகின்ற கொடிய காட்டு வழியாகத் தனியொருவனாய்த் தலைவன் வருகின்றான் என்பதை எண்ணித் தலைவி ஏங்கிவிட்டாள். இனித்தலைவனை இரவிலே வராதவண்ணம் தடுக்கவேண்டும் என்ற முடிவுக்குத் தலைவி வந்துவிட்டாள். அந்த எண்ணத்தைத் தோழியிடம் பின்வருமாறு கூறுகின்றாள்.”

“என்னால் விரும்பப்பட்ட தலைவன், மலை நாட்டிலே வாழ்பவன். அவன் வாழ்கின்ற மலைநாட்டின் பக்கமெல்லாம் பெருங்காடு. அக் காட்டிலே வரிகள் அமைந்த பெரிய ஆண் புலிகள், களிற்று யானை களோடு போர் புரிகின்ற செயல் எப்பொழுதும் நிகழும். இவ்வாறு, புலியும் யானையும் போர்புரிகின்ற செயலைப் பொருட்படுத்தாமல் மலையில் வாழ்கின்ற குறவரின் புதல்வர்கள் திரிவார்கள். அவர்கள் புலியும் யானையும் நின்று போர் செய்கின்ற மலைச் சாரலின் பக்கத்திலே உள்ள, உயர்ந்த பாறைகளின் உச்சியில் உள்ளச் செருக்குடன் ஏறுவார்கள். ஏறி நின்று, தொண்டகப் பறையை அடிப்பார்கள். பறை ஒலியைக் கேட்ட வுடன் மலைச் சரிவிலே விளைந்துகிடக்கும் தினைக் கதிர்களைக் கொய்ய வந்த கிளிகள் அஞ்சிப் பறக்கின்றன. இத்தகைய விலங்குகளும் வீர இளைஞர்களும் வாழ்கின்ற நாட்டிலே பயிலுந் தலைவன் அச்சமின்றி இராக்காலத்தில் என்னை விரும்பி வருகின்றான்.”

“அவன் வருகின்ற வழிகளிலே வெடித்த பிளவுகளை உடைய பெரும் மலைகள் நெருங்கி இருக்கின்றன. அந்த மலைகளின் பிளவு களிலே கொடிய பாம்புகள் வாழ்கின்றன. நடு இராப்பொழுதில், பிளவு கொண்ட மலைகளின் முடிகள் புரண்டு விழும்படியாக இடிமுழங்கி மோதும். வருகின்ற வழியெல்லாம் மறையும் வண்ணம், பெரிய வெள்ளம் பாய்ந்து ஓடும். இப்படியான கொடிய வழியாலே நடு இரவிலே, என்னை விரும்பி வருகின்ற தலைவனுக்கு நேரவிருக்கின்ற இடையூறுகளை நான் ஒருத்தி தான் தனியாக இருந்து எண்ணி வருந்துகின்றேன். என் துன்பத்துக்குத் துணைசெய்ய வேறு யார் இங்கு இருக்கின்றார்கள். அச்சமும் இடையூறுகளும் நிரம்பிய வழியாலே இரவுக்காலத்தில், நீ இங்கு வரவேண்டாம். தலைவி, நீ வருகின்ற வழியின் கொடுமையை எண்ணி வருந்துகின்றாள். அவளைத் திருமணஞ் செய்து காப்பற்றுதலே தக்க நெறியாகும் என்று யார் தலைவனுக்குச் சொல்ல இருக்கின்றார்கள்.”

*பூம்பொறி உழுவைப் பேழ்வாய் ஏற்றை*
*தேங்கமழ் சிலம்பில் களிற்றொரு பொரினே*
*துறுகன் மீமிசை உறுகண் அஞ்சாக்*
*குறக்குறு மாக்கள் புகற்சியின் எறிந்த*
*தொண்டகச் சிறுபறைப் பாணி; அயலது*
*பைந்தாள் சிறு தினைப்படுகிளி ஓப்பும்*
*ஆர்கலி வெற்பன் மார்பு நயந்துறையும்*
*யானே அன்றியும் உளர்கொல் பானாள்*
*பாம்புடை விடர ஓங்குமலை மிளிர*

*உருமுச்சினந் தெறியும் பொழுதொடு பெருநீர்*
*போக்கற விலங்கிய சாரல்*
*நோக்கரும் சிறுநெறி நினையு மோரே* (*நற். 104*)

## புதைபொருள்

இச்செய்யுளில் தலைவி தன் துன்பத்தை மறந்து தலைவன் துன்பத்துக்காகக் கவல்கின்ற பண்பைக் காண்கின்றோம். இராக்காலத்தில் வருகின்ற தலைவனுக்கு வழியில் உள்ள இடையூறுகளை நினைந்து நினைந்து தலைவி ஏங்குகின்றாள். தன் காதலுக்கு வரவிருக்கும் துன்பத்தைத் தன் அன்புக்குரிய தோழியும் எண்ணாமல் இருக்கின்றாளே என்ற ஆற்றாமை தலைவியின் கவலையைக் கூட்டுகின்றது. திருமணஞ் செய்து, வாழும் வண்ணம் தலைவனைத் தூண்டி ஊக்கங் கொடுக்கும் முயற்சியில் தன்தோழி ஈடுபடுவில்லை யென்பதே தலைவியின் கருத்தாகும்.

இனி இத்துடன் எதிர்காலச் சிந்தனையும் தலைவியின் உள்ளத்தை வாட்டுகின்றது. தன் காதலன், திருமண முயற்சி எடாமல் களவொழுக்கத்தையே கைக்கொண்டு நின்றால், வேறு ஒருவனுக்குத் தன்னைக் கொடுக்கின்ற முயற்சியைப் பெற்றார் தொடங்கவும் கூடும். அதன் பின், தான் அந்த மணச்செய்தியைக் கேட்டு வருந்தி உயிர் உருகவேண்டிய நிலைமையும் உண்டாகும். இந்த நெருக்கடிகள் நேர முன்னரே தலைவன் தன்னை மணஞ்செய்யும் வழியை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கத்தான் வேண்டும். தலைவனைத் தூண்டித் திருமண முயற்சியில் ஈடுபடுத்தத் தோழியே முயலவேண்டுமெனவும் எண்ணுகின்றாள். இவற்றை வெளிப் படையாகக் கூறாமல், தோழி குறிப்பினால் உணர்ந்து கொள்ளக்கூடிய முறையில், புதைபொருளாகக் கூறுகின்றாள். இதனைப் "புலி, யானையோடு போர் புரிவதைக் குறவரின் புதல்வர் காண்கின்றார்கள். கண்டவுடன் பாறையின் உச்சியில் ஏறிப் பறையை அடிக்கின்றார்கள். பறையின் ஒலி தினையைத் தின்னவந்த கிளியை வெருட்டிக் கலைக் கின்றது," என்ற பகுதியில் காணலாம். புலியும் யானையும் போரிடுதலை வேறு மணம் பேசி வந்தாருடன் தலைவியின் உறவினர் கலந்து உரையாடலாகவும் போரிடுதலைக் கண்ட குறவரின் புதல்வர் பறை ஒலித்தல் வேறு மணப்பேச்சு நிகழ்தலைக் கண்டு தலைவியிடம் கூறுகின்ற ஆயத்தராகவும் பறையொலியைக் கேட்டுத் திணையைத் தின்ற கிளிகள் அஞ்சி அகலுதல் வேற்று மணப்பேச்சை, ஆயத்தார் கூறக்கேட்டவுடன் வருந்துகின்ற தலைவியாகவும் கொள்ளக்கிடக்கின்றன.

இங்ஙனம் குறிப்புப் பொருள்படக் கூறுகின்ற சிறப்பு பழந்தமிழ் மக்களின் நாகரிகத்தைக் காட்டுகின்றது. அகஒழுங்குகளில் வெளிப்படை யாகக் கூறுவதிலும் குறிப்பாகக் கூறுதல் மிக உயர்ந்த பண்பாகும்.

(பூம்பொறி - அழகியவரி; துறுகன் - பெரும்பாறை; குறுமாக்கள் - இளம் புதல்வர்; புகற்சி - மனச்செருக்கு; பானாள் - நடுஇரவு; விடர் - மலைப்பிளவு; உருமு - இடி, நோக்குதற்கரிய ஒற்றையடிப்பாதை.)

**தினகரன் 24.7.1955 (ஞாயிறு)**

❍❍❍

# 4
# செய்யுள் நயம்

# 1. குடிப்பிறந்தார் குணம்

புலவர்கள் கொடுத்து வைத்துப் பிறந்தவர்கள். கருவிலே திரு அமைந்தவர்கள். அவர்கள் உள்ளத்தில் உயர்ந்த கொள்கைகள் உருவாகின்றன. உருவாகின்ற கொள்கைகளை மற்றவர்கள் உள்ளத்திலும் அப்படியே பதியும் வண்ணம் கூறுவார்கள். நல்ல குடியிலே பிறந்தவர்கள் வறுமைப் பட்டாலும் தம்முடைய குணத்தில் மாறமாட்டார்கள் என்ற கொள்கை புலவர் உள்ளத்தில் தோன்றியது. அந்தக் கொள்கையை எங்கள் உள்ளத்தில் மிக அழுத்தமாகப் பதிக்க வேண்டுமென்று புலவர் எண்ணுகின்றார். படித்தவர்களும் படியாதவர்களும் விளங்கக் கூடியதாகச் சிந்தித்துக் கூறுகின்றார்.

*ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும்*
*ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் - ஏற்றவர்க்கு*
*நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்*
*இல்லையென மாட்டார் இசைந்து.*

இதில் கூறப்படுகின்ற ஆற்றின் தன்மை, எல்லாரும் கண்ணால் காண்கின்ற இயற்கையான செய்தி.

ஆறு பெருகிப் பெரு வெள்ளமாக ஓடுவதையும், வற்றி மணல் பறக்கக் காய்ந்து கிடப்பதையும், வெட்டினால் நீர் ஊறிச் சுரப்பதையும் நாம் எல்லோரும் பலநாட்கள் பார்த்திருக்கின்றோம். எங்களுடைய உள்ளத்தில் ஆற்றின் தன்மையை, வாழ்வுடன் ஒப்பிட்டுக்காணும் கொள்கை தோன்றவே இல்லை. ஆற்றுப்பெருக்கு வற்றிவிட்டது. ஆற்றைக் கிண்ட நீரை ஊறச் செய்கின்றார்கள் என்ற அளவில் நாங்கள் நினைத்துக் கொள்வோம். புலவருடைய உள்ளத்தில் ஆற்றின் தன்மை குடிப்பிறந்தார் குணம் போலத் தோன்றுகின்றது.

ஆற்றைக் குடிப் பிறந்தார் போலவும் ஆற்றில் வெள்ளம் பெருகிப் பாயந்து உலகுக்குப் பயன்படுதலைக் குடிப் பிறந்தாரிடத்துப் பல வழிகளாலும் செல்வம் வந்து குவிந்து, இல்லாதவர்க்குப் பயன்படுதல் போலவும், ஆற்றின் பெருக்கு வற்றுதலைக் குடிப்பிறந்தார் இடத்தில் உள்ள செல்வம் சுருங்குதல் போலவும், ஆறு முழுவதும் வற்றி மிதிக்கின்ற அடி சுடக்கூடிய நிலைமை அடைதலைக் குடிப்பிறந்தார் வறுமை மிகுதியால் வருந்துதல் போலவும், நீர் வற்றி வரண்ட ஆற்றைத் தோண்ட

நீர் ஊறிப் பயன்படுதலை, வறுமையால் வருந்தி வாடுகின்ற வாழ்விலும் குடிப்பிறந்தார் இல்லையென்று வந்து இரக்கின்ற ஏழைகளுக்குத் தம்மால் இயன்ற உதவி செய்தல் போலவும், புலவர் எமக்கு விளக்குகின்றார்.

குடிப்பிறந்தாரின் குணம் செல்வத்தின் பெருக்கத்தாலும் சுருக்கத் தாலும் மாற்றம் அடைய மாட்டாது. அவர்கள் தாம் எவ்வகையான துன்பத்தை அடைந்தாலும், பிறரின் துன்பத்தைக் கண்டு உருகுவார்கள் என்ற உண்மையைப் புலவர் தெளிவித்துவிட்டார். ஆற்றின் குணம் புலவரின் நெஞ்சத்தை அள்ளி அழியாத அறிவுச் செல்வத்தை வளர்த்து விட்டது. ஆறும் என்றென்றும் தன் குணத்தின் மாறாதது போலவே இன்றும் என்றும் குடிப் பிறந்தாரும் தங்கள் குணத்தில் மாறாமல் வாழ்கின் றார்கள். குடி என்பது பலபல பரம்பரைகளாக அறத்தில் மாறுபடாது வாழ்ந்த மக்களின் மரபாகும். குடிமை - குடிப் பிறந்தார் என்னும் தொடர் களை முறையே தொல்காப்பியரும் வள்ளுவரும் எடுத்தாண்டிருக்கின் றார்கள்.

*ஒழுக்கமுடைமை குடிமை*

என வள்ளுவர் குடிமைக்கு வரைவிலக்கணமும் கூறுகின்றார். தமிழர் வாழ்வின் பயனாகத் தோன்றிய குடிச்சிறப்பை ஆற்றுடன் ஒப்பிட்டு, எங்கள் உள்ளத்தில் பதிந்த புலவரின் சிந்தனை, உலகம் உள்ளளவும் வாழ்கின்றது.

**தினகரன் 4.9.1955 (ஞாயிறு)**

❍❍❍

## 2. கன்றுங்கனி உதவும்

நிலம் பண்பட்டு வளங்கனிதல் போலவே மக்கள் உள்ளமும் பண்பட்டுப் பயன் சுரக்கின்றது. பல பல பரம்பரைகளாக அறநெறியில் வழுவாது வாழ்ந்த குடியில் உள்ளவர்கள் நிலை திரியமாட்டார்கள். பட்டமும் பெரும்பதவியும் படைத்தவர்கள் ஆனாலும், பரம்பரையாக வந்த பெருந்தன்மை இல்லையாயின், அறத்தை மறந்துவிடுவார்கள். உடல் வலிமையும் உருவப் பொலிவும் உடையவர்கள் எல்லாரும் போர்வீரராக விளங்கமாட்டார்கள். பல தலைமுறைகளாகப் போர்க்களத்திலே அஞ்சாமல் பகைவர்களை எதிர்த்து நின்று, அறப்போர் ஆற்றிய ஆண்மைப் பரம் பரையில் தோன்றியவர்களே, உண்மைப் போர்வீரராகக சிறந்து விளங்கு வார்கள்.

கொடுத்து வாழ்ந்த மரபில் உள்ளவர்கள் தான் கொடுப்பார்கள். தம் நலத்தைப் பொருட்படுத்தாமல் பிறர் நலத்துக்குழைத்த மரபில் வந்தவர் கள்தான், பொதுப் பணியில் ஈடுபட்டு உண்மையாகச் செயல் ஆற்று வார்கள். ஆற்றலும் அறிவும் ஒருவரை உயர்த்தி வைக்கின்ற எல்லை, அவரிடத்தில் இயல்பாகவே அமைந்துள்ள பரம்பரைப் பண்பைப் பொறுத்ததாகும். "குலத்தளவே ஆகுங்குணம்," என்ற பொருளுரை, பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து வருகின்ற குணத்தையே பாராட்டு கின்றது.

நல்லிசைப் புலவர் உள்ளத்திலே பரம்பரைப் பண்பாட்டின் சிறப்பு, நிலைபெற்று வாழ்கின்றது. பரம்பரைப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டே பெருங்காப்பியத் தலைமக்கள் படைக்கப் பட்டிருக்கின்றார்கள். பரம்பரையாக வந்த அறப் பண்பைப் பாதுகாத்து வாழ்கின்றவர்களே புலவர் பாடும் பேற்றைப் பெறுகின்றார்கள். உயர்ந்த பெருங்காப்பியங் களின் தோற்றத்திற்கு, நிலைக்களனாக நின்றுதவும் சிறந்த பரம்பரைப் பண்பொன்றை, ஒரு வெண்பாவில் காண்போம். இளம் மாணவரின் உள்ளத்திலே பதியக்கூடியதாகப் புலவர் பாடி இருக்கின்றார்.

*எந்தை நல் கூர்ந்தான்*
*இரப்பவர்க்கீந் தென்றவன்தன்*
*மைந்தர் தம் ஈகை*
*மறுப்பரோ - பைந்தொடீஇ*
*நின்று பயனுதவி நில்லா*
*அரம்பையின் கீழ்க்*
*கன்றும் உதவுங் கனி.*

இந்தப் பாட்டில், புலவர் இரந்தவர்க்கு இல்லையென்று சொல்லாமல் கொடுத்து வாழ்ந்த குடியில் பிறந்தோரின் பரம்பரைக் குணத்தைக் கூறுகின்றார். மிக உயர்ந்த கருத்தை மிக எளிதாக இளம் மாணவர்கள் தெளியத்தக்க முறையில் சொல்கின்றார். இரந்து கேட்ட வறியவர்க்குப் பொருளைக் கொடுத்துக் கொடுத்து, ஒருவன் வறுமை அடைந்து விட்டான். அவனின் மைந்தன் தன் தந்தையாரின் செயலையும், அதனால் செல்வம் குறைந்து வறுமை அடைந்த நிலையையும் நேரில்கண்டு தெளிகின்றான். தந்தையாருக்குப் பின் மைந்தன் குடும்பப் பொறுப்பை ஏற்றான். வாழ்வில் வறுமை நின்று வாட்டுகின்றது. அந்நிலையிலும், அவனிடம் வறியவர் சென்று இரந்தார்கள். தன் தந்தை இரந்தவர்க்குக் கொடுத்து வறுமைப் பட்டார் என்பதை அவன் மறந்துவிட்டான். கொடுத்து வாழ்ந்த பரம்பரையில் தோன்றிய பண்பாளனாகிய காரணத்தால் அவனும், தன்னால் இயன்ற அளவு இரந்தவர்க்குக் கொடுத்தான். இந்த உண்மை நிலையை - பரம்பரைப் பண்பைப் புலவர் கண்டார். புலவரின் உள்ளம் மலர்ந்தது. மலர்ந்த உள்ளத்தில் நின்று பிறந்த பாட்டு, வாழ்கின்ற மக்களுக்கு வழிகாட்டியாக வாழ்கின்றது. புலவர் தாம் பெற்ற இன்பத்தை அப்படியே பிறரும் அறியவேண்டும் என்ற ஆராமையுடன் பாட்டைப் பாடியிருக் கின்றார். பரம்பரைக் குணம் மாறாது என்ற கொள்கையைப் படிக்கின்ற வர்கள் உள்ளத்தில் பதிக்கக்கூடிய உவமானங்களைத் தேடி மிக விழிப்புடன் அமைத்திருக்கின்றார்.

வாழை வயல் சார்ந்த மருதநிலத்தில் உள்ளது. வாழையின் பண்பை உணராத மக்கள் ஒருவரும் இலர். குழந்தைகளும் வாழையின் தன்மையைக் கூறுவார்கள். வாழை வளர்த்து குலைபோடும். குலை முற்றிப் பழுக்கும். குலை பழுத்தவுடன், வாழையை வெட்டி வீழ்த்திவிடுவார்கள். வெட்டப்படுகின்ற வாழையின் அடியில் அதன் குட்டிகள் உள்ளன. அந்தக் குட்டிகளைப் பெயர்த்து வேறு இடங்களில் நடுவார்கள். அவை களும் வளர்ந்து, குட்டி வெடித்துக் குலையும் போட்டுக் கொடுத்துத் தாய்வாழையைப்போலவே வெட்டுண்டு வீழ்கின்றன. இந்தப் பண்புடன் வாழையடிவாழையாக அவைகள் பயன் கொடுக்கின்றன. இங்ஙனம் வாழையிலே அமைந்து கிடக்கின்ற பண்புகளைப் புலவர் கண்டுவிட்டார்.

பரம்பரை பரம்பரையாகக் கொடுத்துக் கொடுத்துக் கெடுகின்ற மக்களைப்போலவே வாழையின் பண்பும் புலவர் உள்ளத்தைக் கவர்ந்தது. வாழை, வாழையடி வாழையாகத் தொடர்ந்து பயன்படுகின்றது. கொடுத்து வாழ்கின்ற குலமும் பலபல பரம்பரைகளாக உலகில் நிலைத்துப் பயன்

படுகின்றது. எனவே வாழைக்கும், கொடுக்கின்ற கொடையாளனுக்கும் மிகப் பழமையான பரம்பரை நிலைத்து விளங்குகின்றது. இனி, வாழை, தான் குலையை ஈன்று பிறருக்குதவி வெட்டுண்டு வீழ்கின்றது. கொடையாளனும் (தந்தையும்) தன்னிடத்தில் உள்ள பொருளை இரந்தவர்க்குக் கொடுத்து வறுமையால் பற்றப்பட்டு வருந்துகின்றான். வாழை, குலையை ஈன்று கொடுத்தவுடன் வெட்டுண்டு வீழ்தலை, அதன் குட்டிகள் பக்கத்திலே நின்று பார்க்கின்றன. தந்தை, இரந்தவர்க்கு பொருளைக் கொடுத்து, வறுமையால் வாடுவதை அவனின் மைந்தர்கள் உடனிருந்து காண்கின்றார்கள். வாழைக்குட்டிகள், தமது தாய் வாழை குலையீன்று வெட்டுண்டு வீழ்ந்ததைக் கண்டிருந்தும் அதனைப் பொருட்படுத்தாமல் தாமும் குலைகளை யீன்று வெட்டுண்டு வீழ்கின்றன. தம்முடைய தந்தை, இரந்தவர்க்குப் பொருளைக் கொடுத்து வறுமையால் வருந்தியதைக் கண்ட மைந்தர்கள், அதனை மறந்து, தம்மிடம் வந்து இரந்தவர்க்குத் தம்மால் இயன்ற பொருளைக் கொடுக்கின்றார்கள். வாழை, குட்டிகள், குலை என்றவற்றுடன் தந்தை, மைந்தர், கொடை என்பவற்றை ஒப்பிட்டுக் கூறிய புலவரின் ஆற்றல் மிக மேலானது. உவமானங் களுக்கும் உவமேயங்களுக்கும் இடையே உள்ள பொதுத் தன்மைகள் என்றும் மறக்க முடியாதவைகள்.

*வாழையின் பரம்பரை – உவமானம்,*
*கொடையாளியின் பரம்பரை – உவமேயம்*
*வாழை – உவமானம், தந்தை – உவமேயம்*
*குட்டிகள் உவமானம், மைந்தர் – உவமேயம்*
*வாழை குலையீன்றுதவுதல் – உவமானம்*
*தந்தை இரந்தவர்க்களித்தல் – உவமேயம்*
*வாழை வெட்டுண்டல் – உவமானம்*
*தந்தை வறுமையடைந்து வருந்துதல் – உவமேயம்*

இங்ஙனம் உயர்ந்த கருத்தைத் தெளிவான முறையில் ஒரு வெண்பாவில் பாடுகின்ற திறமை புலமை உள்ளத்திற்கே உரியதாகும். நீண்ட பரம்பரைத் தொடர்பை விளக்க வாழையை எடுத்துக் கொண்ட புலவரின் சிந்தனை பாராட்டற்குரியது.

*வாழையடி வாழையென*
*வந்ததிருக் கூட்ட*
*மரபினில் யான் ஒருவனன்றோ*

என வருகின்ற பொருள் மொழிகளும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன. உலகப் பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளும் இக்கொள்கையை அரண் செய்கின்றன. பண்பட்ட பரம்பரை என்று கூறும்பொழுது, அந்தப் பரம்பரையின் பழமையும் நிலைபேறும், அறச்சார்பும் புலப்படுகின்றன.

*வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி*
*பண்பில் தலைப் பிரிதல் இன்று* (*திருகு - குடிமை. 5*)

இதில் வருகின்ற பழங்குடி என்னும் சொல்லுக்கு உரை கூறிய பரிமேலழகர், "பழங்குடி தொன்று தொட்டு வருகின்ற குடியின் கட்பிறந் தார். தொன்று தொட்டு வருதல், சேர சோழ பாண்டியர் என்றாற்போலப் படைப்புக்காலந் தொடங்கி மேம்பட்டுவருதல்" என விளக்கந்தரு கின்றார். இதனால் யான் மேலே கூறிய கருத்து வலியுறுகின்றது.

**தினகரன் 11.9.1955 (ஞாயிறு)**

❍❍❍

# 3. புள்ளும் பூவும்

புலமை, புலவனின் உள்ளப் பெருக்கு. புலமை பெருகி வாழ்கின்ற உள்ளத்திலேயே, தெளிவும் இனிமையும் சேர்ந்து வாழ்கின்றன. அறமும், அன்பும், புலமை உள்ளத்தின் ஊற்றுக் கண்கள். ஔவையாரின் புலமை உள்ளம் அமுத சுரபி போன்றது. மக்களின் வாழ்வை வழிவழியாக மலர்ததி வளம்படுத்துகின்ற சிறப்பு, ஔவையாரின் புலமைக்கே உரியதாகும். மக்களுடன் உயிர்க்குயிராய்க் கலந்து நிலவுகின்ற பண்புகளில் நட்பு மிகமேலானது. உலகின் நன்மைக்குக் காரணமாய் நின்றுதவுவது, உண்மை நண்பர்களின் வாழ்வேயாகும்.

இன்பத்தில் மட்டும் அன்றித் துன்பத்தினும் பங்குபற்றி வாழ்கின்ற பண்புதான் உண்மை நட்பாகும். பலர், இன்பக்காலத்தில் மாத்திரம் ஒருவரோடொருவர் உறவு கொண்டு, துன்பக்காலத்தில் பிரிந்துவிடுகின் றார்கள். தன்னலங் கருதி வாழ்கின்ற மக்களினம், பெருகாமல், தடுக்கும் படைக்கலமாக உண்மை நட்பு விளங்குகின்றது. செல்வம் பெருகிய காலத்தில் ஒருவருடன் நண்புபூண்டவர்கள், செல்வம் சுருங்கி வறுமை வந்தவுடன், அவரை வீட்டு நீங்குகின்ற செயலை, ஔவையாரால் பொறுக்கமுடியவில்லை.

உண்மை நட்பின் தன்மையை மக்கள் உள்ளத்தில் பதித்து வாழ்விக்க வேண்டுமென்ற விருப்பம் ஔவையாரின் உள்ளத்தைக் கவர்ந்தது. கற்றவர்களுக்கும் கல்லாதவர்களுக்கும், பயன்படக் கூடியதாக ஔவையார் தமது எண்ணத்தைப் பாடுகின்றார். “பாட்டென்றால் பண்டி தர்க்கே” என்ற கொள்கை ஔவையாரிடங் கிடையாது.

*அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்*
*உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்தில்*
*கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே*
*ஒட்டி உறுவார் உறவு.*

இந்தப் பாட்டில் ஔவையார். இயற்கையோடு அமைந்த தம்புலமைத் தெளிவைத் தெரிவிக்கின்றார். குளத்தில் நீர் நிறைந்து கிடக்கின்றபோது மீன்கள் வாழ்தலையும், அந்த மீன்களை உண்டு வாழ்கின்ற பறவைகள், குளக்கரையிலேயே கூடுகள் கட்டி இருத்தலையும் ஔவையார் கண்டார். இங்ஙனம் தான் கண்ட இயற்கை நிகழ்ச்சியுடன், மக்கள் வாழ்க்கை நிகழ்ச்சியொன்றைப் பொருத்திச் சிந்திக்கின்றார். ஒருவரிடம் செல்வம் நிறைந்துள்ள காலத்தில் பலர், அச்செல்வரின் வீட்டையே தங்களுடைய

வீடாகக் கொண்டு அவரின் செல்வத்தை நுகர்ந்து வாழ்கின்றார்கள். குளத்தில் நிறைந்திருந்த நீர் வற்றுகின்றது. நீர் வற்ற வற்ற நீரில் வாழ்ந்த மீன்களும் குறைந்துவிட்டன. நாளடைவில் குளத்தில் உள்ள நீர் முற்றாக வற்றிவிட்டது. பறவைகளுக்கு உணவாகிய மீன்கள் அற்றுப்போயின. பல நாட்களாகக் குளத்தைச் சுற்றிக் குடியிருந்த பறவைகள் எல்லாம் குளத்தைவிட்டுப் பறந்து சென்றன. ஒருவரிடத்தில் உள்ள செல்வம் குறைகின்றது. அவரின் செல்வத்தை நுகர்ந்து அவரையே துணையாகக் கொண்டு வாழ்ந்த நண்பர்களும் அவரை விட்டுச் செல்கின்றார்கள். நீர் அற்ற குளத்தைப் பறவைகள் வெறுத்துச் செல்கின்றன. செல்வம் அற்ற நண்பனை அவனின் நண்பர்கள் விட்டுச் செல்கின்றார்கள். குளத்தை விட்டுச் சென்ற பறவைகள் தம் நலத்தையே கருதுகின்றன. நண்பனை விட்டுச் சென்ற நண்பர்களும் தம் நலத்தையே கருதுகின்றார்கள்.

இங்ஙனம் தம் பயன் கருதி ஒருவருடன் நட்புக் கொண்டு, பயன் இல்லாவிடின் அவரை விட்டு நீங்குகின்ற பண்பு அருவருக்கத்தக்கது. மீன்கொத்திப் பறவைகளுக்கும், பொய் நண்பர்களுக்கும் ஒரு வேறுபாடும் கிடையாது. தம் பயன் கருதி நட்புக் கொள்கின்றவர்கள் மிகக் கொடியவர். அவர்களின் உறவை நம்ப வேண்டாம் என ஔவையார் மிகவற்புறுத்திக் கூறுகின்றார்.

*அற்றகுளத்தில் அறுநீர்ப் பறவைபோல்*
*உற்றுழித் தீர்வார் உறவல்லர்*

என்ற பாட்டுத் தொடர்களைப் படித்துப் பாருங்கள். “அற்றகுளம்” “அறுநீர்ப் பறவை” என்னும் மொழிகளில் ஔவையாரின் உள்ளத் துடிப்பைக் காண்கின்றோம். நீர் அற்ற குளத்தைச் சிறிதும் பற்றின்றி விட்டுச் செல்கின்ற பறவையின் கொடிய உள்ளத்தை நன்றி மறந்த உள்ளத்தை ஔவையார் வெறுக்கின்றார். அறுநீர்ப் பறவை - நீரைக் கருதி வாழ்ந்த பறவை. அறு பறவை மீண்டு திரும்பியும் பாராது நெடுந் தொலைக்குச் செல்கின்ற பறவை. உற்றுழி - தமக்குப் பயன் உள்ள பொழுது நட்புச்செய்து, தீர்வார் - சிறிதும் நன்றி உணர்ச்சியில்லாமல் தமக்கு உதவிசெய்த நண்பனை வறுமையில் வருந்தவிட்டுச் செல்கின்ற வர்கள். தீர்தல் - பற்றுவிடுதல்.

குளம் - உவமானம். நண்பன் - உவமேயம்.

குளத்தில் உள்ள நீர் - உவமானம். நண்பனிடத்தில் உள்ள செல்வம் - உவமேயம்.

நீர் அற்ற குளத்தை விட்டுச் செல்லும் பறவை உவமானம்.

செல்வம் அற்ற நண்பனை விட்டுச் செல்லும் நன்றிமறந்தோன் உவமேயம்.

இனி அக்குளத்திலேயே உண்மை நட்பின் பண்பையும் ஔவையார் பார்க்கின்றார். குளத்தில் உள்ள நீர்பெருகி உயர, உயர அக்குளத்தில் வாழ்கின்ற கொட்டி ஆம்பல், நெய்தல் என்பனவும் நீர் மட்டத்திற்குமேலே தங்கள் இலைகளையும் மலர்களையும் உயர்த்தி வளருகின்றன. குளத்தில் உள்ள நீரின் உதவியால் தாமும் வளர்ந்து தளிர்த்து மலர்ந்து வாழ்கின்றன. குளத்தில் உள்ள நீர் குறையத் தொடங் கியது. நீர் குறையக் குறையக் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் தமது வளர்ச்சியில் குறைந்தன. நீர் முற்றாக வற்றியது. தாமும் குறைந்து குள மண்ணுடன் ஒட்டிவிட்டன. குளம் நீர்ப்பசையும் இல்லாமல் வரட்சி கொண்டது. கொட்டியும், ஆம்பலும், நெய்தலும் தங்கள் இலையும் தளிரும் பூவும் உலர்ந்து சருகாகத் தாமும் தம்மை வளர்த்த குளத்துடன் ஒட்டி, உலர்ந்து கிடந்தன. இந்த நீர்ப் பூக்களின் பண்பைப் பார்க்கப் பார்க்க ஔவையாரின் புலமை உள்ளம் புதிய ஒளிபெற்றது. உண்மை நண்பரின் உயர்ந்த பண்பை உலக மக்களுக்கு உணர்த்துதற்கேற்ற உவமானம் கண்டுவிட்டேனென்று உயிர் தளிர்த்தார்.

நண்பனிடத்தில் செல்வம் நிறைந்தது. அவன் தன்னுடய நண்பர்கள் எல்லார்க்கும் உதவினான். தான் பெற்ற செல்வத்தால் தன்னைச் சேர்ந்தோ ரையும் செழிப்பித்தான். நண்பர்களும் உள்ளம் மகிழ்ந்து வாழ்ந்தார்கள். காலப் போக்கில், உற்றவர்க்கெல்லாம் உதவிய நண்பனின் செல்வம் சுருங்கிவிட்டது. அவனின் வாழ்வு வறுமைத் தீயால் எரிந்தது. தமக்கெல் லாம் உதவிய நண்பனின் வறுமையை எண்ணி அவனின் நண்பர்கள் உயிர் துடித்தார்கள். அவன் அடைந்த வறுமைத் துன்பத்தைத் தாமும் அவனுடன் கலந்து அனுபவித்தார்கள். செல்வக் காலத்தில் தம்மையெல் லாம் தாய் போலக் காப்பாற்றிய நண்பனின் அல்லலைக்கண்டு, அகம் உருகினார்கள். இப்பெருஞ் சால்பைக் கண்ட ஔவையார் பாடுகின்றார். எமக்குக் கூறுகின்றார்.

*அக்குளத்தில்*
*கொட்டியும் ஆம்பலும் நெய்தலும்*
*போலவே ஒட்டி உறுவார் உறவு*

இந்தப் பாட்டுத் தொடர்களில் ஔவையாரின் ஆர்வக் குரலைக் கேட்கின்றோம். ‘‘அக்குளத்தில் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும்

போலவே," என்ற குரல் உலகமெல்லாம் ஒலிக்கின்றது. படித்துப் பாருங்கள். போலவே என்ற சொல்லில் எவ்வளவு ஆர்வம் எழுச்சி கொள்கின்றது. "ஒட்டி உறுவார் உறவு" என்ற தொடரில் வலியுறுத்தல் நிலவுகின்றது. ஒட்டி என்ற சொல் - பிரியாமல் என்ற கருத்துடன், வருந்துதல் என்ற கருத்தையும் தருகின்றது. உறுவார் என்ற சொல்லின் பொருளாற்றல் - இப்பிறப்பு மட்டுமன்றி இனி எத்தனை எத்தனை பிறவிகளை எடுத்தாலும் அங்கெல்லாம் பிரியாமல் ஒன்றுபட்டு வாழ்வார் என்ற எண்ணத்தை நிலைநாட்டுகின்றது. உறவு என்ற சொல், இன்பத்தில் மாத்திரமல்ல துன்பத்திலும் துணையாக் நிற்கின்ற பண்பே உயர்ந்தது - உண்மையானது. முடிந்த முடிவு என்பதை மெய்ப்பிக்கின்றது.

கொட்டி, ஆம்பல் நெய்தல் - உவமானம்.

பிரியாத உண்மை நண்பர் - உவமேயம்.

குளத்திலே நாமெல்லாம் என்றும் காண்கின்ற நீரையும், புள்ளையும் பூவையும் துணையாகக் கொண்டு உயர்ந்த பண்பாட்டை எம் உள்ளத்திலே உருப்படுத்திய ஔவையாரின் புலமை உள்ளம் ஆயிரம் ஆயிரம் ஊழி சென்றும் அழியாத அமரத்தன்மை வாய்ந்ததாகும்.

**தினகரன் 18.9.1955 (ஞாயிறு)**

❍❍❍

# 4. மயிலும் வான்கோழியும்

இயற்கை அறிவும் செயற்கை அறிவும் கலந்து, மக்கள் வாழ்வை வளம்படுத்துகின்றன. இயற்கை அறிவு பிறப்பிலேயே அமைந்த மதி நுட்பம். செயற்கை அறிவு, கல்வி கற்றதினால் ஏற்படும் நூலறிவு. மதி நுட்பமும் நூலறிவும் நிரம்பிய வல்லமையாளர்களே உலகைப் புதுக்கிப் படைக்கின்ற செயல் வீரர்கள்.

நூலறிவினால் இயற்கை அறிவு ஒளிவிடுகின்றது. நூலறிவு இல்லாதவர்கள், இயற்கை அறிவு வாய்ந்தவர்களானாலும், அவர்களின் ஆற்றல் உலகிற்குப் பயன்படாது. இயற்கை அறிவும் நூலறிவும் உடைய அறிஞர்களை உலகப் பொதுச் செல்வமாக மதிப்பார்கள். மதிநுட்பமும் நூலறிவும் வாய்ந்த வள்ளுவர், இன்று உலகப்பெரும் புலவராக விளங்குகின்றார். “வள்ளுவன் தன்னை உலகினுக்கேதந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு” எனப் பாடிப் பெருமை அடைகின்றோம். இயற்கை அறிவும் நூலறிவும் இல்லாத போலிப் புலவர்கள் பெரும் புலவர்களைப் போலத் தம்மை மதித்து வாழ்கின்ற வாழ்வு மிக இழிந்தது. பொருள் இல்லாதவர்கள், பொருள் உள்ளவர்களைப்போல நடித்து வாழ்வதிலும், புலமை இல்லாதவர்கள் புலமை உள்ளவர்களைப் போல நடித்து, வாழ்கின்ற வாழ்வு நகைப்புக்கிடமானது. அழுத்தமில்லாத போலிப் புலமையை அறிஞர் உலகு அளந்து விடும். **பொருள் நலமும் புலமை மரபும் இல்லாத வெறுஞ் சொற்கவிதைகள், இறந்து பிறக்கின்ற பிள்ளைகளைப்போல மறைந்துவிடும் தன்மை உடையன.**

பெரும் புலவர்கள் பெறுகின்ற மதிப்பையும், பாராட்டையுங் கண்டு, புலமைப் பண்பு இல்லாதவர்களும், தம்மைப் புலவர்களெனப் புகன்று விளம்பரப்படுத்தலை, ஒளவையார் வெறுக்கின்றார். உயர்ந்த கவிதை உள்ளம் படைத்த ஒளவையார், போலிக் கவிதைகளைப் பாராட்டி உரையார். அரசியல் அணைவும், பொருள் நிறைவும் பொருந்தியவர்கள், போலிக்கவிதைகளைப் புனைந்து, பொன் எழுத்துக்களால் அழுத்தி, வெளியிட்டாலும், அவற்றை உண்மைப் புலவர்கள் மதியார்கள். **ஒளவையாரின் உள்ளம் திறனாய்வுத்திறன் நிரம்பியது. நல்ல கவிதையை, நல்லதென்று நடுநிலைமையாகக் கூறுகின்ற குணம் ஒளவையாரிடம் அமைந்துவிட்டது.** தம்மிடத்தில் அமைந்த கவிதை உணர்வைத் தமிழ் மக்களுக்கும் தெரிவிக்கின்றார். கவிதையைக் கவிதையாகவே காணும் பண்பை, எல்லார்க்கும் எளிதில் விளக்கத்தக்க உவமானத்துடன் கூறும் திறத்தைக் கேளுங்கள்.

*கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி*
*தானு மதுவாகப் பாவித்துத் - தானும்தன்*
*பொல்லாச் சிறகை விரித் தாடினாற் போலுமே*
*கல்லா தான் கற்ற கவி.*

இச்செய்யுளின் மயிலின் ஆட்டமும் வான்கோழியின் ஆட்டமும் கூறப்படுகின்றன. மயில் ஆடுவதைக் கண்டு நாமெல்லாம் மகிழ்கின் றோம். அதேகாட்டில் உள்ள வான்கோழியும் ஆடுகின்றது. வான்கோழியின் ஆட்டத்தைக் கண்ட நாங்கள் மகிழ மாட்டோம். பொருட்படுத்த மாட்டோம். மயிலின் ஆட்டத்தைப் பார்த்து நாங்கள் மகிழ்வதைக் கண்ட வான்கோழி, மயிலின்மேல் பொறாமை கொண்டு, மயிலுடன் ஆட்டப் போட்டி நடாத்த வருமானால் நாங்கள் வான்கோழியின் அறியாமையை எண்ணிச் சிரிப்போம். மயிலின் இடத்தில் அமைந்துள்ள இயற்கை அழகையும், அதன் ஆட்டச் சிறப்பையும் ஒப்புக்கொள்ள வான்கோழியின் மனம் இடந்தரவில்லை. வான்கோழி தான் மயிலிலும் ஏன் குறைய வேண்டும் என எண்ணிவிட்டது. தன்னை மயில் போலவே பாவித்துத் தானும் தன் சிறகுகளை அகல விரித்து ஆடியது. வான் கோழியின் ஆட்டத்தையும் மயிலின் ஆட்டத்தையும் ஒரே நேரத்தில் பார்த்தவர்கள், வான்கோழியைப் பற்றி என்ன எண்ணுவார்கள். வான் கோழி மயிலின் அழகையும் ஆட்டத்தையும் உயர்ந்தவை என ஒப்புக் கொள்ள மறுத்துவிட்டது. தன்னிடத்தில் இல்லாத தன்மைகளை உள்ளன வென்று காட்ட முற்பட்டும் விட்டது. இச்செயல்களால் வான்கோழியின் சிறுகுணங்கள் வெளிப்பட்டு விட்டன.

*கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி*
*தானுமதுவாகப் பாவித்துப் - தானும்தன்*
*பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போலுமே*
*கல்லா தான் கற்ற கவி.*

எனும் தொடர்களை மீண்டும் படித்துப் பாருங்கள்.

காட்டிலே ஆடுகின்ற மயிலும் வான்கோழியும் சிறந்த இலக்கியத் திறனாய்வை எமக்குக் காட்டுகின்றன.

கல்லாதவன் கற்றவனிடத்தில் உள்ள ஆற்றல்களை ஒப்புக்கொள்ள மாட்டான். சிறிது கற்றவுடனே எல்லாம் அறிந்தவனைப் போலக் கல்லாதவன் ஆரவாரம் செய்வான். கற்றவனை உலகம் மதித்துப் பாராட்டு தலைக் கல்லாதான் கண்டவுடன் மனம் வருந்துவான். தான் மிகக் கற்றவன்

என்பதை விளம்பரஞ் செய்ய முயல்வான். கற்றவன் பாடிய கவிதை களைப் போலத்தானும் கவிதைகள் பாடவேண்டுமென்று நினைப்பான். ஏதோ சில பழம் பாட்டுகளைப் படித்துப் புதிய கோலத்தில் பாக்கள் பாடுவான். உள்ளத்தில் உண்மை ஒளிவீசாத கவிதைகள், வெறும் சொற்குவியல் ஆகவே தோன்றும். கற்றவர்கள் போலிக்கவிதைகளை மதிக்க மாட்டார்கள். “சொல்லைத் தொடுக்கும் கல்லாப் புலவரின் போலிப் புனைவுகள்” என்று இகழ்வார்கள்.

மயில் உவமானம் - உண்மைப் புலவன் உவமேயம்.

வான்கோழி உவமானம் - கல்லாதான் உவமேயம்.

மயிலின் ஆட்டம் உவமானம் - உண்மைப் புலவன் கவிதை பாடல், உவமேயம்.

வான்கோழியின் ஆட்டம் உவமானம் - கல்லாதவன் கற்றகவி, உவமேயம்.

மயிலுக்கு இயற்கை அழகும் நடித்தலாகிய செயற்கை அழகும் நிரம்பி இருத்தல்போலவே. உண்மைப் புலவனிடத்தில், இயற்கையான மதிநுட்பமும், செயற்கையான நூலறிவும் இருக்கின்றன. இனி, மயில் இயல்பாகவே தன் உள்ளத்திலே தோன்றுகின்ற ஈடுபாட்டினால் தன்னை மறந்து ஆடுகின்றது. உண்மைப் புலவனும் இயல்பாகவே தன்னுடைய உள்ளத்தில் ஊறி எழுந்த உணர்ச்சியால் தன்னை மறந்து பாடுகின்றான். வான்கோழிக்கு, இயற்கை அழகும் நடித்தல் ஆகிய செயற்கை அழகும் குறைவாக இருந்தல் போலவே, கல்லதவனிடத்திலும் இயற்கையான மதிநுட்பமும் செயற்கையான நூலறிவும் குறைவாக இருக்கின்றன. வான்கோழி இயல்பாகவே எழுகின்ற உணர்ச்சிப் பெருக்கால் ஆடாமல், மயில் ஆடுகின்ற ஆட்டத்தைக் கண்டு பொறமையினால், தன்னையும் மயிலாகப் பாவித்து ஆடுகின்றது. கல்லாதவனும், இயல்பாகவே தன் உள்ளத்தில் எழுகின்ற உணர்ச்சியினால் தன்னை மறந்து கவிதைகளைப் பாடாமல், உண்மைப் புலவன் கவிதை பாடிப் பெறுகின்ற பொருளையும் புகழையும் கண்டு, மனம் பொறாமல் பிறர் பாடிய கவிதைகளைக் கற்று, அவைபோலப் பாடுகின்றான். வான்கோழியின் ஆட்டம் மயிலின் ஆட்டத்துடன் ஒப்ப மதிக்கப்படாமல் இகழப்படுதல் போலவே, கல்லாதான் கற்ற கவியும் கற்றவன் கவிதையுடன் ஒப்ப மதிக்கப்படாமல் இகழப்படுகின்றது. பொல்லாச் சிறகு என்ற தொடரால் வான்கோழியின் இயற்கை அழகு மயிலின் இயற்கை அழகினும் மிகக் குறைவென்பதை

உணர்ந்து கொள்ளலாம். இதனால் கல்லாதவனுடைய இயற்கை அறிவு விளக்கம் பெறாது என்பதையும் அறிகின்றோம்.

இங்ஙனம் குழந்தைகளும் உணர்ந்து விளங்கத்தக்க உவமானங் களைக் காட்டி உயர்ந்த கொள்கைகளை உணர்த்துகின்ற புலமை பாராட்டுற்குரியது. மயிலும் வான்தோழியும் ஆடுகின்ற ஆட்டங்கள், மக்கள் வாழ்வில் என்றும் சிந்திக்க வேண்டிய கவிதைப் பண்புடன் கலந்துவிட்டன. மயிலின் ஆட்டத்திலும், வான்கோழியின் ஆட்டத்தான் சிறந்தது, எனக் கூறுகின்ற குரலும் கவிதை உலகில் இடம் பெறப் பார்க்கின்றது. ஔவையாரின் குரலை நாங்கள் எழுப்புவோம்.

**தினகரன் 25.9.1955 (ஞாயிறு)**

❍❍❍

# 5
# தமிழ் வளர்த்த சான்றோர் (2)

# 1. தமிழே உருவான தங்கப்புலவரின் தமிழுக்கே உரித்தான தனிச்சிறப்பு

## சிந்தாமணியின் சொல்லினிமை, திருவாசகத்தின் அன்பூற்றம், திருக்குறளின் பொருள் வளம், சிவஞான போதத்தின் செம்பொருள் நலம் செறிந்திலங்கும் தகைமையது

தங்கப்புலவன் தமிழே உருவானவன். "கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்", தங்கப்புலவனின் சிந்தையிலே கலந்து, புதிய இனிமையும், இளமையும் பெற்றுவிட்டது.

சிந்தாமணியின் சொல்லினிமையும், திருவாசகத்தின் அன்பூற்றமும், திருக்குறளின் பொருள் வளமும், சிவஞான போதத்தின் செம்பொருள் நலமும், சேர்ந்து விளங்கும் சிறப்புத் தங்கப்புலவன் தமிழுக்கே உரியதாகும்.

தங்கப்புலவன், செந்தமிழ் அன்னையைத் தெய்வக் கோலத்திற் கண்டு பாடிய பாக்கள் பல. அப்பாக்களிலே தங்கப்புலவனின் தமிழன்பு சுரக்கின்றது.

*செந்தமிழ்ச் செல்வியைத் தாமரையாட்டியைத் தென்பொதியச்*
*சந்தனச் சோலையில் ஏழிசை கூவுந் தனிக்குயிலைச்*
*சிந்தையிற் பூத்துச் செந்நாவிற் பழுத்துச் செவியினிலே*
*வந்து கனியும் பனுவற் பிராட்டியை வாழ்த்துதுமே.*

இச்செய்யுளின் தங்கப்புலவன், தமிழுடன் தன் ஆவி கலந்து நின்று கூவுகின்ற ஆர்வக் குரலைக் கேட்கின்றோம். சந்தனச் சோலையில், ஏழிசை கூவுகின்ற தனிக்குயிலாகச் செந்தமிழ்ச் செல்வி புலவனுக்கு காட்சி கொடுக்கின்றாள். அதே நேரத்தில், அவள் வெண் தாமரை மலரில் வீற்றிருக்கின்ற கலைமகளாகவும் புலவனுக்குக் காட்சி கொடுக்கின்றாள். தமிழன்னை, கலைத் தெய்வக்கோலத்துடன் தங்கப் புலவனை ஆட் கொண்டு விட்டாள். தங்கப்புலவன் தன்னை மறந்தான். "மீளா அடிமை உனக்கே ஆளாய்!" என்ற வண்ணம் தமிழ் அன்னைக்கே தன்னை ஒப்படைத்து விட்டான். தன் தன்மைமாறித் தமிழின் தன்மையாகக் கலந்துவிட்டான். தங்கப் புலவனின் சிந்தையில், தமிழ் அன்னை தான் வீற்றிருக்கின்றாள். "நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்; நினையாமல்,

ஒருபோதும் இருந்தறியேன்" என்ற நிலையில், தங்கப்புலவன் தமிழன்னையை வேண்டுகின்றான். தமிழன்னை தங்கப் புலவனின் சிந்தையிலே தங்கியிருந்து, மிகப் பழகிவிட்டாள். நெஞ்சம் முழுவதும் அவளாகவே நிறைந்து விட்டாள் - பூத்துவிட்டாள். தமிழன்னையும், தங்கப் புலவன் தன்மையாக மாறிவிட்டாள்.

இங்ஙனம் சிந்தை முழுதும் நிறைந்த தமிழன்னை, புலவனின் செந்நாவில் சென்று பழகினாள். புலவனின் நா! செந்நா! மெய்யோடு பழகிய நா! சிவப்பண்பு கனிந்த செந்தமிழ்ப் பனுவல்களை ஓதி, ஓதிச் செம்மை பெற்ற நா! அந்தச் செந்நாவில் ஏறி, ஏறிப் பழகிய தமிழன்னை அப்படியே இருந்துவிட்டாள். நாவிலே இருந்து முற்றிப் பழுத்து விட்டாள். தன் தன்மையை நாவுக்கும் நல்கிவிட்டாள். பழுத்தல் - பயன் நிறைதல். மெய்ப்பொருள் நிறைந்த கவிதைகளைக் கொடுத்தல். உள்ளத்தில் நின்று ஊறி மெய்பொருள் நிறைந்து கேட்கின்றவர்களின் செவியிலே சென்று பயன் தருகின்ற இலக்கியங்களை - பனுவல்களைச் செந்தமிழ் அன்னை உருப்படுத்து என்றாள். தங்கப்புலவனின் தமிழ் - கவிதைகள், செந்தமிழ் அன்னை அவனுடைய "சிந்தையிற் பூத்துச்செந் நாவிற் பழுத்துச் செவியினிலே வந்து கனிந்த செல்வங்களாக" விளங்குகின்றன.

தங்கப் புலவன் உண்மைக் கவிதையின் பண்பை உரைத்துவிட்டான். உண்மையான கவிதை புலவனின் சிந்தையில் நின்று சுரக்கவேண்டும். அங்ஙனம் சுரந்த கவிதை, மெய்யே பயில்கின்ற அறப்பனுவல்களை ஓதிப் பண்பட்ட நா - சொற்களால் உருப்பெற வேண்டும். உருப்பெற்ற கவிதை, கேட்கின்றவர்களின் செவியைக் கவரக்கூடிய ஓசை நயமும் இனிமையும் இயல்பாகவே அமைந்து பொலிய வேண்டும். ஒருமுறைகேட்டவர்கள், மறந்துபோகாத வண்ணம், ஓசையுடன் பொருளும் கலந்து நிலவவேண்டும். **பாடுகின்றவருக்கு மட்டும் பனுவல்கள் பயன்படாமல் கேட்கின்றவர்களுக்கும் பயன்படவேண்டும் என்பதைச் "செவிப்புலத்தே வந்த கனியும் பனுவல்" என்ற தொடரால், புலவன் வெளிப்படுத்துகின்றான். "சிந்தையிற் பூத்து"** என்ற தொடரில் புலவன் ஈடுபாடும் தன் மறதியுமே சிறந்த இலக்கியத் தோற்றத்தின் காரணங்கள் என்பதை வலியுறுத்துகின்றது. பூத்தல் - சிந்தை முழுதும் நிறைதல். மாசற்ற தூயசிந்தையிலே தான் உண்மையான கவிதை ஊற்றெடுக்கும். பூத்தல் ஊற்றெடுத்துப் பெருகி நிறைதலைக் குறிக்கின்றது. "கருத்திருத்தி உள்புகுந்து", என்றார் மணிவாசகனார். மாசகலாத உள்ளத்திலே நின்று தோன்றுகின்ற கவிதைகள் காலவெள்ளத்தில் அள்ளுண்டு அழிந்துவிடுகின்றன. மாசற்ற உள்ளத்திலே

தான், உலகம் உள்ளளவும் வாழ்கின்ற கவிதைகள் - பனுவல்கள் தோன்றுகின்றன. "உள் ஒளி பெருக்கி" எனுந் திருவாசகத் தொடருடன் "சிந்தையிற் பூத்து" எனவரும் தங்கப்புலவன் தொடரை ஒப்பிடுக. சிந்தையில், தமிழ்த் தெய்வம் வீற்றிருந்து உள் ஒளியைப் பெருக்குகின்றதென்பதையே "சிந்தையிற் பூத்து" எனக் குறித்தான்.

இனிச் "செந்நாவிற் பழுத்து" என்ற தொடர், புலவனின் உயர்ந்த வாழ்வைக் குறிக்கின்றது. நல்ல நூல்களையே பலகாலும் ஓதிப் பண்பட்ட செம்மையை - வாய்மையைக் காட்டுகின்றது.

*பொய்ம்மை மொழி புகன்றறியோம்*
*புகலமனத் தெண்ணுகினும்*
*மெய்ம்மையலது உரையா*
*நாவேத நவில் நவிற் சியினால்*

எனவரும் நயிடதப் பாப் பொருள்போல, நாவின் தூய்மையைச் செந்நா என்ற சொல் தெரிவிக்கின்றது. பழுத்த என்ற சொல் புலவனின் சிந்தையிலே ஊற்றெடுத்த எண்ணம், அவனின் வாய்மையே பயில்கின்ற மொழிகளால் பண்பட்டுப் பயன் நிறைந்து நிற்றலைக் குறிக்கின்றது. சிந்தையில் தோன்றுகின்ற சிறந்த எண்ணமும், வழுக்கலந்த மொழிகளால் உருப்படுத்தும் நிலைமை ஏற்பட்டால், தன்பயனில் குறைந்துவிடும். இதனாலேயே கற்கின்ற நூல்களை நல்லனவாக ஆராய்ந்து கற்கவேண்டுமென நாலடியார் கூறுகின்றது. **"ஆராய்ந்து அமைவுடைய கற்க!"** அமைவுடைய அறப்பனுவல்களைக் கற்றால், அவற்றுடன் பழகிப்பழகி நா - சொல் செம்மையடையும். "செந்தமிழும் நாப்பழக்கம்", என்றார் ஔவையாரும், தங்கப்புலவன், பல அறப்பனுவல்களில் பலகால் பழகிப் பழுத்த செந்நாப் பெற்றவன், தான் பெற்ற செந்நாவைத் தனக்கு வழி காட்டிய செம்புலச் செல்வர்களும் பெற்று வாழ்ந்த பரம்பரை உரிமையைப் பாராட்டியும், இனிமேல் வருகின்ற புலமைப் பரம்பரையைத் தழுவியும் "செந்நாவிற்பழுத்து வந்து, கனியும்" எனக் கூறினான்.

*செவியினிலே வந்து கனியும் பனுவற் பிராட்டி*

என்னுந் தொடரில் இலக்கியத்தின் நிலை பேறு காட்டப்படுகின்றது. இலக்கியம் - பனுவல், வாழ்கின்ற மக்களை மலர்த்த வேண்டும். வாழ வழிகாட்ட வேண்டும். பாடிய புலவன் உள்ளத்திலே நிலவிய எண்ணங்கள் படிக்கின்ற - கேட்கின்ற மக்களின் உள்ளத்திலே படிந்து பயன்பட வேண்டும். வாழையடி வாழைபோலத் தொடர்ந்து மக்கள் இனத்தை வாழ்

வியாத பனுவல் வாழாது. செவியினிலே வந்து பயனை வழங்கவேண்டும். உபதேச வாயிலாக நூற்பொருள், ஊழி ஊழி வாழவேண்டும்.

*செவியினிலே வந்துகனியும் பனுவல்*

புலவன் நூலை ஆக்குகின்றவன், புலவனால் ஆக்கப்பட்ட நூல் பழம் போன்றது. அந்த நூலைப் படிக்கின்றவர்களே அதன் பயனை நுகர்கின்றார்கள். பழுத்த பழத்தை மரம் உண்பதில்லை. மரத்தின் பழத்தை உண்கின்றவர்கள் தாமும் சுவைத்துச் சுவைத்துத் தம்மைச் சேர்ந்தோர்க்கும் கொடுப்பது போலப் புலவன் ஆக்கிய நூலைப் படித்துச் சுவைக்கின்ற வர்கள் தாமும் சுவைத்துப் பிறர்க்கும் எடுத்துரைக்கின்றார்கள். உண்ணக் கூடிய பழத்தை உதவியமரம் பேணப்படுதல்போல, உயர்ந்த நூலை ஆக்கிய புலவனும் பேணப்படுகின்றான். புலவன் ஆக்கிய பழமாகிய நூல், உலக மக்கள் உணரக்கூடிய சுவையும் எளிமையும் நலமும் பொருந் தியதாக விளங்கவேண்டும். **"நவில் தொறும் நூல் நயம்போலும்"** என்றார் வள்ளுவரும், நூல்கள் நவிலுதற்கு இனிதாக இருக்கவேண்டும். இந்த உண்மைகளையெல்லாம் கருதிய தங்கப்புலவன்,

*சிந்தையிற் பூத்துச் செந்நாவிற் பழுத்துச்*
*செவியினிலே வந்து கனியும்*
*பனுவல் பிராட்டியை வாழ்த்து துமே*

எனவாழும் இலக்கியத்திற்கு வரைவிலக்கணம் வகுத்துரைத்தான்.

இத்தொடரால் தங்கப்புலவன் தமிழ்த் தெய்வத்தை வணங்க எம்மை யெல்லாம் அழைக்கின்றான். தமிழ் அன்னை சிறந்த பனுவல்களையெல் லாம் பெற்றிருக்கின்றாள். அவளை வழிபடுவோம். அவள் மிகச்சிறந்தவள். உலகம் உள்ளளவும் வாழ்வாள். அவள் பனுவல் பிராட்டி. உயர்ந்த இலக்கியங்களின் தாய். எமது தாய் என்ற அன்பினால் யாம் அவளைப் புகழ்ந்துரைக்கின்றோமல்லோம். அவள் உலகத்தாய். வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்டதாய். அவளை வாழ்த்துவோம். நாங்களும் அழியாத பனுவல்களை அவளுக்கு அணிவோம் என்ற ஆர்வக் குரல் அலைமோதுகின்றது. படித்துப் பாருங்கள். ஏழ் இசையும் இசைப் பயனுமாய் நின்ற இறைவியை, தென்றல் தவழும் சந்தனப் பொதி யத்தில் வளர்ந்த தமிழ் அன்னையைத், தங்கப்புலவன் பாடுகின்றான். படித்துப் பாருங்கள்.

*செந்தமிழ்ச் செல்வியைத் தாமரை*
*யாட்டியைத் தென்பொதியச்*
*சந்தனச் சோலையில் ஏழிசை*

*கூவுந் தனிக்குயிலைச்*
*சிந்தையிற் பூத்துச் செந்நாவிற்*
*பழுத்துச் செவியினிலே*
*வந்து கனியும் பனுவல்*
*பிராட்டியை வாழ்த்து துமே*

இதில், தனிக்குயிலே, என்றது, தன்னோடொத்த மொழிகள் பல பேச்சு வழக்கொழியவும், தான் என்றும் இளமை மாறாது நிற்கின்ற தமிழின் தலைமையைக் காட்டுகின்றது. எழிசை கூவும் தனிக்குயில் எனக்கூறவே, இளமை மாறாத இனிமைப் பண்பு பெறப்பட்டது. இளங்குயிலின் குரலிலேதான் இனிமை தோன்றும்.

*தென்பொதியச் சந்தனச் சோலையில்*
*ஏழிசை கூவுந் தனிக்குயிலே*

என்ற குரலில், புலவனின் ஆராமை நிழலாடுகின்றது. தென்பொதிகை மலையிலே, சந்தனச்சோலையிலே இருந்து ஏழிசை கூவுகின்ற தனிக் குயில் என்ற சிறப்பினால் தமிழ்மொழி தோன்றிய சூழ்நிலையும் அதன் இயல்பான இனிமைப் பண்பும் தெளிவாகின்றன. சந்தன மரம் தன்னை அண்டி நிற்கும் மரங்களுக்கும் தன் மணத்தை அளிக்கின்றது. தன்னை வெட்டுகின்ற கருவிக்கும் தன் மணத்தைக் கொடுக்கின்றது. சந்தனச் சோலையில் பயின்ற தமிழும், தன்னைச் சேர்ந்த தெலுங்கு, கன்னடம், துளுவம், மலையாளம் எனும் மொழிகளுக்கெல்லாம் தன் சொற்களை அளித்ததுடன் அமையாது. தன்னைச் சிதைக்கமுயன்ற ஆரியத்திற்கும் தன் ஒளியை அளித்து, உலாவச் செய்கின்றது. பொதியமலை எல்லாராலும் அறியப்பட்து. தொன்மை வாய்ந்தது. இயற்கை எழில் நிரம்பியது, தமிழும் உயர் தனிச் **செம்மொழிகளுள்** ஒன்றாக மொழி ஆராய்ச்சியாளரினால் போற்றப்படுகின்றது. பழமை வாய்ந்தது. இயற்கையாகவே அமைந்த இனிமையும் இளமையும் வாய்ந்தது. இந்த உண்மைகளையெல்லாம் எண்ணிய தங்கப் புலவன்,

*தென்பொதியச் சந்தனச் சோலையில்*
*ஏழிசை கூவுந் தனிக்குயிலை*

எனப்பாராட்டினான். தங்கப்புலவன் தமிழைப் பாடிய பாவுடன் மணி வாசப் பெருமான் தமிழைப்பாடிய பா வொன்றையும் சேர்த்துப் படியுங்கள்.

*செந்தமிழ்ச் செல்வியைத் தாமரை யாட்டியைத் தென்பொதியச்*
*சந்தனச் சோலையில் ஏழிசை கூவுந் தனிக் குயிலைச்*

*சிந்தையிற் பூத்துச் செந்நாவிற் பழுத்துச் செவியினிலே*
*வந்து கனியும் பனுவற் பிராட்டியை வாழ்த்துதுமே.*

*சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்தும் என்சிந்தையுள்ளும்*
*உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண்தீந்தமிழின்*
*துறைவாய் நுழைந்தனையோ அன்றி ஏழிசைச் சூழல் புக்கோ*
*இறைவாதடவரைத் தோட்கென் கொலாம் புகுந்தெய்தியதே.*

**தினகரன்** 23.10.1955 **(ஞாயிறு)**

❍❍❍

# 2. பொருள் அதிகாரம் தந்த புரவலன்

**(சி.வை. தாமோதரம் பிள்ளை)**

தொல்காப்பியம் தமிழ் இலக்கண நூல். எழுத்து, சொல், பொருள், என மூன்று பிரிவாக அந்நூல் விளங்குகின்றது. இப்பொழுது தமிழில் உள்ள நூல்கள் எல்லாவற்றினும் முந்திய நூல் தொல்காப்பியமே. இதனை இயற்றியவரின் பெயர் தொல்காப்பியர். இந்த நூலில் மிகச்சிறந்த பகுதி பொருள் அதிகாரம். தொல்காப்பியத்தின் பொருள் அதிகாரம் பழந் தமிழரின் வாழ்வு. பொருள் அதிகாரம் மறைந்தால் தமிழர் இனமே மறைந்துவிடும். தொல்காப்பியம் பொருளதிகாரம் ஏட்டிலேயே இருந்தது. ஏடும் அருமையாகவே சில தமிழ்ப் புலவர்கள் வைத்திருந்தார்கள். அச்சுக்கூடம் வந்ததும் ஏட்டில் இருந்த தமிழ் நூல்களில் சில அச்சில் ஏறி வாழ்ந்தன. தொல்காப்பியம் பொருள் அதிகாரத்தை அச்சிட ஒருவரும் முன்வந்திலர். தமிழரின் உயிர்போன்ற பொருள் அதிகாரம் ஏட்டிலேயே கிடந்து இறந்துபோகும் நிலைமையைக் கிட்டியது. இந்த நிலைமையை முதன்முதல் எண்ணி, ஏங்கி வருந்திய தமிழன், யாழ்ப்பாணம் சிறுப் பிட்டியிலே பிறந்த சி.வை. தாமோதரம்பிள்ளை ஒருவரேயாவர். அவர் தொல்காப்பியம் பொருள் அதிகாரத்தை அச்சிட்டுத் தமிழகத்துக்குத் தந்தார்.

தாமோதரம்பிள்ளை அவர்கள்அரும்பாடுபட்டு, அச்சிட்டுத் தந்த பொருள் அதிகாரமே இன்று தமிழன் நாகரிகத்தை நிலைநாட்டுகின்றது. ஒரு தாமோதரம் பிள்ளை உள்ளத்தில் ஊற்றெழுந்த சிந்தனை, உலகம் உள்ளளவும் தமிழனின் உயர்வை நிறுத்தக்கூடிய ஆக்கத்தை அளித்து விட்டது. தாமோதரம் பிள்ளை உணர்ந்து, உருகி உருகி, அலைந்து, ஏடுகளைத் தேடி எடுத்தார். ஒருவரும் அவரின் ஊக்கத்தை ஆதரித்து உதவிசெய்ய அக்காலத்தில் முன்வந்திலர். பிள்ளை அவர்கள் உலையாத மனத்திண்மையுடன் பொருளதிகாரத்தைப் பதித்து வெற்றிபெற்றார்.

"வடவேங்கடம் தென்குமரியாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்தில்" உள்ளவர்கள் தொல்காப்பியம் பொருளதிகாரத்தைப் பதித்திலர். கடல்சூழ் இலங்கையின் ஒரு பகுதியாகிய யாழ்ப்பாணத்திலே, சிறுப்பிட்டியென்னும் சிற்றூரிலே பிறந்த சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களே பொருளதி காரத்தைப் பதித்துத்தந்த புரவலன். இப்பொழுது, தொல்காப்பியம் பொருளதிகாரப்புதிய பதிப்புகள் பல வெளிவருகின்றன. புரவலன் தாமோ தரனாரின் புகழ் மெல்ல மெல்ல மறைகின்றது. அவர் ஆற்றிய

அருஞ்செயலைப் பாராட்டி நன்றிக்கடன் செலுத்தும் செயலில் தமிழகம் ஆர்வங்காட்டத் தவறிவிட்டது. தாமோதரனார் நினைவு விழா ஆண்டு தோறும் தமிழகமெல்லாம் நிகழவேண்டும். இன்றைய தமிழ் இளைஞர் உள்ளத்தில் தாமோதரனாரின் தனி ஆற்றலும் தொண்டும் இடம்பெற வேண்டும். அன்றைய தமிழகத்தாரைக் கூவித் தாமோதரனார் சாற்றுகின்ற குரலைக் கேளுங்கள்:

"ஏடு எடுக்கும்போது ஓரஞ் சொரிகிறது. கட்டு அவிழ்க்கும்போது, இதழ் முரிகிறது. ஒற்றை புரட்டும்போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது. இனி எழுத்துக்களோ என்றால், வாலும் தலையும் இன்றி, நாலுபுறமும், பாணக்கலப்பை மறுத்து, மறுத்து, உழுதுகிடக்கின்றது....." என்பது பிள்ளை அவர்களின் குரல்.

இவ்வளவு தொல்லைகளுக்கும் உள்ளம் உடைந்து ஊக்கங்குறை யாமல் உழைத்துப் பொருள் அதிகாரத்துடன் கலித்தொகை, சூளாமணி எனும் அரும்பெரும் நூல்களையும் பதித்துத் தந்தார். திரு. ஆல்வாய்ச் சிவனாரும், தென்பொதிகை அகத்தியனாரும் செந்தமிழின் தந்தையரா யினார் எனச் செப்புகின்ற புனைந்துரையிலும் பார்க்கச், சிறுப்பிட்டித் தாமோதரனாரே செந்தமிழின் தந்தையார் எனச் செப்புகின்ற உண்மை உரை சாலச்சிறந்ததாகும்.

**தினகரன் 17.07.1955 (ஞாயிறு)**

❍❍❍

# 3. விடுதலை முரசொலி கொட்டிய வீரக்கவிஞன்

## அடிமைத் தளையை அறுத்தெறிய ஆண்மை முழக்கம் செய்த அமரகவி

## பாரதநாட்டின் புராதன பெருமையைச் சுட்டிக்காட்டி மக்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டிய மகாகவி பாரதி

பாரதியார் அமரகவி.

எழுத்தறியாத மக்கள் உள்ளத்திலும் விடுதலையுணர்ச்சியைத் தோற்றுவித்த வீரக்கவி.

பாட்டென்றால் பண்டிதர்க்கேயுரியது என்ற எண்ணத்தை மாற்றிப் பாட்டென்றால் படிப்பில்லாத மக்களுங்கேட்டு உணர்ச்சி கொள்ளும் பண்பு வாய்ந்தது, என்ற கொள்கையை நிலைநாட்டியகவி. தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக்கெட்டு, பாழ்பட்டுக் கிடந்த பாரத நாட்டை, வாழ்விக்கவந்த கவி. பாரதியாரின் உள்ளம் பழம் பாரதநாட்டின் உயர்வையும், அடிமைப்பட்டு ஆற்றலழிந்து அவலப்படுகின்ற அடிமைப் பாரத நாட்டின் இழிவையும் சிந்தனை செய்தவுடன் விம்மியது; வெறி கொண்டது.

“ஆ என் அருமைப் பாரதமே! உன் ஆண்மை யெங்கே? அறிவு எங்கே? நீயுமா இந்த இழிநிலை அடைவது? நீ அடிமையுற்று அல்லற் பட்டாலும், அறத்தைக் காப்பாற்றி நிற்கின்றாய்! அறத்தெய்வம் உன்னை அணைத்துப் பாதுகாக்கும். உன்னுடைய அடிமை விலங்கை, உனது மக்களாகிய நாங்கள் உடைத்தெறிவோம்! நீ வெற்றித்தாய்! உன்னுடைய வெற்றியை - அறத்தொடு கலந்த தெய்வ ஆற்றலை வாழ்த்துகின்றோம்.

*சிறந்து நின்ற சிந்தையோடு*
*தேயம் நூறு வென்றிவள்*
*மறந் தவிர்ந்தந் நாடர்வந்து*
*வாழிசொன்ன போழ்தினும்*
*சிறந்து மாண்பு தீரமிக்க*
*ஏழ்மை கொண்ட போழ்தினும்*
*அறந் தவிர்க்கிலாது நிற்கும்*
*அன்னை வெற்றி கொள்கவே!*

என வாழ்த்துகின்றார். இப்பாட்டில் பாரதநாட்டின் மேலான பண்பைப் பாரதியார் பாராட்டுகின்றார். 'அன்னையே நீ வீரத்திற் சிறந்து வேற்று நாட்டாரை வென்று வாழ்த்துப் பெற்றிருந்தநாளிலும், செல்வத்தருக்கால் - வெற்றிவெறியால் - அறத்தை மறந்து மாற்றாருக்கு அல்லல் புரியாது ஆட்சி புரிந்தாய். உன்னாட்சி வீழ்ந்து மாற்றாருக்கு வணங்கி, வறுமைப் பிணியால் வாடி, உயிர்மாய்கின்ற ஏழ்மை நிலையிலும், அறத்தை மறந்து வாழாது, மிக விழிப்புடன் ஆவியைப் பறிகொடுத்தும், அறத்தையே பாதுகாத்து வருகின்றாய்' எனப்போற்றிப் புகழ்கின்றார். "அறந்தவிர்க் கிலாது நிற்கும் அன்னை வெற்றிகொள்கவே" எனும் பாட்டடியின் ஓசையும் எழுச்சியும், பாரதியார் பாரததேவியின் அறப்பண்பில் ஊறி, உயிர் துடித்து, வெறித்துக் குமுறுகின்ற, உணர்ச்சி அலைகளாய் எழும்பி எம்மை விழிக்கச் செய்கின்றன; விடுதலை வெறியை எழுப்புகின்றன.

"பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள் பாரத நாடு" எனத் தொடங்கு கின்ற பாட்டைக்கேளுங்கள்; நீங்களும் பாடுங்கள்.

*ஞானத்திலே பர மோனத்திலே-உயர்*
*மானத்திலே அன்ன தானத்திலே*
*கானத்திலே அமுதாக நிறைந்த*
*கவிதையிலே யுயர் நாடு*

★

*தீரத்திலே படை வீரத்திலே - நெஞ்சில்*
*ஈரத்திலே உப காரத்திலே*
*சாரத்திலே மிகு சாத்திரங்கண்டு*
*தருவதிலே யுயர் நாடு*

★

*ஆக்கத்திலே தொழில் ஊக்கத்திலே - புய*
*வீக்கத்திலே உயர் நோக்கத்திலே*
*காக்கத்திறல் கொண்ட மன்னர் தஞ்சேனைக்*
*கடலினிலே உயர் நாடு*

★

*ஆற்றினிலே சுனை ஊற்றினிலே - தென்றற்*
*காற்றினிலே மலைப் பேற்றினிலே*
*ஏற்றிலே பயன் ஈந்திடுங் காலி*
*இனத்திலே உயர் நாடு......*

இந்தப் பாட்டுக்களைப் படிக்கின்ற பொழுது எங்களை அறியாமலே எங்களின் உள்ளம் பெருமிதமடைகின்றது. "ஞானத்திலே, பரமோனத்திலே, புயவீக்கத்திலே, உயர்நோக்கத்திலே" என ஒவ்வொரு சொல்லும் புயல் போல இரைந்தெழுந்து ஒன்றோடொன்று சேரும்பொழுது தோன்றுகின்ற ஆவேசத்தைப் பாருங்கள்.

"லே" என்ற ஒவ்வொரு எழுத்தும் எவ்வளவு உயிர் ஆற்றலை உதவுகின்றது. நெஞ்சில், ஈரத்திலே உப-காரத்திலே உயர்நாடு என்னும் பொழுது பாரதியாரின் கவிதை வெறி உலகையே விழுங்கி விடுகின்றது. எங்கள் பாரத நாட்டு மக்கள் ஈரத்திலும் உபகாரத்திலும் உயர்ந்தவர்கள்; ஞானத்திலும் உயர் மானத்திலும் சிறந்தவர்கள். எங்கள் பாரத நாட்டில், ஆற்றின் ஊற்றும், தென்றற்காற்றின் இன்பமும், மலைநாட்டின் வருவாயும், பயன்தரும் பசு முதலான காலியினங்களின் பெருக்கமும் உள்ளன - என்ற கருத்துக்களை இவ்வளவு உணர்ச்சியும் எளிமையும் கொண்ட சொற் களால் பொருள் விளக்கம்பெற எமக்கு அறிவிக்கின்றார். இத்துடன் பாரதியார் எம்மை விடவில்லை. "பாரத தேசமென்று பெயர்சொல்லுவார் - மிடிப்பகையைக் கொல்லுவார், துயர் பகை வெல்லுவார்?" எனக் கூறி எம்மைப் பாரதமாதாவின் பணிக்கு அழைக்கின்றார். "உங்கள் தந்தையும் தாயும் மகிழ்ந்து வாழ்ந்த நாடு; உங்கள் முன்னோர்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து, வாழ்ந்து மாய்ந்த நாடு, அவர்கள் மனத்திற் சிறந்த எண்ணங்கள் பல தோன்றி வளர்ந்த நாடு. இந்தப் பாரத நாடு பழம்பெரும் நாடு பாடுவம் அஃதை எமக்கில்லை ஈடே!" எனப் பாடிப் பாடிப் பரவுகின்றார்.

*எந்தையும் தாயும் மகிழ்ந்து*
*குலாவி இருந்ததும் இந்நாடே - அதன்*
*முந்தையர் ஆயிரம் ஆயிரம்*
*ஆண்டுகள் வாழ்ந்து முடித்ததும் இந்நாடே - அவர்*
*சிந்தையிலாயிரம் எண்ணம் வளர்ந்து*
*சிறந்ததுமின்னாடே - இதை*
*வந்தனை கூறி மனத்திருத்தியென்*
*வாயுற வாழ்த்தேனோ*

என எம்மைக் கேட்கின்றார். "இருந்ததும் இந்நாடே" என்ற குரலிற் கேட்கின்ற வீறு எம்மை எவ்வளவுக்கெவ்வளவு உணர்ச்சி கொள்ளச் செய் கின்றது. பாரதியாருடன் நாங்களும் கூடநின்று பாடுவதுபோன்ற எண்ண முண்டாகின்றது. இந்த நாடு - உனது தாய்நாடாகிய பாரதம், அடிமை நாடாக இருப்பதை நீங்கள் இன்னும் விரும்புகின்றீர்களா? உங்களுக்கு

முன்னெல்லாம் தோன்றியோர் அன்னை பாரததேவியின் ஆண்மையை - அறத்தை பாதுகாத்த செயல்களை நீங்கள் அறிந்தீர்களா? அறிந்தால், அன்னையின் அடிமையை நீக்க இயலாது அயர்ந்திருக்க மாட்டீர்கள். அச்செயல்களைக் கேளுங்கள். கேட்கும்பொழுதே உங்கள் உள்ளம் வளரும் - வீரம் கொள்ளும்.

*முன்னை இலங்கை அரக்கர் அழிய*
*முடித்தவில் யாருடை வில் - எங்கள்*
*அன்னை பயங்கரி பாரததேவி நல்*
*ஆரிய ராணியின் வில்*

எனவரும் பாட்டுக்களில் முன்னைய பாரத வீரர்களின் வெற்றிச் செயல் களையெல்லாம் பாரதியார் விளம்புகின்றார்.

விளம்புகின்றபொழுது அவரின் வீர உணர்ச்சி வெளிப்பட்டுப் படிக்கின்ற எங்களைப் பழைய பாரத வீரரின் - ஆட்சி செய்த சுதந்திரப் பாரத வீரரின் கோலமாகப் புதுக்குகின்றது. பாரத தேவியின் அடிமை விலங்கை உடைத்தெறிந்து அவளின் ஆட்சிக்கொடியை உலக மேடையில் உயர்ந்து பறக்கவிடுதற்குப் போர் தொடுக்கப் பாரத மக்களைப் பாரதியார் தட்டியெழுப்புகின்றார்.

*இன்னல் வந்துற்றிடும் போததற்கஞ்சோம்*
*ஏழையராகி இனி மண்ணிற் துஞ்சோம்*
*தாய்திரு நாட்டினில் இனிக்கையை விரியோம்*
*கன்னலுந்தேனுங் கனியுமின்பாலும்*
*கதலியும் செந் நெலும் நல்கும் எக்காலும்*
*உன்னத ஆரிய நாடெங்கள் நாடே*
*ஓதுவம் இஃதை எமக்கில்லை ஈடே!*

இப்பாட்டில் வருகின்ற ஒவ்வொரு சொல்லும் இளஞ்சிங்கத்தின் வீரக்கர்ச்சனைபோல மேலோங்கி விண்ணளாவச் செல்கின்ற விமானத்தில் எம்மை ஏற்றிவிடுகின்றது. "இன்னல் வந்துற்றிடும் போததற்கஞ்சோம். ஏழையராகி இனி மண்ணிற் துஞ்சோம்" என்ற அடியைப் படிக்கும் பொழுது எழுகின்ற வீரமும் விறுவிறுப்பும், இமயமலையைத் தூக்கி யெறிந்து விளையாடும் ஆற்றலை எமக்களிக்கின்றது. "தாய் திருநாட்டினில் இனிக்கையை விரியோம்" என்ற விடுதலை வெறி ஒன்றுக்கு நூறாகப் பெருகி எங்கள் உயிரிற் கலந்துவிடுகின்றது. பாரதியார் சுதந்திரப் போர்ப் பறை முழக்குகின்றார். பாரத மக்களைச் சுதந்திரப் போர்க் களத்துக்கு அழைக்கின்றார்.

*சொந்த நாட்டிற் பிறர்க்கடிமை செய்தே*
*துஞ்சிடோம் - இனி - அஞ்சிடோம்*
*எந்த நாட்டினுமிந்த அநீதிகள்*
*ஏற்குமோ - தெய்வம் பார்க்குமோ?*

*நாங்கள் முப்பது கோடிமக்களும்*
*நாய்களோ பன்றிச் சேய்களோ*
*ஒற்றுமை வழியொன்றே என்ப*
*தோர்ந்திட்டோம் - நன்கு தேர்ந்திட்டோம்*
*பொழுதெல்லாம் எங்கள் செல்வங் கொள்ளைகொண்டு*
*போகவோ நாங்கள் சாகவோ?*
*அழுதுகொண்டிருப்போமோ ஆண்பிள்ளைகள்*
*அல்லவோ? - உயிர் வெல்லமோ?*

இந்த முரசொலிப் பாட்டுக்கள் எண்பது ஆண்டு நிரம்பிய கிழவனையும், இளமையுள்ளம் கொள்ளும்படி எழுப்பிவிட்டது. செத்தாலும் இனியடிமை வாழ்வு வேண்டோம், சேர்ந்திடுவோம், சுதந்திரப் போர் செய்திடுவோம் என்ற முடிவை இப்பாட்டுக்கள் ஒவ்வொரு மக்கள் உள்ளத்திலும் உண்டாக்கிவிட்டன. பாரத மக்கள் சுதந்திரப் போரில் இறங்கிவிட்டனர். சுதந்திரப் போர் தொடுத்த பாரத வீரர்கள் சொல்ல முடியாத துன்பங்களை யடைந்தார்கள்; சிறை போந்தார்கள்; நாடு கடத்தப் பட்டார்கள்; பொருள் பறிக்கப்பட்டனர். லாலாலஜபதிராய், தாதாபாய் நவுரோஜி, திலகர் முதலான தலைவர்கள் அடைந்த துன்பங்களைப் பாரதியார் நேரிற்கண்டு பாடிப்பதறுகின்றார்.

*பாரத நாட்டில்*
*பேரன்பு செய்தாரில் யாவரே பெருந்துயரம்*
*பிழைத்து நின்றார். வீரங்கொள் மனமுடையார்*
*கொடுந்துயரம் பலவடைதல் வியத்தற்கொன்றோ*

எனக்கூறி மனத்தைத் திடப்படுத்திக் கொள்கின்றார். நாடிழந்து மக்களையும் நல்லாளையும் பிரிந்து வீடிழந்திங்குற்றேன் என வருந்திய வீரமிக்க லஜபதிராய், அவர்கள் “வீடும் உறவும் வெறுத்தாலும் என்னருமை நாடு பிரிந்த நலிவினுக் கென் செய்கேனே” எனக் கூறிப்புலம்புவதாகப் பாரதியார் பாடிய இப்பாட்டடிகள் மிக எளிமையும் துடிப்பும் இரக்கமும் தாங்கிய உள்ளப்போக்கை எமக்குதவுகின்றது. நாட்டுக்காகவே உயிரைக் கொடுக்கத் துணிந்த வீர லஜபதிராய் அவர்களை நாடு கடத்திய துயர் நெருப்பு பாரதியாரின் உள்ளத்திற் கவிதைக் கனலாக உருப்பெற்று

விட்டது. "தொண்டுபட்டுவாடு மென்றன் தூய பெருநாட்டில் கொண்டு விட்டங்கென்னையுடன் கொன்றாலும் இன்புறுவேன்" என்ற பாட்டைப் படிக்கப்படிக்க எமதுள்ளத்தில் ஊற்றெடுக்கினற் அன்புடன் கலந்த வீர உணர்ச்சி அணுக்குண்டாயிரத்திலும் ஆற்றல் வாய்ந்ததாகும். இப்படி உணர்ந்து ஊறித் தன்னை மறந்து பாடுகின்ற பாரதியாரின் கவிதைகள் இன்னும் ஒரு புதிய மறுமலர்ச்சிக் கவிதை யெழுச்சிக்கு வழிகாட்டுகின்றது.

இனித் தாதாபாய் நவுரோஜி அவர்களைப் பாரதியார் புகழ்ந்து வணங்கிப் பாடிய பாட்டுக்கள் புதிய பாரதநாட்டின் கற்பக மலர்களாகும். "மாதா வாய்விட்டலற அதைச்சிறிதும் மதியாதே வாணாள் போக்குந் தீதாவார் வரினுமவர்க்கினிய சோலிநன்குணர்த்தும் செவ்வியாளன்" எனவும், "வில்விறலாற் போர் செய்தல் பயனிலதாமெனவதனை வெறுத்தே உண்மைச் சொல்விறலாற் போர் செய்வோன் பிறர்க்கன்றித் தனக்குழையாத் துறவியாவோன்" எனவும் பாடிய பாக்களைப் படித்துப் படித்துப் பாரதியாரின் புலமைத்திறனை - சுதந்திரப்போர் வீரர்களிடத்தில் அவர் வைத்திருந்த உயர்ந்த மதிப்பை, உணர்ந்து உவகை கொள்வோம்.

இங்ஙனம் பாரதநாட்டின் விடுதலைக்காக உழைத்துத் தனது உடல், பொருள், ஆவி, மூன்றையும் பலிகொடுத்த சுதந்திர வீரர்களை வாழ்த்திய பாரதியார் முடிவில் மகாத்துமா காந்தியடிகளைப் போற்றுகின்றார்.

*வாழ்க நீ எம்மான் இந்த வையத்து நாட்டிலெல்லாம்*
*தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப்*
*பாழ்பட்டு நின்ற தாமோர் பாரததேசந் தன்னை*
*வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா நீ வாழ்க வாழ்க!!*

இந்தப்பாட்டில் அடிமைப் பாரத தேசத்தின் தன்மையை அப்படியே நிழற்படம் பிடித்துக்காட்டுகின்றார். அடிமையான பாரதத்தில் வாழ்கின்ற மக்கள் சுதந்திர வாழ்வு பெற்று மகிழும் மக்களினத்தாரால் மிகத்தாழ்ந்த நிலையில் வைத்து மதிக்கப்படுகின்றனர். வறுமை அடிமைப் பாரத நாட்டிலேயே அடைக்கலம் புகுந்துவிட்டது. விடுதலையுணர்ச்சி எட்டுணையுமில்லாத விலங்கு வாழ்க்கையை மக்கள் மேற்கொண்டு விட்டார்கள். அறிவும் வீரமும் இல்லாத வெறும் பட்ட மரக்காடு போலப் பாரத தேசம் பாழடைந்துவிட்டது. பாழ்பட்ட பாரத தேசத்தை அறப் பண்பு கனிந்த சுதந்திர நாடாகப் புதுக்கி வாழ்விக்க வந்தவர் மகாத்துமா காந்தியடிகளே, என்ற உண்மையை "வையத்து நாட்டிலெல்லாம் தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்கெட்டுப் பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந்தன்னை," என்ற பாட்டடியில் அடக்கிப் பாடிய பெருமை பாரதி

யாருக்கேயுரிய தனித்திறமையாகும். இங்ஙனம்வீர சுதந்திரப் போர்த் தலைவர்களைப் பாராட்டிய பாரதியார் எம்மைச் சுதந்திர உணர்ச்சி கொண்டெழும்புமாறு அறை கூவுகின்றார்.

*புல்லடிமைத் தொழில் பேணிப் பண்டு*
*போயின நாட்களுக்கினி மனம் நாணித்*
*தொல்லை இகழ்ச்சிகள் தீர-இந்தத்*
*தொண்டு நிலையைத் தூவென்று தள்ளி*
*வந்தே மாதரம் என்போம் எங்கள்*
*மானிலத் தாயை வணங்குதும்*

என்று பாடுகின்றார்.

பாரத நாட்டுமக்கள் தங்கள் உடல் பொருள் ஆவிமூன்றையும் பாரதநாட்டின் விடுதலைக்கே உரிமைப்படுத்தத் துணிந்துவிட்டனர்.

*வந்தே மாதரம் என்றுயிர்போம் வரை*
*வாழ்த்துவோம் முடிதாழ்த்துவோம்*
*எந்தம் ஆருயிர் அன்னையைப் போற்றுதல்*
*ஈனமோ அவ மானமோ?*

எனப் பாரத மக்கள் கொதித்தெழுந்தனர். பாரதத்தாயின் அடிமை விலங்கு ஒடிந்தது. பாரத நாடு தன் ஆட்சிக் கொடியை உலக மேடையின் உச்சியின் மிசைப் பறக்க உயர்த்தியது. ஆளுகின்ற மக்கள் நாங்கள்

*ஏழையென்றும் செல்வனென்றும்*
*எவனுமில்லைச் சாதியில்*
*இழிவு கொண்ட மனித ரென்பது*
*இந்தியாவில் இல்லையே*

என்ற கொள்கைக்கே வாழுகின்ற மக்கள் என்ற வீறு ஒவ்வொரு இந்தியனுடைய உள்ளத்திலும் விளைந்தது. பாரதியாரின் சுதந்திரப்பள்ளு விடுதலை பெற்றபொழுது தமிழ்நாடெங்கும் ஒலித்த வெற்றிப்பாட்டு, அடிமை இந்தியாவில் அவர் வாழும்பொழுதே அவரின் கவி உலகத்தில் வாழ்ந்த சுதந்திர இந்தியாவின் விடுதலைப் பாட்டாக எழுந்துவிட்டது. பாரதநாடு விடுதலையடைந்துவிட்டதாகவே பாரதியாரின் கவிதை யுள்ளம் எண்ணி மகிழ்வடைந்துவிட்டது. மகிழ்ந்த உடனேயே,

*ஆடுவோமே பள்ளும் பாடுவோமே*
*ஆனந்த சுதந்திரமடைந்து விட்டோமென்று*

எனவரும் பாட்டைப் பாடி மகிழ்ந்தார். அமரகவி பாரதியாரின் புலமையுள்ளத்தில் நின்று நிழலாடிய சுதந்திர தாகம் சுதந்திரப் பள்ளாகப் பெருக்கெடுத்துச் சுதந்திர இந்தியாவில் அலைமோதிப் பாய்ந்து எம்மையெல்லாம் ஆனந்தங் கொண்டாடச் செய்தது. சுதந்திரப் பள்ளில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் பாரதியாரின் ஆவேசமான சுதந்திர வெறியை எமக்குக் காட்டுகின்றன. அவர் எங்கள் முன்னே நின்று பாடுவது போன்ற எண்ணம் எம்மை ஊக்குகின்றது. "பார்ப்பாரை ஐயரென்ற காலமும் போச்சே - வெள்ளைப் பறங்கியைத் துரையென்ற காலமும் போச்சே" என்ற பாட்டில் வருகின்ற போச்சே என்ற சொல்லிலுள்ள உயிராற்றலை உணருங்கள். போச்சேயென்ற குரலின் ஒலிப்பு இனிமேல் இந்தப்பாரத நாட்டில் இத்தகைய அடிமையுணர்ச்சிகள் வாழமுடியாது என்ற துணியின் திடத்தை எமக்கு அறிவிக்கிறது.

*நாமிருக்கும் நாடு நம தென்பதறிந்தோம் - இது*
*நமக்கே யுரியதாம் என்பதறிந்தோம்*
*பூமியில் எவர்க்குமினி அடிமை செய்யோம் - பரி*
*பூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்!*

என்ற பாட்டில் வருகின்ற "நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்" என்ற அடியைப் படிக்கும்பொழுது எழுகின்ற ஓசை எவ்வளவு எண்ணங் களை அள்ளிக் கொட்டுகின்றது. "நீண்டகாலம் நாமிருக்கும் நாடு நமதென்பதையறியாமல் உறங்கிவிட்டோம் - உணர்வின்றி அடிமை களாய் அடங்கி வாழ்ந்து விட்டோம்!" என்ற கருத்தை எடுத்துக்காட்டு கின்றது. பூமியிலெவர்க் குமினி அடிமை செய்யோம் என்ற வீரவீறு கனிந்த பெருமிதப் பாட்டின் ஓசை எம்மை விசை பூட்டிய அம்புபோல மேலே பறக்க விடுகின்றது. விடுதலை வெறியைக் கூட்டி மேலான வெற்றி விருந்தை எமக்கு ஊட்டுகின்றது. நாங்கள் ஒவ்வொருவரும் ஓராயிரம் பாரதியாரின் உணர்ச்சி கொண்டு எழுந்துவிட்டோம். பாரதியாருடன் சேர்ந்து பாடுவோம்.

*மாரத வீரர் மலிந்த நன்னாடு*
*மாமுனிவோர் பலர் வாழ்ந்த பொன்னாடு*
*நாரத கான நலந்திகழ் நாடு*
*நல்லன யாவும் நாடுறு நாடு*
*பூரண ஞானம் பொலிந்த நன்னாடு*
*புத்த பிரானருள் பொங்கிய நாடு*
*பாரத நாடு பழம் பெரு நாடே*
*பாடுவ மிஃதை எமக்கில்லை ஈடே.*

என்பது பாட்டு, பாட்டின் பொருள் காலவெள்ளத்தைக் கடந்து நிற்கின்றது. பாரத நாடு பழம் பெருநாடே, என்ற குரல் உலகின் எல்லையைக் கடந்து, அப்பாலுக்கப்பாலால் ஒலிக்கின்றது. "மாரத வீரர் மலிந்த நன்னாடு" என வீரத்தின் மேம்பாட்டையும் "மாமுனிவோர் பலர் வாழ்ந்த பொன்னாடு" என அறிவின் அலர்ச்சியையும், "புத்தபிரான் அருள் பொங்கிய நாடு" என அருளின் பெருக்கத்தையும், பாரதியார் வாழ்த்துகின்றார். வாழ்க! பாரதியாரின் கவிதை உள்ளம்!

**தினகரன் 25.03.1951 (ஞாயிறு)**

❍❍❍

# 4. கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள்

சுத்தனந்த பாரதியார் பன்மொழிப்புலவர்.

செந்தமிழ்க் கனலையுந் தெய்வந் திருநெறிக் கனலையும், இந்த உலகெலாம் ஒளிவீச எழுப்புகின்ற அருட்புயல்.

அடிகளின் கவிதைகள் உயிர்க்கவிதைகள்.

ஒவ்வொரு தமிழ் மகனையும் - தமிழ் மகளையும் சிங்க நெஞ்சங் கொண்டெழும்பும் செயல் வல்லவராகச் செப்பஞ் செய்யும் கவிதைகள். எழுத்தறியாதவர்கள் உள்ளத்திலும், அருட்சாயலையும், அறத்தொடு கலந்த அஞ்சாமையையும் அள்ளிக்கொட்டுகின்ற கவிதைகள். இனித்த நல்ல, எளிய இளந்தமிழ்ச் சொற்களால், இயற்றப்பெற்ற கவிதைகள், படிக்கின்றவன் உள்ளத்தைக் கொள்ளையடித்து, அவன் உயிரோடு, ஒளியாக்கலந்து உலகைப் புதுக்கிப் படைக்கின்ற கவிதைகள். கண்ணில் லாதவன் உள்ளத்திலும் கவிதை வெறியை எழுப்பிக் கண்ணளிக்க வல்ல கவிதைகள். கால வெள்ளத்தில் அள்ளுப்பட்டழியாத கருத்தமைந்த கவிதைகள். கலைத்துறவிற் கனிந்த எழில், - அருள்வீறு பெருக்கெடுத்து, அடிகள் ஆக்கிய கவிதைகளில் நின்று நிழலாடும். பற்றற்ற துறவுள்ளம் அடிகளின் பாட்டில் நின்று பகல் ஒளி வீசிப்படிக்கின்றவர் உயிரில் உணர்ச்சிக் கதிர்களைத் தோற்றுவிக்கும் திறன், பாராட்டற்குரியது. வீரத்தையும் அன்பையும் விருந்தளிக்கும் வீறுபடைத்த பாட்டுகளில் எல்லாம் ஊடுருவி நிற்கும் அடிகளின் உயிர் ஆற்றல் உலகையே அருட்பணிக்கு ஆற்றுப்படுத்தும் உயர்ச்சி வாய்ந்தது.

*சாதிமத பேதங்கள் யாவிற்குஞ்*
*சாவுமணி அடிப்போம் விண்ணில்*
*ஆதித்தன் எழுந்தபோததற்கு வழி*
*அமைத்ததுபோல் மதிமயக்கால்*
*வாதித்த வகுப்பினங்கள் வருமுன்பே*
*வேதங்கள் வழுத்து முன்பே*
*யாதிற்கும் பொதுவான இயற்கையறம்*
*இருந்ததற்கிசைந்து வாழ்வோம்*

என அடிகள் கூறிய இப்பாட்டில் கட்டற்ற அன்பு வாழ்வின் பண்பைக் காண்கின்றோம். ''சாதிமத பேதங்கள் யாவிற்குஞ் சாவுமணி அடிப்போம்'' என்ற பாட்டடியில் அடிகளின் துறவுள்ளத்தின் அகலம் - அருட்பரப்பு

எம்மையெல்லாம் சிந்தனைச்செயல் வீரர்களாகப் புதுக்குகின்றது. "மதிமயக்கால் வாதித்த வகுப்பினங்கள் வருமுன்பே, வேதங்கள் வழுத்து முன்பேயாதிற்கும் பொதுவான இயற்கையறம் இருந்தது" என அடிகள் எழுப்பிய அருட்குரலின் ஆற்றல் - கட்டற்ற அருட் போர்முரசு, மக்களை மக்கள் விழுங்கிவாழாத தெய்வ நிலையை எமக்கு நினைவுட்டுகின்றது. இயற்கையறம் இருந்தது இசைந்து வாழ்வோம், என அடிகள் எம்மையெல்லாம் அழைக்கின்றார். இயற்கை அறமே என்றும் நிலையான தெய்வத்தோற்றம், என்ற உண்மையை எடுத்துக்காட்டுகின்றார். இயற்கை யோடு இயைந்த வாழ்வுதான் இறைவனோடு கலந்துநிறையும் பெரு வாழ்வு என்பதை உலகெலாம் உணர்ந்து ஒளிபெற வேண்டுமென அடிகள் விரும்புகின்றார். இயற்கையோடு - அன்போடு கலந்து வாழத் தெரியாத மக்களின் நிலையற்ற தன்மையை - வெறிபிடித்த கொலைபண்பை மறவாழ்கையென அடிகள் பழித்துரைக்கின்றார்.

"இந்த மாமரம் கனிகுலங்குகிறது. புட்கள் வருகின்றன; உண்கின்றன; காதலிக்கின்றன; கூடுகட்டி வாழ்கின்றன; குஞ்சுகளை ஊட்டி வளர்க் கின்றன. அந்தியில் சிவ்வ் என்று பாய்ந்து பறந்து துள்ளிக் குதித்து ஆடிப்பாடிப் பரவசமாகின்றன. இரவின் மோகனவடிவில் உறங்குகின்றன. மலர் குலுங்க, மணம்பரவ, மந்தமாருதங் குழலூத காலைக் கன்னி கனிமுகங்காட்டுகின்றாள். புட்கள் எழுந்து உதயகானஞ் செய்கின்றன; கூடிப்பேசிக் குலாவுகின்றன. விர் என்று நீல வானிற் பறந்து செல்லு கின்றன. பெயர், வடிவு, நிறம், பாட்டு, குரல், உணவு, இடம் பலவிதம், இவற்றுல் சண்டை கிடையாது. மண்வெறி, மதவெறி, பெண் வெறி, பணவெறிகளால் குத்திக் கொண்டு இறப்பதில்லை. பகுத்தறிவுள்ள மனிதன் ஏன் புறவேற்றுமைகளைப் பாராட்டிச் சண்டை போட்டு மண்டை உடைக்கின்றான். இந்த உரை நடைப்பகுதிகள் அடிகள் எழுதிய **"இன்ப மாலை"** என்னும் நூலில் உள்ளது. இதில் அடிகள் மிகத்தெளிவாக, உணர்ச்சியுடன் மக்களின் அன்பற்ற வாழ்வை அறிவிக்கின்றார்.

பல இனப் பறவைகள் ஒருமித்து ஒரே மாமரத்தில் இருந்து வாழ்வது போல, மக்களும், சாதிமத, நிறமொழி வேறுபாடுகளால் தம்முள் மாறுபட்டு ஒருவரையொருவர் கொல்லாது ஒற்றுமையாக, ஏன் வாழமுடியாதவர் களாய் அல்லற்படுகின்றார்கள் என்று எண்ணியெண்ணி அடிகள் இரங்குகின்றார். எழுத்தறியாதவனும் படிக்கக் கேட்டவுடன் உணர்ச்சி கொண்டெழும்பத் தகுந்த எளிய துடிப்பான உரை நடையால் சிறந்த அன்புநெறிப் பண்பை அடிகள் அறிவிக்கின்றார். இங்ஙனம் பாட்டும் வசனமும் ஒரே வகையான எழுச்சியைப் பரப்பும் விறுவிறுப்பும்

பொருந்த ஆக்கும் புலமை ஆற்றல் அடிகளுக்கே அமைந்த சிறப்புரிமையாகும். இங்ஙனம் அடிகளின் துறவு வாழ்க்கை ஒளி விரித்துஉயர்ந்த கலைச் செல்வத்தைத் தமிழினம் உய்வடைய உதவுகின்றது.

அடிகள் சின்னஞ்சிறு வயதிலேயே தவயோக வழியிற்சென்றவர். அருட்பெரியார் பலருடன் சேர்ந்து ஆற்றலைப் பெருக்கிக் கொண்டவர். முப்பது ஆண்டுகள் யோகம்புரிந்த மூதறிவாளர். இத்துடன், காவியம் நாடகப்பணி பத்திரிகை, பொருளாதாரம், சீத்திருத்தம், அரசியல் முதலான உலகியல் துறைகளிலும் நிரம்பிய ஆற்றல்வாய்ந்தவர். பாரதநாட்டுப் பேரறிஞர்களின் அறிவு நூற்களையும், சமணம், இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்தவம் முதலிய சமய நூல்களையும் ஆராய்ந்து தெளிந்த அறிவுடையவர். "வாழ்வைத் தவத்திற்கே நிலைக்களன் ஆக்கியவர், என அடிகளை வ.வே.சு. ஐயர் எனும் பேறிஞர் பாராட்டுகின்றார். பெரும் பேராசிரியர் உ.வே. சுவாமிநாத ஐயர் அவர்கள் "தவம் பெற்ற தவம்" என வாழ்த்துகின்றார். "யோகசித்தி"யெனும் உயரிய நூலில் அடிகள், அருள் உலகச்செவ்வியை அப்படியே நிழற்படம் பிடித்து எழுதியிருக்கின்றார். அடிகளின் உள்ஒளி பெருகிப் பாய்கின்ற அருள்வெள்ளமாகவே யோகசித்தி விளங்குகின்றது. அந்நூலில் அடிகள் எழுதிய அருட்கரு நிரம்பிய உரைநடைப்போக்கு, ஒரு தனித்திறன் வாய்ந்தது. படிக்கின்ற ஒவ்வொருவருக்கும் மனத்தெளிவையும் சிந்னை ஆற்றலையும் உளவாக்கி, அவர்கள் உள்ளத்தில் மறைந்தொளிரும் தெய்வக்கனலை எழுப்பி அறிவுலகிற்கு வழிகாட்டும் வல்லமைமிக்கது.

"யோகசித்தியில்" அடிகள் எழுதிய உரைநடையில் ஓர் சிறு பகுதியைக் கேளுங்கள்: "உலகம் பலவகைத் தோற்றமுள்ளது. நாடுகள் பல. நடையுடை பல; ஊர்கள் பல உரைகள் பல; பழக்கமும் பகுப்பும் பான்மையும் பல பல. மதங்கள் பல, மதக்கிளைகள் பல. "எனது, யான், எனக்கு" என்னும் முக்கோணக் குளத்தில், சாதிமத பேதங்கள், தேங்கி அலைமோதுகின்றன. உண்மையே கடவுள். ஆனால் எனது தான் உண்மை. மற்றவை பொய் என்கிறது மாந்தரின் மனப்பான்மை. தன்னதை உயர்த்திப் பின்னதைத் தாழ்த்தி, என்னது உன்னது என்று இறுமாந்து போரிடுவதெல்லாம் மாந்தருட் புகுந்த ஆசை ஆணவச் சாத்தானே. விகார மனம் வேறுபாடுகளைக் கற்பிக்கிறது. எத்தனை வேறுபாடுகள்; எதைப் பற்றுவது? கொளுக்கட்டைகள் பல, பூரணம் ஒன்று, உடல்கள் பல, சுத்தான்மா ஒன்று. அதுவே உள்ளது. அஃதின்றி உடல் பிணம். அந்தச் சுத்தான்மாவை உள்ளொன்றி உணர்க! பிறகு உலகளவு வேறுபாடுகளிலும்

ஒரு மயங்காணலாம். மண் ஒன்று, மரங்கள் பல, நானாரெனக் கேட்டறிந் தால், நானா பேதம்போகும்!''

இந்த உரைநடைப் பகுதியைப் படிக்கும்பொழுது மிகத் தெளிவாக இறைவனின் அருட்பண்பை எவரும் விளங்கிக் கொள்ளலாம்!

அடிகளின் உள்ளத்துள்ளொளி பெருகிப் பெருகி அலைமோது கின்ற அருள்விளக்கமே ''யோகசித்தி'' நூலாக உருத்தாங்கியது.

இனி அடிகளின் இலக்கியப் புலமை எல்லை - காணமுடியாத வானம்போன்றது. பன்மொழிகளிலும் உள்ள இலக்கியப் பனுவல்களின் பண்பாட்டையெல்லாம் ஒரு சேரத்தொகுத்துவைத்த அமுதப் பேழை போன்றது அடிகளின் உள்ளம். இதனை அடிகள் தாம் எழுதிய ''பைந்தமிழ்ச்சோலை''யெனும் நூலிற் குறிப்பிடுகின்றார் கேளுங்கள்: ''ஆங்கில செகசிற்பியரின் கூத்திலக்கியத்தில் குளித்தேன். அமலாதித்தன் நெடுஞ்சொடு கிளத்தலும், லியர்மன்னன் சுற்றம் முனிவதும், கார்தினல் உல்ஸி, தான் மன்னர் சேவைசெய்த வீணாட்களுக்கு, இரங்குவதும், சதிவாள் முனையில் யூலியகேசரி முடியுங் காட்சியும், உரோமியனின் உண்மைக் காதலும் என் எதிரே நின்று பேசின. கடலினும் ஆழ்ந்த கருத்துக்களும், மலையினும் உயர்ந்த மாண்பும், இளவேனிலைப் போன்ற இனிய நடை அழகும், பொருட்செறிவும் கதை நுட்பமும், என் நெஞ்சைத் தம் வயப்படுத்தின. எழுமின் விழுமின் என்று மிலற்றன் பாடிய ''இழந்த விண்'' என்னைத் தட்டி எழுப்பியது. காட்டிற் களிப்பும், தனிமையில் இனிமையும், கடலின் அலையில் கட்டிலாப்பாட்டும் உணர்ந்து மக்க ளிடம் அன்பிற் குறையாது இயற்கையிடம் பேரன்பு பாராட்டும் ''பைரன்'' இத்தாலியையும் கிரேக்க நாட்டையும் அவற்றின் பழம்புகழையும், தற்போது அவற்றிற்குற்ற தாழ்வையும் உருகிப்பாடிய உயர்ந்த அடிகள், என் எண்ணங்களைத் தீட்டிக் கூராக்கின. ஏழை மனிதனே! கொடுங் கோலின் அரியணை, உனது தளர்வின் மீதே எழும். அத்தளர்வை மறந்து கடவுள் பணித்த உயிர்ப்பணியைப் பொறுமையுடன் செய். என்னும் ''வேர்ட்ஸ் வர்த்''தின் இயல் வளஞ்செறிந்த பாக்கள் எனது நெஞ்சை அள்ளின. கிரேக்கநாட்டுக் கவியரசரான கோமர், நாட்டினர்களே பொறுமின், ஒருவரையொருவர் கொல்லுவதில் நின்று, உங்கள் வெறிபிடித்த கைகளை நீக்குமின், அமைதி வருகிறது. என்று தன் இலியாதைப்பாடி முடிக்கின் றான். இங்ஙனம் மேலைநாட்டில் வாழ்ந்த புலவர் மணிகளின் இலக்கிய நறுமலர்களில் மதுவண்டெனெச் சுழன்றேன்... அடிஸன், ஸ்டீல், மெக் காலே, ரஸ்கின் ஸ்காட் போன்றோரின் இணையற்ற உரைநடைச் சித்திரங் களும், என்னுள் இன்பத்தைப் பாய்ச்சின!

அடிகள் எழுதிய இவ்வுரை நடைப் பகுதியைப் படிக்குந்தோறும் எமதுள்ளத்தில் ஊற்றெழுகின்ற மகிழ்ச்சியும் வியப்பும் ஒன்றோடொன்று எதிரொலிக்கின்றன. இவ்வளவு ஆராய்வுடன் மேலைநாட்டு இலக்கியங் களையெல்லாம் கற்றுக்கனிந்த கலையுள்ளம் படைத்த அடிகள், தமிழ்நாட்டின் தவச்செல்வராக விளங்குகின்ற வெற்றித்திரு எங்கள் தமிழர் இனத்துக்கே பெரியதோர் மதிப்பாகும். கலைத்தோய்வும், ஆராய்வுத் திறனும், அருட்பண்பும் நிரம்பிய அடிகளின் தவவாழ்வு தமிழ்நாட்டின் தவவாழ்வேயாகும். அடிகளின் கலைத் தொண்டும், கவிதை வெறியும், துறவு வாழ்க்கையின் மாண்பை மறுமலர்ச்சி செய்துவிட்டது.

அடிகளின் தமிழார்வம் ஒவ்வொரு தமிழனின் உணர்ச்சி நரம்பு களிலும் ஊடுருவிச் செல்கின்றது. தமிழ்மொழியும் தமிழ் மொழியைப் பேசுகின்ற மக்களினமும் உலகமேடையில் உயர்ந்த இடத்தைப் பெற்று மலரவேண்டும் என்ற ஆராமை அடிகளின் அறிவொளிப் பண்பில் பாய்கின்றது.

இனி அடிகள், யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர் களிடம் நிரம்பிய அன்பும் மதிப்பும் உடையவர்களென்பதை அவர் எழுதிய "நாவலர் பெருமான்" என்ற நூலினால் அறியலாம். செந் தமிழையும் சிவ நெறியையும் காப்பாற்றிய நாவலர் பெருமானை "ஐந்தாங்குரவர்" எனப்போற்றிப் பாராட்டுகின்றார். நாவலர் பெருமானின் சிறப்பை அடிகள் "நாவலர் தமிழுக்கும், தமிழருக்கும் தமிழகத்திற்குஞ் செய்த தொண்டு, அளப்பரியது. இனிய உரை நடைவகுத்த புலவர் அவரே. அவருள்ளந் தமிழ், சைவம் என்றே துடித்தது. அவர் பணத்தை மதிக்கவில்லை. செல்வச் செருக்கைக் கெஞ்சவில்லை. பட்டம் பதவிகளை வேண்டவில்லை. அவர் தலை நிமிர்ந்து நடந்தார். சிவத்தையே மதித்தார். உண்மையை உண்மை என்றார். பொய்யைப் பொய்யென்றார். தமிழின் பெருமையை நாட்டினார். சைவத்தின் மேன்மையை நடந்து காட்டினார். அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் வந்திராவிட்டால் சைவ சமயமே மறைந்திருக்கும். அவர்களுக்குப் பின்வந்து சைவசமயத்தைக் காத்தவர், நாவலர் பெருமானே. ஆறுமுக நாவலர் என்பது போதாது. அவர் நாவன்மை படைத்தவர் மட்டும் அல்லர். அவரை ஆறுமுக நாயனார் என்பதே தகும். முன்வந்த நான்கு சமய குரவருக்குப் பிறகு இவரை ஐந்தாங் குரவர் என்பதே பொருந்தும். அக்காலம் ஒரு சர்வமத சங்கங்கூடியிருந்தால், சைவத்திற்குப் பிரதிநிதி யாக நாவலரையே நாம் அனுப்பி இருப்போம். விவேகானந்தர் போல,

நாவீறு படைத்த அருட்பெரியார் நாவலர். அவருக்கு முன்னும் ஒரு நாவலரில்லை. பின்னும் இல்லை.”

*செந்தமிழ் உய்ய, சைவத்*
*திருநெறி விளங்க வந்தோன்*
*அந்தமில் கல்வி கேள்வி யாழியைக் கடைந்து நாளும்*
*தந்தனன் அமுத நூல்கள்*
*சாவிலா வரத்தைப் பெற்றான்*
*நந்தமிழ் உள்ள மட்டும்*
*நாவலன் வாழ்க மாதோ*

எனப்போற்றி வாழ்த்துப்பாடுகின்றார். யோகி சுத்தானந்த பாரதியாரின் ஒளி நிறைந்த உள்ளத்தைக் கவர்ந்த நாவலர் பெருமானின் செந்தமிழ்ச்சிவ வீறு எம்மையெல்லாம் புரப்பதாகுக.

**தினகரன் 28.01.1951 (ஞாயிறு)**

❍❍❍

# 5. சங்ககாலக் கபிலனை ஒத்த மாவைக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணனார் (நவந்த கிருஸ்ண பாரதியார்)

சங்ககாலக் கபிலன் போன்ற சான்றோனை இழந்துவிட்டோம். வற்றாத மலையருவிபோலக் கவிதை பாடுகின்ற மாவைக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணனார் மறைந்துவிட்டார்.

உலகியல் விளக்கம் இயற்றிய உயர்நெறிப்புலவன் இன்று எம்முடன் இல்லை. திருவாசகப் பேருரை கண்ட செம்புலச் செல்வனைச் செந்தமிழன்னை பறிகொடுத்துவிட்டாள்.

“பறம்பிற்பாரி” என்னும் பனுவலைப் பாடிய நவநீத கிருஷ்ண பாரதியாரை இனி நாங்கள் பார்க்க முடியாது.

பாரதியார் குழந்தை உள்ளம் படைத்தவர். கவிதை பாடிப் பாடிக் கருத்து மகிழ்கின்றவர். அவர் பரமேசுவரக் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் புலவராகக் கடமை ஆற்றுங் காலத்தில், நானும் உடன் ஆசிரியராகக் கடமை ஆற்றினேன். ஒருநாள் நான் பாடம் நடத்துகின்ற வகுப் பறைக்குப் பாரதியார் விரைந்து வந்தார். “வேந்தனார்! நான் ஒரு பாட்டுப்பாடி இருக்கின்றேன், கேளும்” என்று படித்தார்.

*போகாத கோயிற் படியில்லை*
*அங்கெல்லாம் நின்கண்ணீர்*
*வாராத வாயிற் படியில்லை*

என்பதே பாட்டின் பகுதி. அவ்வளவில் குழந்தைபோல் குதித்தார். எப்படி இருக்கின்றது பாட்டொன்று மிக ஆர்வத்தோடு கேட்டார். “தென்னாட்டில் உள்ள என் நண்பரொருவர் இறந்துவிட்டார். அவர் கோயில் வழிபாட்டில் மிக ஈடுபாடுடையவர். அதனை நான் நன்குணர்வேன். அந்த உணர்ச்சி தான், இந்த வரிகளில் உருப்பெற்றிருக்கின்றது” என்றுஞ் சொன்னார். அந்த நேரத்தில், பாரதியாரின் முகத்தில் வீசிய ஒளியையும், ஆர்வத் தையுங் கண்ட யான் கவிஞனின் உள்ளத்தை உணர்ந்து விட்டேன். அவர் பாட்டு வரிகளைப் படித்த குரலில் எழுந்த ஓசையும், உணர்ச்சிக் குமுறலும் இன்றும் இன்றும் என் காதில் கேட்கின்றன. தான் பாடிய கவிதை என்பதை மறந்து கவிதையைச் சுவைக்கின்ற தன் மறதி பாரதியாருக்கே உரிய தனிச் சிறப்புக்களில் ஒன்றாகும். பாரதியாருடன் பழகிய பலரும், அவரிடம், இயல்பாகவே அமைந்துள்ள இப்பண்பை அறிவார்கள்.

திருவாசகப் பேருரை பல ஆண்டுகளுக்கு முன்பே, பாரதியார் உள்ளத்தில் கருவாகி வளர்ந்தது. திருவாசகப் பாக்களை அடிக்கடி பாடி

மகிழ்வார். சில நேரம் மிகத் தெளிவான உரையுங் கூறுவார். "மாணிக்க வாசகர், அன்பின் ஐந்திணை நெறியை ஒட்டியே திருவாசகத்தைப் பாடியிருக்கின்றார். திருக்கோவையாரில், எங்ஙனம் உலக நூற்பொருளும் அறிவு நூற்கருத்தும் அமைந்திருக்கின்றனவோ, அங்ஙனமே திருவாசகத் திலும் அமைந்திருக்கின்றன. தமிழ்ப் பேராறிஞராகிய மறைமலை அடி களாரும் இந்த உண்மையைக் காட்டாது, திருவாசக விரிவுரை எழுதி யிருக்கின்றார்கள்."

"நான், அன்பின் ஐந்திணை மரபை அடிப்படையாகக் கொண்டு, திருவாசகத்துக்குப் பேருரை எழுதிவருகின்றேன்" எனத் தமது அன்பர் களுக்குச் சொல்வார். இங்ஙனம் கூறும் போதெல்லாம் பாரதியார் ஒரு வரியேனும் எழுதத் தொடங்கிலர். தமதுள்ளத்தில் திருவாசகத்தைப் பதித்துவிட்டார். மிக அண்மையிலேதான் திருவாசகப் பேருரை வெளி வந்தது. பாரதியாரின் பரந்துபட்ட புலமைத்றதித்தைத் திருவாசகப் பேருரை காட்டுகின்றது. பிறர்ச்சென்ற வழியே சென்று, உரைகூறாது, புதிய சிந்தனையுடனும் ஆராய்வுடனும், பாரதியார் கண்ட திருவாசகப் பேருரை புலவர்க்கு விருந்தாக நிலவிப் பொலியும் பொருள்நலம் வாய்ந்தது. பாடிப்பாடி மகிழ்ந்த பாரதியாரின் புகழ், திருவாசகப் பேருரையால், பல பல நூற்றாண்டுகள் சைவத் தமிழகத்தில் நிலைத்துவிட்டது. பாரதியார் பாடிய உலகியல் விளக்கம் சங்ககால இலக்கியம் போன்றது. சங்கப் பாட்டுகளுடன் கலந்துவிட்டால் வேறுபாடு காண முடியாத நடை உடையது. பாரதியாரின் இளமைப் பருவத்துடிப்பை உலகியல் விளக்கப் பாக்களில் காணலாம்.

*காலங் கழித்தனங் கடமையு மன்று*
*ஞாலம் பழிக்கும் நாமது பெறாவிடில்*
*செய்வன செய்மின் தவிர்வன களைமின்*
*அறிவும் ஆற்றலும் அறனும் பொருளும்*
*நறுமணங் கமழும் நல்வழி இன்பமும்*
*பொறுமையும் மாட்சியும் புரைதீர் புகழும்*
*வறுமை அறப்பெறீஇ வாழ்குவிர் பெரிதே*

இச்செய்யுட்பகுதி உலகியல் விளக்கத்தில் உள்ளது. இதனைப் படிக்கும் பொழுது எழுகின்ற ஒசையும் மிடுக்கும் பொருட்பதிவும் எம்மைச் சங்ககாலத்துக்கு அழைத்துச் செல்கின்றன.

*தாஅய் நுரைத்துத் தத்தித் தத்திப்*
*பாஅய் அருவியும் முத்தும் பவளமும்*
*முதிர்ந்த பன்மணிகளும்*

*நத்து முதலவும் நல்குமலை எற்றிய*
*பெருமணல் எக்கர்ப் பெருக்குங் கடலும்*

எனவரும் அடிகள், சங்ககாலப் புலவர்களின் குரல் போலக் கேட்கின்றது. இந்த இருபதாம் நூற்றாண்டுப் புலவர்களில் சங்க காலப் பாக்களைப் போன்ற நடையும் பொருளும் பொருந்தப் பாடும் சிறப்பாற்றல் வாய்ந்தவர் பாரதியார் ஒருவரேயாவர்.

பாரதியாரின் தமிழ்ப் பணிகள் தமிழ் மக்களின் உள்ளத்தில் தனி இடத்தைப் பெற்றுவிட்டன. அறிவொளி ஞாயிற்றில் கலந்த பாரதியாரின் ஆவி அமைதியுறுவதாக.


**தினகரன் 2.1.1955 (ஞாயிறு)**

ooo

**பிற்குறிப்பு:– (இங்கு பாரதியார் எனக் கட்டுரையில் குறிப்பிடப் படுபவர் மாவைக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணனார் திரு. நவநீத கிருஷ்ண பாரதியாரவார். இவர் வித்துவான் வேந்தனார் 1947ஆம் ஆண்டு திருமணம் முடித்த போது, மிகவும் சிறப்பான "திருமண வாழ்த்துப்பா" ஒன்றைப் பாடியிருந்தார்.)**

# 6

# வேந்தனார் சொற்பொழிவுகள்



# 1. தமிழ் உலகிற் புதிய எழில்

**(மறுமலர்ச்சி மாதாந்த இதழ்கள் மாசி/பங்குனி 1948 , சித்திரை /வைகாசி 1948)**

இந்த நூற்றாண்டு உரிமை வெறிபிடித்த நூற்றாண்டு, ஒவ்வொரு மக்கட் கூட்டத்தினரும் தங்கள் மொழி - நாகரிகம் - அரசியல் பொருளாதாரம் - வழிபாட்டு முறைகள் என்பவற்றையெல்லாம் கலைப் பண்புடன் கலந்து ஆராய்கின்ற நூற்றாண்டு. தமிழ் மொழியைப் பேசிய மக்களின் நாகரிகம் - பண்பாடு - கலைத்தோட்டம் - வழிபாட்டு முறைகள் என்பவற்றை மேலைநாட்டுப் புலவர்கள் சிறந்தமுறையில் ஆராய்ந்து வருகின்றார்கள். தமிழரின் நாகரிகம் மிகமிகப் பழமையானது என உலகமே ஒப்புக்கொள்கின்றது. இன்றைய உரிமை ஆட்சி நிலையில் தமிழர்கள் விழித்துக் கொண்டார்கள். தாய்மொழியின் மாண்பை நிலை நிறுத்த முனைந்து நிற்கின்றார்கள். ஷதமிழர்களே ஒன்று சேருங்கள், தமிழ் ஆக்கப்பணி புரிய ஆர்வத்துடன் வாருங்கள்' என அறைகூவி அழைக்கின்றனர். தமிழர்கள் எல்லோரும் அன்னைக்கு வேண்டிய ஆக்கப் பணிகளை ஆற்ற முற்பட வேண்டும். எங்கள் பிறப்புரிமையான தமிழை - எங்கள் குருதியிற் கலந்தோடும் கலைத் தமிழை - நாங்கள் ஆக்கவேண்டும்.

தமிழ், கலையூற்றம் உடையது. தன்னைக் கற்பவர் உள்ளத்தைக் கவரும் ஆற்றல் உடையது. வீரமாமுனிவர் - போப் முதலிய மேலைநாட்டுப் புலவர்கள், தமிழ்த் தொண்டு செய்துள்ளார்கள். தமிழ்ப் பெருங் காப்பியங்களும் இயற்றி உள்ளார்கள். தமிழ்மொழி ஆராய்ச்சி நூல்களும் பல ஆக்கியுள்ளார்கள். இவர்களை எல்லாம் தமிழ்மொழி ஆட்கொண்டு விட்டது. தமிழ் வாழ்வு பெற்ற நாங்கள், ஏன் தமிழ்ப்பணி ஆற்றக்கூடாது? தமிழாராய்ச்சி நூல்கள் எழுதக்கூடாது? மொழி ஆக்கமின்றி ஓர் நாடு உரிமை வாழ்வு பெற முடியாது, கலைத் தேட்டங் காண முடியாது. நாங்கள் மொழியாக்கத் தொண்டை மிக ஆர்வத்துடன் ஆற்றுவோம். எங்கள் தமிழ் அன்புக் குரலைக் கடல் கடந்து ஒலிக்கச் செய்வோம்.

## தெய்வக் கலைச்செல்வம்

நாங்கள் தெய்வக்கலைச் செல்வம் நிரம்பியவர்கள். இறைவன் அருளில் உயிர்த் தோய்வு பெற்ற அன்பர்கள் - தொண்டர்கள் - வீரர்கள். தேடித் தொகுத்து வைத்த கலைஎழில் இன்றும் எமக்குப்

பெருமை அளிக்கின்றது. மெய்கண்டார் அருளிய சிவஞான போதம், கண்ணன் அருளிய கீதை, நால்வரின் அன்பு மொழிகள், ஆழ்வார்களின் திருவாய்மொழிகள், புத்தரின் அன்பு முழக்கம், கிறிஸ்துவின் மலைப் பொழிவு, முகம்மது நபியின் வீரவாழ்வு முதலிய பல உண்மைக் கலை உணர்வுகள். ஆசியாக் கண்டத்தின் தெய்வ உணர்ச்சியை அரண் செய்கின்றன. இந்த உயிர்க்கலை வெறியை அணுக்குண்டாலும் அழிக்க முடியாது. எங்கள் பிறப்புரிமையான தெய்வப் பணியை - உயிர்க்கருவில் ஊறித் தோன்றிய அறிவொளியை, எவராலும் பறித்தெடுக்க முடியாது. கவி தாகூரின் கீதாஞ்சலியும், வீர விவேகானந்தரின் வேதாந்த முழக்கமும், மணிவாசகரின் அன்புப் பொழிவும், வள்ளுவரின் அறிவுக்கதிரும், உலக மக்களின் முன் தலைநிமிர்ந்து நிற்கும் இறுமாப்பை, உயிர் உணர்ச்சி வெற்றியை, அளித்துவிட்டன. ஆக்கிவிட்டன. எங்கள் நாடு மெய்யறிவுச் சுரபி. அன்பின் அமிழ்தத் துளிகள் சிந்துகின்ற கற்பக நாடு. நாங்கள் அமரர்கள். அறிவின் நிழல் வீசுகின்ற அன்புக் கதிர்கள், வாழ்க, எங்கள் மெய்யறிவுச் செல்வம்.

## இன்று நாங்கள்

இன்று நாங்கள் அடிமைகள். ஏன்? எம்மிடம் அன்புண்டு, ஆண்மையில்லைஞூ அகம் உண்டு, புறம் இல்லைஞூ அறம் உண்டு, பொருளில்லை. ஈந்த கையை விரித்து இரக்கின்றோம். வாள் பிடித்த கையைக் கூப்பி வணங்குகின்றோம். பொருளும் போர்க்கலையும் இன்றி, அருளும் அன்பும் தனிநின்று இன்றைய ஆட்சி வெறி பிடித்த உலகை ஆளமாட்டா. தருமனின் தனி அறம், துரியோதனனின் ஆட்சி வெறியை அடக்கவில்லை. அறத்தோடு கலந்தை ஆண்மைப் போர்க்கலையே துரியோதனனை அழித்தது. நாங்கள் மேலைநாட்டாரின் புதுக்கலைகளை யெல்லாங் கற்கவேண்டும். பொருளாதாரக் கலைவீரர் பலர் எங்கள் நாட்டில் தோன்றவேண்டும். பட்டத்திற்கும் பதவிக்குமாக ஆங்கிலத்தைக் கற்கும் நம்மவர்களே அடிமையின் ஆணிவேர்கள். ஆங்கிலப் பட்டங்களைத் தமது வயிற்றுப் பிழைப்புக்காகவே பயன்படுத்து கின்றவர்களின் கூட்டம் ஒழியவேண்டும். இவர்களால் தமிழுக்கு ஆக்கப்பணி புரிய முடியுமா? அமெரிக்கா முதலிய தன்னாட்சி நாடுகளில் ஆங்கிலத்தைக் கலையார்வத்துடன் கற்கின்றனர். உலகப் பொதுமொழியாகிய ஆங்கிலத்தில் நிரம்பிக் கிடக்குங் கலைச் செல்வத்தைத் தாய்மொழியில் உள்ள சிறந்த நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கின்றனர். இதனால் தாய் மொழியை ஓம்புகின்றனர். புதுக்குகின்றனர். உரிமை ஆட்சி பெற்ற நாங்கள், இனித்தாய் மொழி

வாயிலாகவே கலைகளைக் கற்கவேண்டும். ஒருவர் பெற்ற ஆங்கிலப் பட்டத்திற்கும் அவர் பெறவிருக்குஞ் சம்பளத் திட்டத்திற்கும் மதிப்புக் கிடையாது. அவர் ஆற்றுகின்ற கலையாக்கத் தொண்டிற்கே மதிப்புண்டு. படிப்பும் பட்டமும் பதவியும், குடிக்கும் கஞ்சிக்கே உரியன என நாம் எண்ணுமளவும் அடிமைகளே. இந்த நூற்றாண்டு, செயல் வீரர்களின் நூற்றாண்டு. தாய்நாட்டிற்கு விடுதலை என்றால் தாய்மொழிக்கும் விடுதலை கொடுக்கவேண்டும். தாய்மொழிப் புலவர்களை மதிக்கவேண்டும். தாய்மொழியினும் ஆங்கிலத்தினும் பெரும் புலமையாளராக வீற்றிருக்கும் தமிழ் மக்களே இனிவரும் புதிய தமிழ்நாட்டின் ஆக்கத் தொண்டர்கள். இவர்களே தமிழ்ப் புலவர்களுக்கு, மேல்நாட்டின் புதுக்கலையொளியைத் தமிழ்ப் பண்புடன் கலந்தளிக்கின்ற அறிவுக் கதிர்கள். இவர்கள் அளிக்கின்ற கலை எழிலே எம் தமிழ் அன்னையின் உரிமை நலத்தில் ஊறும் புதிய உயிர்க் கருவாகும். வாழ்க தமிழ் அரசு.

## வழிபாடு

மக்களின் உயர்ந்த எண்ணங்களின் தோற்றமே வழிபாடாக உருத்தாங்கியது. உயர்ந்த எண்ணங்கள் ஆராய்வோடு கலந்த அறிவில்நின்று தோன்றுகின்றன. பிறர் கட்டாயப்படுத்தியோ, அல்லது தன்னூற்றமில்லாத வெற்றாரவாரத்தினாலோ உயர்வான புதுப் புனைவுகள் தோன்ற மாட்டா. உள்ளத்தில் ஊடுருவிப் பாய்கின்ற உணர்வுப் பிழம்பு ஈர நெஞ்சிற் கலக்கவேண்டும். ஆராய்வின் பெறுபேற்றை அழிவுக்குப் பயன்படுத்துதல் மக்கட் பண்பாகாது. தமது வாழ்க்கையைப் பலியிட்டு, உலக மக்களின் நலத்திற்காகக் கலைப் பண்புகளை - புதுப் பொறிகளை - அன்பு நெறியை - அறிவுக் களஞ்சியத்தைத் தேடித் தொகுத்து வைத்த பெரியார்களே ஈர நெஞ்சினார். உண்மைத் துறவிகள். துறவு என்பது பெண்ணை வெறுத்தலன்று. உலகம் பொய்ஞ் மாயை வாழ்க்கை என்று, மக்களை வெருட்டுதலன்று. இயற்கையை வெறுக்கும் வறட்டு வேதாந்தமும், உலகை அழிக்கும் முரட்டு வீரமும் எதற்கும் அஞ்சி ஒடுங்கும் அறியாமையும், மக்களினத்தை மறைக்கும் புலைப் புண்களாகும். தமது வாழ்க்கை நலத்தினைப் பொருட்படுத்தாது, மற்றைய மக்களையும் காப்பாற்ற வேண்டுமென்ற பேரன்பு படைத்தவர்களே துறவிகள். இன்றைய பாரத நாட்டின் வீரத் தலைவன் நேருவின் வாழ்வை அறிந்த எவரும் இதனை ஏற்றுக்கொள்வார்கள். ஐந்தடுக்கு மாடங்களில் வீற்றிருந்து இந்திரச் செல்வந் துய்க்கும் வாழ்வைத் துறந்தும், தமது ஆருயிர்த் தேவி கமலா நேருவைச் சிறை வாழ்க்கையால் பலி

கொடுத்தும் அரும்பெறன் மகள் இந்திரா நேருவைக்கூடப் பலமுறை சிறைபுக விடுத்தும், தாமும் பல முறை சிறை புகுந்தும், பாரத நாட்டின் விடுதலைக்காகச் செயற்கருந் தொண்டுகள் ஆற்றினார்கள். நேருவைப் போன்ற வீரத் துறவி - கந்தை சுற்றவும் வழியின்றிக் கஞ்சிக்கலையும் மக்களைக் காப்பாற்ற வந்த உண்மைத் தொண்டன் - இன்றைய உலகில் ஒருவரும் இலர். இனிவரும் உலகிற் பலர் தோன்றவேண்டும். தோற்றுவார்கள் என்றே அறிவுடை உலகம் எதிர்பார்க்கின்றது.

## கலைத் துறைவிகள்

அஞ்சாமை தவமும், வீரநெஞ்சில் நின்றே இத்தகைய உயர்ந்த பிறர்நலப் பண்பு பொங்கி வழிகின்றது. தன்நலத்தை ஒறுத்தலே பெருந் துறவு. முன் எல்லாம் எங்கள் நாட்டில் தோன்றிச் சிறந்த அறிவு நூல்களையும், கலைகளையும் ஆக்கிப் பாதுகாத்து வைத்த முனிவர்கள், தொண்டர்கள் யாவரும் தம் நலத்தைப் பலியிட்டு உலகின் ஆக்கத்திற்காக உழைத்த வீரர்களாவர். தவமென்பது முயற்சி. எத்தகைய துன்பங்கள் வந்தாலும் அவற்றையெல்லாம் பொறுத்துத் தாம் எடுத்துக்கொண்ட புதுப் புனைவுகளை உலகில் நிறுத்தும் வல்லமைப் பாடே தவம். இவ்வாறன்றித் தமது உடம்பு ஒன்றினையே ஓம்புதல் மேற்கொண்டு முயற்சியின்றிப் போலிவேடம் புனைந்து, மற்றைய மக்களை ஏமாற்றி, அவர்கள் செல்வத்தை உறிஞ்சி வாழுகின்ற போலித் துறவிகளே நாட்டை அழிக்குங் கொடியோராவர். புல்லுருவி, மரத்தின் மேல் இருந்து அம்மரத்தின் ஆற்றலைக் குடித்து, பின் அந்த மரத்தினையும் அழித்துத் தானும் ஒழிதல்போலப், போலித் துறவிகளும் தம்மை ஆதரித்த மக்கட் கூட்டத்தினரின் செல்வத்தையும் அழித்துத், தாமும் கெட்டு, நாட்டின் நலத்தினையும் கெடுத்தொழிவர். இவர்களின் கூட்டம் எந்நாட்டில் மிக்கிருக்கின்றதோ, அந்நாடு எந் நாளினும் மேம்பாடடையாதென்பது திண்ணம், தெய்வ வழிபாட்டையுங்கூட மக்களை வஞ்சித்துத் தம் நலம் போற்றும் அறிவிலிகளின், போலித் தொண்டர்களின் உரிமைப் பொருளாக மாற்றிவிட்டார்கள். இதனால் தெய்வ வழிபாட்டின் உண்மைப் பண்பு மறைந்துவிட்டது. தெய்வம் ஒரு சிலரின் உரிமைப் பொருளல்ல. வெறுங் கட்டுப்பாடுகளுள் அடங்கிக்கிடக்கும் போலிப் பொருளல்ல. அதனாற்றல் மிகப்பெரிது.

## கலை எழில்

உலகம் தோன்றிய காலம் தொட்டு இன்றளவும் மக்கள் ஆராய்ந்து கண்ட அறிவுக் கலைகள் யாவும் தெய்வ வழிபாட்டின் பெரும் பயன்களாகும். மக்களின் உயர்ந்த புதுப் படைப்புக்களையே அவர்கள் வழிபட்டு வந்தனர். அன்பு, தொண்டு, வீரம் என்னும் உயிர்ப் பண்புகளின் உண்மை வெளிப்பாடே உயர்ந்த புதுப் படைப்புக்களாகும். காதலும் வீரமுமே எல்லாவற்றிற்கும் தாயகம். காதலை (அன்பை) வழிபட்டார்கள். வீரத்தை வழிபட்டார்கள். இவையிரண்டினையும் நிலைபெறுத்தும் செயலை (தொண்டினை) வழிபட்டார்கள். வழிபடுதல் என்றால் அவற்றை மேலும் மேலும் ஆராய்ந்து புதுக்குதல்ஞ விளக்குதல். ஓவியம், காவியம், சிற்பம் எனும் இவைகளைக் காதலின் (கலை வேட்கையின்) தோற்றங்களென்றே கூறலாம். ஒவ்வொரு கலையிலும், காதல் அன்பு இன்றேல், அக்கலைகள் நிலைபெற மாட்டாதொழியும். அக்கலைகளை அழிவுபடுத்துகின்ற தடைகளை வெட்டிவீழ்த்தும் வீரமும் வேண்டும். ஓர் மக்களினம் அழியும் பொழுது, அவ்வினத்தவர்களால் ஆய்ந்துகண்ட கலைகளும் அழிந்தொழியும். அதன் பொருட்டே அக் கலைகளைக் காவியமாகவும், ஓவியமாகவும், சிற்பமாகவுஞ் செயலில் தோற்றுவித்து (தொண்டினால்) வழிபட்டு வருகின்றனர். திருக்கோவில் வழிபாட்டின் உண்மை அமைப்பினை உற்று நோக்குவோமாயின், அது கலை வழிபாட்டிலேயே சென்று முடிதலைக் காண்போம். பல்வேறு வகைப்பட்ட ஆய்வுக் கலைகளை எல்லாம் தொகுத்து வைத்துப் பாதுக்காக்கின்ற கலைக்கோவிலே திருக்கோவிலாகும். கலை அன்பர்களே தெய்வத் தொண்டர்கள். தெய்வத்தின் திருக்கோலத்தைக் கலைக்கோலமாகவே புனைந் துள்ளார்கள். இன்று மேலை நாட்டில் தோன்றி வளரும், விஞ்ஞானக் கலையினை ஆய்ந்து கண்ட ஒவ்வொரு அறிஞரும், எவ்வளவு அரிய பெரிய உழைப்பினால் அவ்வக் கலைகளைத் தோற்றுவித்தனரென்பதைக் கருதுங்கள். அவர்களின் வாழ்நாள் முழுவதையுமே கலை ஆய்வுக்குப் பயன்படுத்தினர். உறக்கமும் ஊணும் இன்றியே இடைவிடாது முயன்றனர். பல துன்பங்களை மேற்கொண்டனர். தம் உயிரையுமே கலை ஆய்வுக்குப் பலியிட்டனர். இவர்களன்றோ துறவிகள். தவமுனிவர்கள், இவர்களால் புதிது புதிதாக ஆய்ந்து கண்ட கலைகளின் பெறுபேற்றை நாம் நன்கு பேணவேண்டும். அதுவே வழிபாடு, மீண்டும் மீண்டும், அக்கலைகளை ஆய்ந்து, இன்னும்

புத்தம் புதிய முடிவுகளை உலகினர்க்குதவுதல் வேண்டும். அதுவே காதல் (அன்பு). இங்ஙனம் அக்கலைகளை வழிபட்டுக் காதலித்துச் செயலினால் (தொண்டால்) வெளிப்படுத்துகின்றவர்களே தெய்வத் தொண்டர்கள். தம்நலமற்ற வீரத் துறவிகள், ஈர நெஞ்சினர். இவர்களினாலேயே உலகம் புதிய எழிலைப் பெறுகின்றது. முன்னேறுகின்றது. இவ்வாறு சிறந்த விளங்கும் கலைத்தெய்வ வழிபாட்டைக், கருத்தில்லாப் போலிக் கட்டுப்பாடுகளால் அகப்படுத்தி அதன் கலைப் பண்பைச் சிதைக்கும் புல்லியர் கூட்டம் ஒழியவேண்டும். புதுமைக் கலைஎழில் வீசும் ஆய்வுப் புலவர்கள், கலையாக்கங் கருதி உழைக்க வேண்டும். தெய்வ வழிபாட்டின் மாண்பு எங்கும் பரவவேண்டும். அது கலை வழிபாடாகும்.

## அன்புக்குரல்

இத்தெய்வக் கலையமிழ்தை நுகர்தற்கு எம்மை அடியார்கள் ஆற்றுப்படுத்துகின்றனர். அவர்களின் ஈரநெஞ்சில் வேறுபாடற்ற உண்மைப் பண்பு ஒளிவிடும். ‘‘அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்” என நம்பியாருரர் அன்புடன் உலக மக்களை அழைக்கின்றார். என்னைப்போல் நீங்களும் இன்பம் அடைந்து வாழவேண்டு மென்கிறார். தென்னாட்டின் எல்லைக்குள் மட்டுமே சிவவழிபாட்டின்பம் அடங்கவில்லை. எந்நாட்டிலும் உண்மை உள்ளவர்கள் இருக்கின்றனர்�ளு உண்மைப்பொருள் எவர்க்கும உரிமை உடையதென்னுங் கொள்கையை அடிகளார் வலியுறுத்துகின்றார். மாணிக்கவாசகர் ‘‘தென்னாடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறைவன்” என்கிறார். தாயுமானவர் ‘‘முத்திதருந் தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே” என் ஆராமையோடு எம்மை அறை கூவுகின்றார். இவர்களின் நெஞ்சந்தான் தெய்வக்கலைப் பண்பு சுரந்து கனியும் ஈரநெஞ்சம். இவர்களே அன்புத் தொண்டர்கள். தாங்கள் பெற்று நுகரும் ஆரா இன்பத்தைப் பிறர்க்கும் அறிவுறுத்தி அழைக்கின்றனர். இவர்களையே ‘‘ஈரநெஞ்சினர் யாதுங் குறைவிலார் வீரம் என்னால் விளம்புந் தகையதோ” எனப் பாராட்டுகின்றனர். ஈரநெஞ்சினரின் வீரந்தான் இன்றைய உலகையும், இனிவரும் உலகையும் ஆக்கும் ஆற்றல் வாய்ந்தது. அருளொடு கலந்தது. அறிவுச் செல்வத்தை - ஆய்வுக் கலைகளை அளிக்க வல்லது. அன்புந் தொண்டும் ஆண்மைப் பண்புடன் கலந்து அலை எறிவது. அவர்களின் கொள்கைகள் இன்றைய உலகில் பெரிதும் வெற்றி பெறுகின்றன. அறிவின் விருந்தே, இனி உலகை

ஆட்சி புரியும். அதன் மங்கல முரசு ஒலிக்கின்றது. உரிமைக் கொடி வானில் நிழல் இடுகின்றது. வாழ்க கலை உலகம்.

## இளைஞர்கள்

இளைஞர்களே! இனிவரும் உலகின் கலை, உரிமையாட்சி எனுமிவைகள் உங்கள் உடைமைகள். நீங்கள்தான் புதிய கலையின் எழிலை வீசும் புத்திளங் கதிர்கள். இனிவரும் உலகம் உங்களை உறங்கவிடாது. உணவுக்கும், உடைக்குந்தான் கலையென்ற உணர்வைக் கொள்ளவிடாது. பணமும் பட்டமும் இனி உலகை ஆளமாட்டா. அன்புந் தொண்டும் அவற்றுடன் கலந்த ஆண்மையுந்தான் இனிவரும் உலகை ஆளும் பண்புகள். பேச்சும் எழுத்தும் செயலில் மலரவேண்டும். கல்வியைக் கலை வேட்கையுடன் தேடுங்கள். எங்கள் தலை வீழ்ந்தாலும் அறம் வறண்ட ஆட்சிவெறியை அஞ்சோமென்று நெஞ்சில் அறைந்து கூவுங்கள். கொடியவரைப் புறந்தள்ளுங்கள். பொய் வாழ்வு வேண்டாம். உண்மைக்காக உயிரை விடுதலே உயர்ந்த வீரமென்று கொள்ளுங்கள். நாட்டின் விடுதலைக்காகப் போராற்றிய உண்மைத் தலைவர்களைப் போற்றுங்கள். அஞ்சாமை தவழுகின்ற அவர்களின் நெஞ்ச மலையில் நின்று உரிமை முழக்கஞ் செய்யுங்கள்.

## பெற்றோர்கள்

பெற்றோர்களே! உங்கள் கடமை மிகமிகப் பெரிது. உரிமைக் கலை எழில் வீசுகின்ற வீரத்தோன்றல்களாக, உங்கள் குழந்தைகளைப் புதுக்குங்கள். ஆக்குங்கள். பெரும்போர் நெருப்பினால் வதக்கப்பட்டிருக்கின்ற இச்சின்னஞ் சிறு குழந்தைகள், வரவிருக்கும் உரிமைத் தமிழ் நாட்டின் வீரர்கள் - தொண்டர்கள். உங்கள் அன்புந் தவமுந்தான் இவர்களை ஆககவேண்டும். விஞ்ஞானக் கலையுணர்வு இவர்களை ஆக்கப் பணிபுரியுமாறு ஆக்கும். அன்புச்சாயல் உங்கள் உள்ளத்தில் நின்றுதான், இவர்கள் உள்ளத்தில் ஊறவேண்டும். தா்யமார்களே! உங்கள் வட்டிற் சோற்றிலும் தொட்டிற் பாட்டிலும் வீரமும் தொண்டும் விளங்க வேண்டும். பால் நினைந்தூட்டும் தாய்மார்களாக நீங்கள் சிறக்க வேண்டும். பால்ஊட்டும் போதே பிள்ளையின் ஆக்கங்கருதி ஊட்ட வேண்டும். தாய்மை உலகே எம்மைத் தூக்கிவிடும். தாய்மாரின் உள்ளந்தான் உலகம், வீரத் தாய்மார்கள் என்றால், வெறிபிடித்த கொலையாட்டிகளல்லர். என்ன துன்பம் வந்தாலும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது. உண்மை

யைக் காப்பவர்களே வீரத்தாய்மார்கள். பெண்மையென்பதுவெறுந் தண்ணீரல்ல. அஞ்சிக் கெஞ்சும் அடிமையல்ல. உயிர்போகினும் உண்மையைக் - கற்பைக் காப்பாற்றுகின்ற வீரக்கனல் - உரிமையின் உயிர். தாய்மார்களே! இனிவரும் தன்னாட்சித் தாய்நாட்டின் ஆட்சி வீரர்கள், உங்கள் உள்ளப் பண்பின் ஒளிக்கதிர்களே. நீங்கள் பொருளற்ற வெறும் நாகரிகக் கோலங்களைக் கண்டு மயங்காதீர்கள். அறிவுடை உலகம் உங்களை வரவேற்கின்றது. உங்கள் குழந்தைகளை அழைக்கின்றது. கலையுலகின் புதிய எழில் அவர்களை வாழ்த்துகின்றது. அவர்கள் கலையினால் ஆக்கப்பெறுவார்கள். தாய்நாட்டின் உரிமைக் கொடியை உயர்த்துவார்கள். தமிழ்மொழியில் புதிய கலைகளை ஆக்குவார்.

வாழ்க கலை உலகம்!

❍❍❍

# 2. இனிவரும் உலகில் தமிழன்

காலவானிற் புதிய மின்னல்கள் கிளம்புகின்றன, அறிவு நிழலாடுகின்ற வாழ்வில், அன்பும் தொண்டும வீரமும் அலை பெறுகின்றன. இலக்கிய உலகில் புதுமை எழில் வீசுகின்றது. புலவர் உலகுக்குத்தான் இலக்கியம், அவர்களே அதன் விருந்தாளர்கள் என்னுங் கருத்துக்கள் காலவெள்ளத்தில் மூழ்கின்றன. எழுத்தறியாதவன் உள்ளத்திலும் இன்பவெறியை ஊட்டி, அவன் வாழ்வில், புதிய கலைப்பண்பை வளர்ப்பதுதான் இலக்கியம் என்னும் எதிரொலி எம் உள்ளத்தைத் தொடுகின்றது. மலையிலிருந்து இறங்குகின்ற அருவி ஊற்றைப்போல மக்களுள்ளத்தில் புதுமை வீறு, வெறிக்கின்றது. இந்த வெறி இனிவரும் உலகின் ஆக்கப்பாட்டை வரவேற்கின்ற இளமை விருந்தாகும். காலச்செலவில் மக்களின் கொள்கைகள் கலைப்பண்புகள், கடவுள் வழிபாட்டு நெறிகள், நாகரிகச் செப்பங்கள், என்பன மாற்றமடைந்து, வளர்கின்றன. மாற்றமின்றி என்றும் ஒரேநிலையில் நிற்கின்ற எவையும் மக்களின் ஆக்கப்பாட்டிற்கு, அரண் தராது அழிந்தொழியுந் தன்மையன. நிலையான கொள்கைகளையே தமக்குறுதுணையாகக் கொண்டுளூ உலகின் போக்கை எண்ணாது வாழ்கின்ற எம்மக்கட் கூட்டத்தினரும் இனிமேல் வருகின்ற உலகில் இடம் பெறமாட்டார். ஒவ்வொரு கொள்கையும் ஓர் குறிப்பிட்ட கால அளவுக்குத்தான், மக்களிடையே நிலைபெறும் உரிமை உடையது. **ஒரு கொள்கை குறிப்பிட்ட கால எல்லை கடந்து ஒரு மக்கட் கூட்டத்தினரிடையே நிலைபெறுமாயின், அம்மக்கட் கூட்டத்தினர் விரைந்து, உலகின் கண்ணோட்டத்தைக் கடந்துவிடுவார்கள். மொழியின் வளர்ச்சியும், காலந்தோறும் வேறுபட்டே செல்கின்றது. அதன் செலவை நாம் தடிந்து ஏவல்கொள்ள முடியாது. அதன் போக்கில் நாமும் கலந்து அதனைச் செப்பஞ் செய்தல் வேண்டும். வரன் முறைகடந்து வழிதப்பிச் செல்லும் நிலையை அம்மொழி, எய்தும் நெருக்கடியில், நாம் அதனுடன் தொடர்ந்து புதுமை நெறியில் பழமைப் பண்பைக் கலந்து, வளம்படுத்துவதன் மூலம் அதன் பொலிவின் எழிலைப் பெருக்குதல் வேண்டும். இவ்வாறன்றி, அதன் விரைந்த செலவிற் கலந்து கொள்ளாமல், வெளியில் நின்று புலம்புதல் அறிவுடைமைக்கு அழகாகாது.** பொதுமக்களைப் புறக்கணித்தும் புலவர்களையே தழுவிச் செல்லும் மொழி, தன்

வளப்பாடு சிதைந்து மறைந்தொழியும். இதனால் வரம்பைச் சிதைத்துப் புலவர்களையும் இகழ்வதே மொழி வளர்ச்சியெனச் சிலர் கருதுகின்றனர். அங்ஙனம் இலக்கண வரம்பைச் சிதைத்துப் புலவர்களையும் இகழ்ந்ததினால் ஒருமொழி வளம்பட்ட வரலாற்றை நாம் இன்றளவுங் கேட்கவில்லை. இனிக் கேட்கப்போவதும் இல்லை. இனிப் பொதுமக்களை, அன்பு, அறிவு, தொண்டு ஆண்மை எனும் பண்புகளில், சிறந்தவர்களாகப் புதுக்கி, உலகை வாழ்விக்கக் கருதாது, ஒரு சிலரின் அறிவு விருந்தாக மட்டும் விளங்கிய ஒரு மொழி, நீண்டகாலம் உலகில் நிலைபெற்றதையும் நாம் அறியோம்.

எனவே இனிமேல் வருகின்ற உலகில் தமிழ் மக்கள் இடம்பெற விரும்பினால் அறிவில் மேம்பாடு அடைதல் வேண்டும். அதற்கு மொழியறிவு இன்றியமையாதது. இன்றைய தமிழ்மொழியின் புத்திளங் கோலம், புலவர்களையும் அவரல்லாத பொதுமக்களையும், ஒரு உண் கலத்தில் பகிர்ந்துண்ணும் புது விருந்தினராக வரவேற்க வேண்டும். அவ் வரவேற்பின் மங்கலமுரசின் எதிரொலி கேட்கின்றது. அவ்வொலிதான் தமிழின், ஷமறுமலர்ச்சி' இலக்கிய நண்பர் மாநாடாகும். அந்த எதிரொலியின் எழுச்சி, தனது உயிர்க்கருவினால், தமிழன்பர் உள்ளத்தில் புதிய கிளர்ச்சியை எழுப்புகின்றது. ஒருவனின் அறிவுக்குறைவே அவன் வதியும் நாட்டின், உரிமை வாழ்வை அழித்துவிடும் என்ற எண்ணம், நிலைபெறுகின்ற இந்த நூற்றாண்டினும், நாங்கள் கலை, கடவுள் வழிபாடு, பொருளாக்கம், தொண்டு, வீரம், காதல், அரசுரிமை, எனும் இவைகள் எல்லாம், மக்களுள், ஒரு பகுதியினருக்கே பிறப்புரிமையாக அமைந்து கிடப்பன என்னும் துணிவில் பெரிதும் நிலைகொண்டு நிற்றல் எமது முன்னேற்றத்தைக் கொல்லும் பொல்லாப் பண்பாகும். "எல்லாரும் இந்நாட்டு மன்னர்கள் "கல்லாது நிற்பார் இல்லை, கல்வி முற்ற வல்லாரும் இல்லை□ எனவரும் பொருள் உரைகளை உணருங்கள். செல்வமும் கல்வியும் மக்களின் பொது உரிமைகளாகும். முயற்சி திருவினை ஆக்கும். புலமை எல்லா உயிர்களுக்கும் இன்பத்தைச் சுரக்கும் அமிழ்த ஊற்று. அந்த அமிழ்தத்தை எல்லோரும் கூடிப் பருகுங்காலம் எம்மை அறை கூவுகின்றது. இனிவரும் உலகில், தமிழன் முடிசூடப் போகின்றான். தமிழன்னையின் புத்தம் புதிய அறிவுக்கலகள் உலகினரைத் தட்டியெழுப்பும் பெருவாழ்வு கால்கொள்கின்றது. தமிழன் இன்கனிச் சோலையில் - இளந்தென்றலில் - வெண்ணிலாக்கலைகளில் - நீலவான்

திரையில் - கருங்கடல் அலையில் - எல்லாம் நிறைந்து துளும்பும் இயற்கை எழிலில் தோய்ந்து தோய்ந்து "இறைகளோடு இணைந்த இன்பம், இன்பத்தோடு இயைந்து வாழ்வு" காண்கின்றான். இதுவே தமிழன் வழிவந்த அடிச் சுவடாகும்.

*தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாணிலத்து*
*மன்னுயிர்க் கெல்லாம் இனிது*

தமிழ் வாழ்க! அன்பு பொலிக! தமிழ்நாடு வெல்க.

**ஈழகேசரி 25.11.1945 (ஞாயிறு)**

❍❍❍

# 3. இளைஞர்களே எழுமின் விழிமின்

இளமைப் பருவம் வாழ்க்கையின் மலர். அதன் மணம் எங்கும் பரவ வேண்டும். அலரவேண்டும். அன்பும், தொண்டும், வீரமும் இளமையின் பண்புகள். அன்பும் தொண்டும் ஆண்மையை ஆள்வன அறிவுடன் கலந்து உலகை ஆக்குவன.

அன்பும், தொண்டும், ஆண்மையும் கலந்த அறிவே மெய்யறிவு - தெய்வச்சாயல். அந்த அறிவின் பயனே உலகம். இளமைப் பருவத்தில் அறிவைப் பெருக்கி, அன்பும் தொண்டும் கனிந்த ஆண்மை வாழ்வைப் பெறவேண்டும். அறக்கதிர் விரித்து உலகை ஆளவேண்டும். இன்றளவும் உலகில் தோன்றிய அறிஞர்கள், தொண்டர்கள், வீரர்கள் என்போர் யாவரும் இளமை எழுச்சி பெற்றவர்கள். இளமையிலேயே தம்மை ஆக்கி அமைத்தவர்கள். இளமை ஆக்கமே உயிராக்கம் புதுமை வீறும், மறுமலர்ச்சியும் பொங்கி விளங்கும் புரட்சி ஆக்கம். உலக மக்கள் எல்லோரும் இளமையை வழிபடுகின்றனர். அவ்வழிபாட்டின் நோக்கம் புதுப்படைப்பின் ஆக்கமேயாகும்.

## தமிழ் மக்களின் இளமை வழிபாடு

தமிழ் மக்களின் இளமை வழிபாடு, முருகன் வழிபாடு. முருகன் ஓர் வீரத் தெய்வம். “சுதந்திரத் தெய்வம்” அவன் இளமைத் திருக்கோலத்தில் அன்பும், தொண்டும் வீரமும் அலையெறிகின்றன. ஓர் இளைஞன் வாழ்வில் அன்பு, தொண்டு, வீரமென்னும் ஆண்மைப் பண்புகள் மூன்றும் அளவிற் கலந்து விளங்க வேண்டுமென்பதே முருகன் வழிபாட்டின் நோக்கம். முருகனைப் போன்ற வீரக் குழந்தைகள் சுதந்திர உலகில் தோன்றவேண்டும். முருகன் இயற்கைத் தெய்வம். சுதந்திரம் பெற்ற வீரர்களின் மலைபோன்ற வெற்றித் தோள்களில் ஏறி விளையாடுகின்ற வீரக்குழந்தை.

அஞ்சாத உள்ளத்தில், வீரத் தொண்டர்களின் உள்ளத்தில் முருகன் வீற்றிருக்கின்றான். மலைகள் தோறும் முருகன் கோவில்கள் அமைந் திருப்பதையும், அவனை மலைகளின் மேல் ஏறி விளையாடுகின்ற வீரத்தலைவன் என்று கூறுகின்ற கருத்தையும் நோக்குங்கள்.

முருகன் கொடியவரை அழிக்கப் போர்புரிந்தவன். மக்களை - மக்கள் அடிமைப்படுத்தி ஆண்ட அதிகார வாழ்க்கையை அறத் தொலைத்தவன். அவுணர் குலத்தை வேரறுத்து, அமரர் குலத்தை வாழ்வித்தவன். அடிமைச் சிறையில் அகப்பட்டு வருந்திய மக்களை மீட்டு, சுதந்திர வாழ்வை அவர்கட்கு அளித்தவன். (அவுணர் -சார்வதிகாரிகள்

(அவு), அமரர் - அவுணர்களால் அடக்கி ஆளப்பட்ட மக்கள்) கொடுமையை வீழ்த்த அறப்போர் புரிகின்ற தொண்டர்களே. முருகனின் தோழர்கள் - அன்பர்கள். இன்று முருகன் ஆண்மைப் பண்புகள் நிரம்பிய வீரத் தொண்டர்கள், அதிகார ஆட்சியை வீழ்த்தி, அன்பாட்சியை நிலை நிறுத்தும் சுதந்திர வாழ்வில், மக்களை இறக்கிவிட்டார்கள். சர்வாதிகாரிகளும், அவர்களின் அன்புத் தோழர்களாகிய முதலாளிக் கூட்டத்தினரும், மக்களின் சுதந்திரத்தை விழுங்கி வந்த நெருக்கடியில் நின்று, உலகைக் காப்பாற்றிய தொண்டர் களின் வெற்றிமுரசு, எங்கும் ஒலிக்கின்றது. அதிகார வெறிபிடித்த அவுணக் கூட்டங்கள் அழிந்தொழிகின்ற அவலக் குரலுங் கேட்கின்றது.

## இளைஞர்களே நீங்கள் விழித்தெழுங்கள்

இளைஞர்களே! நீங்கள் முருகனை வழிபடுங்கள். முருகனை வழிபடுதல் என்றால் - அன்பும், தொண்டும், வீரமும் அளவிற் கலந்து அலையிடுகின்ற ஆண் சிங்கங்களாய் சுதந்திர வீரர்களாய் நீங்கள் விழித்தெழுங்கள். அடிமைத் தளையை அறுத்தெறியுங்கள்.

உங்கள் வீரத்தில் அன்பும் தொண்டும் ஊரிருளாய் பாயவேண்டும். அன்பும் - தொண்டும் கலவாத வீரம் அதிகார வெறிபிடித்த வீரம் - உலகை அழிக்கும். நீங்கள் இதற்கு ஆளாகாதீர்கள். அன்பும், அன்புத் தொண்டும் உங்கள் செயலின் பயன்கள். அவற்றையே அறிவுடைய உலகம் வரவேற்கின்றது. செயல் வீரர்களின் தலைவனே முருகன். அவனின் அன்புத் தோழர்கள் நீங்கள், சுதந்திரத் தொண்டாற்ற வெளிப்படுங்கள். முருகு, அழகு - இளமை என்பன ஒரு பொருட் சொற்கள். முருகன் வழிபாடு - இளமை வழிபாடு - உலகப் பொது வழிபாடு - எங்கும் முருகன் வழிபாடு - இளமை வழிபாடு பொலிய வேண்டும். வாழ்க இளைஞர் உலகம்.

## பெற்றோர்கள்

பெற்றோர்களே - உங்கள் பொறுப்பு மிகமிகப் பெரிது. உங்கள் கையிலேயே வருங்கால உலகின் ஆக்கம் தங்கியிருக்கின்றது. நீங்களே - வருங்கால உலகின் கற்பக தருக்கள். அமுத சுரபிகள். சுதந்திர தேவியின் அன்புக் குரலில் நெஞ்சு வளருகின்ற வீரக்குழந்தைகளை உலகுக் குதவுங்கள். குழந்தைகளின் உள்ளம் தூய பளிங்கு போன்றது. ஆற்றல், வீரம், துணிவு, பொறுமை, வினையுறுதி முதலிய மக்கட் பண்புகளை இளமையிலேயே உங்கள் குழந்தைகள் உள்ளத்தில் பதிக்க வேண்டும். வட்டிற் சோற்றிலும் தொட்டிற் பாட்டிலும் இப்பண்புகள் செறிய வேண்டும். நாட்டிற்குயிர் நன்மக்கள். வீட்டுப் பிள்ளை வளர்ப்பு, நாட்டின் ஆக்க

உயர்வு. தொட்டிற்பாட்டு - சுதந்திரப்பாட்டு. பெற்றோர்கள் தூய வாழ்வும், ஆருயிர்க்கன்பும், தெளிந்த அறிவும், அன்பர் பணியும், மேற்கொண்டவர்களாக விளங்கவேண்டும். பெற்றவரின் பண்புகளே பிள்ளைகளின் நண்பர்கள். கொடுமை செய்கின்றவர்களை - எதிர்த் தொழிக்கும் அஞ்சாமையைக் குழந்தைகள் உள்ளத்தில் பெருக்க வேண்டும். "பாதகஞ் செய்பவரைக் கண்டால் பயங் கொள்ளலாகாது பாப்பா, மோதி மிதித்துவிடு பாப்பா, அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா" எனும் பாரதியாரின் வீரக் குரலைக் கேளுங்கள்!

என் மகன் முதுகுப் புறத்தில் புண்பட்டு மாண்டானாயின், அவனிற்குப் பாலூட்டிய முலைகளை அறுத்தெறிந்திடுவேன் எனக் கூறிப் போர்க்களம் புகுந்து அங்குள்ள தன் மகனைக் கண்டு, அவன் மார்பு பிளந்து இறந்து கிடந்த வெற்றிக் காட்சியால் விம்மிதமுற்றுப் பெற்ற பொழுதினும் பெரிது மகிழ்ந்த வீரத்தாயின் வரலாற்றைப் புறநானூற்றில் பாருங்கள். உங்கள் எண்ணங்களின் புதுப்பிறப்பே உங்கள் குழந்தைகள். பெருந் தொண்டர்களின் வரலாறு - புலவர்களின் வரலாறு - வீரர்களின் வரலாறு - வீரத்தாய்மார்களின் வரலாறு என்பவற்றை, குழந்தைகட்குக் கூறி - அவர்களின் உள்ளத்தில் புலமை ஒளியை பாய்ச்ச வேண்டும். இனிவரும் உலகின் ஆக்கத் தொண்டர்கள் உங்கள் குழந்தைகளே. எதிர்கால உலகின் மங்கலமுரசு கேட்கின்றது. பெற்றோர்களே உங்கள் விழிப்பு - உலகின் செழிப்பு - கண்ணுங் கருத்துமாக குழந்தைகளைப் பேணுங்கள். கலையூட்டுங்கள். அறப்பண்பை உலகமெலாம் அலர்த்தி, அன்போடு கலந்த ஆண்மைப் போர்க்கு, அறை கூவுகின்ற வீரர்களாகச் செதுக்குங்கள். புதுமை காணும் புரட்சிப் பண்பை வித்திட்டு, விளைவு செய்கின்ற மறுமலர்ச்சி வீரர்களாக மாற்றுங்கள்.

*வலிமை சேர்ப்பது தாய் முலைப் பாலெடா*
*மானஞ் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்*
*கலி அழிப்பது பெண்களறமடா*
*கைகள் கோத்து களித்து நின்றாடுவோம்*

எனத் தாய்மார்களை துயில் எழுப்புகின்றார் வீரப் பாரதியார்.

*தந்தை மகற்காற்று நன்றி அவையத்து*
*முந்தி யிருப்பச் செயல்*

நற்றிணைச் செல்வம்எனத் தந்தையர்களை துயில் எழுப்புகின்றார் திருவள்ளுவர்.

**தினகரன் 7.11.1948 (ஞாயிறு)**

# 4. வீரத் தெய்வம்

முருகன் ஓர் வீரத் தெய்வம் சுதந்திரத் திருக்கோலத்தில் அன்புந் தொண்டும் வீரமும் அலையெறிகின்றன. ஓர் இளைஞன் வாழ்வில், அன்பு தொண்டு, வீரம் என்னும் ஆண்மைப் பண்புகள் மூன்றும் அளவிற் கலந்து விளங்கவேண்டுமென்பதே முருகன் வழிபாட்டின் நோக்கம். இப்பண்பு களை “இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி” என்றும் கூறுவார்கள். (இச்சை - அன்பு, கிரியை - தொண்டு, ஞானம் - வீரம் - அறிவு) முருகனைப் போன்ற வீரக் குழந்தைகள் சுதந்திர உலகில் தோன்றவேண்டும். முருகன் இயற்கைத் தெய்வம். சுதந்திரம் பெற்ற வீரர்களின் மலைபோன்ற வெற்றித் தோள்களில் ஏறி விளையாடுகின்ற வீரக் குழந்தை. அஞ்சாத உள்ளத்தில், வீரத் தியாகிகளின் உள்ளத்தில் முருகன் வீற்றிருக்கின்றான். மலைகள் தோறும் முருகன் கோவில்கள் அமைந்திருப்பதையும், அவனை மலைகளின்மேல் ஏறி விளையாடுகின்ற வீரத் தலைவன் என்று கூறுகின்ற கருத்தையும் நோக்குங்கள்.

முருகன் கொடியவரை அழிக்கப் போர் புரிந்தவன். மக்களை மக்கள் அடிமைப்படுத்தி ஆண்ட அதிகார வழக்கை அறுத்தொழித்தவன். அவுணர் குலத்தை வேரறுத்து, அமரர் குலத்தை வாழ்வித்தவன். அடிமைச் சிறையில் அகப்பட்டு வருந்திய மக்களை மிட்டுச் சுதந்திரவாழ்வை அவர்களித்தவன். (அவுணர் - சர்வாதிகாரிகள். அமரர் - அச்சர்வாதிகாரி களால் அடக்கி ஆளப்பட்ட மக்கள்.) இன்று, முருகனின் ஆண்மைப் பண்புகள், நிரம்பிய வீரத்தொண்டர்கள், அதிகார ஆட்சியை வீழ்த்தி, அன்பாட்சியை நிலைநிறுத்தும், சுதந்திர வாழ்வில், மக்களை இறக்கி விட்டார்கள். சர்வாதிகாரிகளும், அவர்களின் அன்புத் தோழர்களாகிய முதலாளிக் கூட்டத்தினரும், மக்களின் சுதந்திரத்தை விழுங்கி வந்த நெருக்கடியில் நின்று, உலகைக் காப்பாற்றும் தொண்டுபூண்டுழைத்த வீரத்தியாகிகளின் வெற்றிமுரசு எங்கும் ஒலிக்கின்றது. அதிகார வெறிபிடித்த அவுணக் கூட்டங்கள் அழிந்தொழிகின்ற அவலக் குரலுங் கேட்கின்றது. இளைஞர்களே! நீங்கள் முருகனை வழிபடுங்கள். முருகனை வழிபடுதல் என்றால் - அன்புத் தொண்டும் வீரமும் அளவிற் கலந்து அலையிடுகின்ற, ஆண்சிங்கங்களாய் - சுதந்திர வீரர்களாய் நீங்கள் வெளிப்படுங்கள். அடிமைத்தனையை அறுத்தெறியுங்கள். உங்கள் வீரத்தில், அன்புந் தொண்டும் ஊடுருவிப் பாயவேண்டும். அன்புந் தொண்டுங் கலவாத தனிவீரம், அதிகார வெறிபிடித்த வீரம் உலகை அழிக்கும். அதற்கு நீங்கள் ஆளாகாதீர். அன்புந் தொண்டும் உங்கள்

செயலின் பயன்கள். அவற்றையே அறிவுடை யுலகம் வரவேற்கின்றது. செயல்வீரனின் தலைவனே முருகன். அவனின் அன்புத் தோழர்கள்தான் நீங்கள். சுதந்திரத் தொண்டாற்ற வெளிப்படுங்கள்.

முருகனின் ஆண்மைப் பண்புகளாகிய அன்பு, தொண்டு, வீரம் என்பன தனித்தனி உருவந்தாங்கியும் மூன்றும் ஒன்றுசேர்ந்த முழு உருவந் தாங்கியும் நின்று இன்றைய பாரதநாட்டின் விடுதலைப் போரை வெற்றி யுடன் ஆற்றி வருகின்றன. அவற்றுள் அன்பின் உருவம் 'காந்தி' தொண்டின் உருவம் - நேரு, வீரத்தின் உருவம், சுபாஸ் சந்திரபோஸ், இம் முப்பெரும் வீரத்தொண்டர்களும் சுதந்திரப்போரின் படைத்தலைவர்கள். இவர்களில் ஊறிக்கிடக்கின்ற வீரப் பண்புகளே முருகன் வழிபாடு. இனி இம் முப்பண்புகளும் ஒன்றையொன்று மிகாமற் கலந்த முழுமுதல் உருவமாகவும் நேரு விளங்குகின்றார். மூன்று பண்புகளும் ஒன்றுபட்ட வாழ்வின் பயனே சுதந்திர வாழ்வாகும். வீரம், அன்பு, தொண்டு என்னும் இரு கண்களின் வழியாகக் கதிர்விட்டுப் பாயும் அளவுபட்ட தியாக ஒளியால் அலர்த்தப்படுவதே சுதந்திர மலர்.; அம்மலரில் நின்று வழியும் அன்புத் தேனை அள்ளிப் பருகும், உரிமைக் கலந்தான் முருகன். எனவே முருகன் வழிபாடு சுதந்திரதேவியின் வழிபாடாகும்.

வீரத் தாய்மார்களே! முருகனை வழிபடுங்கள். சுதந்திரதேவியின் அன்புக் குரலில், நெஞ்சு வளரும் வீரக் குழந்தைகளை ஈன்றுதவுங்கள். உங்கள் தொட்டிற் பாட்டிலும், வட்டிற் சோற்றிலும், அன்புந் தொண்டும் வீரமும் கமழ வேண்டும். இதுதான் முருகன் வழிபாடு. விடுதலை நோன்பு. முருகன் வெற்றி சுதந்திர வெற்றி. முருகனைப் பாடுங்கள்.

*சூரனை முன் போரில் வென்று*
*சுதந்தி ரத்தைக் காத்தவன்*
*வீர னெங்கள் முருக னுக்கு*
*வெற்றி மாலை சூட்டுவோம்*
*அன்பு, தொண்டில் ஊறிப் பாய*
*ஆண்மை தோன்றும் வாழ்விலே*
*முன்பு சூரை வென்ற முருகன்*
*முதன்மை நின்று வீறுமே.*
*இளமைக் கோலக் கதிரின் சாயல்*
*எறிக்கும் இன்பக் கனவிலே*
*அளவி லன்புச் சாயல் காட்டும்*
*ஆண்மை தெய்வம் முருகனே.*

*அன்புத் தாயின் நெஞ்சில் முருகன்*
*ஆண்மைக் குணங்கள் ஊறினால்*
*துன்பைத் தொலைத்து வீரப் புதல்வர்*
*சுதந்தி ரத்தேர் ஏறுவார்*
*குழந்தை முருகன் பண்பை யெங்கள்*
*குலத்தின் செல்வ மாக்குவோம்*
*இழந்து நின்ற சுதந்தி ரத்தை*
*எய்திக் கொடியைத் தூக்குவோம்.*

**ஈழகேசரி 3.11.1946 (ஞாயிறு)**

❍❍❍



# 7
# வாழும் இலக்கியம்

**குறிப்பு** :- நான்காவது உலகத் தமிழ் மாநாடு 29.4.1951, 30.4.1951 & 1.5.1951 ஆகிய மூன்று நாட்களும், பெரு விழாவாக, யாழ் பரமேசுவராக் கல்லூரி (இன்றைய யாழ் பல்கலைக் கழகம்) மைதானத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் 1.5.1951 அன்று மதியம், வித்துவான் வேந்தனார் “வாழும் இலக்கியம்” என்ற தலைப்பில் நிகழ்த்திய பேருரை இது. இப்பேருரை தினகரன் வாரப் பத்திரிகையில் 13.5.1951; 20.05.1951; 27.5.1951; 3.6.1951 & 10.6.1951 ஆகிய ஐந்து வாரங்களும் தொடர்ச்சியாக வெளிவந்திருந்தது.

# 1. மக்கள் வாழ்வை வளம்படுத்தும் சிந்தனை

**சிந்தனா சக்தியில் மலரும் கலை**
**பண்பாட்டால் பக்குவமுற்ற புலமை உள்ளத்தில் உதிக்கும் இலக்கியம்**
**சமுதாயத்தில் அன்பும், அருளும், அறமும் செழிப்பதற்குதவுகின்றது.**

**(யாழ்ப்பாணத்தில் சமீபத்தில் நடைபெற்ற நான்காவது தமிழ் விழாவில் வித்துவான் க. வேந்தனார் நிகழ்த்திய பிரசங்கம்)**

மக்களின் உயிர் உணர்ச்சியொடு கலந்து உருப்பெற்ற கலை இலக்கியம்.

கையினாற் கருத்தை அறிவித்த காலந் தொடங்கி, இன்றளவும் மக்களின் சிந்தனையை வளர்த்து வளர்த்துத் தானும் வளர்ந்துவருங் கலை இலக்கியம்.

ஓர் மக்களினத்தின் வளர்ச்சி வரலாறு அவர்கள் இலக்கியத்தினால் என்றும் நிலைபெறுகின்றது. வாழ்க்கை நிகழ்ச்சிகளும், சூழ்நிலையும், இலக்கியந் தோன்றும் நிலைக்களங்களாக நிலவுகின்றன.

மக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், அவர்களை அடுத்துள்ள சூழ்நிலையினால் வரைவு செய்யப்படுகின்றன. வாழ்க்கை நிகழ்ச்சிகளும் சூழ்நிலையும் பிரிவின்றிச் சேர்ந்த கோலத்தையே நாங்கள் இலக்கியத்தில் காண்கின்றோம். மக்களின் சிந்தனையைத் தூண்டி, அவர்கள் வாழ்விற் புதியபுதிய நோக்கங்களை - இலட்சியங்களைத் தோற்றுவிக்கும் பொறுப்பைச் சூழ்நிலைஏற்றுக் கொள்ளுகின்றது. மக்கள் தமது வாழ்க்கையுடன் சூழ்நிலையை இணைத்துச் சிந்தித்த சிந்தனைகளின் இடையறாத பெருக்கே விலங்கு வாழ்க்கையில் நின்று படிப்படியாக உயர்த்தி இன்றைய வாழ்வளவும் அவர்களை மலர்த்தி வருகின்றது.

இங்ஙனம் சிந்தனையும் மக்கள் வாழ்வில் தோன்றிய சிறந்த அறிவும் இணைந்தபொழுதுதான் மக்களின் வாழ்க்கை வளம்படுகின்றது. வளம் பட்ட வாழ்க்கையில் நிறைந்த கனிவே உயர்ந்த பண்பாடாகும். சிந்தனையும் அறிவும் மேன்மேலும் வளர்ந்து நிரம்பியப் பக்குவமாகி முதிர்ந்து பண்பட்டுத்திருந்திப் பண்பாடாக ஒளி விடுகின்றது. பண்பாட்டின் ஒளி, உயர்ந்த இலக்கியத்தின் உரிப்பொருளாகப், புலமை உளத்திற் பொலிகின்றது. உயிர்ப்பண்பு உயர்ந்த பண்பாடாகத் திருந்தி ஆக்க முறும்போது, உள்ளொளி பெருகுகின்றது. அன்பும் அருளும் அறமும் செழிக்கின்றன. இந்தப் பண்பாட்டைத் தன்புலமை உள்ளத்தினால் முகந்து

உலகம் வாழக் கொடுக்கின்ற, அறிஞனே புது உலகப் படைப்பாளன் - பெருங்காப்பியப் புலவன். புலவனின் பண்பாடும் ஒரு சமுதாயத்தின் - மக்களினத்தின் பண்பாடும் புணர்ந்து அறிவுச்சாயல் வீசும் ஒளி ஒலி மாடமே இலக்கியமாகும். இந்த இலக்கியமே மொழியையும் காலத்தையும் கடந்து முழுமுதற் தன்மைவாய்ந்த உலகப் பொது இலக்கியமாகும்.

உலகப் பொது இலக்கியம், உலகம் உள்ளளவும் நிலைபெறக்கூடிய அறப் பண்புகளைப் பாதுகாத்து வளர்த்து மக்களினத்தில் தன்னலமற்ற வீரர்களை - இலட்சிய புருஷர்களைத் தோற்றுவிக்கும் ஆற்றல்வாய்ந்தது. இப்பேரிலக்கியத்தை - பெருங் காப்பியத்தை ஆக்குகின்ற புலவன் மக்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளில் வைத்தே உயர்ந்த நோக்கங்களை - இலட்சியங் களை உருவாக்குவான். வாழ்க்கைப் போரில் ஏற்படும் இன்பதுன்ப நிகழ்ச்சிகளால் மனந்தளர்ந்து நிலைதிரியாத மக்களின் நோக்கங்களை வாழ்கின்ற மக்கள் வழிவழியாக உணர்ந்து தம்மை ஆக்கிக் கொள்ளுதற் கேற்ற அறிவுத்திறத்தை - சிந்தனைச் செல்வத்தை கூட்டு வாழ்க்கை நிகழ்ச்சிகளில் - சமுதாய வாழ்வில் வைத்து விளக்குகின்றன. ஆற்றல் வாய்ந்த புலமை மிக மேலானது. உலகியற் போக்கைத் தழுவிக் காலவெள்ளத்தில் அள்ளுப்படாது நிலைபெறுகின்ற உயர்ந்த மக்கள் பண்பாடுகளை, மெய்ப்பாடும் விறுவிறுப்பும் உணர்ச்சிக் குமுறலும் ஒன்றோடொன்று அளவிற் கலந்து அலையிடும், அரிய சொல்லோவியப் பாட்டுக்களால் ஆக்கிய இலக்கியங்கள் என்றும் நிலைக்கின்றன - வாழுகின்றன. கருங்கற் பாறைகளை உளியாற் குடைந்து உயிர்உணர்ச்சி நிழலாடும் சிறந்த உருவங்களை ஆக்குகின்ற கற் கொல்லனைப் போல், வாழ்ந்துயர்ந்த மக்களின் வீரப் பண்புகளை - தெய்வத் தன்மைசெறிந்த ஆற்றலை மொழியால் தொடுத்து மேலான உரை ஓவியத்தை - உயிரில் ஊறி ஊறி இனிக்கும் ஒளி நிறைந்த சாகாத இலக்கியத்தை உருவாக்கித் தருகின்றவனே உண்மைப் புலவனாவான் - உலகப் பொதுப் புலவனாவான்.

## தமிழ் மக்களின் இலக்கியம்

பழந்தமிழ் மக்களின் இலக்கியங்கள் - சங்க இலக்கியங்கள் யாவும், மக்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளில் வைத்தே உயர்ந்த நோக்கங்களை நிலைநாட்டுகின்றன. காதல், வீரம் என்னும் தனித்தனிச் சுவைகளை, எளிமை சுருக்கந்தெளிவு முதலிய இயல்புகள் நிரம்பிய பாக்களால் எடுத்து விளக்கும் பண்பு சங்க இலக்கியங்களிற் காணப்படுகின்றன. செயற்கை நலன்களை அளவுக்குமிஞ்சிப் புகுத்தி ஒருசிறிய நிகழ்ச்சியைப் பெரிய கதையாக விரித்துரைக்கும் போக்கைப் பழந்தமிழ் மக்கள்

விரும்பாதவர்கள். வரலாற்றுத் தொடர்பான பெருங்காப்பியங்கள் சங்ககாலத்தில் வழங்கியதாகத் தோன்றவில்லை. தொல்காப்பியர், தொல்காப்பியத்தில் மெய்ப்பாட்டியல் என ஒன்று வகுத்து, அதன்கண் இலக்கியத்தைப் படிக்கும் மக்கள் உள்ளத்தில் தோன்றி, அவர்கள் உடல் உறுப்புக்களை ஏவல்கொள்ளும் ஆற்றல் நிரம்பிய நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை எனும் எண்வகை மெய்ப்பாடுகளையும் எடுத்து விளக்கியிருக்கின்றார். இலக்கி யத்தை ஆக்கிய புலவனின் உள்ளத்துடிப்பை அப்படியே நிழற்படம் பிடித்தாற்போலப் படிக்கின்றவன் உள்ளத்ததிற் பதித்து, உணர்ச்சி கொள்ளச் செய்யும் மேலான உயிர்க் குணங்கள் பல மக்களை - பாத்தி ரங்களைப் படைத்து வெவ்வேறு வகையான சுவைகளை எழுப்புகின்ற பெருங்காப்பியத்திலேயே தோன்றி நிலைபெறக்கூடியனவாகும். ஒருசில பாத்திரங்களைக் கொண்ட சங்க இலக்கியங்களில் தொல்காப்பியர் கூறிய மெய்ப்பாட்டுணர்ச்சிகள் மேலோங்கிப் பொதுமக்களை உணர்ச்சிகொள்ளச் செய்யும் பண்படைக் காண முடியாது. இதனால் தொல்காப்பியர் காலத் திற்கு முன் வரலாற்றுத் தொடர்பான பெருங்காப்பியங்கள் - பலவகையான நோக்கங்களை நிலைநாட்டும் பாத்திர அமைப்புப் பொருந்திய காப்பியங்கள் இருந்து இறந்திருக்கலாமெனத் தோன்றுகின்றது.

பத்துப்பாட்டும் எட்டுத் தொகையுமாகத் தொடுக்கப்பட்ட சங்க இலக்கியங்களில் கூறப்படுகின்ற அக ஒழுக்கங்களும் பிற ஒழுக்கங் களும், பொதுமக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளாகவே காணப்படுகின்றன. உலக மக்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளத்தக்க காதல், வீரம், அறம், அருள், அன்பு முதலிய மக்கட் பண்புகளையெல்லாம் எவ்வளவுக்கெவ் வளவு தூய்மையும் எளிமையும் கொண்ட இயற் சொற்களால் தெளிவாகக் கூறமுடியுமோ அவ்வளவிற்கவ்வளவு நயம்படக் கூறியிருக்கின்றார்கள். காதல் உணர்ச்சியின் மேம்பாடு,

*நிலத்தினும் பெரிதே: வானினும் உயர்ந்தன்று:*
*நீரினும் ஆரளவின்றே; சாரற்*
*கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு*
*பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே*

என்னும் குறுந்தொகைப் பாட்டால் விளக்கப்படுகின்றது. இதில் நிலத்தினும் பெரிது. வானினும் உயர்ந்தது. கடலினும் ஆழமானது. உண்மைக் காதல் என்ற நோக்கம் இலட்சியம் தமிழ் மக்கள் வாழ்வில் ஊறி உயர்ந்த மேம்பாட்டை உணர்கின்றோம். இந்த உண்மைக்காதல் உண்டாகும் இயற்கைப் பண்பை,

*யாயும் ஞாயும் யார் ஆகியரோ?*
*எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?*
*யானும் நீயும் எவ்வழி அறிதும்?*
*செம்புலப் பெயல் நீர் போல*
*அன்புடை நெஞ்சம் தாம்கலந்தனவே!*

எனும் குறுந்தொகைப் பாட்டால் அறிகின்றோம். தலைவனுடைய தாயும், தலைவியினுடைய தாயும் முன்பின் தொடர்பில்லாதவர்கள். தலைவனுடைய தந்தையும், தலைவியினுடைய தந்தையும் முன்பின் தொடர்பில்லாதவர்கள். ஆனால் தலைவன் தலைவியருடைய அன்புடை நெஞ்சங்கள் ஒன்றோடொன்று கலந்துவிட்டன. பயிரிடுதற்குப் பயன்படுத்தி வைத்த செம்புலத்தில் பெய்த மழை நீர்போல, அன்புவாழ்க்கையில் பக்குவமாயிருந்தஇருவர் உள்ளமும் கலந்துவிட்டது. இந்நிகழ்ச்சியைப் படிக்கும் போது உயர்ந்த உண்மையான காதலின் இலக்கணத்தை, வாழ்ந்துயர்ந்த மக்கள் வழிவழியாகக் காப்பாற்றிவரும் சிறப்பை உணர்கிறோம். காதலின் சிறப்பையும், அது உண்டாகும் இயற்கை இயல்பையும், இவ்வளவு தூய்மையாக எடுத்துக்கூறிய இச் செய்யுட்கள் தமிழ் மக்களின் உயர்ந்த காதல் இலட்சியத்தை உலக மக்கள் வரவேற்கின்ற உண்மைக் காதலை நிலைநாட்டுகின்றன. இச்செய்யுட் களாற் கூறிய கருத்துக்கள் மிகமேலானவையாகத் தோன்றினும், வரலாற்றுத் தொடர்பில்லாத சிறிய செய்யுட்களாக அமைந்திருப்பதால், பொதுமக்கள் உள்ளத்தில் சிந்தனையைத் தூண்டி வாழக்கையில் என்றென்றும் எடுத்துப் பேசுமோர் எடுத்துக்காட்டுக் கதையாக விளங்கவில்லை. இங்ஙனமே வீரம், அறம், அருள், அன்பு முதலான மக்கள் பண்புகள் யாவும் சங்க இலக்கியங்களில் தனித்தனியான சிறிய உருவப் பாட்டுக்களால் மிகச் சிறப்பாகச் சொல்லப்படுகின்றன.

இங்ஙனம் சங்ககாலப் புலவர்கள் பொதுமக்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கொண்டே உயர்ந்த பண்பாடுகளைச் செய்யுளில் வெளியிட்டு வந்த மரபே தமிழ் மரபாகும். இத்தமிழ் மரபு தமிழ் மக்களின் அறிவுப் புரட்சியை இன்றளவும் காப்பாற்றிவருகின்றது. முடி மன்னர்களின் வாழ்க்கை வரலாற்றினைத் தெய்வப் பண்புடன் கலந்து விண்ணுலகத் தமிழ்மக்களை வரவேற்றுக் காப்பியம் புனைகின்ற மரபு தமிழ்மரபாகா. மக்களின் அறிவு செயல் விளைவு என்பவற்றைக் கடந்த கற்பனை உலகில் நின்று, தம் புலமையைத் திறையிடுகின்ற பழக்கம் பழந்தமிழ்ப் புலவர்களிடம் கிடையா. இத்தமிழ் மரபுகளையெல்லாம் காப்பாற்றி எழுந்த தமிழ் பெருங்காப்பியம் சிலப்பதிகாரமாகும். தொல்காப்பியர் கூறிய மெய்ப்பாட்

டியற் பண்புகள் முழுதும் நிரம்பிய, முத்தமிழ்ப் பெருங்காப்பியமாகச் சிலப்பதிகாரம் நின்று நிலவுகின்றது. காதல், வீரம் அழுகையெனும் மூன்றும் சிலப்பதிகாரத்தில் மேலோங்கி விளங்குகின்றன. சிலப்பதிகாரப் புகார்க்காண்டத்தில் கோவலனும் மாதவியும் கூடி வாழும் காதற் சுவையும், மதுரைக் காண்டத்தில் கணவனையிழந்த கண்ணகி கண்ணீர் சொரிந்து புலம்பும் அவலச்சுவையும், வஞ்சிக்காண்டத்தில் வஞ்சினங் கூறிச்சென்ற செங்குட்டுவன் வடநாட்டாரைப் போரில் வென்று, கண்ணகியின் உருவமைக்க கல்லெடுத்த வீரச் சுவையும், தனியாட்சி புரிகின்றன. கோவலன், கண்ணகி, மாதவி என்னும் குடிமக்களின் வாழ்க்கை நிகழ்ச்சி களையே, பெருங்காப்பியமாகப் புனைந்து, காப்பிய உலகிற்புரட்சி செய்த, இளங்கோவடிகளின் பெருமை பாராட்டற்குரியது. சங்ககாலத்திற்கு முன் தொட்டு தமிழ்நாட்டில் நிலவிவந்த குடிமக்களின் பெருமையை, இளங்கோவடிகள் வரலாற்றுமுறையில் தொடுத்து ஆக்கிய தமிழ்ப் பெரும்காப்பியமாகிய சிலப்பதிகாரம் நிலைநாட்டிவிட்டது. இங்ஙனம் குடிமக்கள் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அவர்கள் வாழ்ந்து வாழ்ந்து, வருந்தி வருந்தி, மகிழ்ந்து மகிழ்ந்து, அடைந்த இன்ப துன்பப்பயன்களை - இலட்சியப் பண்புகளை, எடுத்துக் கூறுகின்ற இலக்கியந்தான் வாழும் இலக்கியம். வாழும் இலக்கியம் பொதுமக்களை - குடிகளை வாழச் செய்யும். வாழ்கின்ற பொதுமக்கள் அந்த இலக்கியத்தின் பண்பை அறிந்து மகிழ்வார்கள். வாழ்க்கையில் வரும் நெருக்கடிகளால் - தவிர்க்க முடியாத வாழ்வுச் சிக்கல்களால், தோன்றுகின்ற இன்பதுன்பங்களில் அள்ளுப் பட்டுத், தமது பண்பாட்டைப் பறிகொடாத திருந்தியவாழ்வை வாழ அறிந்துகொள்வார்கள். இந்த மரபுபற்றித்தான் பழந்தமிழ் இலக்கியங்கள், மக்கள் வாழ்க்கையை அகம் புறம் என இரண்டாகப்பிரித்து, மிகத் தெளிவாக வாழ்க்கை உண்மைகளை வரைவு செய்திருக்கின்றன.

**தினகரன் 13.5.1951 (ஞாயிறு)**

❍❍❍

# 2. தமிழ் மரபோடெழுந்த தனித் தமிழ்ப் பெருங்காப்பியம்

## வாழ்க்கையின் சூழ்நிலைகளைச் சித்தரிக்கும் குடிமக்கள் இலக்கியம் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாய சிலப்பதிகாரத்தின் தனிச்சிறப்பு

**(நான்காம் தமிழ் விழாவில் நடாத்தியப் பிரசங்கத்தின் தொடர்ச்சி)**

குடிகளின் வாழ்க்கையில் நிகழ்ந்த செய்திகளைக் கூறுகின்ற சிலப்பதிகாரத்தின் அமைப்பு முறை, மற்றைய பெருங்காப்பியங்களின் அமைப்பு முறைக்கு முற்றும் மாறானது.

தமிழிலுள்ள மற்றைய பெருங்காப்பியங்களெல்லாம் பெரிதும் வடமொழியார் மரபைத் தாங்கி நிற்கின்றன. அவற்றின் அமைப்பு முறைகள் யாவும் ஒரு அச்சில் அழுத்தி எடுத்து வேறு வேறு நிறங்கள் தீட்டிய உருவங்களைப்போல் விளங்குகின்றன. கம்பருக்கோர் சூர்ப் பனகை; கச்சியப்பருக்கோர் அசமுகி; கம்பருக்கோர் இந்திரசித்தன்; கச்சியப்பருக்கோர் பானுகோவன்; கம்பருக்கோர் கும்பகர்ணன்; கச்சியப்பருக்கோர் சிங்கமுகன்; கம்பருக்குச் சீதை சிறை; கச்சியப்பருக்குத் தேவர் சிறை என்று இவ்வகை ஒருகாப்பிய நிகழ்ச்சியுடன், மறுகாப்பிய நிகழ்ச்சிகள் கட்டித் தழுவுகின்றன - முட்டி மோதுகின்றன. தண்டியலங் காரத்திலுள்ள பெருங்காப்பிய நிலை போசுங்காலை என்ற நூற்பாவில் இலக்கணத்தைத் தழுவி எழுதப்பட்ட பிற்காலப் பெருங்காப்பியங் களெல்லாம் ஒரேவகையான பாத்திர அமைப்புகள் உள்ள இருப்பு நிலைக்காப்பியங்கள். இம்மரபுகளெல்லாம் இலக்கிய வளர்ச்சிக்குச் சிறிதும் பயன்படாதவை. இலக்கிய வரலாற்று உணர்ச்சிக்குத் தான் ஒரள விற்கு இம்மரபுகள் உதவுகின்றன.

இத்தகைய மரபுகளைத் தழுவிவரும் காப்பியங்களில் இடம்பெறு கின்ற இலட்சியப் பாத்திரங்கள் ஒரே தன்மை உள்ளனவாகவே என்றும் விளங்கும் இயல்புடையன. அக்காப்பியங்களின் ஒழுங்கின்படி எவரும் இலட்சிய பாத்திரங்களை அமைத்துவிடலாம். மக்கள் இயற்கைக்கு முற்றும் முரணான பண்புகள் நிரம்பிய, தெய்வத் தலைமக்களை, இலட்சிய பாத்திரங்களாக அமைத்துக் காப்பியஞ் செய்யும் முறை, வாழும் இலக்கியத்தின் மரபுகளைக் - குடிமக்கள் இலக்கியத்தின் அமைப்பு முறைகளை அழிவுபடுத்துஞ் செயலாகும். சிலப்பதிகாரம், வடமொழியார் காப்பிய அமைப்பைத் தழுவாது, தமிழ் மரபோடொழுந்த தனித்தமிழ் பெருங்காப்பியம் - குடிமக்களின் பெருங்காப்பியம். உலக இயல்போடு

ஒத்து, மக்கள் உளப்போக்குக்கு அமைந்து, சமுதாய நிலைக்கேற்றவாறு சூழ்நிலையைத் தழுவி உயிரோடுகலந்த உணர்ச்சி நிலைகள் – ஆத்ம நிலைகள் வெளித்தோன்றுமாறு, அமைக்கப்பட்ட பாத்திரங்களைக் கொண்ட பெருங்காப்பியமாகச் சிலப்பதிகாரம் விளங்குகின்றது.

## சிலப்பதிகாரத் தலைமக்கள்

கோவலனும் கண்ணகியும் சிலப்பதிகாரத்தின் தலைமக்கள். அவர்கள் விண்ணுலகைத் துறந்து மண்ணுலகைக் காப்பாற்றத் தோன்றிய தெய்வங்களல்ல. எங்களைப் போல் அவர்கள் மண்ணுலக மக்களேயாவர். அவர்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளைக் கொண்டே சிலப்பதி காரம் ஆக்கப்பட்டது. சிலப்பதிகார ஆசிரியராகிய இளங்கோவடிகள் திடீரென விண்ணுலகத்திற்குப் பறந்து சென்று, மண்ணுலகை நோக்கு கின்றமின்வெட்டுப் புலவரல்லர். அவர் மண்ணுலக மக்களுடன் நன்கு பழகி, அவர்கள் வாழ்க்கையில் நிகழும் உண்மை நிகழ்ச்சிகளின் துணைகொண்டு, விண்ணுலகினை நோக்குகின்ற இயற்கைப் புலவர் – பழந்தமிழ்ப் புலவர். இளங்கோவடிகள் தமது காப்பியத்தில் மேற்கொண்ட புதிய முறைகள் – தமிழ் மரபு திறம்பாத காப்பியப் பண்புகளெல்லாம் புலவர்க்கோர் புதுவிருந்ததாகும். சிலப்பதிகாரக் காப்பியத்தின் உரிப் பொருள் நிலைக்களன் இசைத் தமிழுடன் இணைந்து செல்கின்றது. இளங்கோவடிகள் ஆங்காங்கு இசையரங்குகளமைத்து, இசைத் தமிழ் நிலைக்களனை மேம்படுத்திச் செல்கின்றார். இதனைக் கானல்வரி, வேட்டுவரி, ஆச்சியர் குரவை, குறைக்குரவை, அம்மானவரி, கந்துகவரி, ஊசல்வரி என்னும் பகுதிகளை நோக்கி உணர்க. இவ்விசையரங்கு களிலெல்லாம் அவ்வத்துணை மக்களின் வாழ்க்கை முறைகள் நன்கு விளங்கப்படுகின்றன. முதல் கருஉரி எனும் பொருட்பாடுகளும், பிறவும் மிகத் திறம்பட அமைந்து அணிசெய்கின்றன.

## சிறந்த இலக்கியப்பண்புகள்

சிலப்பதிகாரம் கற்பையும் அறத்தையும் ஊழ்வினையின் செய லையும் காப்பாற்றும் நோக்கத்தை – இலட்சியத்தை நிலைநாட்டுகின்றது. இதனை

*அரைசியல் பிழைத் தோர்க்கறங் கூற்றாவதூஉம்*
*உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்*
*ஊழ்வினையுருத்துவந் தூட்டும் என்பதூஉம்*
*.................. நாட்டிதும் யாமோர் பாட்டுடைச்செய்யுள்*

என்னுஞ் சிலப்பதிகாரப் பதிகத்தால் அறிக. சிறந்த இலக்கியப் பண்பு களாகிய கலையழகு, குறிப்பாற்றல், நிலைபேறு, உலகப் பொதுமை, புலவனின் உயிரியல்பு - நடை என்னும் இவைகளெல்லாம் சிலப்பதி காரத்தின் சிறப்பை மேம்படுத்துகின்றன - வாழும் இலக்கியமாக வளம் படுத்துகின்றன. இலக்கியத்திற் கருக்கொள்ளும் பொருள், மொழியையும் காலத்தையும் கடந்த அறப்பண்பால் உலகத்தை ஆக்குகின்றன - உலக மக்களின் உயிர்வுணர்விற் கலந்து மறுபிறப்பெடுக்கின்றன. கோவலனைப் பிரிந்த கண்ணகி, தான் தலைவனைப் பிரிந்திருந்த செயலால் அடைந்த துன்பங்கள் யாவற்றினும் மேலான துன்பமாக, இல்லறப் பயன் எய்தாத செயலை எடுத்தியம்புகின்றாள். அன்பும் அறனும் கனிந்து பண்பும் பயனும் பெருக வாழ்கின்ற வாழ்வை மறந்தேன் என வருந்துகின்றள். தலைவனுடன் கூடிவாழுமின்பத்தினும் தலையான இன்பம் இல்லிருந்து நல்லோரை ஓம்பலே யெனக் கண்ணகி நவில்கின்றாள். இதனை

*அறவோர்க்களித்தலும் அந்தண ரோம்பலும்*
*துற வோர்க்கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்*
*விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை*

எனவரும் பகுதியால் அறிக. தன் தலைவனாகிய கோவலன், தன்னை மறந்து மாதவியுடன் தங்கியிருந்த துன்பத்திலும்,அறவோர்க்களித்தல், அந்தணரோம்பல், துறவோர்க் கெதிர்தல், தொல்லோர் சிறப்பின் விரிந் தெதிர் கோடல் என்னும் சிறந்த அறங்களை ஆற்றமுடியாத நிலையை அடைந்த துன்பம் கண்ணகியின் உயிரை வாட்டுகின்றது. இல்லறத்தில் இருந்து ஆற்றவேண்டிய அறங்களைத், தலைவனைப்பிரிந்த தன்மை யால் தனித்திருந்தும் ஆற்றும் வழக்கம் தமிழ்நாட்டில் இல்லை. கண்ணகியின் குரலில் மறந்த என்னை எனக்கேட்குஞ் சொல், உலக முழுவதும் வரவேற்கின்ற வாழ்க்கைப் பண்பை வலியுறுத்துகின்றது. காதலர் இருவர் கூடி வாழும் இல்லறம், அறத்தையும், அறவோரையும், அறிவுத்துறவோரையும், விருந்தினரையும் ஆதரித்து மகிழும் பெரு வாழ்வு என்னும் நோக்கத்தை - இலட்சியத்தை கண்ணகியின் குரலால் இளங்கோவடிகள் எமக்குக் காட்டுகின்றார். தொல்லோர் சிறப்பின் விரிந் தெதிர் கோடல் என்னும் பாட்டடியால் “செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத்தவர்க்கு” எனவரும் வள்ளுவர் நோக்கம் மறுமலர்ச்சி பெறுகின்றது. வழி வழியாக விருந்தோம்பி மகிழும் தமிழ் மக்களின் வாழ்க்கை இலட்சியம் வையகத்தோர் போற்றும் தெய்வச்சாயல் மருவுகின்றது. கண்ணகி கூற்றாகவரும் இச்செய்யுள் அடிகளிற் றோன்றுங் குறிப்பாற்றல், இல்லறத்தின் ஏற்றத்தையும் அதனாற்

புரக்கப்படுகின்ற நல்லறச் செயல்களையும் நம் உயிர் உணர்விற் கலந்து ஒளிரச்செய்கின்றது. செய்யுட் பகுதி கண்ணகி கூற்றாகவிருந்தாலும், செய்யுள் தமிழ் மொழியிலேயே எழுதப்பட்டிருந்தாலும், கதை நிகழ்ச்சி சேரன் செங்குட்டுவன் காலத்தில் நிகழ்ந்ததாயிருந்தாலும், செய்யுளிற் கூறப்பட்ட கருத்துக்கள், மொழியையும் காலத்தையும் கூறிய பாத்திரத் தையுங் கடந்து, அப்பாலுக்கப்பாலாய்ச்சென்று, உலகப் பொதுக் கருத்தாக நிலவுகின்றன - சாகாத கருத்தாகத் தழைக்கின்றன.

## அறத்தின் ஆற்றல்

மென்மையான பெண்ணியல்புகள் நிரம்பிய கண்ணகி, அறத்தின் ஆற்றலிற் கலந்து அழிப்புக்கோலங் கொள்கின்றாள். மக்களுள் வணிகர் குலத்திற் பிறந்து, தன்னை வாழ்க்கைத் துணையாகக் கொண்ட கணவனைப்பிரிந்து வாழ்ந்து கவலையுற்ற கண்ணகி, கணவனின் துயர் நீக்கக்கருதிக் காட்டுவழியில் நடந்து களைப்புக் கொண்ட கண்ணகி, முடியுடைப் பெருவேந்தனாகிய பாண்டியன் தன் கணவனைக் கள்வ னெனப் பொய்க் குற்றஞ்சாட்டிக் கொல்வித்த செயலைக் கேட்டதும் கொதித்தெழுகின்றாள். அறங்கெட்ட மன்னனின் ஆட்சிநிலையை அறிந்ததும் ஆவி துடிக்கின்றாள். மென்மைகனிந்த பெண்மை நிரம்பிய கண்ணகியின் உள்ளம், வெந்து வெடித்து வன்மையடையும் நிலையை யடைந்த செயல் ஆராய்தற்குரியது. அநீதியைக் கண்டதும் அஞ்சி ஒடுங்கும் பண்பு, பெண்கள் வாழ்விலும் நிகழாது என்ற உண்மையை நிலைநாட்டுகின்றாள் கண்ணகி. அறத்தெய்வம் கண்ணகியின் ஆவியிற் கலந்து "என்பிலதனைவெயில் போலக்காயுமே அன்பில தனை அறம்" என்ற வள்ளுவர் நோக்கத்தை வாழ்விக்கின்றது. வேட்டுவவரியில் கொற் றவை வழிபாட்டை நாட்டிய இளங்கோவடிகள், அறந்திரிந்த காலத்து ஆற்றல் நிரம்பிய ஆண்மைக் கோலத்தை - அழிப்புக் கோலத்தை அறத்தெய்வம் - தாங்கி அழிக்கும் என்னும் உண்மையைப் பெண்மையில் வீரக்கனல் செறிந்து மறத்தை வீழ்த்தும் என்ற கொள்கையைக் காட்டுகின் றார். அறத்தைப் பாதுகாக்க அன்புப்பெண் தெய்வம், அழிப்புக் கோலங் கொள்ளும் கொள்கையைக் கொற்றவை வழிபாடாக வைத்து - அம்மையப்பர் கோலத்தில் வைத்துப் பாராட்டும் பண்பு தமிழரின் வழிவழிவந்த பழ மரபாகும். கண்ணகியின் ஆண்மைக்கோலம் - வீரப் புரட்சி பெண்ணினத்திற்கு உலகம் அளிக்க வேண்டிய பெருமதிப்பை வலியுறுத்துகின்றது.

*நறைமலிவியன் மார்பின் நண்பனை இழந்தேங்கித்*
*துறைபல முறைமூழ்கித் துயருறு மகளிரைப் போல்*

*மறனொடு திரியுங்கோல் மன்னவன் தவறிழைப்ப*
*அறனெனும் மடவோய்யான் அவலங்கொண்டழிவலோ*

எனக் கணவனையிழந்த கண்ணகி அறத்தெய்வத்தைக் கேட்கின்றாள். அறனெனும் மடவோய் என, வீரமும் எழிலும் கனிந்த இளமைக்கோலங் கொண்ட பெண்ணாகக் கருதி அறத்தெய்வத்தை அறைகூவி அழைக்கின் றாள். அறனெனும் மடவோய் என்ற குரலின் எழுச்சி, முக்கால உலகத் தையும் கடந்து ஒலிக்கின்றது. அறத்தின் ஆற்றல் அழிந்துவிட்ட தாவெனக் கேட்கின்றாள். வணிகர் குலத்துக் கண்ணகி, வான உலகில் நின்று மண்ணுலகிற்கு எழுந்தருளாமல், மண்ணுலகிலேயே பிறந்து வாழ்ந்த கண்ணகி அறங்கெட்ட மன்னவனின் அநீதியைக் கண்டு பொறுக்காமல் அறத்தெய்வத்தைக் கூவியழைத்து, அறத்தைப் பாதுகாக்கவேண்டுமென ஆணையிடுகின்றாள். அறத்தெய்வத்தின் சாயல்மருவி அழிப்புக்கோலங் கொள்கின்றாள்.

*மன்பதை அலர் தூற்ற மன்னவன் தவறிழைப்ப*
*அன்பனை இழந்தேன் யான் அவலங்கொண்டழிவலோ*

எனக் கண்ணகி ஓலமிடுகின்றாள். கள்வனின் மனைவியென்று உலக மக்கள் என்னை இகழ்ந்துரைக்க அறத்தைப் போற்றும் மன்னவன், அறத்திற்கு மாறான அநீதியைப் புரிய, யான் இவற்றினால் தாக்குண்டு அவலமுறுவதோ என அறத்தெய்வத்தைக் கேட்கின்றாள். அறத்தில் மன்னவன் தவறிவிட்டான், ஒன்றுமறியாத தன் கணவன் மேற் கள்வ னெனப் பழிசுமத்திக் கொன்றுவிட்டான், என்பவற்றை எண்ண எண்ணக் கண்ணகியின் உள்ளம் வேகின்றது. உலக மக்கள் என் கணவனைக் கள்வனெனப் பழிதூற்றுவார்களேயென எண்ணும்பொழுது, அவள் உயிரே உருகிவிடுகின்றது. இங்ஙனம் அறத்தின் வீழ்ச்சியைக் கண்டு, மன்னனின் அநீதியைக் கண்டு, உயிர்துடித்துக் கண்ணகி ஓலமிட்ட குரலால், உலகம் முழுவதும் போற்றும் அறம் உயிரொளி பெறுகின்றது. அறம் அழிவதைப் பொறாத பெண்மையுள்ளம், ஆண்மை அனலைச் சொரியும் ஆற்றலை அடைந்து அறத்தைப் புரக்கும் என்ற உண்மையை - உலகம்போற்றும் உயரிய கருத்தை கண்ணகியின் வாழ்வு காட்டி விட்டது.

## ஊர்மக்கள் உள்ளத்திற் புரட்சி

வாழும் இலக்கியம் பொதுமக்கள் உள்ளத்தில் சிந்தனையை எழுப்பிப் புரட்சிசெய்யும். மன்னவன் பாண்டியன், கண்ணகி கணவனைக் கள்வனெனக் கொன்ற செயலை - அறத்திற்கு மாறுபட்ட அநீதியைக் கண்ட பாண்டிநாட்டு மக்கள் உள்ளந் துடிக்கின்றார்கள். இப்பகுதியை

இளங்கோவடிகள் ஊர் சூழ்வரியில் உரைக்கின்றார். நீதியையும் அநீதியையும் பொதுமக்கள் உணரவேண்டும். மன்னனின் ஆட்சி அறத்தைப் பாதுகாவாது அநீதிவழிச் சென்ற செயலை அவன்கீழ் வாழும் குடிகள் உணர்ந்து கொதிக்க வேண்டுமென்ற கொள்கையை இளங்கோவடிகள் எடுத்தியம்புகின்றார். இதனை

*அல்லலுற்றாற்றா தழுவாளைக் கண்டேங்கி*
*மல்லல் மதுரையா ரெல்லாருந் தாமயங்கிக்*
*களையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி*
*வளையாத செங்கோல் வளைந்ததிது வென்கொல்*
*மன்னவர் மன்னன் மதிக்குடை வாள்வேந்தன்*
*தென்னவன் கொற்றம் சிதைந்ததிது வென்கொல்*
*மண்குளிரச்செய்யு மறவேல் நெடுந்தகை*
*தண்குடை வெம்மை விளைத்ததிது வென்கொல்*
*செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம்பொருட்டால்*
*வம்பப் பெருந்தெய்வம் வந்ததிது வென்கொல்*
*ஐயரியுன்கண் அழுதேங்கி யரற்றுவாள்*
*தெய்வமுற்றாள் போலுந் தகையளிது வென்கொல்*

எனவரும் செய்யுட் பகுதியாலுணர்க. உயர்ந்த இலக்கியம் - என்றென்றும் நிலைபெற்றுவாழும் இலக்கியம் பொதுமக்களினத்தை - சமுதாயத்தை விழித்தெழச் செய்யவேண்டும். சிந்திக்கச் செய்ய வேண்டும். அவர்கள் உள்ளத்தில் கோபம், வெகுளி, அழுகை முதலிய சுவைகளை எழுப்ப வேண்டும். பொதுமக்களுக்கும் அந்த இலக்கியம் சிறப்பைக் கொடுக்கும் பொழுது தான் மீண்டும் மீண்டும் பிறக்கின்றது. மறுபிறப்பெடுக்கின்றது. பொதுமக்களைத் தலைமக்களாகக் கொண்டு பெருங்காப்பியஞ் செய்த இளங்கோவடிகள் ஆட்சி செய்யும் மன்னவன் அறத்தை மறந்து செய்யும் அநீதிச் செயலை அறிந்து புரட்சி செய்யும் உரிமையையும் பொதுமக்களுக்களிக்கின்றார். களையாத துன்பமிக்காரிகைக்குக் காட்டி வளையாத செங்கோல் வளைந்தது இது என்கொல் என்னும் பாட்டடிகள் படிக்கின்றவர் உள்ளத்திற்றன்மறதியை எழுப்பும் பண்பாட்டுடன் பொலிகின்றது. மன்னவன் எந்த வகையிலும் தவறமுடியாத பெருங்குற்றத்தை - களையாத துன்பத்தை இக்காரிகைக்கு - கண்ணகிக்குக் காட்டி வளையாத செங்கோல் வளைந்தது என்னும் கொள்கை, அறத்திற்குப் பணிய வேண்டுமென்ற முடிவை நிலைநாட்டுகின்றது.

*வாயிலோயே வாயிலோயே*
*அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து*

*இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே*
*இணையரிச் சிலம்பொன்றேந்திய கையள்*
*கணவனையிழந்தாள் கடையகத்தாளென்று*
*அறிவிப்பாயே அறிவிப்பாயே*

என வருங் குரலில், ஓர் முடி மன்னனின் அநீதியைக் குடிமக்களுள் ஒருத்தியாகிய கண்ணகி - கணவனையிழந்த கண்ணகி - ஆதரவு ஒருவருமற்ற அயல்நாட்டுப் பெண்ணாகிய கண்ணகி எதிர்த்துப் புரட்சி செய்யும் வீரத்தைக் காண்கின்றோம். மன்னவன் அறத்திற்றவறிவிட்டா னெனக் கண்ணகி எழுப்பிய குரலைக் கேட்டதும், அம்மன்னவன் ஆட்சியின்கீழ் வாழும் குடிமக்கள் எல்லோரும் கண்ணகியைச் சூழ்ந்து அவளை ஆதரித்துத், தன் மன்னவன் அறத்திற்றவறிய செயலை ஒப்புக்கொள்ளும் உரிமை உணர்ச்சியை - அறத்தைப் பாதுகாக்கும் ஆற்றலைக் காண்கின்றோம். மக்கள் வாழ்க்கையோடு சிலப்பதிகாரக் கொள்கை எழில்பெறுகின்றது - என்றென்றும் வாழ்கின்றது. குடிமக்களின் நல உரிமைகளைப் பாதுகாக்கின்றது. இதுதான் வாழும் இலக்கியம் - மக்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கொண்டே மக்களைச் சிந்திக்கச் செய்யுமிலக்கியம். வள்ளுவரின் திருக்குறள் வையத்தார் உள்ளுவதெல் லாவற்றையும் உரைக்கும் அறநூலாகத் திகழ்கின்றது. இளங்கோவடி களின் சிலப்பதிகாரம் வள்ளுவரின் அறநூற்கருத்தை வரலாற்றுமுறையிற் றொடுத்து ஆக்கிய குடிமக்கள் இலக்கியமாகத் திகழ்கின்றது.

**தினகரன் 20.05.1951 (ஞாயிறு)**

❍❍❍

# 3. கம்பனின் இலக்கிய பாத்திரங்கள்

**(நான்கம் தமிழ் விழாவில் நடத்திய பிரசங்கத்தின் தொடர்ச்சி)**

கம்பனின் காப்பியத் தலைமக்கள் தெய்வத் தலைமக்கள். அவர்களின் அறிவு விளைவு செயல்களெல்லாம் தெய்வப் பண்புடன் கலந்துவிடு கின்றன.

இராமனைத் திருமாலின் பிறப்பாகவே துணிந்து கம்பர் பாராட்டு கின்றார். சீதை திருமகளாகவே கம்பர் உளத்திற்காட்சியளிக்கின்றாள். இராமனும் சீதையும் கம்பனின் புலமை ஆற்றலாற் படைக்கப்பட்ட தெய்வத் தலைமக்கள். கம்பர் இராமனை முழுமுதற் கடவுளாகவே காண்கின்றார். அறநெறிகளும் நான்மறைகளும் இராமன் ஆணையைக் கடக்க அஞ்சுகின்றன - ஏவல் கேட்கின்றன எனக் கூறி ஆர்வம் அடை கின்றார். இத்துணை விழிப்புடன் கம்பர் ஏன் தனது காப்பியத்தலைவனை நடத்திச் செல்கின்றாரென ஆராய்ந்தால், பெருங்காப்பியத் தலைவன் தன்னிகரில்லாத் தலைவனாகவே விளங்க வேண்டுமென்ற இலக்கணத் திற்குக் கம்பர் அஞ்சி அடங்குகின்றார் என்பதை அறியலாம். இத்தகைய தெய்வத் தலைமக்களை அழைத்துப் பெருங்காப்பியஞ்செய்கின்ற புலவர்கள் தேவர் உலகத்திலேயே வாழ்கின்றார்கள். மண்ணுலகத்திலுள்ள மக்களுடன் அவர்கள் கலந்துரையாடும்பொழுதும், தேவர்கள் வானத்தில் நிறைந்துவிடுவார்கள். உள்ளோந் தலைவனாக உலகில் நிகழ்ந்த உண்மை வரலாற்றை மக்களுள் நிகழ்ந்த வரலாற்றைத் துணைக்கொண்டு பெருங்காப்பியமியற்றுவதை அவர்கள் விரும்பார்கள்.

கம்பர் கையாண்ட பாத்திரங்களுள் தெய்வத் தன்மைமிகவும் விரவாத வகையில் வைத்துப் பேசும் பாத்திரங்களின் செயல்கள் எம் உள்ளத்தைத் தொடுகின்றன - எங்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளிற் புரட்சியை உண்டாக்குகின்றன. ஒரு சிலர் தெய்வத் தன்மை நிரம்பிய பாத்திரங்களை வைத்துச் செய்கின்ற இலக்கியத்தில் உயர்ந்த இலட்சிய வீரர்களைப் படைத்து மக்கள் உள்ளத்தை வளர்க்கலாம். மக்களினத்திற்கு - சமுதாயத் திற்கு என்றும் எட்டமுடியாத பண்பாடுகளை இலட்சிய வடிவங்களாகிய பாத்திரத்திற் புலவனால் அமைக்க முடியுமென்றும் அந்த அமைப்பு முறை இலட்சிய நாட்டத்தை மக்கட்கு உண்டாக்குமென்றும் கருதுகின் றார்கள். இங்ஙனம் உயர்ந்த தெய்வப் பாத்திரங்களைப் பற்றிய அமைப்பை ஆராய்ந்து சொல்லும்பொழுது இனிமையாகவிருந்தாலும் வாழுகின்ற பொது மக்களுள்ளத்தில் அவர்களால் அடைய முடியாத குணச்சிறப்பு

களைக் கொண்ட தெய்வ பாத்திரங்களை - தெய்வத் தலைமக்களை இடம்பெறச் செய்தல் முடியாத தொன்றாகும். இராமனின் வீரத்தைப் பார்க்கினும் வாலியின் வீரந்தான் மக்களுளுத்தைக் கவரக்கூடியது. இராமனையே வழிபடு கடவுளாகக் கொண்டு காப்பியம் அமைத்த கம்பர் தன்னை அறியாமலே தன் உயிர்ச்சாயலில் ஊறிய நோக்கத்துடன் கலந்து இராமனை மறந்துவிடுகின்றார். ஒரு பெருங்காப்பியத்தைப் பல ஆயிரம் பாட்டுகளாற் பாடுகின்ற புலவனின் உள்ளம் அவனை அறியாமலே அவன் உணர்ச்சியோடு ஒத்த செயல்களை அல்லது அவன் உணர்ச்சிக்கு மாறுபட்ட கொள்கைகளைப் பாடும்பொழுது தன் நோக்கத்தை அழுத்த மாக வெளிப்படுத்திவிடும்.

## கம்பனின் உள்ளம்

உணர்ச்சியால் விழுங்கப்பட்ட உள்ளம் வரம்புகளைக் கடந்து நின்று இதயநீதியை நிலைநிறுத்தும். மற்றவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட அல்லது வெறுக்கப்பட்ட நோக்கங்கள் என எண்ணுவதை உதறித்தள்ளிப் புதுப்புதுச் செய்திகளை - புரட்சியான கருத்துக்களைப் படைத்து அளிக்கும். இராமனைக் கடவுளாக வைத்துப் போற்றிய கம்பனின் உள்ளம் வழிவழியாக வீரமக்கள் வாழ்க்கையில் நிலைபெற்று வந்த அறத்தை நினைத்தவுடன் மாறிவிட்டது. கட்டுப்பாட்டிற்கடங்காது கடமையைச் செய்ய முற்பட்டுவிட்டது. இந்த நிலையிற்றான் கம்பன் மக்கள் உள்ளத்தைக் கொள்ளையடிக்கின்றான். பொதுமக்களை நீதிகேட்கின்றான். மறைந்திருந்து பாணந்தொடுத்து வாலியைக் கொன்ற செயல் வையம் உள்ளளவும் இராமன் புகழை மாசுபடுத்தும் என்ற வாய்மையைக் கம்பன் உணர்ந்துவிட்டான். இராமனிடத்தில் தவிர்க்க முடியாத தவறுதலைக் கண்டுவிட்டான். மக்களுள் மிகமிகக் கீழ்ப்பட்ட நிலையில் உள்ள ஒருவனாக இராமனைக் காண்கின்றான். வாலியின் ஆவியோடு கலந்து கம்பன் எழுப்புகின்ற அறத்தொடு கலந்த ஆண்மைக் குரலைக் கேளுங்கள்.

*வீரமன்று வீதியன்று மெய்ம்மையின்*
*வாரமன்று நின் மண்ணினுக் கென்னுடல்*
*பாரமன்று பகையன்று பண்பொழிந்*
*தீரமன்றிது வென்செய்த வாறுநீ.*
*மற்றொருத்தன் வலிந்தறை கூவவந்*
*துற்றவென்னை யொளித்துயி ருண்ட நீ*
*இற்றதன் பின், இகல் அரி எறு என*
*நிற்றிபோலும், கிடந்த நிலத்து அரோ*
*நூல் இயற்கையும், நும் குலத்து உந்தையர்*

*போல் இயற்கையும், சீலமும் போற்றலை*
*வாலியைப் படுத்தாய் அலை, மன்அற*
*வேலியைப் பிரித்தாய் – விறல் வீரனே*

இதில் கம்பனுடைய உயிர்ச்சாயல், ஆண்மை இயல்பு ஆட்சி புரிகின்றது. அறம், கடமை, நேர்மை, வீரம் என்னும் உணர்ச்சிகள் அலை மோதுகின்றன. காக்கின்றன. 'உன் மண்ணிற்கு என் உடல் பாரமன்று' என வாலி கூறும் சொல்லில் நேர்மை புரக்கப்படுகின்றது. 'என்னை ஒளித்து உயிர்உண்ட நீ, இற்றதின் பின் இகல் அரிஎறு என நிற்றிபோலும் கிடந்த நிலத்து அரோ' என்னும் அடிகள் வீரமற்ற நின்னை, முன்பின் உனக்குப் பழக்கமில்லாத ஒருவனை ஒளித்து உயிருண்ட நின்னை வெற்றி மிக்கவன் என்று இந்த உலகம் ஒப்புக் கொள்ளுமோ? என அறத்தோடு கலந்த நீதியை வாலி வலியுறுத்துகிறான்.

*வாலியைப் படுத்தாய் அலை, மன் அற*
*வேலயைப் பிரித்தாய் விறல் வீரனே*

என்ற அடிகளைப் படிக்கும்போது, கம்பன் இராமனை எவ்வளவுக் கெவ்வளவு இகழ்த்துரைக்கின்றான் என்பதை நாங்கள் உணர்கின்றோம். மறைந்திருந்து பாணம் செலுத்தி வாலியாகிய தன்னைக் கொன்ற செயலினால், தன் வீரம் அழியவில்லை என வாலி வலியுறுத்துகிறான்.

நேருக்கு நேர் நின்று தன்னை வெல்லாமல், ஆளுக்குத் தெரியாமல் மறைந்து நின்று அம்பு தொடுத்து தன்னை வீழ்த்திய செயலை வாலி எள்ளி நகையாடுகின்றான். 'வாலியைப் படுத்தாய் அலை' என்ற சொல், ஊழி ஊழி நிலைபெறக்கூடிய வீரப்பண்பைப் பொதுமக்கள் உள்ளத்தில் வித்திட்டுவிட்டது. மானமிக்க, வீரவேந்தர்க்குரிய போரொழுங்கை, மக்கள் வாழ்வில் வழிவழியாக நிலைபெற்று வந்த அறப்பண்பு கலந்த வீரத்தை அழித்துவிட்டாய். 'மன் அற வேலியைப் பிரித்தாய்' இச்செயல் வீரமல்ல என வாலி விளம்புகின்ற நயத்தால், வழிவழிவந்த மன்னர் குலப்போர் நெறி, அறப்போர் ஒழுங்குகள் மறுமலர்ச்சி பெறுகின்றன.

*வாலியைப் படுத்தாய் அலை, மன் அற*
*வேலியைப் பிரித்தாய் விறல் வீரனே*

மன்னர்க்குரிய அறத்தின் வேலியை அழித்த இராமனைக் கம்பன் மக்களுள் ஒருவனாக வைத்து வாய்மை கூறும் பொழுது தான் எங்கள் உள்ளம் மகிழ்கின்றது. தெய்வமாகக் கம்பன் உள்ளத்தில் திகழ்ந்த இராமன், வையத்துள் வாழும் மக்களுள் ஒருவனாக, தன் வீரத்தை மாசுபடுத்தி

நிற்கும் பொழுதுதான், மக்கள் உள்ளம் உணர்ச்சி கொண்டு, அவன் செயலை உள்ளத்திற் பதிக்கின்றது, சிந்திக்கின்றது.

உமது வீரம் மறைந்து நின்று, நிராயுதன் மார்பில் பாணம் விடுவதில் உள்ளதோ என் வாலி கேட்கின்ற கேள்வி, எங்கள் உள்ளத்தைக் கொதிக்கச் செய்கின்றது. இராமனின் வீரமற்ற செயலை எண்ணி எண்ணி நகைக்கச் செய்கின்றது. நாணச் செய்கின்றது.

*தாரம் மற்று ஒருவன் கொள, தன் கையில்*
*பார வெஞ்சிலை வீரம் பழுதுற*
*நேரும் அன்று, மறைந்து நிராயுதன்*
*மார்பின் எய்யவோ, வில் இகல் வல்லதே?*

இப்பாட்டடிகளில் நிழலாடும் குறிப்பாற்றல் எங்கெங்கோவெல்லாம், எம் உள்ளத்தை ஏற்றியும், இறக்கியும் பந்தாடுகின்றது. வல்லதே என்ற சொல்லின் ஒலி, உயிர் உணர்விற் புதிய சாயலைத் தீட்டிச் சிந்தனையைத் தூண்டுகின்றது. இதனாற் கம்பன் இராமனைத் தெய்வமாக வைத்து பாராட்டுவதிலும் பார்க்க, மக்களுள் ஒருவனாக வைத்து மதிக்கும் பொழுது, அறத்தில் தவறிவிட்டான் என அவனை இடித்துக் கூறும் பொழுது, எங்கள் உள்ளத்தில் எழுகின்ற உணர்ச்சி அலைகள், எம் சிந்தனையைச் சிறை கொள்கின்றன. வாழ்க்கையில் புதிய புரட்சிப் போக்கை மலர்த்துகின்றன. வாழும் மக்கள் உள்ளப் போக்குடன் மருகக் கூடிய நிகழ்ச்சிகள், இலக்கியத்தில் தோன்றும் பொழுதுதான், அதனைப் படிக்கின்ற மக்கள் விழிப்படைகின்றார்கள். அந்த இலக்கியமும் செழிப்படைகின்றது, வாழ்கின்றது. இராவணனை இராமன் கொன்ற செயலிலும், வாலியை இராமன் கொன்ற செயல் பற்றிய நிகழ்ச்சிகள், பொதுமக்கள் உள்ளத்தில் நன்கு பதிந்துவிட்டன. இப்பதிவுக்குக் காரணம், கம்பனின் உயிர்ச்சாயல், மக்களுள் ஒருவனாக வைத்து இராமனை மதிக்கும்போது, தன்மறதிப் பண்பாக அவருட்பட்டவுடனே, உணர்ச்சி நிலையின் உச்சியினை ஏறிச் சென்றதேயாகும். ‘இன்று போய் போர்க்கு நாளை வா’ என்ற தெய்வராமன் செயலினும், மறைந்திருந்து வாலிமேற் பாணம் தொடுத்த மனித இராமனின் செயல், மக்கள் உள்ளத்தில் பதிந்த காரணத்தை ஒருவாறு உணர்ந்தோம்.

**தினகரன் 27.5.1951 (ஞாயிறு)**

❍❍❍

# 4. கும்ப கர்ணனின் நன்றிக்குரல்

**(நான்கம் தமிழ் விழாவில் நடத்திய பிரசங்கத்தின் தொடர்ச்சி)**

அண்ணனின் அநீதியைக் கண்டு இராமரிடம் அடைக்கலம் புகுந்த விபீடணனை அறத்தைப் பாதுகாக்கும் அறிஞனெனப் போற்றிக் கம்பர் பாராட்டுகின்றார். தன்னிகரில்லாத் தெய்வத் தலைவனாகிய இராமரின் திருவருளால் அந்தமில் இன்பத்து அழிவில் வீடெய்தும் சிந்தனையாள னாகச் சிறப்பித்து விபீடணனைக் கம்பர் மிகமேம்பாடாக உரைக்கும் பகுதிகள் பல இராமாயணத்திற் காணப்படுகின்றன. இங்ஙனம் விபீடண னைத் தெய்வத்தன்மை நிரம்பிய செம்புலச் செல்வனாகக் கம்பர் பாராட்டி உரைக்கும் பகுதிகள் படிக்கின்ற மக்கள் உள்ளத்தைக் கவரும் பண்பு வாய்ந்தவைகளல்ல. தெய்வ இராமனைச் சேர்ந்து விபீடணன் தெய்வமா னானெனச் செப்பும்பொழுதும் மக்களின் சிந்தனை சிறைப்படுத்தப்படு கின்றது - எல்லாம் அவன் செயல் என எண்ணி அடங்கிவிடுகின்றது. இவ்விடத்தில் கம்பரின் பாட்டுக்களெல்லாம் நீரோடும் வழிப்புற் சாய்ந்தாற்போல ஒரே ஒழுங்கிற்செல்கின்றன.

கும்பகர்ணனைக் கம்பர் போர்க்களத்திற் கொண்டுவந்து நிறுத்து கின்றார். அண்ணனுக்கு மாறான இராமனிடத்தில் அடைக்கலம் புகுந்த விபீடணனும், அண்ணனுக்காக ஆவியைக் கொடுத்தற்குப் போர்க்களம் புகுந்து நிற்கும் கும்பகர்ணனும் சந்திக்கின்றார்கள். இவ்விடத்திற் கடமை என்ற உணர்ச்சியுடன் கலந்து நன்றியறிதல் எனும் அன்புணர்ச்சி போராடு கின்றது. அறத்தின் தெய்வமாகிய இராமனை அடைக்கலம் புகுந்த விபீடணன் கும்பகர்ணனுக்கு அறிவுரை கூறுகின்றான். என்னையோர் பொருளாக மதித்து, அடைக்கலம் அளித்து ஆதரித்த அருள்வள்ள லாகிய இராமபிரானை நீ வந்து சேர்வாயாகில் உன்னையும் அடைக்கலப் பொருளாக ஏற்றுப்பாதுகாப்பதுமன்றி மருளுறு பிறவி நோய்க்கு மருந்துமாய் நின்றுதவி ஈற்றில் உருளுறு சகடவாழ்வையொழித்து உலை யாத வீட்டின்பத்தையும் அளிப்பான். முன்னமே அவ்வள்ளல் இராமன் எனக்களித்த “செல்வத்திலங்கையும் அரசுமெல்லாம் உனக்கு யான் தருகின்றேன். அழிவை வரவேற்று நிற்கின்ற அறங்கெட்ட இராவணனை விடுத்து, அறநெறியைப் பாதுகாக்க எழுந்தருளிய அருள்வள்ளலாகிய இராமனை அடைந்துவாழும் செயல் மிக மேலானது.

*தீயவை செய்வ ராகிற் சிறந்தவர் பிறந்த உற்றார்*
*தாயவை தந்தை மாரென்றுணர் வரோ தருமம் பார்ப்பார்.*

எனச்சான்று காட்டிக்கும்பகர்ணனை இராமனுடன் கூட்டிவைக்க முயல் கின்றான். அண்ணனிடத்தில் அநீதியைக் கண்டு அதனைப்பொறாது, வருந்திய விபீடணன், அறத்தின் உருவமாகிய இராமனை - தன் அண்ணனின் பகைவனைச் சென்று சேர்ந்த செயல் உலகமக்கள் உள்ளத்தில் ஓர் அருவருப்பையேயுண்டாக்கிவிட்டது. அண்ணன் அறத்துக்கு மாறான கொடுஞ் செயல்களை ஆற்றினால் அச்செயலை மறுத்து அவனைத் திருத்தவேண்டும். அல்லது அவனுக்கு முன் போர்க்களத்தில் மாண்டு செஞ்சோற்றுக்கடனைக் கழிக்கவேண்டும். இவற்றை விடுத்துத்தன் அண்ணனைக் கொல்லவந்த மாற்றானை ஆதரித்து அவனிடம் அடைக்கலம் புகுந்து வாழ்வதால் அறத்தின் பயனை அடைந்து விட்டானென விபீடனனை ஆயிரம் வார்த்தைகளால் அலங்கரித்துப் போற்றிய போதும், சாகாத நிலை படைத்தில. அவனை வையம்புகழ வாழ்த்தியபோதும், அவன் வாழ்கின்ற மக்கள் உள்ளத்தில் வாழ்ந்து, அவர்களை வாழ்விக்கும் பெருமையைப் பெற்றிலன். நன்றி மறந்த மக்களில் ஒருவனாகவே வைத்து பொதுமக்கள் இன்றும் விபீடணனை மதிக்கின்றார்கள். விபீடணனை தெய்வ இராமனோடு சேர்த்துத் தெய்வக் கோலம் செய்த கம்பரின் உள்ளம், தம்மையறியாமாலே இகழ்ந்துரைக்கின்றது. மக்கள் வாழ்வில் மலர்ந்த பண்பாட்டின் ஒளியாக நிலைபெறும் செய்நன்றி உணர்ச்சியில்லாத ஒருவனாக, விபீடணனை கம்பர் எண்ணும் பொழுது, விபீடணின் சிறப்பெல்லாம் கம்பரின் முன்னிலையில் அவரின் புலமையூற்றால் சாம்பலாக்கப்படுகின்றது.

கட்டற்ற கவிதையூற்று உயிரோடு கலந்து ஒளியைப் பெருக்கு கின்றது. நன்றிக்கடன் கம்பன் உணர்ச்சியைப் பறித்துவிட்டது. மக்கட் தகமையில் நின்று தவறிய விபீடணனை, நன்றி மறந்த விபீடணனை, பொதுமக்கள் முன்னிலையில் கம்பர் நிறுத்துகின்றார். கும்பகர்ணனின் கூற்றாக வரும் கவிதைக் கனல் வீச்சினில், விபீடணனின் நன்றி மறந்த உள்ளத்தை கவிச்சக்கரவர்த்தி காட்டுகின்றார். அண்ணன் செய்த நன்றியை மறந்து, அருள் வள்ளவாகிய இராமனைச் சேர்ந்து ஆக்கம் பெற்ற விபீடணனிலும், நன்றி மறவாது அண்ணனுக்காக ஆவிவிடுத்த கும்பகர்ணனின் கொள்கைகளை கம்பர் பொதுமக்கள் உலகிற்குக் கொடுக்கின்றார்.

*நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிது நாள் வளர்த்துப்பின்னைப்*
*போர்க்கோலம் செய்து விட்டாற்(கு) உயிர்கொடா தங்குபோகேன்*
*தார்க்கோல மேனிமைந்த என்துயர் தவிர்த்தி ஆயின்*
*கார்க்கோல மேனியானைக் கூடுதி கடிதின் என்றான்*

*கருத்திலா(து) இறைவன் தீமை கருதினால் அதனைக் காத்து*
*திருந்தலாமாகின் அன்றோ, திருத்துதல் தீராதாயின்*
*பொருத்துறு பொருளுண்டாமோ பொருதொழிற்குரியராகி*
*ஒருத்தரின் முன்னஞ் சாதல், உண்டவர்க்குரியதம்மா.*

*செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகர்ச் செல்லம் தேறி*
*வம்பிட்ட தெரியல் எம்முன் உயிர்கொண்ட பகையை வாழ்த்தி*
*அம்பிட்டுத் துன்னங் கொண்ட புண்உடை நெஞ்சோ(டு) ஐய*
*கும்பிட்டு வாழ்கிலேன்யான் கூற்றையும் ஆடல் கொண்டேன்*

இப்பாட்டுக்களைப் படிக்கும் பொழுது எழகின்ற உணர்ச்சி அலைகள் கம்பனின் உணர்ச்சியை எமக்கு உணர்த்துகின்றன. விபீடணனைத் தெய்வ நிலையில் வைத்து, இராமனோடு வைத்து கம்பன் பாடிய கவிதைகள் அத்தனையும் செத்துப் பிறந்த பிள்ளைகளைப்போல, பொதுமக்கள் வாழ்வை எட்டுணையும் உயிர்த்தல் முன் மறைந்துவிட்டன. ஏட்டில் இருந்தே இறந்துவிட்டன. விபீடணனும் மக்களுள் ஒருவன் - இராவணனின் தம்பி. நன்றியை மறந்தவன், கும்பகர்ணனும் மக்களுள் ஒருவன், இராவணனின் தம்பி, நன்றியை மறவாதவன், என்ற நிலையில் நோக்கும் போதுதான் பொதுமக்கள் உள்ளத்தில் உணர்ச்சி தோன்றுகின்றது. இதில் கம்பனின் கவிதையாற்றல் உணர்ச்சி நிலையின் உச்சியைத் தாண்டி விட்டது.

*நீர்க்கோல வாழ்வைநச்சி நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்*
*போர்க்கோலம் செய்து விட்டார்க்கு.....*

எனவரும் பாட்டின் பகுதியில், தருமம், கடமை, நேர்மை, நன்றி முதலான உணர்ச்சிகள் எம்முள் ஒன்றோடொன்று மோதுகின்ற ஓசை அப்படியே கேட்கின்றது. 'நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப் போர்க்கோலம் செய்துவிட்டார்க்கு' என்ற சொற்களின் குறிப்பாற்றல் கும்பகர்ணனை மாத்திரமல்ல, விபீடணனையும் வளர்த்தவன் என்ற கடமை உணர்ச்சியின் நன்றிக் குரலினின் ஓசை, எங்கள் உள்ளத்தில் மரபு மரபாக நின்று நிலைபெறத்தக்கதாக, என்றென்றும் வாழத்தக்க முறையில் பதிந்து விடுகின்றது. அழுத்தம் திருத்தமாக அமைந்துவிடுகின்றது.

இந்த நன்றிக்குரல்தான் வாழ்கின்ற இலக்கியத்தில் உயிர்நாடி. பெருங்காப்பியத்தில் பொதுமக்களைக் கூவியழைத்து முறைப்பாடு செய்கின்ற வழக்குமன்றம். மக்களுள் மலர்ந்து வளரவேண்டிய உயர் பண்பாடு. பாட்டின் ஓசையும், எழுச்சியும், பொருளாற்றலும், புலனு ணர்வும் பொங்கி, அப்படியே படிக்கின்றவர் உள்ளத்தில் பதிந்து விடுகின்றது.

உண்டவர்க்குரிய கடனை உரைக்கின்ற கும்பகர்ணனின் சொற்களிற் கம்பனின் உயிர் கலந்துவிட்டது. தலைவன் தீமை கருதினால் அவனைக் காத்துத் திருத்தலாமாயின் திருத்த வேண்டும். அது முடியாதவேளை, பகைவரைப் பணிந்து வாழும் கடமையா சிறந்தது? அச்செயலை மானமிக்க அறிஞர் உலகு பாராட்டுமா? நன்றிக் கடனுக்காக, உண்ட சோற்றுக் கடனுக்காக, அத்தலைவனுக்கு முன் எம்முயிர் மாய்ந்து போர்க்களத்தில் பெரும்பணி புரிதல்தான் போற்றத்தக்கதாகும்.

*பொரு தொழிற்குரியராகி ஒருத்தரின் முன்னஞ் சாதல்*
*உண்டவர்க் குரியதம்மா*

எனவரும் பாட்டுப் பகுதிகள், உலகம் எல்லாம் நன்றிக் கடனைப் புதுக்கிப் பெருமை அடைகின்றது.

அண்ணனைப் பகைவன் கொன்று கைப்பற்றிய இலங்கையாட்சியை அவன் பின்னவனாகிய நான் பெற்று வாழலாம் என்ற எண்ணத்தால், என் அண்ணனைக் கொன்று வீழ்த்திய பகைவனை வாழ்த்தி ஆதரவு பெற விரும்பமாட்டேன் அம்புகள் துளைத்த புண்கள் ஆறாதிருக்கும் மார்புடன் அண்ணனைக் கொன்ற பகைவனைக் கைதூக்கித் தொழுது அரசாள விரும்ப மாட்டேன்.

*செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகர்ச் செல்வம் தேறி*
*வம்பிட்ட தெரியல் எம்முன் உயிர்கொண்ட பகையை வாழ்த்தி*
*அம்பிட்டுத் துன்னங் கொண்ட புண்உடை நெஞ்சோடு ஐய*
*கும்பிட்டு வாழ்கிலேன்யான் கூற்றையும் ஆடல் கொண்டேன்*

இப்பாட்டைப் படிக்கப் படிக்க எழுகின்ற வீர உணர்ச்சி, பொது மக்கள் வாழ்வைக் காப்பாற்றுகின்ற பெரும் அரணாகத் திகழ்கின்றது. தெய்வத் தலைமக்களைப் பாடிய வாயால், கம்பர் எங்களைப் போல் வாழும் மக்கள் நிலையில் உள்ளவர்களை தொழதெழுதும்போது நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். கம்பரும் புலமை வெறி கொள்கின்றார்.

**தினகரன் 3.6.1951 (ஞாயிறு)**

❍❍❍

# 5. குகனின் வீரக்குரல்

**(நான்கம் தமிழ் விழாவில் நடத்திய பிரசங்கத்தின் தொடர்ச்சி)**

கங்கையாற்றில் படகோட்டி வாழும் மக்களினத்தின் தலைவனாகிய குகன், தன் ஆருயிர்த் தோழன் இராமனுக்காக ஆவிவிடத்துணிந்த செயலைக் கம்பர் கூறும்பொழுது எம்முள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பெருகுகின்றது. வீரவுணர்ச்சி பெருகுகின்றது. நண்பன் இராமனுக்காக என்னுயிரைக் கொடாவிடில் நாய்க்குகன் என்றெனை யேசாரோ வெனக் குகன் கூறுகின்ற சொற்களாற் தன்னலம் அற்ற வாழ்வைப் பொதுமக்கள் இயல்பாகவே வரவேற்கின்றவர் என்ற வுண்மை புலனாகின்றது. மாபெரும் படையுடன் வரும் பரதனை மண்ணொடு மண்ணாக்குவே னெனக் குகன் கூறும் வீர மொழிகள் அநீதியைக் கண்டு கொதித்தெழும் பொதுமக்கள் புரட்சிக்கு அடிகோலுகின்றது. குகனின் உயிர் உணர்வோடு கலந்து கோளரிபோல முழக்கம் செய்த கம்பர் உள்ளத்தில் பொதுமக்கள் புரட்சி செய்து புதிய வாழ்வில் அமர வேண்டும் என்ற எண்ணம் மிகவும் ஆழமாகப் பதிந்த பண்பை யுணர்கின்றோம். குகன் உயிர் உணர்விற் கலந்து கம்பன் எழுப்புகின்ற கவிதைக் குரலைக் கேளுங்கள்.

*அஞ்சன வண்ணனென் னாருயிர் நாயக னாளாமே*
*வஞ்சனை யாலரசெய்திய மன்னரும் வந்தாரே*
*செஞ்சர மென்பன தீயுமிழ் கின்றன செல்லாவோ*
*வுஞ்சிவர் போய்விடினாய்க் குகனென்றெனை யோதாரோ.*

*ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ*
*வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளேய்'*
*தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ*
*வேழமை வேடனிறந்திலனென் றெனை யேசாரோ.*

*முன்னவ னென்று நினைந்திலன் மொய்புலி யன்னானோர்*
*பின்னவ னின்றன னென்றில் னன்னவை பேசானே*
*லென்னிவ னென்னை யிகழ்ந் ததிவ் வெல்லை கடந்தன்றோ*
*மன்னவர் நெஞ்சினில் வேடர் விடுஞ்சரம் பாயாவோ*

இப்பாட்டுக்களைப் படிக்கப் படிக்க எங்கள் உள்ளம் பெருமிதம் கொள்கின்றது. பொதுமக்களில் ஒருவனாக வாழும் ஓடக்காரத் தலை வனாகிய குகன் உள்ளம் குமுறியுரைக்கும் வீரமொழிகளையின்றும் நாங்கள் உலகவழக்கிற் கேட்கின்றோம். பொதுமக்கள் வாழ்வில் அரிய

குணங்கள் நிலைபெறும் என்பதற்குக் குகனின் வரலாறு ஒரு சான்றாகும். இராமன் குகனை நோக்கி நீ யென் தோழன் எனக்கூறிய ஒரு சொல்லிற் காகத் தன் வாழ்வை - உயிரைக் கொடுக்கத் துணிந்த குகனின் செயலால் பொதுமக்கள் அறிந்து உணர்ந்து, உயிர் ஊறிவாழும் அறப்பண்பு நிலை பெறுகின்றது. எந்தப் பெருங்காப்பியத்திலும் உலகில் வாழும் பொது மக்களின் செயலைப் பற்றிவரும் பகுதிகளே எம்மை மகிழ்விப்பன வாகும். பொதுமக்கள் வாழ்க்கையை மதியாது உயர்ந்த இலட்சிய பாத்திரங்களை மாத்திரம் - வைத்து பாராட்டியுரைக்கின்ற காப்பியங்கள் வாழாத காப்பியங்கள் - சாகும் காப்பியங்கள். கம்பனுடைய இராமா யணத்தில் இராமன், சீதை, அநுமான், விபீடணன் என்னும் தெய்வத் தன்மை விரவிய பாத்திரங்களின் செயல்களைப் படிக்கும் பொழுது எழுகின்ற உணர்ச்சியிலும், வாலி, கும்பகர்ணன், குகன், இந்திரசித்து, இராவணன் எனும் மக்கட் பண்பு வாய்ந்த பாத்திரங்களின் செயல்களைப் படிக்கும்பொழுது எழுகின்றவுணர்ச்சி உயிர்த்தோய்வு வாய்ந்தது - மக்கள் வாழ்க்கை நிகழ்ச்சியுடன் கலந்து வழி வழியாக நிலைபெற்று வாழும் மாண்பு வாய்ந்தது. வாழும் இலக்கியத்தின் வளர்ச்சிப் படிகள் மெல்ல மெல்ல மாற்றம் அடைந்து தெய்வத் தலைமக்களையே தேடியமைத்த செயலால் பொதுமக்களின் இலக்கிய வுணர்ச்சி பாலைவனமாய்ப் பாழ்பட்டுவிட்டது. மன்னர்களை, செல்வர்களை, தெய்வங்களை, மதகுருமார்களைப் பாராட்டிப் பாடுதலே இலக்கியத்தின் வளர்ச்சியென்று எண்ணிய காலமே இலக்கியத்தின் இருட்டுக்காலமாகும். இக்காலத்தில் எழுந்த இலக்கியங்கள் யாவும் உணர்ச்சியில்லாமல் ஒரேயொழுங்கில் அமைந்த அச்சுருவங்களாக விளங்குகின்றன. கோவை பார்த்துக் கோவை அந்தாதி பார்த்து அந்தாதி, கிள்ளைத் தூது பார்த்துக் கிள்ளை தூது, திருப்பள்ளியெழுச்சி பார்த்துத் திருப்பள்ளியெழுச்சி புராணம் பார்த்துப் புராணம் பாடியவளவில் புலவர்கள் அமைந்துக் கொண்டார்கள். வாழுகின்ற பொதுமக்களுக்கும் இலக்கியத்திற்கும் தொடர்பில்லையென்ற கருத்து உயிர்பெற்று வாழத் தொடங்கிவிட்டது. இந்நிலையில் தமிழ்நாட்டு இலக்கிய வளர்ச்சி அழிந்துபோகும் காலத்தில் அமரகவி பாரதியாரின் கவிதைக் குரலைப் பொதுமக்கள் கேட்டு விழித்தார்கள்.

பாரதியாரின் பாட்டுகள் வாழ முடியாத மக்களுக்கு வாழ வழிகாட்டின. மன்னர்களையும், மாபெரும் செல்வர்களையும் பாடாமல் வாழ்க்கைப் புயலால் அடிபட்டு வருந்தி வாழும் மக்களைப் பாடினார். பட்டினியால் உடல் மெலிந்து பஞ்சடைந்த கண்களுடன் பாடுபட்டு

உழைக்கும் தொழிலாளிகளைப் பாடினார். வாழ்க்கையில் அடுக்கடுக்காய் வந்த துன்பங்களால் நம்பிக்கையிழந்து அல்லற்படும் மக்களை நோக்கி

*ஒன்று பரம்பொருள் நம தன் மக்கள்*
*உலகு இன்பக் கேணி*
*தின்று விளையாடி இன்புற்றிருந்து வாழ்வீர்*
*தீமை யெல்லாம் அழிந்து போகும்*

எனப்பாடி உயிர் கொடுத்தார்; ஊக்கம் கொடுத்தார்.

*நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்*
*நானிலத்தவர் மேனிலை எய்தவும்*
*பாட்டிலே தனி இன்பத்தை நாட்டவும்*
*பண்ணிலே களிகூட்டவும் வேண்டி நான்*
*மூட்டுமன்புக் கனலொடு வாணியை*
*முன்னுகின்ற பொழுதிலெலாம், குரல்*
*காட்டியன்னை பராசக்தி ஏழையேன்*
*கவிதையாவும் தனக்கெனக் கேட்கின்றாள்*

இப்பாட்டில் மக்கள் வாழ்விற்கே கவிதை மலர்கின்றதென்ற உண்மையை வலியுறுத்துகின்றார். மக்கள் நிலையில் வாழ்ந்த மக்கள் தமது மானம், வீரம், அறம் எனும் கொள்கைகளைப் பாதிக்கின்ற நெருக்கடி ஏற்பட்டபொழுதும் அந்நெருக்கடிகளை வீழ்த்தி வெற்றி பெறும்பொழுது தான் இலக்கியம் வாழ்கின்றது. இவ்வுண்மையை பாரதியார் பெல்சிய மக்களின் வீரச் செயலினால் அறிவுறுத்துகின்றார்.

ஆண்மையும் படைப் பெருக்கும் படைத்த சேர்மனியர், சிறிய பெல்சியத்தை மதியாது தமது படைகளைச் செலுத்திச் செல்ல வழிவிடு மாறு கேட்டார்கள். பெல்சிய மக்கள், சேர்மனியர் கேட்ட கொள்கையை ஏற்க மறுத்தார்கள். இன்னொரு நாட்டை அழிக்க நாங்கள் வழிவிடமாட் டோம். நீங்கள் எங்களை அழித்துச் செல்லுங்கள். உங்கள் படைப் பெருக்குக்கு நாங்கள் அஞ்சமாட்டோம். நீதிக்குத்தான் அஞ்சுகின்றோம். அறத்துக்கு மாறாக உங்களை அஞ்சி வாழ்வதினும் நாங்கள் அழிகின் றோம் - அறத்துக்கு எங்களைப் பலி இடுகின்றோம் எனக்கூறி எதிர்த் தார்கள். ஆண்மை மிக்க சேர்மனியர் பெல்சியத்தை அழித்தார்கள். பெல்சியத்தின் அறப் பண்புகனிந்த மாண்பு அழியவில்லை.

இந்த நிகழ்ச்சி பாரதியாரின் உள்ளத்தைக் கவர்ந்தது. மக்கள் வாழ்வில் உண்மையாக நிகழ்ந்த வீரச் செயல் அவர் உளத்தில் ஒளிபெற்று

வாழும் இலக்கியமாக நிலவுகின்றது. தாம் அழிந்தும் அறத்தைப் போற்றிய பெல்சிய மக்களின் ஆண்மையைப் பாராட்டுகின்றார்.

*அறத்தினால் வீழ்ந்துவிட்டாய்*
*அன்னியன் வலியனாகி*
*மறத்தினால் வந்துசெய்த*
*வண்மையைப் பொறுத்தல் செய்யாய்*
*முறத்தினாற் புலியைக் காக்கும்*
*மொய்வரைக் குறப்பெண் போலத்*
*திறத்தினால் எளியையாகிச்*
*செய்கையால் உயர்ந்துவிட்டாய்*

எனப் பாடிப்பாடி, அறத்தினைக் காப்பாற்றி உயர்ந்த பெல்சியத்தை மிக வியந்துரைக்கின்றார். இந்த வீரப் பண்பாடுதான் - எவர்க்கும் அஞ்சாது, அறத்தைப் பாதுகாத்தற்காக ஆவியைக் கொடுக்கின்ற பண்பாடுதான், வாழ்கின்ற இலக்கியத்தின் பிறப்பிடம் - தாயகம். வாழும் இலக்கியத்தின் மாண்பை, மீண்டும் தமிழ்நாட்டில் மறுமலர்ச்சி செய்த பாரதியாரின் கவிதைக் குரலைக் கேளுங்கள். அறத்தொடு தம் ஆவியும் சேர்ந்து எழில்விரிக்க, அமரகவி பாரதி யார் எழுப்புகின்ற ஆண்மைக் குரலைக் கேளுங்கள்.

*மானத்தால் வீழ்ந்து விட்டாய்*
*மதிப்பிலாப் பகைவர் வேந்தன்*
*வானத்தாற் பெருமை கொண்ட*
*வலிமைதான் உடையனேனும்*
*ஊனத்தால் உள்ளமஞ்சி*
*ஒதுங்கிட மனமொவ்வாமல்*
*ஆனத்தைச் செய்வோமென்றே*
*அதன்வழி எதிர்த்து நின்றாய்.*

எனவும் பாடிப் பெல்சிய நாட்டைப் போற்றுகின்றார். தன் படைக் குறைவையும் எண்ணாது, வீரமானத்தின் வீறு தாங்கி, அறத்துக்காக அழிந்த பெல்சியத்தின் செயலே வீரச் செயலாகும். வீரமென்பது தன் உயிரினும் மேலாக மதிக்கப்படும் மானத்தொடு கலந்த அறநெறியாம் என்ற கொள்கையைப் பெல்சியத்தின் செயலில் வைத்துப் பாரதியார் சொல்லுகின்றார். வாழும் இலக்கிய மரபும், பெல்சிய மக்களின் செயலும் ஒன்றாக இணைந்து, அறத்தின் பண்பாட்டை எமக்கு அறிவுறுத்துகின்றன. வாழும் இலக்கிய வளர்ச்சியைச் சிறப்பிக்கின்றன. வழிவழி வந்த வாழும்

இலக்கியத்தின் உரிப்பொருளாகிய அறத்தைக் காப்பாற்றி வருகின்ற தாய்நாட்டைப் பாரதியார் வணங்குகின்றார்.

*சிறந்து நின்ற சிந்தையோடு*
*தேயநூறு வென்றிவள்*
*மறந்தவிர்ந்தந் நாடர் வந்து*
*வாழி சொன்ன போதிலும்*
*இறந்த மாண்புதீர மிக்க*
*மிக்க ஏழ்மை கொண்ட போதினும்*
*அறந் தவிர்க்கிலாது நிற்கும்*
*அன்னை வெற்றி கொள்கவே.*

**தினகரன் 10.6.1951 (ஞாயிறு)**

❍❍❍

# வேந்தனாரின் நூல்கள்

திருநல்லூர்த் திருப்பள்ளி எழுச்சியும் குயிற்பத்தும் (1961)

கவிதைப் பூம்பொழில் (1964, 2010)

குழந்தை மொழி (சிறுவர் பாடல்கள், 2010)

தன்னேர் இலாத தமிழ் (வேந்தனார் கட்டுரைகள் – 1, 2010)

இந்து சமயம் (பாடநூல் – 1959)

கம்பராமாயணம் – கும்பகருணன் வதைப்படலம் (பாடநூல்)

கம்பராமாயணம் – காட்சிப்படலமும் நிந்தனைப் படலமும் (பாடநூல்)

கம்பராமாயணம் – மந்தரை சூழ்ச்சிப்படலமும் கைகேயி
சூழ்வினைப் படலமும் (பாடநூல் – 1961)

பாரதியார் பாடல்கள் – விளக்கவுரை (பாடநூல் – 1962)

குழந்தைமொழி – பாகம் 1 (2018)

குழந்தைமொழி – பாகம் 2 (2019)

குழந்தைமொழி – பாகம் 3 (2019)

மாணவர் தமிழ் விருந்து (வேந்தனார் கட்டுரைகள் – 2, 2019)

தமிழ் இலக்கியச் சோலை (வேந்தனார் கட்டுரைகள் – 3, 2019)

## வேந்தனாரின் வெளிவரவுள்ள நூல்கள்

வேந்தனாரின் கம்பராமாயண ரசனை

வேந்தனாரின் பாரதியார் பாடல் ரசனை

வேந்தனாரின் சைவசித்தாந்தக் கட்டுரைகள்

வேந்தனார் கட்டுரைகள் – பாகம் 4

வேந்தனார் கட்டுரைகள் – பாகம் 5

## வேந்தனார் பற்றிய நூல்கள்

- புகழ்வளச் சோலையின் ஒரு மலர் (1966)
- மல்லிகை – 1966 ஐப்பசி இதழ்
- தமிழ்ப் பேரன்பர் வித்துவான் க. வேந்தனார் (1984)
- வித்துவான் வேந்தனார் (2010)
- செந்தமிழ்வேந்தன் – வித்துவான் வேந்தனார்
  நூற்றாண்டு விழா மலர் (2019)